5ப|326

T.D.R.C 3 6 8

R.R. NO 326 — IV - 1906

கிரஞ்சிசேட்டுக்கிர
மந்திர

Q23:453.21:2
N06

18914

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஏகாம்பரநாதாய நம:

காஞ்சி க்ஷேத்திர மஞ்சரி.

இஃது

திருக்கைலாயபரம்பரை

ஸ்ரீ காஞ்சிபுரம் ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள் ஆதீனம்

மெய்கண்ட சிவாசாரியார் சந்தானம்

ஞானபீடம்

மஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ

ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

கட்டளைப்படி

நா - வ - ஆலாலசுந்தரம் பிள்ளை

அவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை:

வித்யாபாஸ்கர அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

விசுவாவசு ஸ்ரீ பங்குனி மீ

1906.

... 1906 ... 32 ... [library stamp]

கவனிப்பு.

சிவநேசச்செல்வர்களாகிய நண்பர்காள்! "நன்மைகடைப்பிடி" என்ற மூதுரையை நன்மைக்குரியராகிய நாமனைவரும் நன்கு பாராட்டுதல் வேண்டும். நன்மைகடைப் பிடித்தற்கு அறிவன்றி யாமோ, அவ்வறிவு கல்விகேள்விக ளன்றி யாமோ, அவ்வ நூல்கள் வெளிப்பட்டாலன்றியாமோ, வெளிப்படுதல் செல்வப் பொருளானன்றியாமோ. ஆகா, இப்புத்தகத்திற் கண்டிருக்கும் நூல்கள் நெடுநாளைக்கு முன்னே யெழுதியனவே யாயினும் பொருளென்னுஞ் செல்வச் செவிலியில்லாமையான் முட்டின்றி நடைபெறுதற்குத் தடைபட்டன. இனியேனும் நூலியற்றி வெளிப்படுத்தும் எமக்குப் பொருளால் மனக்கட்டத்துக் கிடங்கொடாமல் புத்தக விளம்பரத்தில் கண்டிருக்கும் தேவிபாகவத ஸ்கந்தங்களைப் பெற்று அவற்றிற் குரிய கிரயத்தை உதவி செய்வது போற் செய்து வினையவும் வெளியாக்கும் சிவபுண்ணியத்தைப் பெறுவீர்களாக. சுபம்! சுபம்!!

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக ஸ்வாமிகள் மடாலயவரலாறு.

* இது இராஜவீதிக்கடுத்த பரமானந்தமண்டப வீதியிலுள்ளது.

இந்தமடத்தில் அதிகாரமூர்த்தியா யெழுந்தருளியிருக்கும் மூர்த்தி திருவம்பலமென்னுந் திருநாமமுடைய சிவலிங்கமூர்த்தி.

பீடம் சோதிபீடமென்னும் ஞானபீடம்.

இந்த ஆதீனத்திற்குத் தலைமையாயிருந்த சந்நிதானம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகசுவாமிகள். இவர் கயிலைப்பரம்பரையிற் சிவஞானபோத நெறிகாட்டும் வெண்ணெய்பதியில் வாய்மை மெய்கண்ட சிவத்தினது அடித்தொண்டுகொண்ட நாற்பத்தொன்பதின்மருள் சிறந்த திருச்சிற்றம்பலநாடிகளுடைய அறுபத்துநான்கு மாணாக்கருள் தலைமைபெற்றுச் சிறந்திருந்த ஞானப்பிரகாசரது திருவருள்பெற்று அவரது திருநாமத்தையே தமது திருநாமமாகக்கொண்டு விளங்கினவர்.

இவர் காஞ்சியில் மடாதிபதியாய் வீற்றிருந்ததற்குக் காரணம் என்னையெனின், இவரது ஆசிரியராகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளுக்கு ஆசிரியராகிய † சிற்றம்பலநாடிகள் மாயூரமென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் ஓர்ம

* நிமந்தகாரத் தெருவெனவழங்கும்.

† சிற்றம்பல நாடிகளென்பார் சீகாழிப் பதியின் கண்ணே வேளாளர் திருமரபிலே அவதரித்து பூர்வ புண்ணிய முதிர்ச்சியான் இலக்கிய இலக்கண முதலிய கருவி நூல்களில் வல்லராய், பின்னர் ஞான நூல்களிற் சிறந்த பதிபசு பாசப்பொருளை விளக்கும் ஆகமதா

டாலய மடைந்துந் தமது சீடர்களோடும் எழுந்தருளியிரு
ந்து குருலிங்கசங்கம வழிபாடுகளைப் பத்தியுடன் செய்
து தமது சீடர்களுக்குச் சிவஞானபோதச் செல்வம் பெறு
தற்குரிய வைராக்கிய சீலங்களை நாடோறுங் கற்பித்து வரு
ம்நாளில் ஓர்நாள் வழக்கம்போல் ஞானப்பிரகாசருள்ளிட்ட
அறுபத்துநால்வருடனிருந்து சிற்றம்பலநாடிகள் அமுதுகொ
ண்டருளுங்காலத்தில் அந்த மஹா சந்நிதானத்தின் குறிப்பினை
அப்போதைக் கப்போதுணர்ந்து மாறாது நடக்கவல்ல பரி
சாரகத்திற் சிறந்தாரொருவன் அன்னத்தில் பசுவின் நெய்
விடாது வேப்பெண்ணெயை விட்டனன். சந்நிதானத்தோடு
வைராக்கியத்திற் சிறந்த அடியவரெல்லாம வெற்றுமையறியா
துண்டருளினர்.

ஞானப்பிரகாசர் சத்திது அசத்திது என்று ஒவ்வொரு
பொருளினும் கண்டுணரும் சதசத்புணர்வில் நிற்பவராத
லால் விட்டதுநெய்யன்று வேப்பெண்ணெயென் றுணர்ந்து
அன்னத்தை யுண்ணாது வேப்பெண்ணெயென்று சொல்லு
வதற்கெண்ணி (வே) என்று முதலெழுத்தைக் கூறுவதற்கு
ள் அடியவரைக் கண்ணுற்றனர். அவரெல்லாம் நெய்யென்
றும் வேப்பெண்ணெயென்றும் அறியும்மனோவிகற்பச்செய
லிற்றலைப்படாது குருவருள் நெறியிற்றலைப்பட்டுண்ணும் அ
ருஞ்செயலுணர்ந்து வேப்பெண்ணெயென் றுமுழுவதுங் கூறு
தொழிந்தனர். மஹாசந்நிதானமாகிய சிற்றம்பலநாடிகள்
(வே) என்று இவர்கூறிய தறிந்து ஞானப்பிரகாசனே! (வா
தியினிடைநிற்கும்) வழக்கொழிந்து மலவாசியினின்று (வே)

றுணர்ச்சியுடையராய், அதன் பின்னர் வேதவாகமச் சென்னியின்
கண்ணே விளங்கின்ற சித்தாந்த ஞானத்தால் பொற்பணிபோல் அ
பேதம், இருள் வெளிபோல் பேதம், சொற்பொருள் போற் பேதா
பேதம் எனப்பிணக்குறும் பிணக்கறுத்து இவற்றிற்கு முதலாயுள்ள
ஆணவப் பிணியையும் அழித்து ஆன்மாவாகிய என்னையும் ஆன்ம
நாயகனாகிய தன்னையும் அருளாலுணர்த்த வல்ல குருவரனை நாம்
காணவருமாறு எங்ஙனமோ வென்றும், அக்குருபரனைக் காணுமொழி
யின் இக்கொடிய ஆணவபாசம் நாமறிய வந்த கல்வி கேள்விகளால்

கான்றமையான் இனி நீ அகவிலைமைக் கூடும் என்னைம் மூர்த்தி
தலம் தீர்த்தங்களை முறையால் வணங்கிவருவாயென்று கட்
டளையிட்டனர்.

ஸ்ரீ ஞானப்பிரகாசப் பெருமான் ஆசிரியராணையை மே
ற்கொண்டு அதன் பொருளையுட்கொண்டு அடிகளடிபணிந்
து விடைபெற்றுக் குருவருளை நாடிக்கொண்டே க்ஷேத்திர
யாத்திரை செய்து வைராக்யநிலை கைகூடப் பெற்று இனி
முத்திநிலை கைகூடும் க்ஷேத்திரமெதுவோ அதனை நான் இ
டைக்கப்பெற்று வேனோவென்று தொண்டைநாட்டையடை
ந்து ஞானசரியாகிரியா யோகமாகிய தொண்டுகளிற் றலை
ப்பட்டு நிற்குந்தொண்டர் பெருமையையும், அருணெறித்த
யாகிய காமாக்ஷிதேவியும் இவையே நன்னெறியாமென்று
முத்திநாதனை என்றுமருச்சித் தேத்திவழிபட்டு நிற்கும் அ
ற்புதத்தையும், அவ்வருச்சனைக்கு மகிழ்ந்து வலிந்திறுகத்த
ழுவிக்கொள்ளத் தன்னைத்தந்து அமையாக்காதல் மணந்த
ருளிக் குறிபூண்ட ஒருமாவிற் பெருமானது அற்புதத் திரு
க்கோலத்தையுங் கண்டு முத்தியிற்சிறந்த துவாதசாந்தத் தி
முத்தியை இந்த க்ஷேத்திரம் தேசாந்த வழியாக எவ்வுயிர்
கட்கும் எளிதாகத் தரவல்ல முத்திக்ஷேத்திரமன்றோ?
மறைமுடியும் இவ்வாறே விதந்தும் வளநகர்க் காஞ்சியெ
ன்று அறைகின்றதே என்று அதன் பெருமையெல்லாம் நூ
ன் முகங்களாலும் பெரியோர்களாலும் நன்குணர்ந்து பின்
னர் அறமாகிய சரியையை விருத்தி செய்யவல்ல புண்ணிய
கோடிக்ஷேத்திரத்திலுள்ள தருமபீடத்தையும், பொருளா
கிய கிரியையை விருத்தி செய்யவல்ல மாவடியின்கணுள்ளீ

டைக்கக்கூடுமோ என்றும், அது புலையன்றிக் கடலைக் கடக்கக் கூ
டுமோயின் கூடும் என்றும், எங்ஙனம் என்னை வக்கமுற்று ஆகம நாயு
ணர்ச்சி யுடையோரைக் காணப்பெறுவராயின் அவர்களோடளவு
ளாவி அவ்வாகமப் பொருளை யளக்கத் தொடங்குங் கால் மற்றுடை
க் கண்டு நீர் விடாய்க்குக் கடல் நீருண்டாரை யொப்ப ஞானவிடா
ய் மேலிட்டு ஞானசொரூபனாகிய வெபரஞ்சடைவீரத் தம்முன்னே எ
ன்றுவாராயினர். அச்சிவபெருமான் அன்னிய மின்றிச் சைதன்ய

அருத்தபீடத்தையும், இன்பமாகிய யோகத்தை விருத்திசெய்யவல்ல கோவிந்தபாடியிலுள்ள யோகபீடத்தையும், அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கு காமத்தையும் விருத்திசெய்யவல்ல காமகோடிபீடத்தையுங் கண்டு களித்து வணங்கிவாழ்த்தி அதன்பின்னர் குமார நிலையமாகிய குமரகோட்டத்தை வலமாகவந்து மடாலயமாகிய இவ்விடம்வரும்போது, அங்கு திண்டினைரைத் தேவாக்கல் முதலிய ஒன்பது சிலைகளில் ஒன்றாகிய ஞானந்தருஞ்சிலையானது சுடர்விட்டெரிப்ப இப்படியும் ஓர் சிலையுண்டோவென்று பார்க்கும்போது ஞானப்பிரகாசதேசிகருக்கு அன்று சிற்றம்பல நாடிகளருளிய "வாசியிடைநிற்கும் வழக்கு" தமதறிவில் பிரகாசமாய்த் தோன்றிற்று. தோன்றவும் ஆராவன்புகொண்டு இவ்விடந்தான் நமக்குரித்தானது இவ்விடத்தில் வசித்தால் நாம் மெய்கண்டநாதன் திருவருள்கூடப் பெற்று நாம் நாணப்பெறுதகன்ற குருநாதனையுங் காணப்பெறலாமென்று ஆதங்கத்தோடு கூறும்பொழுது அந்த ஞானச்சிலையருகே தேவசித்த பூஜைமான சத்தியசாந்த சிவலிங்கப்பெருமானைக் கண்டனர்.

அப்பொழுது இதுதான் திருவோ, இதுதானென்னுடைய செல்வமோ, எனதறிவினிலூறுந் தேனோ, வானோர்கொழுஞ் செழுஞ்சுடரோ, அவ்வானோர் தொழுதற்கரிய செழுஞ்சுடரினு நல்லசோதியோ, அன்றி அன்பர்க்கெளிவரும் கருணைப்பெருக்காகிய வுருவமோ, அவ்வன்பியாகிய என்னையுமாளவந்த எம்முறவோ, தன்னையானவந்ததேயன்றி என்னுடைய சொரூபியாய் நிற்பவனுகலான் பொய்கண்டகன்ற மெய்கண்டநாதனுமையைக் காணும் வண்ணந் திருவருள் செய்தனன்.

மெய்கண்ட சிவனார், இச்சிற்றம்பல நாடிகளது அதிதீவிர பக்குவத்தை யுணர்ந்து புண்டரிகபுரத்துறையும் திருச்சிற்றம்பலவனது குஞ்சிதபாதத்தை அனவரதமும்நாடும்நாட்டத்திற்சிறந்த சிற்றம்பல நாடி! சைவசித்தாந்தத்திறனை ஈண்டு உனக்குத்தெரிக்கின்றோம். சைவசித்தாந்தத் திறமாவது பதிபசு பாசங்களின் உண்மையை விளக்குவ

லையுங் கோயிலாகக் கொண்டதுபோலுங் காட்டவந்த என்னானோ, என்னானைக் கோயிலாக்கொண்ட பின்னர் என்னுள்ளத்தைக் கொள்ளைகொள்ள என்னுளினுள்ளேயிருக்கின்ற உள்ளமோ, என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்ட பின்னர் எனக்கு வேண்டியவையெல்லாம் அளித்தருள்கருவோ, வேண்டியவை யளிக்கத்தொடங்குங்கால் யான் வேண்டும் வண்ணம் அளிக்கவிருக்கும் என்கற்பகமோ அங்ஙன மளித்தபின்னர் யாவைகளைக் காணும்வண்ணம் எனக்குக் கண்ணாயிருக்குங்கண்ணோ, கண்டபின்னர் அவற்றின் நன்மை தீமைகளையறிய என்கண்களிலுள்ள கருமணியோ, நன்மை தீமைகளையறிந்த பின்னர் அவையிற்றிற்பாவைபோற் சுழல்விக்கு மணியாபாவையோ, அங்ஙனஞ்சுழலுங்கால் அவற்றான் ஆகாமிய வினையேறாது என்னைக்காக்கவல்ல காப்போ என்றுபோற்றி ஞானமும் ஞானப்பொருளுங் காணப்பெற்ற இவ்விடமன்றி நமக்குவேறோரிடமும் வேண்டுமோவென்று அவ்விடத்திற்றானே மடாலயமமைத்துக்கொண்டனர்.

காஞ்சியில் மடாதிபதியாய் வீற்றிருந்த பின்னர். தமதன்புக்குரியாரொருவரும் கண்ணப்பரென்பாரொருவரும் இவ்விருவருடன் பலமாணாக்கரும் தமதேவல்வழி நிற்பத் தமதான்மார்த்த பூசாத்தியாய்க் காணப்பெற்ற சத்தியசாந்த சிவலிங்கப்பெருமானை வழிபட்டுத் தம் சிவாகமத்துக்கேற்பச் சிவஞானபோதப் பிரகாசகராய் வீற்றிருந்தனர்.

இன்றுசென்ற பின்னர் மாயூரத்தி லெழுந்தருளியிருந்த இவரது ஆசிரியராகிய சிற்றம்பல நாடிகள் தமது அ

து. என்னை? பதி ஒன்றாயிருப்பது. பசுபலதிறப்படாது பலவாயிருப்பது. பாசம் பலதிறப்படுவது. பதி ஒன்றாயிருப்பதென்றால்—பசு பாச விலக்கணங்களையும் பொருந்தாது தனதியல்புந் திரியாது த ணக்குரிய விலக்கணத்தோடிருப்பது. பசு பலதிறப்படாது பலவாயிருப்பதென்றால்-தான் பலவாகக்-காரியப்படுவதின்றிப் பலவாக க் காரியப்படும் பாசகாரியங்களையுடைத்தாய்த் தானே காரியபட்டு

டியவரேறும் சித்திரை மதியில் திருவோண நக்ஷத்திரத்தில் சமாதியிலிறங்குவதாகத் திருவுள்ளத் தெண்ணி அப்பொழுது அரசாண்டிருக்கும் சோழ மகாராஜனுக்குச் சமாதியிலிறங்குவதற் கான தக்க விடமொன்று அமைக்க வேண்டுமெனத் திருமுகத்தா லறிவிக்க அவ்வரச னதிசயித்து அகமகிழ்ந்து இவ்வற்புதக் காட்சியைக் காணும் பாக்கியமும் யானுடையனே யென்று அக்கணமே, கவுரிமாயூரத்துக்கு வந்து ஆதரங்கரிய பூம்பொழிலைக் கண்ணுற்று இப்பூம் பொழில் தான் சமாதிக்குத் தக்கஸ்தான மென்று எண்ணி மஹா சந்நிதானத்தின் கட்டளைப்படி அம்மகா சந்நிதானத்திற் கோர் சமாதியும் அச்சந்நிதானத் தடியவர் அறுபான் மூவர்கட்குத் தனித்தனி ஒவ்வொரு சமாதியும் அருமையாக வமைத்துச் சிறப்புபல காடிகள்பாற் சென்று அறிவித்துப் பின்னர் உலகமெங்குமறிய பறைபறைவித்தனன். ஆதலால் யாவர்களும் அறியப் பெற்றவர்களாய் அப்பூம்பொழிலின்கண் கூடி இனி என்ன காரியம் விளையவிருக்கின்றதோ வென்று எதிர்பார்த்திருந்தனர். அரசனும் குறித்த அந்நாளில் அப்பூம் பொழிலை அதிக விசித்திரமாயலங்கரித்து அடியவர் திருக்கூட்டத் தூடன் மஹா சந்நிதான வரவை எதிர் பார்த்திருந்தனன். திருச்சிற்றம்பல நாடிகளாகிய பரமாசாரிய சிகாமணியும் தமதடியார் புடைசூழ்ந்து வர வாங்கெழுந்தருளி அரசன் முதலிய யாவரையும் தமது திருவருட் கண்ணால் நோக்கி யாவருக்கும் சிவானந்தப் பெருஞ் செல்வ முண்டாகுக வென்றாசிபுகன்று

து போலும் பலவாயிருப்பது. பாசம் பலதிறப்படுவது — சுத்தம் அசுத்தம் சுத்தாசுத்தம் எனமுத்திறப்பட்டு அவ்வவற்றுள் தநு கரண புவனபோகங்களால் பலதிறப்படுந் தன்மையை யுடைத்தாயிருப்பது.

இவற்றுள் வித்து, தளிர் மலர் முதலிய பலதிறப்படுந் தன்மையை யுடைத்தாயிருப்பினும் உழவனை எதிர்பார்த்திருக்குந் தன்மையுண்மையான் சடமாதல் போல் பாசம் சடம். உழவன் வித்தை விளைவிக்கும் அறிவுந் தொழிலும் படைத்துள்ளானேயாயினும் மழை

“நாகளறு போத” முதலிய பதினான்கு அரிய ஞான நூல்களைத் திருவாய் மலர்ந்தருளித் தமக்கென்றமைத்த சமாதியிலிறந்து மரணமடைந்தா ரென்னும் வசையொழிந்து சின்முத்திரையாகிய மோன முத்திரை காட்டிச் சிவத்தியானஞ் செய்து பரிபூரணத்திற் கலந்தனர்.

பின்னர் அறுபான் மூவரும் அக்குரு பரஞ்சுடரைத் தியானித்து மும்முறை வலம்வந்து பணிந்து தத்தமக்கமைத்த சமாதி நிலைகளிலிறங்கித் திருவடிநிலையிற்கலந்தனர். அச்சமயத்தில் அரசன் இவ்வடியரி லொருவராயிருந்த ஞானப்பிரகாசசுவாமிகள் இங்கில்லாமற்போயினரே அவரெங்குற்றனரோ இச்செய்தியறியாரோ அவரெவ்வாறாயினரோவென்றெண்ணி ஏக்கமுற்றிருக்க, இங்குக்காஞ்சியிலெழுந்தருளியிருந்த ஸ்ரீஞானப்பிரகாச சுவாமிகள் ஒருவரறிவிக்காமலே அச்செய்தியைத் திருவருளாலுணர்ந்து, அந்தோ! இங்கிருந்தென் செய்கேனென்று கண்ணீரரும்பி மாணாக்கர்க்கு அவ்விசயத்தை யறிவித்துத் திருவம்பல மென்னும் சிற்சபா நடராஜ மூர்த்தியின் பெயரமைந்த ஆன்மார்த்த சிவலிங்கப் பெருமானைத் தமது அணுக்கத் தொண்டராயிருந்த பெருந்தகையாளரை யழைத்து இவ்வான்மார்த்த மூர்த்தியைப் பூசித்து வரும் அதிகாரத்தையும் எமது தீக்ஷாநாமமாகிய பெயரையும் உமக்குத் தந்தோம் இன்று முதல் ஞானப்பிரகாசரென யாவராலும் போற்றப் பெற்று இப்பூஜாதிகாரத்தையும் பெற்று இக்காஞ்சியில் ஞானாசிரியராகி நன்மாணாக்கர்கட் குபதேசித்து வாழ்வீராக வென்று கட்டளை

யில்லையேல் அவனது அறிவுந் தொழிலும் பிரகாசப் படுந்தன்மையின்மையான் சுதந்தர ஹீனனாதல் போல், பசு ஞானக்கிரியைகளை யுடைய சித்துப் பொருளாயிருப்பினும் பதிச்செயலன்றிப் பாசகாரியங்களை அறியவும் செய்யவும் முடியாமையான் பசு சுதந்தர ஹீனம். பாசவிலக்கணமாகிய சடத்தன்மையையும், ஆன்மவிலக்கணமாகிய சுதந்தர ஹீனத்தையும் அடையப் பெறாது அனந்த சத்தியும் அனந்த சத்தியும் உடைய கிரியாசத்தியோடும், இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலுடைய ஞானசத்தியோடுங் கலந்து பசுபாசங்களோடு

யிட்டுப்பின்னர் கண்ணப்பரென்பவரைத் தம்முடன் கௌரி மாயூரத்துக்கு வரும்படிக் கட்டளையிட்டனர்.

பூஜாதிகாரம் பெற்ற ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் தாமும் சிற்றம்பல நாடிகள் சமாதியைத் தெரிசனஞ் செய்ய வேண்டுமென்றெண்ணியிருக்கும் அபேட்சையை விண்ணப்பஞ் செய்ய அதற்கிசைந்து அவரையும் அழைத்துக்கொண்டு மாயூரஞ் சென்று தமது ஆசாரியசுவாமிகள் சமாதியிலிருக்கும் சமாதிநிலையைக் கண்டு ஆராவன்பு கொண்டு "ஆண்டகுரு சிற்றம்பலவாவடியேற்கா மீண்டு மெழுந்தருள வேண்டாவோ" என்றற் றொடக்கத்தனவாகிய அருட்பாமாலைகள் பலபாடிக் கண்ணீரரும்ப நெஞ்சநெக்குருகி உளங்கசிந்து என்னையனே! என் குருமணியே! அடியாரெல்லா முடனெய்த யானும் எனது உடலாகிய பொறையும் புறமே யிருத்தலமுறைகொ லென்றேங்கி நிற்ப, அச்சமாதி வெடிபட்டது. சிற்றம்பல நாடிகளாகிய ஞானயோகர் செல்வப் பெருந்தகையுங் கண்விழித்துப் பார்த்து அந்த ஞானப்பிரகாச வள்ளலை இருகையாருந் தழுவிக்கொண்டு தம்முடனிருத்தி ஐக்கியஞ்செய்து கொண்டனர்.

அங்ஙனம் ஐக்கியமாகும்போது கண்ணப்பரும் திருச்சிற்றம்பலமுடையார் பூஜா [illegible] ஞானப்பிரகாச தேசிகரும் எங்கட்குக் கட்டளையாதென்ன, கண்ணப்பரே! நீங் குள்ளாருடன் ஒருவராகச் சமாதியி லிருக்கலாம். ஞானப்பிரகாசரே! நீர் முன் நாம் கட்டளையிட்டதுபோல் காஞ்சியில் சைவசித்தாந்த ஆசிரியமணியாய் வாழ்வீரென்று கட்டளையிட்டு மௌனமுற்றுப் பரிபூரணத்திற் கலந்தனர். கட்டளைப்படி கண்ணப்பர் அங்கு சமாதியாயினர். ஸ்ரீ ஞானப்பிரகாசர் அச்சமாதிகளின் மீது சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூஜாபசாரங்களை நடத்தி அங்கிருந்த அரசனை யழைத்

* வியாபித்தொன்றாய் வேறாய் உடனுயிருக்குந் தன்மையுண்மையான் பதி அநாதிமுத்த சித்துப்பொருளாயும் சுதந்தரகர்த்தாவாயுமுள்ளவன் என்றருளாலுணர்ந்த உணர்ந்தபெரியோர்.

து அன்பனே! இச்சமாதிகளுக்கு ஆலயமமைத்து நித்திய நைமித்திகங்களுக்குவேண்டிய திரவியங்களை வைப்பாயாக வென்று கட்டளையிட்டனர். அரசனும் அப்பணியைச் சிரமேற் கொண்டு முடித்துப் பின்னர் காஞ்சி மடாதிபதியாகிய ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகசுவாமிகளுக்கு க்ஷேத்திரக்கோடு மடாலயமமைக்கக் கட்டளையிட்டு ஆங்காங்கும் வரியிறை சுதந்தரமிராசு பூமிமுதலியவைகளையும் ஏற்படுத்திப் பின்னர் சத்திரம் சாமரம் சிவிகை முதலியன முப்பத்திரண்டு பிருதுகளுங் கொடுத்து அவ்விடத்திற்றானே சிலநாளெழுந்தருளி யிருக்கச்செய்து ஞானோபதேசம்பெற்று வாழ்ந்திருந்தனன். சிலநாள் கழிந்த பின்னர் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அரசனுக்குத்தாம் காஞ்சிக்குப் போக வேண்டுமென்னுங் குறிப்பைத் தெரிவிக்க அரசனும் கட்டளையைமறுக்க அஞ்சித்திருவுளப்படிச் செய்தருளுகவென்றிசைந்தனன். உடனே சுவாமிகள் அந்நாட்டிற்கூடிய அடியவரெல்லாம் புடைசூழ்ந்துவரச் சிவிகைமீதேறிப் பதினெண்வாத்தியங்களு முழங்கச் சகல பிருதுகளுடன் புறப்பட்டு ஆங்காங்கும் பரசமயங்களெல்லாம் பறந்தோடப் பரசிவ ஞானப் போதவாள் வீசி வெற்றிகொண்டு சித்தாந்த சைவ சமயிகளை ஆங்காங்கு நிகரின்றிவாழச்செய்து காஞ்சிநகரத்தைச் சமீபிக்கும்பொழுது காஞ்சிநகராளுமன்னனும் வேளாளச்சிவனடியார்களும் பூரணகும்பமுதலிய மங்கலப் பொருள்களுடனும் தமிழ் வேதபாராயணத்துடனும் சகல வாத்தியங்களு முழங்க எதிர்சென்றுபணிந்து அழைப்பக் கட்டியக்காரரெல்லாம் ஆங்காங்கு நிகழ்ந்த பிருதுகளைப்புகழ்ந்து கூற நகரைவலம்வந்து ஏகம்பவாணன் பொற்கோயிலுக்குட் சென்று அவ்வெம் பெருமானைப் பணிந்து "இம்மையே தரும் சோறும் கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம்" என்னும் பெரிய திருவாக்கைப் போற்றிப் புகழ்ந்து பெருமானுக்கு வேண்டிய பரிசெலாமளித்து விடைபெற்று சைவசிவாசாரியரைப் புகழ்ந்து மீண்டனர்.

அரசன் அருகே சென்று அடிபணிந்து இனிக் காம
கோடிதேவியையுந் தெரிசித்து முன்போல் மடத்துக் கெழு
தருளலாம் என்று விண்ணப்பஞ் செய்ய அப்படியே யாகு
க வென்று காமகோடி நிலயத்துட் சென்று அருட்பிலத்
தையும் அம்மையாரருட்சேவடியையும் போற்றி என்று
மாறாத் திருவருள் பெற்று மீண்டு தமது மடத்துக் கெழு
தருளினார். அதன் பின்னர் காஞ்சி நாட்டரசன் சோழநாட்
டரசன் தந்த பெருநிதி முதலிய செல்வங்களைக் கண்டு மகிழ்
ந்து அவற்றினுந் தான் மிகுதியாக யாவுந்தானமாகத் தந்
தளித்துச் சித்திரை மாதம் திருவோண நக்ஷத்திரத்தில்குரு
பூசையும் மகேசுவரபூசையும் ஆசார்ய மஹோற்சவமும்
நடத்திக்களிப்படைந்து ஸ்ரீஞானப் பிரகாச தேசிகசுவாமி
களுக் குரியனாய் வாழ்ந்திருந்தனன்.

ஞானப்பிரகாச சுவாமிகள் மடாலய வரலாறு.

முற்றிற்று.

மெய்கண்டான் திருவடி வாழ்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காஞ்சிக்ஷேத்திரமஞ்சரி.

ஆய நானிலத் தமைதியிற் றத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய வென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்பு சொல்வரைத்தோ

கண்டு தீவினையாவையுநீக்கி யின்பமேதரும் புண்ணியதீ
ர்த்தம், வேண்டினார் தமக்கிட்டசித்தியதாய் விளங்குதீர்த்த
நன் மங்கலதீர்த்த, நீண்டகாப்புடைத் தீர்த்தமூன்றுலகினி
கழ்ந்தசாறுவ தீர்த்தமுமுதலா, ஆண்டுநீடிய தீர்த்தமெண்
ணில்வு மயிரநாட்டவ ராடுதலொழியார்.

என்று சேக்கிழார் பெருமானும்,

இப்படி யாவரு மெய்திய திறனு
லொப்பன போல வுரைத்திட லொப்போ
வப்பதி யேயத னுக்கிணை யென்றுஞ்
செப்பரி தாம்பிற சீர்கெழு காஞ்சி.

வானோருக்கிற்கு முலகென்னவு மன்னவன் செங்
கோனோருக்கிறைக்குங் குடியென்னவுங் கோதி லம்ப
ரானோர்க்குநாக ருலகோர்க்கு மவனி யோர்க்கு
மேனோர்க்குநாடு நகராகி யிருந்த தவ்வூர்.

என்று கச்சியப்ப சிவாசாரியரும்,

எந்நாட்டுப் பெருவளமு மெவ்வெவர்கோட் பாடுகளுமி
யம்பவல்ல, பொன்னாட்டுப் பொன்செருக்கும் பன்னாக்குப்ப
ணிச்செருக்கும் போக்குமிந்த, நன்னாட்டுப் புலவரெலாந்

தொண்டைநா டெனவுரைப்பர் ஞாலமெல்லாம், தன்றுட்போ
தனையமுதக் கனிவாயாங் காரணத்தின் சீர்பாற்போலும்.

சலதியுடைச் செயிழைக்குத் தமிழ்நாடே மதிமுகமாந்
தமிழ்நாட்டுள்ளும், அலர்புகழ்த்தொண்டைநாடே கனிவாயாவக
துள்ளுஞ் சாதிபேதங், குலவுமா குயிர்க்கெல்லாந் தந்தகமது
மரபொழுக்கங் குடங்கைசேரா, மலகமெனத் தேற்றுதலி
னுமெனலாங் காஞ்சிநகர் வண்மைசொல்வாம்.

என்று சிவஞான முனிவரும்,

மருமலர்ப் பசும் பொதும்பரிற் பண்பயில் வரிவளிமுர
ன்றிடும், பொருவிறந்தசீர்க் காஞ்சிநீ டெல்லையு ளாகமபுரா
ணங்கள், சுருதிநாலெடுத் தியம்பிடப்பட்டன தொழுபவர்
தமக்கெல்லாம், இருமைவாழ்வருள் கடவுளிருக்கைக ளொ
ன்றிரண்டல வோங்கும்.

செப்பரும்புகழ் பூண்டமேற் றவற்றினுட் சிவகரமுள
வான, முப்பதிற்றுமூன் றிரட்டியாத்துறு மெண்படி மு
றைசான்ற, வப்பெருந்தகு தளிகளுட்பனிவரை யணங்கு பூ
ண்முலைதோய்ந்த, துப்புவார்சடை யண்ணலார்தளிக ளெட்
டிரட்டியா யிரண்டுமல்.

காமக்கோட்டத் திருந்தறம் புரிந்தருள் காமநோக்கு
டை யென்றூய காமக்கோட்டமு லம்பிகைக்குரியநற் சத்திகளு
ள்ளின்ற, வேமக்கோயில்க ளோர்துறமாயிர மெரிதவழ் கடரா
ழி, நாமத்தின்படைநாயகனிருக்கைமுந் நான்குபத் தாறும்
தாமே.

உலகெல்லாந்தரு நான்முகற் கொருபதி னுயிரத்தெழு
னூறு, இலகுமுக்கண்ணுடை வானவர்க் கொருபதி னுயிரத் தெழு
நூறுந், தலைமைசால்புகழ் புத்தனுக்கெட்டு நூறாயிரஞ் சகம்
போற்றக், குலவுசெற்றவை வயிரவன்சாத்தனுக் கொவ்
வொரா யிரங்கோயில்.

வெங்கொடுஞ்சிட்டிலை வேற்படைப் பண்ணவன் வானிலாப்
பிறைக்கோட்டால், உயங்கவெம்பகை முடித்தருளோங்கர்த்

தொழுமுத லுயர்வானந், தியங்குசெங்கதி ரிருக்கைகள்
வேறுவே றைந்துநூ றெனச்சொல்வர், தயங்குமேதகை
... ல்வாழ் மந்திரஞ் சாற்றிலெண் கொருநூறே.

ஆரிருளறக்கு மின்னவறுபத்தா றுயிரத்த
ப்ரியதளிக ளுள்ளுந் திருவிழாச் சிறப்பின்மல்கும்
வரிபல்வரைப்பு நாலாயிரத்தொ ளாயிரத்து நாற்பத்
திரொருநான்கு மன்னுமென்மனோர் புலவர்மன்றே.

என்று கச்சியப்ப முனிவரும்,

கூறிவந்த சிறப்பினால் தொண்டைநாடான தியவெ
ன்பன கல்வி யறிவிலைச் சிந்தையிற் சிறந்த சான்றோ
ரையுடைத்தாகிய சிறப்பினையுடைத்தெனவும், போகலோக
வாசிகளாகிய தேவரும் தமக்கு அங்குவரும் அன்பங்களை
நாளுமாத்திரத்தில் போக்கிக்கொண்டு இன்பத்தில் வாழவெ
ன்று விரும்பு தீர்த்தங்கள் பலவுடைத்தாகிய மகிமையையுடை
த்தெனவும், பொன்னூட்டிப்புலவராகிய வியாழபகவானும்,
பல் நாக்குப் பாம்பரசாகிய ஆதிசேடனும் இத்தன்மைத்தா
மென்று மதிக்கவும் சொல்லவுங்கூடாத பெருவளத்தையும்
கோட்பாடுகளையும் உடைத்தாகிய அற்புதத்தையுடைத்தெ
னவும், பரந்தபூமண்டலத்தை யுடம்பாகக்கொண்டு ...
வி தமிழ்நாட்டை முகமாகப் படைத்தபோதும், தண்ட
காரண்யத்தை வாயாகப்படைத்த போதும், படைக்
காது அவ்விரண்டிலுஞ் சிறந்த நாவாகப் படைத்துள்ளதா
கிய தன்மையுடைத்தெனவும், இத்தன்மையான சிறப்பினாலே
னும், மகிமையினாலேனும், அற்புதத்தினாலேனும், யாதல்த
லும், ஒப்புமை சொல்
அள்ளாதுட மல்லாத நாகலத்தினாலேனும் ஒப்புமை சொல்
அதற்கரிமை யுடைத்தாகிய பதித்தன்மையுடைத்தெனவும்
உம்பரும் நாகரும் பூவுலகினரும் எனையரும் தாங்கள்வாழு
ம் நகரங்களை நகரங்களாக மதிக்கத்தக்கதில்லையெனக்கொண்டா
ல் அவற்றையெல்லாம் காடாகவெண்ணச்செய்து அங்காடுகட

கெல்லாம் தன்னையே நகரமாகச் செய்யும் வன்மையுடைத்தாகிய தின்மையுடைத்தெனவும் விளங்கிற்று.

சூரியப்பிரகாசத்தைக் காட்டும் பலகிரணங்கள்போல் இவ்விளக்கத்திற்குப் பிரகாசமாக எண்ணிடற்கரிய சிவாலயாதி பலதேவாலயங்கள் உள்ளனவெனவும், அவ்வளவுங் காண்டற்கரியனவெனவும், அவற்றுள் காண்டற்குரியனவாய் விளங்குவன அறுபத்தாறாயிரமெனவும் அவற்றுள் திருஞானசம்பந்தப் பெருமானருளிய பதினாறாயிரந் திருப்பதிகங்களையேற்று ஆங்காங்கு திருக்கோயில்கொண்டிருக்கும் சிவமூர்த்திகளெல்லாம் ஒருங்கு திரண்டுள்ள சிறந்தெண்ணாச் சிவாலயங்கள் பதினாறாயிரமெனவும், தேவியினுடைய பரிவாரசத்திக ளாலயம் ஆயிரமெனவும், கணேசராலயம் ஐந்நூறெனவும், முருகக்கடவுளாலயம் ஐந்நூறெனவும், விஷ்ணுவாலயம் பன்னீராயிரமெனவும், சூரியமூர்த்தியாலயம் ஐந்நூறெனவும், பிரமனாலயம் பதினாயிரத்து எழுநூறெனவும், துர்க்கை, வைரவர், சாத்தன் இவர்கட்குத் தனித்தனி ஆயிரமெனவும், புத்ததேவதைக்கு எண்ணாயிரமெனவும், அருகனுக்கு ஒன்பதினாயிரத்தெழுநூறெனவும், அநந்தனுக்குநூறெனவுந் தெரியவந்தன.

அவற்றுள் இக்காலத்தில் பிரமன் புத்தன் அருகன் அநந்தன் முதலாயினர் இவர்களுடைய ஆலயங்கள் உண்டென்பதற்குச் சிற்சிலவிடங்கள் ஆங்காங்கிருக்கின்றன. ஏனைய சூரியன் முதலியோருடைய ஆலயங்களுஞ் சின்னமேயுள்ளன. பிரசித்தமாயுள்ளன சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் சத்திஆலயங்களுமேயாம்; இவ்வாலயங்களிருக்குமிடங்களைக் காண்பதும் இப்பொழுது அருமையே. ஆகலான் தமிழ்க் காஞ்சிப் புராணத்திலும் இதற்கு முதனூலாகிய வடமொழிப் பஞ்சாசத்என்னும் நூலினும் கண்டவாறு கோயில்கொண்டிருக்கும் சிவபெருமான் திருநாமங்களும் ஏனையவும் இனி வருமாறு காண்க.

சிவகுமாரர்களால்பூஜிக்கப் பட்டவர்.

1 அநேகபதேச்வரர்
2 ஸேநாபதீச்வரர்
3 சிதம்பரேச்வரர்
4 வைரவேச்வரர்
5 மகாசாஸ்தேச்வரர்
6 வீரபத்ரேச்வரர்

புருஷார்த்தங்களால்

7 தர்மசித்தீச்வரர்
8 அர்த்தசித்தீச்வரர்
9 காமசித்தீச்வரர்
10 மோக்ஷசித்தீச்வரர்

யுகங்களால்

11 க்ருதயுகேச்வரர்
12 த்ரேதாயுகேச்வரர்
13 துவாபரயுகேச்வரர்
14 கலியுகேச்வரர்

வேதங்களால்

15 வேதநூபுரேச்வரர்
16 அத்தியரபகேச்வரர்

திக்பாலகரால்

17 சத்தியநாதேச்வரர்
18 வன்மீகநாதேச்வரர்
19 வன்னீச்வரர்
20 யமேச்வரர்
21 நிருதீச்வரர்
22 வருணேச்வரர்
23 செவந்தீச்வரர்
24 குபேரீச்வரர்
25 கைலாயநாதேச்வரர்

நவக்கிரகங்களால்

26 சூரியேசவரர்
27 சந்திரேச்வரர்
28 அங்காரகே ,,
29 புதே ,,
30 பிரகஸ்பதி ,,
31 சுக்ரேச்வரர்
32 சனீஸ்வரேசவரர்
33 ராகுவேச்வரர்
34 கேதுவேச்வரர்

அசுரர்களால்

35 சுரிலேச்வரர்
36 சுதர்மேச்வரர்
37 சுபுத்தீச்வரர்
38 பாணேச்வரர்
39 துணேச்வரர்
40 காந்தேச்வரர்
41 சலந்தரேச்வரர்
42 அந்தகேச்வரர்
43 ஹிரண்யகசிபேச்வரர்
44 ஹிரண்யாக்ஷேச்வரர்
45 பிரகலாதேச்வரர்
46 மாவலீச்வரர்
47 விரோசனேச்வரர்

அமரர்களால்

48 மணிகண்டேச்வரர்
49 விஷகண்டேச்வரர்
50 ஐராவதேச்வரர்
51 த்ருணேச்வரர்
52 சொர்ணலிங்கேச்வரர்
53 பூமாலிங்கேச்வரர்
54 காயாரோகணேச்வரர்

விஷ்ணுபரிவாரங்களால்

55 காமேச்வரர்
56 விஷ்வக்சேனேச்வரர்
57 கருடே ,,
58 [illegible] ,,
59 [illegible] ,,
60 [illegible] ,,
61 [illegible] ,,
62 அநபாயதே ,,
63 மாதலீச்வரர்

64 தபோதேச்வரர்
65 நானாபுத்ரேச்வரர்
66 ஐராவதே ,,
67 இந்த்ரே ,,
68 முக்தி ,,
69 ரேவதி ,,
70 ரேணுகே ,,
71 சுவயம்புவே ,,
72 மகாகாளே ,,
73 பணீந்த்ரே ,,
74 பணமணி ,,
75 வாசுகி ,,
76 ஹரிச்சந்த்ரே ,,
77 தர்மே ,,
78 பீமே ,,
79 அருச்சுனே ,,
80 நகுலே ,,
81 சகாதேவே ,,
82 பஞ்சாலிகே ,,
83 த்ருஷ்டத்யும்னே ,,
84 சிகண்டி ,,

வ்ருஷிகளால்

85 மார்க்கண்டேச்வரர்
86 சுவயம்பேச்வரர்
87 மிருத்யுஞ்ஜயே ,,
88 அபுனர்ப்பவே ,,
89 முக்தி ,,
90 ஜைகிஷவ்யே ,,
91 இஷ்டசித்தி ,,
92 ஹயக்ரீவே ,,
93 அகஸ்தி ,,
94 திரிகாலக்கியானே ,,
95 வியாசசாந்தி ,,
96 மதங்கே ,,
97 மாண்டவ்யே ,,
98 சௌனகே ,,
99 நாரதே ,,

சப்தருஷிகளால்

100 பார்க்கவேச்வரர்
101 கவுச்சிகேச்வரர்
102 வசிஷ்டே ,,
103 கௌதமே ,,
104 காசிபே ,,
105 ஆங்கிரசே ,,
106 பராசரே ,,
107 தௌமியே ,,
108 பஞ்சதபே ,,
109 ரிதி ,,
110 கௌசிபே ,,
111 உக்ரேச்வரர்
112 கௌசிகேச்வரர்
113 வீதகல்மேச்வரர்
114 நாகே ,,
115 த்ரைதகசிபே ,,
116 வியாசே ,,
117 பௌரிகுச்சே ,,
118 குச்சகே ,,
119 உபமன்யகே ,,
120 மௌத்கல்யே ,,
121 முற்கலே ,,
122 கூரே ,,
123 பிரம்ஹே ,,
124 புண்ணியசோமே ,,
125 பிரவாளே ,,
126 விரட்டானே ,,
127 கிருபாசாரே ,,
128 தாளிவனே ,,
129 குரங்கணி ,,
130 ஜீவத்பாகே ,,
131 வைகல்யபாகே ,,
132 கவ்வாரி ,,
133 பச்சமே ,,
134 அஷ்டபுஜே ,,
135 ஆதிபதி ,,

136 நரசிம்மேச்வரர்
137 மாயமோகினீச்வரர்
138 த்ரிவிக்ரமே ,,
139 ஸ்ரீவாமனகே ,,
140 அனந்தபத்மநாபே ,,
141 அரிசாபபயஹரே ,,
142 மச்சே ,,
143 கச்சபே ,,
144 வராஹே ,,
145 சரபே ,,
146 அம்பரீஷே ,,
147 பரசுராமே ,,
148 வீரராகவே ,,
149 ராமே ,,
150 பலராமே ,,
151 பாண்டவதூதே ,,
152 கிருஷ்ணே ,,
153 கல்கி ,,

யோகாசாரியர்களால்

154 சுவேதேச்வரர்
155 சுவேதகேதேச்வரர்
156 சுவேதசிகேச்வரர்
157 சுவேதாச்வேச்வரர்
158 சுவேதலோகேச்வரர்
159 சுதாரேச்வரர்
160 துந்துபேச்வரர்
161 சதருத்ரேச்வரர்
162 ருசீச்வரர்
163 கேதுமானேச்வரர்
164 விசோகேச்வரர்
165 தசகேச்வரர்
166 விசாபேச்வரர்
167 மகாசாபகாசனேச்வரர்
168 சுகோத்ரேச்வரர்
169 சுமுகேச்வரர்
170 துர்முகேச்வரர்
171 துர்த்தமேச்வரர்
172 துராதிக்ரமனேச்வரர்
173 சனாதனேச்வரர்
174 சனந்தனேச்வரர்
175 சனற்குமாரேச்வரர்
176 நிர்மானேச்வரர்
177 நிர்மமேச்வரர்
178 நிரகங்காரேச்வரர்
179 விரோதேச்வரர்
180 ரக்ஷோபேச்வரர்
181 சர்வக்ஞேச்வரர்
182 ஜிதேஜேச்வரர்
183 சத்தியவ்ரதிபே
184 தபாஜேச்வரர்
185 சமபுத்தீச்வரர்
186 வான்மீச்வரர்
187 வாலகில்யேச்வரர்
188 கௌதமேச்வரர்
189 அத்ரீச்வரர்
190 ருத்ரரூபேச்வரர்
191 ச்ரவணேச்வரர்
192 அவிஷ்டகேச்வரர்
193 த்ரையாருணீச்வரர்
194 அவனேச்வரர்
195 உசனேச்வரர்
196 பிரகஸ்பதீச்வரர்
197 சத்தியேச்வரர்
198 வாமதேவேச்வரர்
199 சிகண்டீச்வரர்
200 க்ருதக்ஞேச்வரர்
201 வாஜச்ரவேச்வரர்
202 மகாசாசேச்வரர்
203 மகாதிதீச்வரர்
204 நிரஞ்சனேச்வரர்
205 ஸ்வச்சந்தேச்வரர்
206 நிஷ்டாபேச்வரர்
207 விஸ்வேச்வரர்
208 ஜடாபாலீச்வரர்

209 மஹோதயேச்வரர்
210 ஹிரண்யபாபேச்வரர்
211 கௌசல்யேச்வரர்
212 லோனாக்ஷேச்வரர்
213 க்ருதமேச்வரர்
214 அட்டகாரேச்வரர்
215 சுமந்தேச்வரர்
216 பாதரீச்வரர்
217 குசிகந்தீச்வரர்
218 பிரசேதேச்வரர்
219 நாஷாயணேச்வரர்
220 க்ரயமானேச்வரர்
221 லாங்கலீஹலீச்வரர்
222 பல்லவீச்வரர்
223 மஹாபிங்கேச்வரர்
224 ஸ்வேதகிரேச்வரர்
225 உசிஜேச்வரர்
226 த்ருணபிந்தேச்வரர்
227 சுதாமேச்வரர்
228 மதங்கேச்வரர்
229 வ்ரஜேச்வரர்
230 சங்கேச்வரர்
231 கபிலேச்வரர்
232 பைலேச்வரர்
233 பராசரேச்வரர்
234 கர்க்கேச்வரர்
235 ஜைகீஷவ்யேச்வரர்
236 பார்க்கவேச்வரர்
237 சுரதீச்வரர்
238 சுகோதேச்வரர்
239 மேதாதிதீச்வரர்
240 மேகவாகனேச்வரர்
241 அங்கிரேச்வரர்
242 பாடபேச்வரர்
243 தேஜசிருங்கேச்வரர்
244 ஸ்ருங்கித்ரேச்வரர்
245 பலபத்ரேச்வரர்
246 கிராமித்ரேச்வரர்
247 ஸ்த்ரீகாமேச்வரர்
248 தபோதனேச்வரர்
249 லம்போதரேச்வரர்
250 லம்பாசேஷேச்வரர்
251 விலம்பேச்வரர்
252 லம்பகேச்வரர்
253 வசிஷ்டேச்வரர்
254 காசிபேச்வரர்
255 நர்மதேச்வரர்
256 பிரம்ஹதத்தேச்வரர்
257 பைரவேச்வரர்
258 காலக்யேச்வரர்
259 கலிருலேச்வரர்
260 சாவித்ரீஹராத்ரேச்வரர்
261 கிரோத்யேச்வரர்
262 தன்மயேச்வரர்
263 ம்ருண்மயேச்வரர்
264 புவனேச்வரர்
265 அஸ்வரேதேச்வரர்
266 பாகலேச்வரர்
267 குண்டகேச்வரர்
268 சம்புகேச்வரர்
279 சங்குகர்ணேச்வரர்
270 வலாஹகேச்வரர்
271 சகுந்தனேச்வரர்
272 வைத்யேச்வரர்
273 சம்பரேச்வரர்
274 ஆச்வலாயனேச்வரர்
275 ஜதுகர்ணேச்வரர்
276 சோமசர்மேச்வரர்
277 குமாரேச்வரர்
278 லோகவத்ஸலேச்வரர்
289 லகுளீச்வரர்
280 கங்காவரேச்வரர்
231 தீர்த்தேச்வரர்
282 விஸ்வகாமேச்வரர்

284 ஓதபுரீச்வரர்
285 ருத்ரேச்வரர்
286 [illegible]
287 அம்பிகாவனேச்வரர்
288 மங்களேச்வரர்
289 கங்கணேச்வரர்
290 கடகேச்வரர்
291 கௌசிகேச்வரர்
292 அனந்தருத்ரேச்வரர்
293 சூக்ஷ்மருத்ரேச்வரர்
294 சிவோத்தமருத்ரேச்வரர்
295 ஏகநேத்ரருத்ரேச்வரர்
296 ஏகருத்ரேச்வரர்
297 திரிமூர்த்திருத்ரேச்வரர்
298 ஸ்ரீகண்டருத்ரேச்வரர்
299 சிகண்டிருத்ரேச்வரர்

ஸ்ரீமயானேச்வரர்
ஸ்ரீஏகாம்ரநாதேச்வரர்
ஸ்ரீஸ்வர்ண ஏகாம்பரநாதேச்வரர்
ஸ்ரீமோகன ஏகாம்பரநாதேச்வரர்
ஸ்ரீபத்ர ஏகாம்பரநாதேச்வரர்

திருமால்கள்.

1 வைகுண்டப்பெருமாள்
2 ச்வேதப்பெருமாள்
3 பச்சைவண்ணப் பெருமா
4 பவழவண்ணப்பெருமாள்
5 வரதராஜப்பெருமாள்
6 தீபப்பிரகாசப்பெருமாள்
7 அஷ்டபுஜப்பெருமாள்
8 யதோக்தகாரிப்பெருமாள்
9 உலகளந்தப்பெருமாள்
10 பாண்டவதூதப்பெருமா
11 உருகுமுன்னப்பெருமாள்
12 நிலாத்துண்டப் பெருமா
13 கள்ளப்பெருமாள்
14 ஸ்திதப்பெருமாள்
15 ஆசனப்பெருமாள்
16 சயனப்பெருமாள்
17 நரசிங்கப்பெருமாள்
18 திருப்பாடகப் பெருமாள்

———o———

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஏகாம்பரநாதராலயத் திருவுள்ள மூர்த்திகள்.

முதலாம் ஆவரணம்.

ஏகாம்பரநாதர்:

காமாக்ஷிதேவியாரால் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம்-சிவகங்கை-கம்பாநதி. உமாபத்திரை, தீர்த்திமதி. விருக்ஷம்—மா.

உலகமாதாவாகிய உமாதேவியார்,—தமக்குப்போகபூமியாகிய மந்தரமலையில் போகார்த்தமாய் வீற்றிருக்கின்ற சிவபெருமானோடு போகலீலாவினோத இன்பரசங்களை நுகர்ந்த பின்னர் பெருமானுங் களித்திருக்குங் களிப்பை நோக்கி மீளார்த்தகளிப்புடையவராய்,

மும்மைப்புவனங்களுஞ் செய்தவப்பேறுமுற்றச்
செம்மைத்திரைநீருடை மேதினிதோற்றமெய்தச்
செம்மைத்திசையெட்டினுந் தென்றிசைமிக்குவெல்ல
மெய்ம்மாத்தொடைநாறிய வண்டமிழ்நாடுவாழ.

நலமன்னியதண்டக நாடுசெழித்தமலப்
பலரும்புகழ்காஞ்சி வளம்பதிமேன்மைசாலக்
குலவுஞ்சமயங்க ளோராறுமகிழ்ச்சிகூற
வுலகெங்கணும் வைதிகசைவமுயர்ந்துமன்ன.

எவ்வெத்தலத்துஞ் சிவபூசனையேற்றமென்னப்
பெளவப்புனல்சூழ்படி மேலவர்தேறியுய்யத்
தெவ்வுத்தொழில்பூணு மிறக்கடைதேயநல்கு
மெவ்வுத்திறநீக்கி யுயிர்ப்பயிரெங்குமோங்க.

முப்பான்முறைவிட்ட விரண்டறமுந்தழைப்ப
வெப்பாலுலகத்தொளி யாவையுமெம்பிரானார்
தப்பாவிதியின்னொளிச் சால்பெனயாருங்காண
வப்பார்சடையாரடித் தொண்டரகங்களிப்ப.

ஓர் விளையாட்டை எண்ணிப்பின்புறத்தே சென்று தமது இருகொங்கைகளு மழுந்தத்தழுவி இரண்டுகண்களையும் இருகரங்களாலும் பொத்திமறைத்தனர். மறைப்பவே உலகமெல்லாம் இருள்மூடியது. அது மூடவே ஆன்மாக்களனைவரும் உயிர்க்குறுதி பயப்பனவாகிய தவந் தானம் ஞானம் அர்ச்சனை முதலியயாவும் இழந்தவர்களாய்ப் பதிதராயினர். ஆகவே பாவம்மேலிட்டு அம்மையாகிய உமாதேவியைப் பற்றியது. பற்றவும் அழகெல்லாந் திரண்ட திருமேனிகறுத்து விளையாட்டொழிந்து வினையாய்முடிந்தது. முடியவே உமாதேவியார் திருவுளங்கலங்கி இருகரங்களையும் எடுத்து பெருமானைப்பணிந்து யானுய்யும்வண்ண மருள்செய்வாயென்று வேண்டினர். வேண்டவும் இறைவனார் தேவியைநோக்கி எமக்கும் நின்றனக்கும் நந்நாம் அகத்தடியவர்க்கும் சூரியனை இருளணுகாததுபோல் பாவம் அணுகுவதில்லையாயினும் நாமிருவரும் உலகிற்கு அம்மையப்பராயிருத்தலினால் அவ்வுலகினராகிய மக்கட்குரிய விதிவிலக்காக விதத்தன்மைத்தென்பதும் பாவபுண்ணியம் இத்தன்மைத்தென்பதும் பரிகாரங்களாயுள்ளவை இவையென்பதும் நாம் காட்டினாலன்றி அவரறிய வல்லரல்லராகலான் இப்பொழுது என்னால் விதிக்கப்படும் விதியைக் கைக்கொண்டு அவ்வழியேநடந்து இப்பழியைப் போக்கடித்துக்கொள்வாயென்று சிவார்ச்சனையையும், சிவத்தியானத்தையும், சிவதோத்திரத்தையும், பஞ்சாக்கர ஜபத்தையும், சிவனடியார் வழிபாட்டையும் அனுக்கிரகஞ் செய்து இவையிற்றை நமக்கினிய காஞ்சிநகரின்கண் செய்வாயென றேவினர். ஏவியவண்ணமே காஞ்சிநகரின்கண் வந்து காமகோட்டத்தில் தவமும் முப்பத்திரண்டறமும் வழுவாது செய்து வந்து மாவடியின்கண் சிவார்ச்சனை முதலிய ஐந்தையும் விடாது செய்து அன்று மந்தரமலையில் பின்புறத்தழுவி மனங்களித்தது போல் இன்றும் பக்கத்திருந்து திருவேகம்பரைத் தழுவி இடப்ப அப்பெருமானை ஏத்திவழிபடப் பெற்றனர்.

இரண்டாம் ஆவரணம்.

* வெள்ளக்கம்பர். கள்ளக்கம்பர். நல்லகம்பர்.

சிவபெருமான் கச்சிமயானத்தின்கண் சைவநீயவள்வி செய்து முடித்த பின்னர் சிவசக்தி லலிதாதேவி என்னுந் திருநாமங்கொண்டு வெளிப்பட்டு யாவும் படைக்கத் தொடங்கிய பொழுது அவரது முக்கண்ணினுந்தோன்றிய மும்மூர்த்திகளுள் பிரமனால் பூசிக்கப்பட்டவர் (வெள்ளக்கம்பர்) திருமாலால் பூசிக்கப்பட்டவர் (கள்ளக்கம்பர்) உருத்திரரால் பூசிக்கப்பட்டவர் (நல்லகம்பர்) இம்மூவரும் ஏகாம்பரநாதருக்கு வலப்பக்கத்தில்வெள்ளக்கம்பர். இடப்பக்கத்தில் கள்ளக்கம்பர். ஈசானத்தில் நல்லகம்பர்.

தென்பக்கத்தில்,—

அகத்தீச்வரர்,—

விந்தமலையின் இறுமாப்பை யடக்கத்தேவர்கள் வேண்டியவாறு காசியில் வசித்திருந்த அகத்தியமுனிவர் காஞ்சிக்குவந்தபோது அக்காஞ்சி சான்றோரை யுடைத்தாயிருக்கும் சிறப்பைநாடி. இவ்விடத்தில் நாமும் தேவர்கள் சொல்லியெண்ணம் வெளிப்படுத்த வெண்ணியிருக்கும் இனிமையுடைத்தாகிய தமிழை வெளியாக்கல்வேண்டும் என்று பூசித்தனர்.

௯ - மேற்பக்கத்தில்,—

அஷ்டோத்தரசதலிங்கம். (108)

† உமாதேவியார் பதரிகாசிரமத்தில் சிவாஞ்ஞையால் யோகதண்ட முதலியவைகளோடு சிவார்ச்சனைக்காகத் தாம் பெற்று வந்த மணல் காஞ்சிக்கு வந்தபோது இலிங்கரூபமானவைகள். இந்த லிங்கங்களுக்கு நிருதிதிக்கிலுள்ள விநாயகக்கடவுளும், வாயுதிக்கிலுள்ள முருகக்கடவுளும் காமாக்ஷி

* சுவச்சயேகாம்பரநாதர். மோகன ஏகாம்பரநாதர். பத்ரயேகாம்பரநாதர். இந்நாமங்கள் வடமொழியிற்கண்டது.† இந்தச்சரித்திரம்-காமாக்ஷிலீலாப்பிரபாவத்தில் 8-வது அத்தியாயம் ரசாலேசப்பிரபாவத்திலுள்ளது.

தேவியாரால் ஏகாம்பரநாதரைப் பூசிப்பதற்கு முன்னாகப்பூசிக்கப்பட்டவர்கள்.

௰ - வடபக்கத்தில்,—

மார்க்கண்டேச்வரர்.

மார்க்கண்டேய முனிவர் ஓர்காலத்தில் சலப்பிரளயம்வந்தபோது அதில் நீந்தி வந்து ஓர்புகலிடங்காணாது மனம்வருந்திப்பார்க்கக் காஞ்சியிலுள்ள வேதசொரூபமாகிய மாவிருக்ஷம் வளர்ந்து சலப்பிரளயத்தின்மேல்தோன்றிற்று. அது கண்டு அதனைப்பிடித்துக் கொண்டு காஞ்சியிலிழிந்து ஆம்பரமாகிய மாவையும் ஆம்பிரநாதரையுங் கண்டு களித்துப் பின்னர் தமது பெயராற் பூசித்தனர்.

மத்தளமாதவேஸ்வரர்.

மாதவராகிய திருமால் தில்லையில் திருநடனங்கண்ட காலத்தில் நந்தியாதியர்போல் தாமும் மத்தள முழக்கவேண்டுமென்று நடராசப்பெருமானை வேண்ட அவர் நீவேண்டிய திதனைப் பெறவேண்டுவையாயின் காஞ்சியின்கண் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து இவ்வரம்பெற்று இங்குவந்து மத்தளமுழக்குவாயென்றருள அவ்வண்ணமேவந்து பூசித்தனர்.

கீழ்ப்பக்கத்தில்,—

நிலாத்திங்கட்டுண்டப்பெருமாள்.

இவர் பாற்கடலிற்றோன்றிய விடச்சுவாலையினால் சரீரம் தகிக்கப் பெற்றகாலத்தில் சிவாஞ்ஞையால் நீ என்முன் இங்கிருக்கப் பெறுவையாயின் எனது சடையிலுள்ள சந்திரனுடைய நிலவானது உன்மேற்படும். அதுபடுமானால் இந்தவெப்பம் நீங்குமென்றருள அவ்வண்ணமே நின்றனர். இவ்விடம் திருமாலுக்குரிய திருப்பதிகளிலொன்று. இந்த முதலாம் ஆவரணத்தில் வடக்கில் கீர்த்திமதி என்னும்தீர்த்தம். இது ஏகாம்பரநாதருடைய பூசைக்குரியது. அக்னிதிக்கில் மடைப்பள்ளியில் உமாபத்திரையென்னுந் தீர்த்தம். இது காமாக்ஷி

தேவியார் ஸ்நானஞ் செய்தற்குரியது. இவ்விரண்டும் கிணறுகள்.

மூன்றாம் ஆவரணம்.

மேற்பக்கம்,—நிருதிமூலையில் (108) இலிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம், வாயுமூலையில் (1000) இலிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம், இதன் மத்தியில் மணக்கோலநாதராகிய ஏகாம்பரநாதரும், மாவிருக்ஷமும், மாவடிகந்தப்பரும், ஏலவார்குழலியாரும் உள்ளார்.

கந்தப்பர் மாவடியின்கண் வேதசொரூபமாகிய மாமரத்தின்கண் சித்தாந்தச் சுவையோடு கூடிப் பழுத்திருக்கும் வேதாந்தக் கனியை யுண்பதற்கு வீற்றிருக்கின்றார். * ஏலவார்குழலியார் கங்கையே அத்திருவுருவமாக வந்தவர்.

வடதுபக்கம்,—பிரளயபந்தனி - இந்தச்சக்தி கம்பாநதியாகவந்து சிவபெருமானுடைய ஆணையால் வெள்ளமாய் வர அதனை ஏகாம்பரநாதரைப் பூசிக்கின்ற காமாக்ஷிதேவியார் கண்டு தனது சேடியருள் ஒருசக்தியையழைத்து இவ்வெள்ளத்தைத் தடுப்பாயென்று கட்டளையிட அந்தச்சக்தி தான்வைத்திருந்த விஸ்வபக்ஷண மென்னுங்கபாலத்தில் அவ்வெள்ளத்தையடக்கினவள்.

நடராஜமூர்த்தி தில்லையின்கண் திருமாலுக்கு மத்தளமுழக்கக் காஞ்சிக்குப்போகும்படி அருள்செய்தபொழுது திருமாலைப்பார்த்து நாம் இத்தில்லையில் சிற்சபையிலேமாத்திரம் சிதாகாசமாகக்கொண்டு நடனஞ்செய்கின்றோம். காஞ்சியில் அவ்வெல்லைமுற்றும் பரவெளியாகக் கொண்டு ரக்ஷாதாண்டவஞ் செய்கின்றோம். அந்தக் காட்சியை நீ அங்கேக்காணலாமென்று கட்டளையிட்டவண்ணம் ரக்ஷாதாண்டவ தெரிசனங் கொடுத்தருளினவர்.

* இது காமாக்ஷிலீலாப்ரபாவத்திற்காண்க.

கருந்தடங்கண்ணி.

இவ்வம்மை காமாக்ஷிதேவி கவுரியாரானபோது அவரது திருமேனியினின்று நீங்கிய கரியகோசம்.

நான்காம் ஆவரணம்.

துவஜஸ்தம்பத்தானத்தில்,— கச்சிமயானர்.

பூர்வத்தில் பந்தகாசுரன் என்னும் ஓரசுரன் திருமால் முதலிய யாவருள்ளுங் கலந்து அவர்களுடைய வீரியங்களையுண்டுவரும்பொழுது அதனையறிந்துகொள்ளாத திருமால் முதலியோர் கைலாயத்திற்சென்று பெருமானைப்பணிந்து நாங்கள் இறக்கவேண்டியகாலம் வருவதற்குமுன்னரே இறந்துபோகும்படியானகதி எங்கட்கு வந்திருக்கின்றது. காரணம் அறியோமென்று இரந்துகூறப் பெருமான் காரணங்கூறி யாவரையுங் காஞ்சியில் வைசவயாகத்துக்குரிய திரவியங்களாக வரச்செய்து தாம் உமாதேவியாருடன் யாககர்த்தாவாக எழுந்தருளியிருந்து யாகாக்னியையுண்டாக்கி அதில் யாகத்திரவியரூபமாயிருக்கின்ற தேவர்களையெல்லாம் இட்டெரித்தனர். எரிப்பவே அவருள்ளிருந்த பந்தகாசுரன் நாசமடைந்தனன். உலகமும் நாசமுற்றன. அதனால் அவ்விடம் மயானமாயிற்று. அக்கச்சிமயானத்தில் யாகாக்கினியாய்ச் சொலித்துக்கொண்டிருந்த சிவபெருமான் இலிங்கரூபமாயினர். அக்காரணத்தால் கச்சிமயானேச்வரர் எனப்பெயர்பெற்றார்.

வாலீஸ்வரர் (கச்சிமயானத்துக்குக்கீழ்பால்.) தேவேந்திரன் மகனாகிய வாலி தன்னைப்போரில் யாவரெதிர்ப்பினும் அவரது பலத்தில் தனக்குப்பாதியும், தோல்வியில்லாத வெற்றியும் வரவேண்டுமென்று பூசித்தனன். அச்சுயம்புமூர்த்தி வாலியின் வால்தழும்பும் பெற்றுள்ளார்.

பைரவராலயம் (வாலீச்சரத்துக்குக் கீழ்பால்)

சிவகங்கை—சிவபெருமான் வைசவயாகஞ்செய்யத்தொடங்கியபொழுது தமது வலக்கைவிரல் நகங்களால் பறித்து

ஓர் குண்டமாக்கி அதில்கங்கைபோல் வாமதேவமூர்த்தியை நெய்யாகப் பூரிக்கப்பெற்றதனால் சிவகங்கை எனப்பெயர் பெற்றது.

தென்பக்கத்தில்-விஷ்ணுவேச்வரர். சரச்வதி மண்டபம்.

திருப்பாற் கடலிலிருந்து திருமால் அனந்தனையாட்டி முதலாயினருடன் தில்லையில்வந்து திருநடனங்காணத் தவப்புரியுங்கால் தில்லைநாதன் திருக்காஞ்சியில் எம்மைவழிபட்டு வருவையாயின் இங்கு எமது நடனங்காணப் பெறுவாயென்று கட்டளையிட அவ்வண்ணமேவந்து பூசித்தனர்.

இடபேச்வரர். (சிவகங்கைக்குக்கீழ்ப்பக்கத்தில்)

வைகுண்டத்தில் திருமால் தன்னிடத்தில் செருக்குற்ற கருடனையடக்குதற்பொருட்டு கைலைக்குச்சென்று கருடனை இடபதேவரிடத்தில் விட்டுவிட்டுத் தான் இறைவனை தெரிசனார்த்தமாய் உள்ளேசெல்லும்பொழுது இடபதேவருக்குக் குறிப்பாய் தமதெண்ணத்தைத் தெரிவித்துச் செல்ல அவர்குறிப்பை இடபதேவர் அங்கீகரித்துத் தாம் உறங்குபவர்போலுறங்கி பெருமூச்செறிந்து அந்தமூச்சில் கருடனையலைத்தலைந்து வருந்தியிருப்ப அதனைச்சிவபெருமானறிந்து நமதாணையின்றி இச்செயலைச்செய்தபடியினால் இதுபெருங்குற்றம்; இதனைக்காஞ்சியில் எம்மை வழிபட்டு ஒழித்துக்கொண்டு இங்குவரக்கடவாயென்று கட்டளையிட அக்கட்டளைப்படியே இங்குவந்து பூசித்தனர்.

ஸ்ரீநாக ஆபரணம்.

(விகடசக்ர விநாயகர் ஆயிரக்கால் மண்டபத்தில்)

இவர் விஷ்வக்சேனரது விகடக் கூத்தைக் கண்டு திருமாலுக்குச் சக்கரதானஞ் செய்தவர்.

ஏகாம்பரநாதர் சந்நிதிவீதி, கீழண்டைவாடை.

மாதலீச்வரர். ஸ்ரீராமருக்கு இந்திரன் தேர்ப்பாகனாக அனுப்பிய மாதலி என்பவன் பூசித்தது.

மங்களேச்வரர் மங்களதீர்த்தத்துக்கு மேற்பக்கம்.

காமாக்ஷிதேவியின் தோழியாகிய மங்களை என்பவள் பூசித்தது.

கம்பாநதி.

இராமேச்வரர். (ஆதிசைவர்கள் அக்கிராரக்கோடி.)—ஸ்ரீராமர் ராவணசங்காரஞ்செய்து சேதுவில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்தும் எஞ்சிநின்ற தோஷத்தைப் போக்கடித்துக்கொள்ள அந்த ராமநாதராணையால் காஞ்சிக்கு மீண்டும்வந்து பூசித்தனர்.

மேலண்டைவாடை.

அநந்தபத்மநாபேச்வரர். லிங்கப்பன் தெருவில்.

வைகுண்டநாதராகிய திருமால் ஓர் காலத்தில் கயிலாயநாதரிடத்தில் போனபோது சிவனாரும் சிவையும் லீலாவினோதமாய்ச் சூதாடுகருவிகள்கொண்டு சூதாடிக்கொண்டிருப்ப அவ்வாட்டத்துக்குத் தான் சாக்ஷியாய்நின்று வெற்றிகொண்ட உமாதேவியாரது வெற்றியைக் கூறாமல் தோல்வியடைந்துபோன சிவனார்பக்கமாய் அவருக்குவெற்றிகூற அண்ணனே! நீ பொய்கூறினாய் உன்னுடைய நாவானது இரண்டாய்விட்டது ஆகையால் பிளவுடைய நாவைப் படைத்துள்ள பாம்பாகப் போகக்கடவாயென்று சபிக்க அக்கணமே பாம்பாகி அனந்தனென்று பெயர்பெற்றுக் காஞ்சிக்கு வந்து அவ்வுருவம் நீங்கப் பூசித்தனர்.

பாண்டவதூதேச்வரர். (கண்ணாம்புக்காரத் தெருவில்)

கிருஷ்ணமூர்த்தி. பிருகுமுனிவர் சாபத்தால் தனக்குவந்த பிறவித்துன்பத்தை எண்ணி இனிப்பிறவித் துன்பமில்லாமலிருக்கும் வண்ணம் பிறவி எப்பொழுதும் இல்லாதவனாகிய சிவபெருமானைப் பூசித்தல்வேண்டுமென்று பூசித்தனர்.

ஜ்வரஹரேச்வரர்.

தேவர்கள் சிவபெருமானுடைய வீரியத்தைவேண்டி உண்ட பின்னர் அதன் வெப்பத்தைத் தாங்கமுடியாது

காரநோயுண்டாய்விட அந்நோய் நீங்கித் தாங்கட்குத் தனிவுண்டாமாறு வந்து பூசித்தனர்.

தான்றோன்றீச்வரர்.

உபமன்னியமுநிவர் தமது பிதாவாகிய வியாக்கிரபாதருடைய உத்தரவின்படி தில்லையைவிட்டுக் காஞ்சிக்குவந்து [illegible]ாவின் பால்போல் இனியபாலுண்மைவேண்டிப் பூசித்தனர்.

சர்வதீர்த்தம்.

இலக்ஷுமணேச்வரர்.
சீதேச்வரர்.
சுக்கிரீச்வரர்.
அநுமந்தேச்வரர்.
விபீஷணேச்வரர்.

இலக்குமணர் முதலியோர் ஸ்ரீராமருடன் வந்தபோது ராவணயுத்தத்தில் வந்ததோஷத்தை ராமர், சிவார்ச்சனைசெய்து பரிகரித்துக்கொண்டது போல் தங்களுக்குண்டாகிய தோஷங்களையும் போக்கிக்கொள்ளத் தனித்தனியே தங்கள் தங்கள் பெயரால் பூசித்தனர்.

கங்காவரேஸ்வரர்.

கங்கைமுதலிய புண்ணிய நதிகள் ஓர்காலத்தில் வந்து தங்களிடத்தில் படிந்துள்ள பாவங்களைப் போக்கிக்கொள்ளப் பூசித்து இனிப்பாவங்கள் வந்து அணுகாதிருக்கவும் வந்து பூசித்தன.

விச்வேச்வரர்.

காசியின்கண் வாழும் விசுவநாதர் காஞ்சியே இக்காசியினுஞ் சிறந்த இனிமையானதென்று வந்து வாழ்ந்தனர்.

காமீச்வரர்.

சிவபெருமான் நெற்றித் தீப்பொறியால் அநங்கனாய்ப் போனமன்மதன் திருக்கலியாணகாலத்தில் நினைக்கவந்தபோது அவன் இறைவனை வணங்கி யான்யாவருக்கும் சந்தானவிர்த்தியுண்டாதற் கேதுவாகிய காமத்தை விளைவிக்கவும்,

காமியார்த்தமாய்ப் பிறருக்கீவோரும் ஏற்போருமாகிய இருவருள்ளத்து மிருந்து கொடுப்பதற்கும் ஏற்பதற்குமான ஆசையை விளைவிக்கவும், என்றனை மூன்றுலகத்தாரும் கடவாதிருக்கவும் வேண்டுமென்று வேண்டச் சிவபெருமான் காஞ்சியிலளிப்போமென்று சொல்ல அவ்வண்ணமே வந்து பூசித்தனன்.

தீர்த்தராஜேச்வரர்.

காமாக்ஷிதேவியார் பூசனைசெய்யுங்காலத்தில் சிவபெருமானேவிய தீர்த்தங்களெல்லாந் திரண்டு வேகமாய்வந்து பெருமானைக் காமாக்ஷிதேவியார் தழுவியிருந்ததைக்கண்டு வேகமடங்கித் தாமும் சிவார்ச்சனைசெய்ய ஆசைகொண்டு தீர்த்தராசனென்று பிரதிஷ்டைசெய்து பூசித்தனர்.

வருணேச்வரர்.

தீர்த்தங்களெல்லாம் தீர்த்தராசனென்று சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றதை வருணன் கண்டு தான் தண்ணீருக்குத் தலைவனாகவேண்டுமென்று பூசித்தனன்.

இரணியகசிபேச்வரர்.
இரணியாக்ஷேச்வரர்.
பிரகலாதேச்வரர்.
மாவலீச்வரர்.
விரோசனேச்வரர்.

இவ்வைவரும் மனிதர்களாலும், மிருகங்களாலும், பறவைகளாலும் ஏனைய பிறவியுடையவர்களாலும் ஆயுதவகைகளாலும் எந்தப்பொழுதிலும் இறவாதிருக்க இரணியன் முதலிய ஐவராலும்பூசிக்கப்பட்டவர்.

சந்திரேச்வரர். * சந்திர புஷ்கரணியின் கீழ்பால்.

சந்திரன், சூரியன்முதலிய எண்மர்களோடு தானும் ஓர் கிரகமாயிருக்கப் பூசித்தனன். சந்திரபுஷ்கரணி என்கிற தீர்த்தமும் இவனால் உண்டாக்கப்பட்டது.

சர்வதீர்த்தத்துக்குமேற்கில் † ஈச்வரகோட்டத்தில்

* இது ஐயப்பிள்ளையார் கோயிலென வழங்கிவருகின்றது.

† இது வெள்ளைக் குளமென வழங்குகின்றது.

முப்புராரிக்கோட்டம்.

சுதர்மேச்வரர். சுசீலேச்வரர். சுபத்தேச்வரர். திரிபுராதிகள் தங்களுடைய முப்புரங்களைச் சிவபெருமான் எரித்த பின்னர் அப்பெருமானை எங்கள் மூவருள் இருவர் உனது வாயிற் காவலாளிகளாகவும், ஒருவன் மத்தளமுழக்கவுமாக அருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கத் திரிபுராரி காஞ்சியில் எம்மையருச்சிப்பீராயின் அப்பணி கிடைக்குமென்ன அவ்வண்ணமே வந்து பூசிக்கப்பெற்ற மும்மூர்த்திகள்.

பஞ்சிப்பேட்டை.

சலந்தரேச்வரர் (சர்வதீர்த்தத்துக்கு வாயுமூலையில்)

சலந்தராசுரன் ஆண்மையும் வன்மையும் எவ்வுலகும் ஆளவல்ல இறைமைத்தன்மையும் பகைவரைவெல்லுந் திறமையும் சிவபிரானால் மரணத்தையும் வேண்டிப் பூசித்தலின்.

ஓணேச்வரர். காந்தேச்வரர்.

சர்வதீர்த்தத்துக்குத் தென்பாலுள்ளது.

ஓணன் காந்தன் என்பவர் இரண்டசுரர்கள். இவ்விருவரும் வாணாசுரனுடைய சேனைத் தலைவராயிருந்து இவ்வுலக வாழ்க்கை வெறுத்துச் சிவபெருமானுடைய அன்புவேண்டிப் பிறவித் துன்பத்தை யொழிக்கப் பூசித்தனர். அவ்வாலயத்தருகிலுள்ள தீர்த்தம் அவர்களாலுண்டாக்கப்பட்டது.

சேவந்தீச்வரர்.

வாயுதேவன் கந்தவாகனன் என்னும் பெயர்பெற செவ்வந்தி (சாமந்தி) மலர்களைக்கொண்டு பூசித்தனன். அதனால் செவந்தீச்வரரெனப் பெயர்பெற்றனர். இவ்விடத்தில் வயிரவமூர்த்தியினுடைய சூலாயுதத்தினால் உண்டாக்கப்பட்ட சூலதீர்த்தமென்று ஒரு தீர்த்தமுளது.

நவக்கிரகேச்வரர். (பருத்திக்குளத்துக்குக் கீழ்பால்)

சந்திரன் நீங்கலாக வேறைய எண்மர்களும் கிரகநிலைபெறுதற்குத் தனித்தனி தங்கள் தங்கள்பெயரால் பூசித்தனர். இவர்கள் சூரியமூர்த்தித் தலைவராதலால் பருதி என்கிற தன்பெயரால் ஒரு தீர்த்தமுண்டாக்கினார். அது பருத்திக்குளமென வழங்கும்.

சுவர்ணலிங்கேச்வரர். (பொன்னேரியில்)

பிரமவிஷ்ணுக்களால் பூசிக்கப்பட்டவர். சுயம்புமூர்த்தி. இந்த மூர்த்தியைத் தொடப்பெற்றவர் பொன்னிறத்தைப்பெறுவர். பொன்னுருவமாக அங்கு ஸ்பரிசவேதிகையென்றுளது. அதுவுந் தொட்டவரைப் பொன்னாக்கல் முதலிய மகிமைகளையுடையது.

*சக்கரதீர்த்தம். (வெள்ளைக்குளம் தென்பக்கம்.)

அபுனர்ப்பவேச்வரர். (பிறவாத்தானேச்வரர்.)

வாமதேவமுனிவரென்பவர் தாய்வயிற்றிருக்கும் பொழுதே பிறத்தற்கஞ்சி சிவபெருமானைத் தியானித்து என்னையனே! எனக்கு இவ்வண்ணம் கருவிற்பட்டுழலும் பிறவித்துன்பத்தை யொழித்தருளல் வேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபெருமான் இரக்கமுற்று அவ்விடத்திற்றானே தன்னைக்காணும் வண்ணஞ்செய்து அப்பனே! நீ இப்போது யாதொரு துன்பமுமுறாது வெளிப்படுவாய். நீ பிறந்தவுடன் காஞ்சிக்ஷேத்திரத்தை யடைந்து இனிப் பிறவாவண்ணம் என்னைப்பூசனை செய்வையாயின் நான் உன்னை இனிப் பிறவாவண்ணம் செய்கிறேனென்றருள அவ்வண்ணமே பூசித்துப் பிறவாநெறியளித்த பெருமானென வாழ்த்தினார்.

முத்தீச்வரர். (பிறவாத்தானேச்வரருக்கு மேற்கு).

முன்சொன்ன வாமதேவமுனிவர் காஞ்சியை விடாது வாசஞ்செய்து மரணமடையாது கைலைக்குச்சென்று அங்கு கைலாயநாதரிடத்தில் சிவலிங்கமொன்று கொடுத்தரு

* இவ்விடம் கோனேரிகுப்பம் கிராமமென வழங்கும்.

ளைப் பெற்று மீண்டும் காஞ்சிக்குவந்து அவ்விலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து முத்தீசரென்னுந் திருநாமமிட்டுப் பூசித்தனர். (இவ்விடத்தில் ஞானதீர்த்தம்)

இறவாத்தானேச்வரர். (ஏகாம்பரநாதராலயத்துக்குக் கிழக்கு.)

மார்க்கண்டேய முனிவர் யமபயந்தனக்குண்டாகாதிருத்தற்கும் என்றும் முத்தராய் வாழ்தற்கும் பூசித்தனர்.

மஹாலிங்கம். (இறவாத்தானேச்வரருக்குக் கிழக்கு)

அரிபிரமர்கள் ஓர் பிரளயத்தில் தாம் தாம் பரமென்று மன்றாடி நிற்ப இருவர்க்கும் பரமாபரமன் மகாலிங்கமாய்த்தோன்றி இருவரையும் அபரங்களாக்கப் பின்னர் இருவரும் முன்போல் உலகினர்க்குப் பரமாயிருப்பப் பூசித்தனர்.

வீரட்டஹாஸேச்வரர்.

ஓர்சங்கார காலமாகிய இரவில் சிவபரஞ்சுடர் உமாதேவியார்காண வீரமாகிய அட்டகாசத்துடன் ஆனந்த நடனஞ்செய்து புனருற்பவமாகிய உதயகாலத்தில் இலிங்கவுருவமாயினர். அக்காரணத்தால் வீரட்டஹாஸேஸ்வரரெனப் பெயர்பெற்றனர். அந்த லிங்கமூர்த்தியை அநேக சித்தர்கள் பூசித்து அற்புதமான சித்திகளைப்பெற்றனர். கொங்கணமுனிவரென்பவர் இச்சிவலிங்க மூர்த்தியே இக்காஞ்சியில் சங்காரகாலத்தில் எல்லாவுலகங்களையும் ஒடுக்கித் தன்னிடத்தில் ஒடுக்கிக்கொள்வது உண்மையாயின் யான் வைத்திருக்கும் இக்குளிகையினை நீறாக்கி உட்கொள்ளல்வேண்டும் என்றுசொல்லி அக்குளிகையினை அம்மூர்த்தியின்மேல் வைத்தனர். உடனே அதுசாம்பராய் உள்ளே சென்றுவிட்டது. அதுகண்ட முனிவர் அங்கேயென் றதிசயித்து அவ்விடத்திலேயே யிருந்து சர்வசித்தியுந் தமக்குண்டாகப் பூசித்தனர். இவ்விலிங்கமூர்த்தியை ஓர்காலத்தில் இலக்ஷ்மிதேவியானவள் நாராயணரைப் பார்த்து நீர் சிவபெருமானைப்போதும் பவளமேனியராயிருப்பீராயின்

பொன்னிறமுடைய எனக்குக்களிப்பாக விருக்குமென்ன அவர் பச்சவண்ணப்பெருமாளென இங்குவந்திருந்து பவளநிறம் பெறுவதற்குத் தன்னுடைய சக்கரத்தால் ஒரு தீர்த்தமுண்டாக்கி நாடோறும் பதினாயிரந் தாமரைமலர்களால் பூசித்துப் பவளநிறம் பெற்றனர்

சக்கரதீர்த்தத்துக்குக் கீழ்ப்பக்கத்தில்,

பஞ்சபாண்டவேச்வரர்.

தருமர்முதலிய ஐவரும் துரோபதைசகிதராய் உரோமசர், முற்கலர், வியாசர் முதலிய பலமுனிவருடன் தீர்த்தயாத்திரையாய்க் காஞ்சிக்குவந்தபோது வீரட்டகாசலிங்கமூர்த்தியினுடைய பெருமைகளைக்கேட்டு அந்தமூர்த்தியை வழிபட்டு இவ்வெல்லை மிக்க மகிமையுடைத்தானதென்றெண்ணித் தனித்தனியே தங்கள்தங்கள்பெயரால் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூசித்து அவரவர்வேண்டிய சித்திகளைப்பெற்றனர்.

அதனால் பஞ்சபாண்டவர் பூசித்த ஐந்துலிங்கங்களையல்லாமல் ஏனைய துரோபதைமுதலியோரால் பூசிக்கப்பட்டலிங்கங்கள்பல அவ்விடத்திலிருக்கின்றன. அவையெல்லாம் முன்னர் குறித்திருக்கும் ஈச்வரநாமங்களிற் காண்க.

ஈசானேச்வரர். (பாண்டவேசத்துக்குக் கிழக்கு)

திக்பாலகரில் ஒருவராகிய ஈசானதேவர் ஈசானதிக்குக்குத்தலைவராயும் இந்திராதியெழுவருக்குந்தலைவராயும் இருத்தற்குப் பூசித்தனர்.

சிப்பீசர். (கிழண்டைராஜவீதி)

வித்தியாதரரென்னும் வேதியரொருவர் சைவானுஷ்டானத்திற் சிறந்தவராய் குபேரன்மகளாகிய ரேகாவதியென்பவளைக் கல்யாணஞ்செய்துகொண்டு காஞ்சியில் வாழுநாளில் ரேகாவதியென்பவள் சிவபத்தியிற் சிறந்தவளாய் ஆயிர முத்தாரங்களைக்கொண்டு நாடோறும் அர்ச்சித்துவர சிவ

பெருமான் கருணைகூர்ந்து அங்குள்ள தீர்த்தத்தில் முத்துச்சிப்பிகள்தோன்றுமாறு அனுக்கிரகஞ்செய்ய அம்முத்தங்களைக்கொண்டு என்றும் அர்ச்சித்து வந்தனன்.

முத்துச்சிப்பிகள் தோன்றியபடியால் அத்தீர்த்தம் சிப்பித்தீர்த்தமெனப் பெயர்பெற்றது.

கோனேரிகுப்பம். கம்மாளத்தெருவில்.

கங்கணேச்வரர். கடகேச்வரர். இவ்விரண்டுமூர்த்திகளும் உமாதேவியார் ஏகாம்பரநாதரைப் பூசிப்பதற்காகக் கங்கணமும் ரக்ஷையும் அணிந்துகொள்வதற்குத் தனித்தனியே பூசித்தனர்.

* துவக்கௌசிகேச்வரர் (காமாக்ஷியம்மன் கோயிலுக்கு ஈசானம்.)

உமாதேவியார் திருக்கயிலை துறந்த காலத்தில் தமக்குண்டாயிருந்த கறுமேனியைக் காஞ்சியில்வந்து கழிக்க அஃது கவுசிகி என்னுஞ் சத்தியாய்ப் பூசித்தமூர்த்தியார்.

கண்ணீச்வரர். (ஷை).

விடச்சுவாலையால் வெம்பிப்போனமேனியைப் படைத்த திருமால் அவ்வெப்பநீங்கப்பூசித்தனர்.

மஹாகாளேச்வரர். (மகாகாளர்கோயிலில்)

மஹாகாளனென்னும் ஓர் பாம்பு முத்தியடைய விருப்பங்கொண்டு சீகாளத்தியில் பூசித்துவர அக்காளத்திநாதர் காஞ்சியில் எம்மைப்பூசித்தால் முத்திகொடுப்போமென்றுசொல்ல வந்துபூசித்தது.

மோகினீச்வரர். (கண்ணீசர்பக்கத்தில்)

திருமால் மோகினியுருவங்கொண்டு அசுரரைமயக்கிய பாவந்தீர்க்கப் பூசித்தனர்.

உருத்திரகோடீச்வரர். (மொட்டைக்கோபுரம்.)

* உடம்பாகிய சட்டை.

ஓர்கற்பத்தில் உருத்திராதிகாரத்திலிருந்த கோடிருத்திரர்கள் முத்திப்பதம் விரும்பி பூசித்தனர்.

அபிராமீச்வரர். (சங்குபாணிவிநாயகருக்கு மேற்கு)

திருமால் மாவலியை யடக்க வாமனவுருவங் கொள்ளவும், பின்னருலகையளக்கத் திரிவிக்கிரம வடிவங்கொள்ளவும் பூசித்தனர். மாவலியை வெற்றிகொண்ட பின்னரும் வந்து வாமனதீர்த்த மென்று ஓர் தீர்த்த முண்டாக்கிப் பூசித்து ஆனந்தங்கொண்டு சிவபெருமானுக்குத் தானெடுத்த வுலகளந்த வுருவைக்காட்டி அவ்வுருவமாகவேநின்றனர்.

இராஜவீதி.

சேனாபதீச்வரர். (குமரக்கோட்டம்)

வள்ளிநாதர் சாமிநாதராய் எவர்க்கும் நாதராகிய சிவபெருமானது மொழியைக் கடந்ததற்குப் பரிகாரமாகப் பூசித்தனர்.

மகாசாஸ்தேச்வரர். (வாணியர் மண்டபத்தில்)

ஹரிஹர புத்திரராகிய *சாஸ்தா பிறந்தவுடன் சிவபெருமானை நோக்கி உனது திருவருள் பெறுதற்குரிய தலைமைத்தன்மை எனக்கு வேண்டுமென்று பிரார்த்திக்க அக்காஞ்சியிற் பூசித்துப் பெறுவாயென்று கட்டளையிட அதுபோல் வந்து பூசிக்கப் பெற்றபெருமானார்.

அபிராமீச்வரர். (வாணியர்மண்டபத்துக்கு அடுத்தசந்து.)

தேவர்கள் வரத்திலும் வன்மையிலும் சிறந்த அசுரர்களிடத்தில் தங்களுக்கு வெற்றியுண்டானமை சிவபெருமானருளென்றுணராது தங்களா லென்றுணர்ந்து பெரும் போரிற் றலைப்பட்டுநிற்ப; இவர்களது வெற்றித் திறத்தை ஈசுவரராகிய சிவபெருமான் துரும்பொன்று நட்டி அவர்களது அகங்காரத்தை யொழித்தனர். அஃதொழிந்த பின்னர் உம்மையன்றி எங்களால் ஓர்துரும்பும் அசைக்க முடியாதென்று யாவரும் ஒருங்குகூடிப் பூசித்தனர்.

ஐராவதேச்வரர். (கச்சபேச்வரர் கோயிலுக்கு ஈசானம்)

ஐராவதம் என்கிறயானை தேவேந்திரனைத் தாங்கிப்பெருமை பெறப் பூசித்தது.

கச்சபேச்வரர்.

திருமால் பாற்கடலில் மந்தரமலையைத் தாங்கக்கச்சப (ஆமை) உருக்கொண்டு காத்தபின்னர் செருக்குற்றுக் கடலைக் கலக்கிய காலத்தில் சிவபெருமான் அவ்வாமையின் செருக்கடக்கி ஓட்டையெடுத்து மதாணிப்பதக்கமாக மார்பிலணிந்து கொள்ளவே பூர்வஞானம் பிறந்து சிவாபராதஞ் செய்து விட்டோமென்றஞ்சி அவ்வபராதம் நீங்கப் பூசித்தனாதலால் கச்சபேசரெனப் பெயர்பெற்றனர்.

இவரையே பிரமன் கலைமகளோடு வந்து சிருட்டித் தொழில் செய்யும் அனுக்கிரகம் பெறப் பூசித்தனன்.

இட்டசித்தீச்வரர். (கச்சபேசருக்குவடக்கில்)

அசுரகுருவாகிய சுக்கிராசாரி வச்சிரயாக்கையும் மிருதசஞ்சீவினியும் பெறப் பூசித்தனன். இந்த சுக்கிராசாரியினுடைய ஆக்ஞையினால் ததீசிமுனிவரும்வந்து பூசித்து வச்சிர சரீரத்தைப் பெற்றனர். தீர்த்தம் இஷ்டசித்திதீர்த்தம். இதனுடைய மகிமை இங்கு எழுதமுடியாது. புராணத்திற் காணலாம். இத்தீர்த்தத்தின் வடக்கில் தருமசித்தீச்வரர். கிழக்கில் அர்த்தசித்தீச்வரர். தெற்கில் காமசித்தீச்வரர். மேற்கில் மோக்ஷசித்தீச்வரர்.

தீர்த்தத்துக்குக்கீழ்ப்பக்கத்தில் யாக்கை சாஸ்தாவுரியன் வயிரவர் ஆகிய இக்கால்வர் நடுவில் விநாயகரிருக்கின்றனர். இவர் பஞ்சசந்திவிநாயகரென்னும் பெயருடையார்.

அரிசாபபயஹரேச்வரர். (நெல்லிக்காரத்தெருவு)

திருமால் தனக்குப் பிருகு முனிவரால் நேர்ந்த சாபத்துக்கஞ்சிச் சிவபெருமானது நிக்கிரகத்தினும் அனுக்கிரகத்தாலும் போக்கிக்கொள்ள வந்து பூசித்தனர்.

மதங்கேச்வரர். (நெல்லிக்காரத் தெருக்கோடி)

மதங்கமுனி என்பவரால் ஐம்புலன்களின் மதமடங்கப் பூசிக்கப்பட்டவர்.

திரிகாலக்யானேச்வரர்.

முக்காலமும் அறிந்து கொள்ளவெண்ணிய பல ஞானிகளால் பூசிக்கப்பட்டவர்.

* சத்தியநாதேச்வரர். (மதங்கேசவரருக்குக்கிழக்கு)

சிபி என்கிற இந்திரன் இந்திரபோகத்தை வெறுத்துச் சிவபோகத்தை விரும்பி முத்திபதம் வேண்டிப் பூசித்தனன். இருகலை பெறுதற்குப் புதனாலும் பூசிக்கப்பட்டவர். தீர்த்தம் - இந்திரதீர்த்தம். இது வாரதீர்த்தங்களில் புதவாரதீர்த்தம். இந்த க்ஷேத்திரம் சத்திய விரதக்ஷேத்திரமெனவும், திருநெறிக் காரைக்காடு எனவும் பெயர் பெறும்.

சித்தீச்வரர். (குசத்தெருவு)

சிவபரஞ்சுடர் காமாக்ஷிதேவியாரது ஸ்நானதீர்த்தமாகிய மஞ்சள் நீர் நதியில் ஆனந்தக் கூத்தாடிப் பின் சிவலிங்கமூர்த்தியாயினர். இவர் பலசித்திகள் வேண்டிய பலசித்தர்களால் பூசிக்கப்பட்டனர்.

ஆதிபதீச்வரர். (இராஜாம்பேட்டை)

சொன்னவண்ணஞ் செய்தபெருமாள் பிரமனுடைய யாகத்தை யழித்தற்கு நடுராத்திரியில் வந்த வேகவதிநதியைக் காண்பதற்கு முடியாமல் தான் தீபம்போல் பிரகாசிப்பதற்காகப் பூசித்தபெருமானார். அக்காரணத்தால், அப்பெருமாள் விளக்கொளிப் பெருமாளெனப் பெயர் பெற்றனர்.

பணாதரேச்வரர். (ஆலடிப்பிள்ளையார் கோயில்)

கருடனுக்கஞ்சிய சர்ப்பசிரேஷ்டங்கள் சந்திரசேகரருக்கு நாம் ஆபரணங்களாக ஆவோமாயின் நாம் கருடனைக்கண்டு என் கருடா சுகமா வென்று கேட்கலாமன்றோவெனவெண்ணிப் பூசித்தன.

காயாரோகணேச்வரர்.

பிரம்ம விஷ்ணுக்களின் ஒடுங்கவரும் காலங்களில் அவர்களைச் சிவபெருமான் தனது திருமேனியிலெடுத்துக் கொண்டு இவ்விடத்தில் நடனஞ்செய்து வருகின்றவராதலால் காயாரோகணரெனப் பெயர் பெற்றனர். இவர் லக்ஷ்மியினாலும் தேவகுருவினாலும் பூசிக்கப்பட்டவர்.

தீர்த்தம் - லக்ஷ்மிகுண்டம் குருவாதீர்த்தம்.

பிள்ளைபாளையம்.

பச்சமேச்சுவரர் * (திருமேற்றளி.)

திருமால் சிவசாரூபம் பெற்ற க்ஷேத்திரம்.

ஓதபுரீச்வரர்.

விஷ்ணுமூர்த்தி தானும் யாவரைப்போலும் பிறந்திறத்தலுக்கு காரணமாகிய தனது விஷ்ணு சொரூபத்தைவெறுத்துப்பிறவாநெறியையளிக்கவல்ல சிவசாரூபத்தை யடைய வெண்ணித் திருமேற்றளியென்னும் இவ்விடத்துக்கு வந்து வைவசுவதமன்வந்திரத்தில் இருபத்தெட்டாவது கலியுகம் வரையில் தவஞ்செய்திருந்து ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானால் அச்சிவசாரூபத்தைப் பெற்று இலிங்கமூர்த்தியாயினர்.

ஒத்தீச்வரர்.

ஓதபுரீச்வரரை ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானார் திருப்பதிகத்தாற்பாடும்பொழுது அப்பதிகத்தைத் தாமுங்கேட்க வேண்டுமென்னும் ஆசையினால் வந்த சிவபெருமான்.

நூற்றுப்பதினெட்டு இலிங்கமூர்த்தங்கள்.

சிவகணத் தலைவர்களாகிய ஆனந்தருத்திரர் முதலாகச் சொல்லப்பட்ட 118-ருத்திரர்களால் பூஜிக்கப்பட்டவை.

நூறு இலிங்கமூர்த்தங்கள்.

அண்டங்களைக் காப்பவர்களாகிய கபாலீசன் முதலிய நூறு ருத்திரர்களால் பூஜிக்கப்பட்டவை.

அஷ்டவித்யேஸ்வர லிங்கமூர்த்தங்கள்.

அனந்தர் முதலிய அஷ்டவித்யேச்சுவரர்களால் பூஜிக்கப்பட்டவை.

மண்டலேஸ்வர லிங்கமூர்த்தங்கள்.

குரோதனர் முதலான மண்டலாதிபதிகளால் பூஜிக்கப்பட்டவை.

2000 தக்ஷபுத்ர லிங்கமூர்த்தங்கள் (கயிலாயநாதர்சுற்றிலும்)

மோக்ஷம்விரும்பிய தக்ஷனுடைய பிள்ளைகளால் பூஜிக்கப்பட்டவை.

மேலைப்பிள்ளைபாளையம்.

வயிரவீச்வரர். (சோணீச்வரர் கோயில்)

வயிரவர் சிவாஜ்ஞையையே செய்துகொண்டிருந்த பிரமனது ஐந்தாந்தலையை நகத்தினாற்கிள்ளி அதனைக் கபாலமாக வேந்தி அதில்திருமால்முதலியோருடையரத்தத்தினை யேற்று காஞ்சிக்குவந்து பூசித்தனர். இவருடனெண்ணப்பட்ட எண்மரும்பூசித்தலிங்கங்கள் தனித்தனியே உள்ளன.

விஷ்வக்சேனேச்வரர். (ஷெ கோயிலுக்குத்தென்பால்)

விஷ்வக்சேனன் வயிரவமூர்த்தியின் சூலத்திலிருந்த தன்னைத்திருமால் மீட்பித்தனராதலால் அதற்குக் கைம்மாறாகத் தக்ஷயாகத்தில் திருமாலிழந்த சக்கரத்தைத் தான் வீரபத்திரமூர்த்தியிடம் பெற்றுக்கொடுக்கப் பூசித்தனன்.

தக்ஷேச்வரர். (கச்சியப்பன்தெரு)

தக்ஷன் வீரபத்திரமூர்த்தியால் தலையற்றுப் பின்னர் மேஷத்தின்றலையைப் பெற்று அவ்வாட்டுக்குரிய ஒலிக்குறிப்போடு ஸ்ரீ ருத்திரத்தை யுச்சரித்துப் போற்றிக்காஞ்சியில் வந்து பூசித்துக் கணத்தலைமை எய்தினன்.

வன்மீகநாதேச்வரர். (பலபத்திர ராமேச்வரருக்குமேற்கு)

இந்திரன் ஓர்காலத்தில் தேவர்களுக்கெல்லாம் புகழுண்டாக வேண்டுமென்று எண்ணிச்செய்த ஓர்யாகத்தில் பு

கழுவண்டாக, அந்தப் புகழைத் திருமால் அடித்துக்கொண்டு போய் தேவர்களை வஞ்சித்துத் தன்னுடைய கோதண்டத்தை யூன்றி அதன் நுனியில் முகவாய்க்கட்டையை வைத்துக்கொண்டு ஊன்றி நிற்ப இந்திரன்கண்டு இவரது தலை அற்றுப்போகும் வகையைத் தேடவேண்டுமென்றெண்ணி இவ்வண்ணிகநாதரைப் பூசித்தனன். இந்த க்ஷேத்திரம் சாலப்பக்கம் கால்வாய்க்கு வடக்குக் கழனியிலுள்ளது.

கைலாயநாதர். நாரதேச்வரர். (புத்தேரித்தெருக்கோடி)

திருமால் பவுத்தாவதாரங்கொண்டு நாரதரோடு திரிபுரத்துக்குச்சென்று அங்குள்ளவர்க்குச் சிவபக்தியீனம் உண்டாகும் வண்ணஞ்செய்து பின்னர் அம்மஹாபாவம் நீங்க நாரதரோடும் வந்து பூசித்தனர்.

* அநேகபதேச்வரர். (கைலாயநாதருக்கு ஆக்னேயம்) விநாயகரால் பூசிக்கப்பட்டவர்.

அகஸ்தீச்வரர். (உபநிஷத்பிரஹ்மஸ்வாமிகள் மடத்தில்)

அகத்தியர் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் தமதிஷ்டசித்தி பூர்த்தியாகும் வண்ணம் பூசித்துவரும்பொழுது இவ்விடத்தைத் தமதிருக்கையாகக் கொண்டிருந்தனராதலால் இவ்விடத்திலும் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்துவந்தனர். அக்காலத்தும் அவ்விடம் ஆச்சிரமமாயிருந்தபடியினால் இக்காலத்தும் துறவிகளுடைய ஆச்சிரமமாகவேயிருக்கின்றது.

வீரராகவேச்வரர். (ஷை-மடத்துக்கு அக்னிதிக்கில் விளைநிலத்தில்)

ஸ்ரீராமர் இராவணனை வெற்றிகொள்ள அகஸ்தியமுனிவரிடத்தில் சிவமந்திரோபதேசம் பெற்றுப் பாசுபதவிரதம் பூண்டுபூசித்தனர்.

கற்கீச்வரர். (வீரராகவேச்வரருக்குத் தென்பக்கம்.)

விஷ்ணுமூர்த்தி ஹயக்கிரீவராய் அவதரித்த காலத்தில் பூசித்தனர். தீர்த்தம் மிருத்சாணுதீர்த்தம்.

பலபத்திரராமேச்வரர். (பிள்ளைபாளை...

பலபத்திரர் பாரதயுத்தத்திற்கிருக்கும் ப... வில்லாதவராய்த் தீர்த்த யாத்திரையாகப் போனபொழுது ஸ... ரஸ்வதி தீரத்திலிருந்த முனிவர்களால் காஞ்சிக்ஷேத்திர மகிமை தெரியவந்து உபமன்னிய முனிவரிடத்தில் சிவதீக்ஷைபெற்றுப் பூசித்தனர். சாலத்தெருவு மேலண்... யையில்.

சகோதரதீர்த்தம் (ஒக்கப்பிறந்தான்குளம்.)

மாண்டுகேன்னீச்வரர். (ஷை-குளத்துக்குக்கீழ்ப்பக்கம்.)

மாண்டுகேன்னிமுனிவர் அம்மையில் தேவருலகில் அரம்பையரோடேவாழும் போகத்தை இம்மையில் இப்பிறப்பிற்றானே அவ்வரம்பையரோடு கூடி அநுபவிக்கவேண்டிப் பூசித்தனர்.

வன்னீச்வரர். (ஷை-குளத்துக்குத் தென்கரையில்)

அக்கினி தேவன் தன்னுடன் பிறந்த மூன்று சகோதரரும் தேவர்கட்கிடும் அவிகளைத் தாங்கும் வன்மையற்று இறந்துபோகத் தானும்பயந்து சிலநாள் சகோதர தீர்த்தத்தில் ஒளித்திருந்து தேவர்களால் வெளிப்பட்டு அவர்கள்வேண்டிக்கொண்டவண்ணம் அவியைத்தாங்கும் வல்லமையைப் பெறப்பூசித்தனன்.

இவ்வக்னிதேவன் தான் ஒளித்திருப்பதற்கு இக்குளத்தருகே வந்து வருணனைத் தன்னையொருவருக்குங் காட்டக்கூடாதென்றும் எனக்கு நீ சகோதரனல்லவாவென்றும் பிரார்த்தித்து ஒளித்திருந்தனனாதலால் அக்குளம் சகோதரதீர்த்தமெனப் பெயர் பெற்றது.

சவுனகீச்வரர்.

சவுனகமுனிவர் முத்திவேண்டிப் பூசித்தனர்.

பராசரேச்வரர். (ஆடிசன்பேட்டை)

பராசரமுனிவர் தனது பிதாவாகிய சத்தி என்பவரும் அவருடன் பிறந்த நூற்றுவரும் சுதாசனென்னும் அசுர

னால் கொல்லப்பட்டார்களென்று அறிந்து அசுரகுலத்தை நாசஞ்செய்ய வெண்ணிப் பூசிக்கப்பெற்ற பெருமானார்.

முக்தீச்வரர்.

நம்பிரான் தோழரால் திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன் என்று போற்றப்பட்ட திருக்குறிப்புத்தொண்டருக்கு முக்திகொடுத்தவர்.

கருடேச்வரர். (முக்தீச்வரருக்குப் பின்னேயுள்ளவர்)

கருடன் தன் தாய்க்கு சக்களத்தியினால் நேர்ந்த சிறையை நீட்பதற்காகப் பூசித்தனன்.

மணிகண்டேச்வரர்.

தேவாசுரர்கள் தங்களால் சிவபெருமான் விடமுண்ட அபராதம் நீங்கப் பூசித்தனர்.

விஷகண்டேச்வரர். (ஷை மணிகண்டேசராலயத்துள்)

தேவர்கள் சிவபெருமான் தாங்கள் செய்த குற்றத்தை எண்ணாது அமிர்தம் அளித்த கருணையைநாடிப் பூசித்தனர்.

பணாமணீச்வரர். (இவரும் ஷை ஆலயத்துள்)

வாசுகி தன்னிடத்திலுண்டாகிய விடத்தைச் சிவபெருமான் புசித்தனரே என்று தனது முடியிலுள்ள மணிகளால் அருச்சித்தனன்.

பண்ணியகோடீச்வரர். (பெருமாள்கோயில் அருமந்தராயர் கோயில் சந்து)

வரதராஜமூர்த்தியினால் பூசிக்கப்பட்டவர்.

பிரஹ்மேச்வரர். (புண்ணியகோடீசுரருக்குக் கிழக்கு)

காப்பாகிய தொழிலொன்றேயுடைய திருமால் உலகத்தோடு தன்னையும் படைக்கப்பெற்றமை பொறாது நான்முகன் உலகைப்படைப்பது போலும் அத்திருமாலையும் தானேபடைக்க வேண்டுமென்று விபரீதமுற்றாராய்ப் பிரார்த்திப்ப அவர் காஞ்சியில் பூசனைசெய்வையாயின் தருவேமென்று சொல்ல அவ்வண்ணமேவந்து பூசித்தனர். இந்த

க்ஷேத்திரம் சிவாத்தானமென வழங்கும். வேகவதி நதிக்குத் தென்பக்கம். தேனம்பாக்கம் என்னும் கிராமம்.

தும்பவனம்.

ஜைகீஷவ்யேச்வரர்

ஜைகீஷவ்யமுனிவர் மோக்ஷ சித்தியின் பொருட்டு அநேககாலம் பூசித்தனர். பூஜைநிமித்தமாய்த் தும்பைச்செடியை வனமாக வைத்தனராதலால் தும்பவனமென்ப் பெயர் பெற்றது.

வியாசசாந்தாச்ரயர்.

வியாசமுனிவர் காசியில் நாராயணனே பரப்பிரமமென்று கூறிய அபராதம் நீங்கப் பூசித்தனர்.

சப்தத்தானேச்வரர். (எழுலிங்கமூர்த்திகள்)

சப்தருஷிகளும் முக்திபதம் வேண்டித் தனித்தனியே தங்கள் தங்கள் பெயரால் பூசித்தனர்.

பார்க்கவேச்வரர்.

சுக்ரர் அசுரர்களுக்கு வேண்டிய மாயவித்தைகளில் தான் வல்லவராய்ப் பிரகாசிக்கப் பூசித்தனர்.

அஷ்டபுஜேச்வரர்.

அஷ்டபுஜப்பெருமாள் சக்ராசுரன் முதலிய எண்மரை ஏககாலத்திற் கொல்ல எட்டுக்கரங்கள் தனக்குண்டாகப் பூசித்தனர்.

நரசிம்மேச்வரர்.

நரசிங்கப்பெருமாள் இரணியகசிபனைத் தான் கொல்லும் வல்லமையைப் பெறப் பூசித்தனர்.

சரபேச்வரர்.

நரசிங்கப்பெருமான் தனது நரசிங்கச் சட்டையைச் சிவபெருமான் சரபமாய் வந்து கிழித்தருளிய கருணையை நாடிப்பூசித்தனர்.

வேதநாபுரேச்வரர். * திருமாகரல்.

வேதங்கள் ஓர்கால் சிவபெருமான் சகத்சம்ஹார ஐயப் பிரதாப நடனம் இத்திருமாகரலின்கண் செய்யுங்காலத்தில் அப்பெருமானது திருப்பாதத்தில் நூபுரமாக விருந்து கலீல்கலீல் எனவொலித்திருக்கப் பெற்றுயாவராலும் போற்றப்பெற்ற புண்ணியத்தை நாடிப்பூசித்தன. சேய்யாற்றுக்குவடகரை.

காதம்பரேச்வரர். (கடம்பர்கோயில்.)

வேதங்கட்குக் காருண்யின்கண் ஏகாம்பரநாதர் நாமெவ்விவ்விடத்தில் எவ்வெக் கோலங்கள் கொள்ளுகின்றோமோ அவ்வக் கோலங்கட் கேற்றவாறு உங்களைக்கொள்ளுகின்றோமென்று அநுக்கிரகஞ் செய்தபடியே தாருகாவனத்தில் பிக்ஷாடன கோலங்கொண்ட காலத்தில் அவ்வேதங்களைக் கோவணமாகக் கொண்டனராதலால் வேதங்கள் அக் கருணையை நாடிப்பூசித்தன. செய்யாற்றுக்குத் தென்கரை.

அத்யாபகேச்வரர். * திருவோத்தூர்.

வேதார்த்தவுண்மைகளை ஓர் காலத்தில் சைவவேதியராகிய சிவபரஞ்சுடர் தேவர்களுக்கும் வைதிகசைவாநுஷ்டானத்திற் சிறந்த மாமுனிவர்களுக்கும் அத்தியயன பூர்வகமாய் ஓதியருளினர். இக்க்ஷேத்திரம் செய்யாற்றுக்கு வடகரை.

திருஞானசம்பந்தப் பெருமான் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய க்ஷேத்திரம்.

குரங்கணீச்வரர். * குரங்கணில்முட்டம்

ஸ்கந்த பத்தினியாகிய வள்ளியம்மையின் மாதாவாகிய மானுருவுகொண்ட லக்ஷ்மியினாலும், சிவயோகியாய் வந்த விஷ்ணுமூர்த்தியினாலும், பிரமனாலும், இந்திரனாலும், நாரதமுனிவராலும், அநுமாராலும், சித்ரோடமுனிவராலும், காகையாய் வந்த யமனாலும் பூசிக்கப்பட்டவர். இயமனால் உண்டாக்கப்பட்டயம தீர்த்தம் ஒன்றுண்டு.

வ்ருஷபேச்வரர்.

திரிபுரதகன காலத்தில் வ்ருஷபமாய்த் தாங்கிய திரு

மாலாலும், சுப்பிரமணியக்கடவுளாலும், நந்திதேவராலும், காளியினாலும், அநேக அசுரர்களாலும் பூசிக்கப்பட்டவர்.

ஜீவத்பாகேச்வரர். (வ்ருஷபேச்வரருக்கு வாயுமூலையில்)

இலக்ஷ்மி நாதராகிய விஷ்ணுமூர்த்தியினால் பூஜிக்கப்பட்டவர்.

தாளிவனேச்வரர். * (திருப்பனங்காடு)

அகஸ்தியரால் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம் சடாகங்கை.

கிருபாநாதேச்வரர். புலஸ்தியரால் பூசிக்கப்பட்டவர்

இவ்விரண்டு லிங்கமூர்த்திகளும் ஒன்றாகவுள்ளன.

திருப்பக்குழி.

வராஹேச்வரர். (பெரிய காஞ்சிபுரத்துக்குமேற்கு.)

வராக அவதாரங்கொண்ட திருமால் பூமியைப் பாயாய்ச் சுருட்டிக்கொண்டு போன இரணியாக்கனைக் கொன்று பூமியை முன்போல் நிலைநிறுத்திப் பின்னர் இச்செயலைச்செய்ய வல்லகடவுளர் நம்மைப்போல் எவரிருக்கின்றனர் என்று இறுமாப் படைந்த காலத்தில் அச்செயலேயன்றி இவ்விறுமாப்புச் செயலையும் அடக்கவல்லோனாகிய யானொருவனிருக்கின்றேன் என்னை மறந்தனையோ வென்று சிவபரஞ்சுடர் வேடுருக் கொண்டுவந்து திருமாலாகிய அவ்வராகத்தின் கொம்பைப் பிடுங்கி மார்பிலணிந்து கொள்ளவே செருக்கொழிந்து மனந்தெளிந்து ஓ ஈசனே! இதற்குயான் செய்யுங்கைம்மாறு யாதென்று காஞ்சி எல்லையிலுள்ள திருப்பூக்குழியிற் பூசித்தனர். அச்சிவார்ச்சனைக்கு ஓர்குண்டமொன்றெடுத்து அதில் நீலோத்பல முதலிய நீர்ப்பூக்களையுண்டாக்கி அதனைச் சிறப்பித்தனராதலால் அவ்வூர் திருப்பூக்குழி எனப் பெயர் பெற்று திருப்பக்குழி எனவழங்குகின்றது.

சயம்புவேச்வரர். (வராஹேச்வரருக்குக் கிழக்கு)

சடாயுவானவன் உத்தமமாகிய மோக்ஷகதிவேண்டு மென்றெண்ணித் தன்பெயரால் சயம்புவேச்வரனைத் தன் பெ

யர் விளங்கச் சடாயுலிங்கம் என்று பிரதிஷ்டை செய்து பூசித்தனன். சடாயுதீர்த்தமென்று தீர்த்தமுமுண்டாக்கினன்.

வாணேச்வரர்.

வாணாசுரன் தனக்குண்டாகிய தோள்தினவை சிவபரஞ்சுடரோடு மல்யுத்தஞ்செய்து போக்கிக் கொள்ள வெண்ணிக்கேட்ட குற்றநீங்கப் பூசித்தபெருமானார்.

அந்தகேச்வரர். (வராகேச்வரருக்குக் கிழக்கு)

அந்தகாசுரன் திருமால் முதலிய தேவர்களை யெல்லாம் எதிர்த்துப் போர்புரியுங் காலத்து அவரெல்லாம் அவனோடு போர் செய்யமுடியாது பெண்வடிவங் கொண்டு எங்கெங்கும் ஓடினர். அங்கங்கும் அவ்வந்தகன் விடாது பின் சென்று பல துன்பங்களைச் செய்யப் பின்னரவரெல்லாம் கைலாயத்துக்குப்போய் உமாதேவியாரது தோழியர்களாகிய சத்திகூட்டங்களோடு கலந்து அவர்களோடு கூடியிருந்தனர். அது கண்ட அந்தகன் அவர்களோடு போர் செய்வதற்குக் கூடாமற் சென்று சிலநாள் கழித்து கைலாயத்திற் போர்செய்ய வந்தனன். அவனது அகங்காரத்தைக் கைலாயநாதன் கண்டு வயிரவக் கடவுளை யழைத்து இவனை யடக்கி வருவாயென்று கட்டளையிட அவர் அவனை அதிக சுலபமாய்ச் சூலத்திற் குத்திமேனோக்கிப் பிடித்துக் கொண்டு கூத்தாடிக்கொண்டே காஞ்சிக்குவந்துநிற்ப அந்தகன் சூலாயுதத்தி லிருந்தவண்ணம் தோத்திரஞ்செய்து வேண்ட வயிரவக்கடவுளிரக்கமுற்றவராய் அவனைச் சூலாயுதத்தினின்றும் இறக்கி நல்லறிவு தோன்றுமாறு அநுக்கிரகஞ்செய்தனர். செய்யவே அவனும் சாந்தகுணமுடையவனாய் முத்தியை வேண்டிப் பூசித்தபெருமானார்.

அம்பிகாவனேச்வரர். (அம்பி என்னுங்கிராமம்.)

காமாக்ஷிதேவியாரது தோழியருட் சிறந்த அம்பிகை முதலிய தோழியர் தேவியாரது கட்டளையின்படி நந்தவனம் வைத்து அதில் தேவி மகிழும்வண்ணம் கோட்டினங்களி

லும் கொடியினங்களிலும் நிலத்திலுண்டாகும் இனங்களிலும் நீரிலுண்டாகும் இனங்களிலும் உண்டாகும் மலரினங்களெல்லாம் எக்காலத்தும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்தித்து அம்பிகாநாயகனை வாழ்த்தி, அந் நந்தவனத்திற்றானே சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து அம்பிகாவனேச்வரரெனத் திருநாமமிட்டுப் பூசித்தனர்.

(பெரியகாஞ்சிபுரத்துக்கு மேற்கு.)

* பிரவாளேச்வரர். திருமாற்பேறு.

பிருந்தை என்பவளைத் தன்மனைவியாகக்கொண்டு சுகித்துவாழ வெண்ணி அவளது கணவனாகிய சலந்தராசுரன் அழிந்தகாலில் அவளைக்கூடிய திருமால் அவ்வசுரனைக் கொன்ற அரிய சக்கராயுதத்தைச் சிவபரஞ்சுடரிடத்திற் பெறுதற்கு இந்த க்ஷேத்திரத்தில்வந்து இச்சிவலிங்கமூர்த்தியைக் கண்டு தெரிசிக்கும்பொழுது சிவலிங்க மூர்த்தியின்கண் காமாக்ஷிதேவியார் தமது திருக்கரத்தாற் றடவித் தடவிப்பவளம்போற் சிவந்துபோன திருமேனியையும், நான்கு திக்குகளிலும் நான்கு திருமுகங்களையும் அம்முகங்கடோறும் ஆயிரமாக அருந்தவரெல்லாம் நின்று போற்றுங் காட்சியையும் இறைவன் காட்டி நிற்பத் திருமால் அத்திருக்கோலத்தைக் காணுந்தோறும் அதிசயித்துக் கருணையை வியந்து இந்த மூர்த்திதான் நாம் வேண்டியாங்களிக்க வல்லனென்றெண்ணி நாடோறும் ஆயிரம் மலர்கள்கொண்டருச்சித்து வந்தனர். பிராட்டியார் வருடச் சிவந்தபவளமேனியைக் காட்டியதால் பிரவாளேச்வரரென்னுந் திருநாமம் வந்தது. ஈதன்றியும் சாதரூபர், மணிகண்டர், தயாநிதியார், பவளமலையார், வாட்டந் தவிர்த்தார் சாகசனார், திருமாற்குப் பேறளித்தார் என்னு நாமங்களையு முடையார். ஆக இவருக்குரிய நாமங்கள் பிரவாளேச்வரர் முதலாக எட்டு. (படூர் ஸ்டேஷனுக்குச் சமீபம்.)

---

* இக்குறியிட்ட க்ஷேத்திரங்கள் தேவாரம் பெற்றுள்ளவை.

பரசுராமேச்வரர். (திருமாற்பேற்றிக்குக்கிழக்கு)

சமதக்னி முனிவருக்குப் பிறந்த பரசுராமர் என்னுந் திருமால் கார்த்தவீரிய னென்பவனால் தன் தாதை யிறந்துபோனதைக் கண்டு மனம் புழுங்கி க்ஷத்திரியவம்சத்தை நாசஞ் செய்யவெண்ணி அவ்வாற்றல் தனக்குண்டாகப் பூசித்தனர்.

ரேணுகேச்வரர். (பரசுராமேச்வரருக்குத் தெற்கு)

(தந்தை சொன்மிக்க மந்திரமில்லை) என்னும் நீதியை யெண்ணிய தன்மகனாகிய பரசுராமரால் கொல்லப்பட்ட இரேணுகை மீண்டுந் தன்மகனாலேயே எழுப்பப்பட்ட பின்னிர் மகளிர் கற்புநிலையுடையராயின் அவர் உலகினரால் தொழுந் தெய்வமாவ ரென்னும் புகழை நாம் வெளியாக்கல் வேண்டுமென்றெண்ணி இங்குவந்து தன் பெயரால் பூசித்தனர்.

குருரேச்வரர். (திருமாற்பேற்றுக்குத் தெற்கு கூர்மகிராமம்.) குருரரென்னு முனிவர் ஈசானலிங்கம், தத்புருஷலிங்கம், அகோரலிங்கம், வாமதேவலிங்கம், சத்தியோஜாதலிங்கம் என்னும் பஞ்சப்பிரம நாமங்களால் ஐந்துலிங்கங்களைப் பிரதிஷ்டைசெய்து சிறந்தமலர்களைக் கொண்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலர்ச்சனை செய்து வந்து சிவசாயுஜ்யத்தைப் பெற்றனர்.

திருமாற் பேற்றுக்குச் சமீபத்தில் கோவிந்தபாடி என்னும் ஓர் க்ஷேத்திரமுண்டு. அவ்விடத்தில் கோவிந்தராகிய திருமாலுக்கும் ஸ்வேதர் முதல் லகுளர் முதலாகச் சொல்லப்பட்ட யோகாசாரியர்களுக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பரமாசாரியராய் எழுந்தருளியிருந்து வேத வேதாந்தங்களைப் பாடமுறையாகச் சொல்லி யருளினர். அதனால் கோவிந்தபாடி யெனப் பெயர் பெற்றது. இவ்விடத்தில் தெய்வதன்மையுடைய இனி யொன்றிருக்கின்ற தென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விடந் தொட்டு ஏகாம்பரநாதரீலயத்துக்கு வடக்கிலுள்ள பருதிக்குளம் வரையில்மேற்சொன்ன யோகாசாரியரெல்லாம் தனித்தனியே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்திருக்கின்றனர்.

காஞ்சிக்ஷேத்திர மஞ்சரி முற்றிற்று.

சர்வதீர்த்தத்தில் ஸ்நானகாலத்தில் சொல்லவேண்டிய

தியான சுலோகம்.

ஸ்ரீசைல ஸ்யாக்னி திக்பாகே யோஜனே சைகவிம்சதே. காவேரி கிருஷ்ணயோர்மத்யே தத்ரகௌரீதபோவனே
கம்பாயா தக்ஷிணேகூலே ருத்ரசாலா தராதலே. (௧)

ஏகாம்ப்ர நாயகச் சம்புஸ் ஸதா தத்ரைவ வர்த்ததே
உமாலிங்கன ஸக்ராந்த குசகங்கண முத்ரிதஃ. (௨)

லிங்க மேகாம்ப்ர நாதஸ்ய ஸைகதம் ஸமுபாஸ்ம ஹேயோர்ச்சயேத ருத்ர சாலாயாம் லிங்கமேகம் பிரயத்னதஃ

கோடிலிங்கார்ச்சனபலம் சிவலோகஞ்ச கச்சதி, யோ
லிங்கே ருத்ரசாலாயாம் க்ஷணார்த்தம்வா ததர்த்தகம். (௪)

முச்யதே சர்வபாபேப்யஸ் ஸாக்ஷாத் பர்க்கோ நராக்
ருதிஃ. சிவபீஜ ஸமுத்பூதம் வேதசாகாபி ருஜ்வலம். (௫)

ம்ருகண்டு தநயாதாரம் ரசாலந்தம் நமாம்யஹம், ஸ்ரீம
தேகாம்ப்ர விருக்ஷஸ்ய யோவஸேன் மூலபூதலே. (௬)

க்ஷணார்த்தம்வா முஹூர்த்தஸ்ய கோடிலிங்கார்ச்சனம்
பலம், ஸப்ரசந்நம் மஹாதேவ்யா நித்யகல்யாண சுந்தரம்.

மஹாப்ரளய பாபக்னம் ரசாலேச மஹம்பஜே, குதே
சாம்பிகயோ காஞ்ச்யாம் சிவாவிர்ப்பாவ வாசரே (௮)

கல்யாணம் குர்வதஃ கோடி கந்யாதானபலம் பவேத்
கோடிலிங்கப் பிரதிஷ்டாயாம் யத்பலம் ஸ்தான தஸ்யது.

தத்பலம் லபதேமர்த்யஸ் ஸகிருச்சூதேச சேவயா, ஹரரோமஜ ஸமுத்பூத சர்வதீர்த்த ஸமந்வயாத். (௧௦)

கம்பயாபூரிதம் வந்தே பாத்ரந்தத் ஸர்வதீர்த்தகம்
யாத்ரயா சர்வதீர்த்தேஷு ஸ்நானதோயத் பலம்நிருணாம்.

சர்வதீர்த்தே ஸக்ருத் ஸ்நாநாத் தத்பலம் லபதே நரஃ
யமிதம் பிராதருத்தாய ஸ்நானகாலே படேந்நரஃ (௧௧)

ச்லோகத் த்வாதசமாத்ரேண சுலோகோக்த பலமாப்நுயாத், ஏகத்ர ஹஸ்ய மாக்யாதம்சர்வதீர்த்தப் பிரகாசகம்.

யஃபடேச் சுருணுயாநித்ய மிமம்த்யாய மாதராத், சர்வதீர்த்த ஸரஸ் ஸ்நாநாத் யத்பலம் தத்பலம் லபேத்.

இந்தக்ஷேத்திரத்தில் முக்கியமான சிலஅற்புதங்களுள.

அவைவருமாறு.

முக்தி மண்டபமூன்று, அவற்றுள் ஒன்று சர்வதீர்த்தக் கரையிலிருக்கின்றது. ஒன்று முத்தீச்வரர் கோயிலிருக்கின்றது. ஒன்று ஆளுக்கர்களது தர்க்காவாயிருக்கின்றது. இவையன்றி, கச்சைகொண்டான் மண்டபத்துக்கு நிருதி மூலையில் ஓர் மண்டபமிருக்கின்றது. அதற்குப் பரமாநந்த மண்டபமெனப் பெயர். அது முன் ஏகாம்பரநாதருக்கு வாகன மண்டபமாயிருந்து, இப்பொழுது மசூதியாயிருக்கின்றது. இதுவுமன்றிச் சுப்பிரமணிய க்ஷேத்திரமாகிய குமரகோட்டத்துக்குத் தெற்கில் ஓர் நடபாவியுண்டென்றும், அதில் ஆயிரம் இதழ்களோடுகூடிய ஓர் தாமரை மலருண்டென்றும், அதில் முருகக்கடவுள் பாலராய் விளையாடிக் கொண்டிருக்கின்றாரென்றும், அவரது ஆலயத்தில் சுவர்ணவிருக்ஷமிருப்பதென்றும், தெய்வத்தன்மையுள்ள மயிலொன்றிருப்பதென்றும், காமாக்ஷிதேவியாரது ஆலயத்தில் சண்பக விருக்ஷமிருப்பதென்றும், மாவடியில் கபோதப் பறவையும், நாகணவாய்ப் பறவையுமிருப்பதென்றும், திருமாகறலில் மாடப் புறாவிருப்பதென்றும், கோனேரிகுப்பத்திலுள்ள சூகரதீர்த்தத்தில் சக்கரவாளப் பக்ஷியிருப்பதென்றும், இன்னுமிவை போன்ற பலவற்புதங்களிருக்கின்றவென்றும், இரட்டையருலாமுதலிய பலநூல்களில் நன்றாய்க்கூறப்பட்டுள்ளன. கல்வி மண்டபம் ஏகாம்பரநாதராலயத்தில் சரஸ்வதிமண்டபமென்றும், கணக்கறி மண்டபம் இரட்டைமண்டபமென்றும் வழங்கிவருகின்றன. கிழண்டைராசவீதியில் ஈசான்யத்தில் ஆலாபரதான மண்டபம் என்று ஒன்றுளது.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகாமாக்ஷிதேவ்யைநம:

காமாக்ஷி லீலா பிரபாவம்.

இஃது

ஸ்ரீ கோளகிமடநிவாஸ பஞ்சாக்ஷர சிவாசாரியர் மரபில் வந்தவரும், ஸ்ரீ ஏகாம்பரநாதர்பூஜகரும், ஸ்ரீ முத்து கச்சபேச்வர சிவாசாரியர் குமாரரும்

ஆகிய

ஸ்ரீமத் - பைரவ சிவாசாரியர்

முன்னிலையில்

கா - ஏ - ஆலாலசுந்தரம் பிள்ளை

அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டு,

ஸ்ரீ காஞ்சி சிவநேசச்செல்வர்களின்

பேருதவியால்

சென்னை:

வித்யா பாஸ்கர யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

விசுவாவசு ௵ பங்குனி௴

1906.

இதன் விலை அணா 12.

விளம்பரம்.

இப்புக்ககம் மிகவும் அவசியம் வேண்டியவர் ஸ்ரீகாஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை பஞ்டாபீஸ் ம-ள-ள-ஸ்ரீ - து. அ. பாலசுந்தர முதலியாரவர்களிடத்திலும், சின்னகாஞ்சிபுரம் வெள்ளாள ந் செட்டித்தெரு ம-ள-ள-ஸ்ரீ - கு. அப்பாசாமி செட்டியாரவர்களிடத்திலும், சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை கோவிந்தப்பநாயக்கன் தெரு வித்யா பாஸ்கர அச்சியந்திரசாலை புரொப்ரைட்டர் ம-ள-ள-ஸ்ரீ - பல்லவபுரம்-அ-சோமசுந்தரசெட்டியாரவர்களிடத்திலும், ஷை சென்னை வேப்பேரிரெண்டால்ஸ்ரோட் 19-நெம்பர்வீடு ம-ள-ள-ஸ்ரீ கா. எ. ஆ. ஏகாம்பரம் பிள்ளையவர்களிடத்திலும் வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விகடசக்ரவிநாயக ஸ்தோத்திரம்.

ஸ்வகடஜாத மதாச்ரித பம்பர
ப்ரகடகூஜித காதித திக்தடம்
நிகடவாஸிச மேகரசாலினோ
விகடசக்ர விநாயக மாச்ரயே.

மாதாமஹ மஹாசைலம்
மஹாஸ்தத பிதாமஹம்
காரணம் ஜகதாம்வந்தே
கண்டாது பரிவாரணம்.

ஆம்பரநாத ஸ்தோத்திரம்.

ஐச்வர்யம் பரமத்தவ மாதிமத்யாந்த வர்ஜிதம்
ஆதாரம் சர்வலோகானும் அநாதார மவிக்ரயம்
அநந்தானந்த போதாம்பு நிதிமத்புதவிக்ரமம்
அம்பிகாபதி மீசான மனிசம் ப்ரணமாம்யஹம்.

சுப்ரசன்னம் மஹாதேவ்யா நித்யகல்யாண சுந்தரம்
மஹாப்ரளய பாபக்னம் ரசாலேச மஹம்பஜே.

உமாலிங்கன சங்க்ராந்த குசகங்கணமுத்ரிதம், லிங்க
மேகாம்பர நாதஸ்ய சைகதம் சமுபாஸ்மஹே.

திரிபுரசுந்தரிஸ்தோத்திரம்.

இக்ஷுசாபகோதண்ட புஷ்பேஷு பாசாங்குச லசத்கராம்
உத்யத்ஸூர்ய நிபாம்வந்தே மஹாத்ரிபுரசுந்தரீம்.

விச்வகாரண நேத்ராட்யாம் மஹாத்ரிபுர சுந்தரீம், பக்
தகாங்குர சம்ஹார்த்ரீம் காமாக்ஷீம் தாமஹம்பஜே.

சுவர்ணகாமாக்ஷி ஸ்தோத்திரம்.

ச்வர்ணாங்கிம் ரத்னபூஷாட்யாம் சுகஹஸ்தாம் சுசிஸ்மிதாம், காஞ்சீ நிவாஸினீம்வந்தே காமாக்ஷீம் காமிதார்த்ததாம்.

ஆம்ரவிருக்ஷ ஸ்தோத்திரம்.

சிவபீஜஸமுத்பூதம் வேதசாகாபிருஜ்வலம், ம்ருகண்டுதனயாதாரம் ரசாலம்தம் நமாம்யஹம்.

காமகோடிபீட ஸ்தோத்திரம்.

ஜகத்காமகளாகாரம் நாபிஸ்தானம் புவ:பரம், பதாப்ஜமஸ்ய காமாக்ஷ்யா மஹாபீட முபாஸ்மஹே.

காமகோடிமஹாபில ஸ்தோத்திரம்.

காயத்ரீமண்டபாதாரம் நாபிஸ்தானம் புவ:பரம், புருஷார்த்தப்ரதம் சம்போ பிலாப்ராந்தம் நமாம்யஹம்.

சர்வதீர்த்த ஸ்தோத்திரம்.

ஹைமரோம சமுத்பூத சர்வதீர்த்த சமன்விதாம், சர்வதீர்த்தாஹ்வயம் வந்தே கம்பாயா ஸ்ரீகம்சரம்.

வேகவதிநதி ஸ்தோத்திரம்.

நமஸ்தேபிரஹ்ம பத்னித்வாம் ஸரித்ரூபாம் சரஸ்வதீம், சர்வபாப ப்ரசமனீம் வேகவத் யபிதான்விதாம்.

காமாக்ஷீவிலாஸப்ரபாவத்தில் வரும் அம்சம் என்பதின் அளவு:

160-அம்சங்கொண்டது 1-யோசனை. ஒரு யோசனைக்கு மைல்-10. ஒரு மைலுக்கு அம்சம்-16.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

* முகவுரை.

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

"சாந்தோக்யேஸா புனர்ப்ரஹ்மபுரமித்யேவ வர்ணிதா, அதர்வணேன ஸா ஸ்வர்க்க லோக: ப்ரோக்தோ மஹாபுரீ, தைத்திரீய ஜ்யோதிஷா ஸ்வர்க்க ஆஹ்ருதோ லோக இத்யபி, தத்ப்ரஹ்ம புரமேதத்தி நான்யத்காஞ்சீ புராதிதி, ஸர்வோபநிஷத் பாக: ப்ரவதந்தி யாகமைஸ்ஸஹ:"

என்று வேதவேதாந்தங்களில் பரமாகாச மென்றும் பிரமபுரமென்றும் ஜ்யோதி சுவர்க்கமென்றும் சுவர்க்கமென்றும் ஆங்காங்கு பிரதிபாதிக்கப்பட்டதாயும் "அருமெய்தற் கரிதுபெரிதுமே ஆற்றலெய்தற் கரிதுபெரிதுமே, நேரருமறியாது திகைப்பரே சித்தமு மறியாது திகைப்பரே, கார்நிறத்தமணர்க்கொரு கம்பமே, வாரிருங் குழல் மைவாணெடுங்கண்மலைமகள்மதுவிம்மு கொன்றைத், தாரிருந் தடமார் புநீங்காத்தையலா ளுலகுய்ய வைத்த, காரிரும்பொழிற் கச்சிமூதூர் காமக்கோட்டம்" எனத்திராவிட வேதங்களிற் போற்றப் பட்டதாயும் உள்ளது காஞ்சிநகரம்.

அது அனந்தசக்தி அலுப்தசக்தி அநாதிபோத முதலிய எண்குணங்களையுடைய அநாதிமுத்த சித்துருவாகிய இறைவனால் விரும்பப்பட்ட நித்ய நைமித்திக காமியமென்னு மூன்றனுள் ஒந்நியார்ச்சனைப் பயனொன்றனையே தரும் ஏனைய ஸ்தலங்களையும் கண்டங்களையும் போலாது, இம்மூன்றருச்சனைப்பயனையு மொருங்கே தரவல்ல திழ்க்கடல்

* இது நூன்முகத்துரைக்கும் பொருளே யன்றி நூலின்பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துரைக்கும் அணிந்துரைபுனைந்துரை என்பவற்றின் பொருளைக்கொண்டு நிற்பது.

மேற்கடல் சேது இமய மென்னு நாற்பாங் கெல்லைக்குட்ப
ட்ட இப்பரதகண்டத்திற் சிறந்து விளங்குவது,—

அன்றியும் சிவக்ஷேத்திரங்கள் பலகோடியினும் அவற்
றுட் சிறந்த ஆயிரத்தெட்டினும், அவற்றுட் சிறந்த நூற்
றெட்டினும், அவற்றுட் சிறந்த அறுபத்தெட்டினும் அவற்
றுட் சிறந்த காசியினும் புண்ணியசாரம் மும்மூர்த்திவாசம்
விண்டுபுரம் காஞ்சி லயஜித்து கலிஜித்து சகலசித்தி தபோ
மயம் பிரமபுரம் ஆதிபீடம் கன்னிகாப்பு சிவபுரம் என்னு
ம் பன்னிரு திருநாமம் புனைந்து காஞ்சியே சால நயக்கனி
ய நகர் என்றிறைவனால் வலியுறுத்திச் சிறந்தெடுத் தோதப்
பட்டது,—

பராசத்தியினது ஸ்தன்யத்தினின்றும் பெருகிய க்ஷீர
நதிசங் கமமாகிய கீழ்க்கடற்கரையும், பினாகத்தினால் வெளி
ப்பட்ட கங்கையாகிய தக்ஷிணபினாகினியும், அமிர்தசஞ்சீவி
கலந்த சிம்மதீர்த்தமும், விரஜாநதி சம்பந்தமுடைய சுவாமி
புஷ்கரணியுமாகிய நான்கெல்லைக்குட் பட்டதும் தொண்டமா
னாளப்பட்டதுமான துண்டீர மண்டலத்தை இடமாகக்
கொண்டுள்ளது,—

மாவலிச் சக்கரவர்த்தி தவம்புரிந்து பெருஞ்செல்வ
மடையப்பெற்ற மாவலிபுரம், உக்கிரசேனன் தவம்புரிந்து
கன்னிகாரத்னமாகிய தேவகியைப் பெறப்பெற்ற தேவகிபுர
ம், அரம்பை ஊர்வசி முதலாயினோரினுஞ் சிறந்தத்தவம் புரி
யப் பிரமனால் படைக்கப்பெற்ற விரிஞ்சிபுரம், சிவபெருமான்
விடத்தைத் திருக்கரத்திலேந்தத் தேவர்கள் தவம்புரியப்பெ
ற்ற நாகலாபுரம், ஆகிய நான்குதவபுரங்களையும் நான்கு புற
ங்களிற் கொண்டதும் அதனடுவில் பார்வதியாரால் தவஞ்
செய்யப்பட்ட தபோவனத்தை யுடையதுமான காரணத்தா
ல் தபோவனமெனப் பெயர் பெற்றோங்குவது,—

திரிவேணிசங்கம ஸ்நானபலனைத்தந்த த்ரிவேணி சங்
கமநகரம், நடராஜமூர்த்தி நிருத்த தரிசனந்தந்த வியாக்பு
நகரம், விஷ்ணுமூர்த்தி சேஷசயன தரிசனந்தந்த க்ஷீராப்தி

நகரம், நந்திவாய்க் கங்கையால் மோக்ஷதரிசனந்தந்த நந்தி
கங்காபுரநகரம் ஆகிய நான்கு நகரங்களையும் நான்குபக்கங்
களிற் கொண்டதும், பிரமனால் யாகஞ்செய்யப் பட்டது
மான பிரமசாலை யெனப்பெயர்பெற்றுள்ளது,—

இறந்துபோன தாய் தந்தையர் முதலாயினோரைக் காட்
டும்மூன்றிடம், அமுதநீர் முதலானவற்றைக் கொடுக்கும்
மூன்று வேதிகை, செல்வியுந்தோறும் [illegible] மீள விளைதல்
முதலிய நான்கு வயல்கள், பிரமன் முதலாயினோரைக்காட்டும்
சிங்காதனங்கள், ஒரு நாளத்தில் மூன்று தாமரையைக்காட்
டல் முதலிய ஐந்து தடாகங்கள், ஏகாம்பரநாதர் வீற்றிரு
க்கும் ஆம்பர விருக்ஷத்திற்கு வலமிடங்களி லுலாவுகின்
ற புறவு நாகணவாய்ப்புள் முதலிய ஆறு பறவைகள், முய
ல் பரிசையைத்துரத்தல்முதலிய ஏழுபொதுவிடங்கள், இச்
சித்தவையெல்லாந் தருதல் முதலிய எட்டுப்பொய்கைகள்,
இன்புனரைத் தேவாக்கல் முதலிய ஒன்பது கற்கள், நவ
ரத்னங்களைப் பொழிகின்ற ஒன்பது சோலைகள், மகாபாதக
ரை ஊமையாக்கல்முதலிய பத்துச் சபைகள், பார்த்தவர்நிழ
ல் தோன்றுமற்செய்தல் முதலிய பதினொரு கூவல்கள் ஆகி
ய வற்புதங்களைக்காட்டும் அற்புதக்ஷேத்திரமாகியும்,—

கல்விமண்டபம் கணக்கறிமண்டபம் கழைக்கூத்துமண்
டபம் ஆயிரக்கால் மண்டபம் ஆடல்மண்டபம் ஆஸ்தான
மண்டபம் பாடல்மண்டபம் துலாபாரதான மண்டபம் பர
மானந்தமுதலிய மூன்று முத்திமண்டப முதலியவைகளா
ல் பொன்னுலகினும் அழகு பெற்றிருக்கும் அலங்கார நகர
மாகியும்,—

மேலும் சத்தியசத்தியர் சத்தியசோதகர் சத்திய*சங்
கற்பர் சத்தியகாமர்களாகிய சரியை கிரியாயோக ஞானிகள்
வாழப்பெற்ற சத்திய விரதக்ஷேத்திரமாகியும்;—

பிரமனுக்குஞானோதயமுண்டாக்கிய க்ஷீர புண்ய பாகு
வேகவதி அரிக்கிராம்பு பம்பை கம்பைமுதலிய *சப்தநதி

களும், தழிசிமுனிவர்முதலிய பலர்க்கும் இஷ்டசித்திகளைக் கொடுத்த இஷ்டசித்தி தீர்த்தம் சிவகங்கை மங்கள தீர்த்தம் இந்திர தீர்த்தம் மாயமோசனை தீர்த்தம் சதாசிவமூர்த்தி சடைமுடியினின்றும் பெருகிய பஞ்சதீர்த்தம் உருத்திர மூர்த்தியின் ரோமகூபத்தினின்றும் பெருகிய சர்வதீர்த்தம் முதலிய சப்தவார தீர்த்தங்களும், வரதராஜ மூர்த்தி வீற்றிருக்கும் அத்திகிரிமுதலிய பர்வதங்களும் தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கோடி கோடியாகத் தரவல்ல காமகோட்டம் முப்புராரிகோட்டம் குமரகோட்டம் கச்சபாலயம் முதலிய ஆலயங்களும் ஆகியபஞ்சபர்வ தாலயங்களாற் சூழப்பட்ட பாஸ்கரக்ஷேத்திரமாகியும்,—

நிலமகட்கு உந்தித்தானமாகிய காமகோடி முதலிய பிலங்களும், காமாக்ஷிதேவி முதலிய முச்சத்திகளும் வழிபடுவதற்கிடமாயுள்ள மாமுருக்கு கூவிளம் முதலிய விருக்ஷங்களும்; மேகவாகனமாயிருந்து வழிபட்டுப்பெற்ற திருமாலுக்கு நிலயமாயுள்ள புண்ணியகோடி முதலிய விமானங்களும் ஆகிய மஹாபில மஹா விருக்ஷ மஹாபுண்ணியகோடி விமானங்களால் முற்றப்பட்ட தைஜஸக்ஷேத்திரமாகியும்,

இருநாழிநெற்கொண்டு முப்பத்திரண்டறங்களு நிலை பெறச்செய்தற்கிடந்தரவல்ல தர்மக்ஷேத்திரமாகியும்,—

அருவுருவங் குறிகுணங்கள் முதலியற கட்டுவிட்டனைத்துமின்றிப், பெருமையதாய் நுண்ணியதாய்ப் பேருணர்வாயானந்தப்பிழம்பா யெங்கும், ஒருமுதலாயழிவின்றி யோங்கொளியாய் நிறைந்துளதா யுயிர்கடோறும், விரவியுடனுழிற்படுத்துப் புலங்கொளுத்தி வீடளிக்கும்பதி, ஐய்வண்ணமறியாது இருண்மலத்தி லிருவினையாற் பிணிப்புண்டு மருளின்மூழ்கிக் கிடக்கும் ஆன்மாக்களை யிருவினைக்குரிய பிறவியுட்படுத்திச் சுவர்க்கநரகாதிகளில் ஊசலெனச்சுழல்வித்துப் பருவநோக்கி மெல்லவினைப்பயனூட்டி அது பின்னின்றும் அநுக்கிரகவண்ணங்காத்தற்பொருட்டுக் கச்சபேசம்

சித்தீசம் காயாரோகணம் வீராட்டகாசம் திருவேகம்பம் என்னுமிடங்களில் தோற்ற நிலை யிறுதி மறைப்பு அருளென்னும் பஞ்சகிருத்தியமாகிய தாண்டவம் புரியும் ரக்ஷாதாண்டவக்ஷேத்திரமாயும்,—

சரியை கிரியா யோகங்களானடையத்தகும் சாலோகாதிபதமுத்திகளுட்சிறந்து சிவஞானத்தாலடையப்படுவதாகிய தன்னியல்பில் கேசாந்தமுறுமாவி [illegible] கபாலங்கீறி, வன்னியினிற் பூவெனப்போய் வாயுவினிற் புவ்வெனப் போயிரவிமாட்டுப், பின்னமறு சவ்வெனப்போய் விண்ணரசின்மகவெனப்போய்ப் பிரமத்தொன்றாய், மன்னிடுமிக்கேசாந்தமுத்தியாகிய துவாதசாந்தமுத்தியினை மெய்ஞ்ஞானிகளேயன்றி ஒன்றுணரா மடவோர்கள் விலங்கு மரமுதலனைத்துமுயிர்போங்காலை மன்றமிசைத் தலையோடுகீறி யுடல்விடுத்தேகுங்கால் வழங்கிப் பிறவாநெறியளிக்கும் துவாதசாந்தாதீத முத்திக்ஷேத்திரமாகியும்,—

இடையூறகற்றவும் அளிக்கவும் வந்த விநாயகரும், தந்தைமொழிதவிர்த்ததனால் வந்த சுப்பிரமணியரும், பிரமகபாலத்தில் திருமால் முதலியோ [illegible] றப்பூதங்களுக்குப் பகிர்ந்த வயிரவக்கடவுள் முதலிய [illegible] ரூனுக்களும்,—

இறைவன் பேராணை வேண்டிவந்த ஹரிஹரபுத்திரரும், கருடனை யாணையின்றியலைத்ததனால் வந்த இடபதேவரும்,

சுத்தாசுத்தபுவன பதவதிகாரங்களைப் பெற விரும்பிய அஷ்டவித்யேஸ்வரரும் உருத்திரகோடிகளும்,—

முத்தியுலகவாழ்வை விரும்பிய சுவேதன்முதல் இலகுளீசனீறுன வெண்ணிறந்த சிவாம்ஸபூதர்களும்,—

சங்கிழந்த க்ஷீராப்திவாசர், சக்கரம் வேண்டிய வைகுண்டவாசர், லக்ஷ்மி வேண்டியகள்வர், பிரமனைப் பெறவேண்டியமேகவாகனர் வைகுண்டம் வேண்டிய திருமால், புண்ணியகோடி விமானம் வேண்டியவரதர் ஆகிய தமது ரக்ஷக

த் தொழிலுக்குரியன வெல்லாம் பெறவேண்டி வந்த திருமாலவசர பேதங்களும்,

ஸ்வேத (வெண்மை) நிறமிழந்த சுவேதப்பெருமாள், விஷச்சுவாலை தணியவேண்டியநீலாத்துண்டர், காளாங்கம் (பச்சைசரீரம்) ஒழியவேண்டிய பச்சைவண்ணர், பவளநிறம்வேண்டிய பவளவண்ணர், ஆகிய தமது திருமேனிக்குவந்த இடையூறகற்றிக்கொள்ள வந்த திருமாலவசர பேதங்களும்,

பொய்யுரை கூறினதனால் வந்த சர்ப்பவுரு நீங்கவேண்டிய அனந்தபத்மர், மாமியைக் கொலை செய்ததனால் வந்த சாபம் நீங்க வேண்டிய திருமால், மாவலிபொற் களவாடிய தீங்ககல வேண்டியவாமனர், இரணியன் உதிரபானவெறியைப்போக்கிய கருணைநாடிவந்த நரசிங்கர், சீதையைக்கொன்றவனையே வேண்டி பாசுபதம் விரும்பிய சீராமர் ஆகிய பொய் கொலை களவு கட்காமம் என்கிற ஐந்தும்நிகழவந்தமைக்குப் பரிகாரம் வேண்டி வந்த திருமால் அவதாரபேதங்களும்,

உதிர தர்ப்பணம் செய்ய விரும்பிய பரசுராமர், அசுரர்களைப் பெண்ணுருவால் மயக்க விரும்பிய மோகினி, சக்கிர சுதர்சனமொடு பிறர் [illegible] களைக்கொல்ல எட்டுக்கரம் விரும்பிய அஷ்டபுஜர், திருமேனிக்குப் பிரகாசம்வேண்டிய தீபப்பிரகாசர், வேதம் அமிர்தம் பூமி இவைகட்குவந்த இடையூற்றைப் போக்க விரும்பிய மச்சகூர்ம வராகம், அஷ்ட நிக்ரஹத்தை விரும்பிய கற்கி ஆகியபராக்ரமத்தை விரும்பிவந்த திருமாலவசர பேதங்களும்,

சிவநெறியாகிய தவநெறிக்கிய அருநெறியாக்கி [illegible], சிவபூதங்களின்மீது நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்த பக்தகர் அடியாரால்வஞ்சகனென்றிகழப்பட்ட உருகுமுள்ளத்தார், ஆகிய சிவாபராதம் போக்கிக் கொள்ளவந்த திருமாலவசர பேதங்களும்,

சிவதீக்ஷை விரும்பிவந்த பலராமர் கிருஷ்ணர் ஆகிய திருமாலவதாரங்களும்,

சிவசாரூப்பியம் வேண்டி வந்த திருமால், படக முழக்க வேண்டிவந்த விஷ்ணு, மத்தள முழக்க வேண்டி வந்த மத்தள மாதவர் ஆகிய சிவசம்பந்தமான அடிமைத்திறம் வேண்டிவந்த திருமாலவசர பேதங்களும்,—

சத்தியலோகம் விரும்பிய விதியும், சிருட்டி வேண்டிய அயனும், திருமாலைப்படைக்கவேண்டிய பிரமனும்,

தன்பதம் வெறுத்துச் சிவபதம்விரும்பிய இந்திரனும் கீர்த்தியை யபகரித்துச்சென்ற திருமாலை வெல்லவிரும்பிய இந்திரனும், அவிசுகளைச் சுமக்கும் ஆற்றலை விரும்பிய அக்னியும், தண்டத்தலைமை விரும்பிய இயமனும், பூதாதிகளுக்குத்தலைமைவிரும்பிய நிருதியும், சலத்திற்குத் தலைவனும்பதம்விரும்பிய வருணனும், கந்தவாகனனென்னும் பெயர்விரும்பிய வாயுவும், இழந்தகண்ணையும் இறைவன் தோழமையும் விரும்பிய குபேரனும், திக்குகளிற்சிறந்த ஈசானபதம் விரும்பிய ஈசானருமாகிய அஷ்டதிக்குப்பாலகரும்,—

கண்ணிழந்தபகனும், பல்லிழந்த பகலவனும், இரணம் விரும்பிய கதிரவனும், முத்தியின்பம்வேண்டிய தேவகுருவும், மிருதசஞ்சீவிவேண்டிய அசுரகுருவும், கிரகநிலை விரும்பிய பருதிமுதலிய நவக்கிரகங்களும்,—

ஆதியந்தங் காணக்கூடாத அடிமுடியைக் காணவெண்ணிய அபராத நீங்கவேண்டிய அரிபிரமரும்,—

இறைவன்கொள்ளாத அவிர்ப்பாகத்தைத் தாங்கொள்ள வெண்ணிய வபராதமும், தாங்கொள்ளாத விடத்தை இறைவன்கொள்ளச் செய்தவபராதமும், அரும்பொன்றைய [illegible] தம்மைத் தலைவராக வெண்ணிய வபராதமும் நீங்க வேண்டிய திருமால்முதலிய தேவர்களும்,—

அவாரபார்களாக வெண்ணியமுப்புராரிகளும், சிவகணத் தலைமை விரும்பிய வாணனும், முத்தியை விரும்பிய அந்தகன் சலந்தரன் ஓணன் காந்தனும், வன்மைவேண்டிய இரலியன் இரணியாக்ஷன் மாவலி பிரகலாதன் விரோசனன் முதலிய அசுரர்களும்,—

உற்பத்திக்கும் ஆதாரம் கொடுப்பதற்குங் கொள்வதற்கு
ந் தாமேயாகி எங்குந் தன்னுணை விரும்பிய மன்மதனும், சி
வகணத் தலைமை விரும்பிய நந்தியும், திருமாலிடமிருந்து சக்கரம்
பெற விரும்பிய விஷ்வக்சேனனும், பாம்புகள் தன்னைக்கண்
டஞ்சவெண்ணிய கருடனும், கருடன் தங்களைக்கண்டஞ்ச
இறைவனையாக வேண்டிய ஆதிசேடன் முதலிய பாம்புக
ளும், முத்தியின்பம்வேண்டிய மாகாளனும், தெய்வத்தன்
மை விரும்பிய ரேணுகையும், கருமையுங் கிழத்தன்மையு நீ
க்கிக்கொள்ள விரும்பிய திருமகளும், திருமாலைக் கணவனா
க விரும்பிய திருமகளும், சீராடவந்த பிரமனுடன் திருமா
லோடும் வந்த கலைமகளும் திருமகளும்,—

தமிழ்வழக்கும் மணக்கோலக்காட்சியும் விரும்பிவந்த
அகத்தியமுனிவரும், பால்வேண்டிய உபமன்னிய முனிவரு
ம், வச்சிரதேகம் விரும்பிய ததீசிமுனிவரும், நாராயணபா
ராயணஞ் செய்து பாரதத்தைக்கவர்ந்த வியாசமுனிவரும்; அணி
மா முதலிய சித்திகள்வேண்டிய சித்தர்களும், முத்திவேண்
டிய சத்தர்களும், அரக்கர்குலத்தை நீக்கவெண்ணிய ப
ராசரரிஷியும், சிவஞானம்வேண்டிய முனிவர்களும், மகி
மையிலாமையெண்ணிச் சேர்விக்கத்தினமே குளிகைவைத்தி
ருந்த கொங்கணமுனிவரும், பிறப்பையொழிக்கவெண்ணிய
மார்க்கண்டேயர் முதலிய பலமுனிவர்களும், அரம்பையர்
போகம்விரும்பிய அச்சுதமென் மாண்டுகன்னி முதலிய
முனிவர்களும்,—

எண்ணிய வெண்ணியாங் கெய்திய வரகரமாய் முன்னின்று

இங்ஙனம் ஒப்புவமையிலாத ஆன்மராமனென்றுமென
வும், தபோவனமெனவும், பிரமசாலையெனவும், அற்புத
க்ஷேத்திரமெனவும், அலங்காரநகரமெனவும், சத்தியவிரத
க்ஷேத்திரமெனவும், பாஸ்கரக்ஷேத்திரமெனவும், கஜஜச
க்ஷேத்திரமெனவும், தருமக்ஷேத்திரமெனவும், ரக்ஷாதாண்
டவக்ஷேத்திரமெனவும், முத்திக்ஷேத்திரமெனவும், சிவகு
மாரர்கள், அரிஹரபுத்திரர், இடபதேவர், ருத்திர கோடி

கள், கிளரிசதூதர்கள், திருமாலவதார பேதங்கள், திருமா
லவதாரபேதங்கள், நான்முகப் பிரமதேவனுடைய பேதங்கள், அ
ஷ்டதிக்குபாலகர், அசுரர்கள், மன்மதன், தக்ஷன், விஷ்வ
க்சேனன் இவரொழிந்த நாகங்கள், கருடன், ரேணுகை,
கலைமகள், திருமகள், அகத்தியமுனிவர் முதலியமுனிகண
ங்கள் ஆகிய இவரெல்லாம் எண்ணிய வெண்ணியாங் கெ
ய்தப்பெறும் வரதகரமெனவும், தேசமெல்லாம் புகழ்ந்தாடு
ம்காஞ்சியிலுள்ள ஸ்ரீவித்யா பரமேஸ்வரியாகிய ராஜராஜேஸ்
வரியானவளும் ஸ்ரீ காமாக்ஷிதேவி திருக்கோயில்கொண்டு வீ
ற்றிருக்கின்றனள்.

அவ்வாலயத்தான் தெரிசிப்பதமான பீடங்கள் ஆறுபி
ரத்து நானூறு என்றும், அவற்றுள் அறுபத்து நான்கு பீ
டங்கள் சிறந்தன வென்றும், அவற்றுள் ஐம்பத்தாறு பீட
ங்கள் சிறந்தன வென்றும், அவற்றுள் முப்பத்தாறு பீடங்
கள் சிறந்தன வென்றும், அவற்றுள் பதினொரு பீடங்கள்
சிறந்தன வென்றும், அவற்றுள் ஒட்டியாண பீடம், ஜாலந்தர
பீடம், காமராஜபீடம் என்று மூன்று பீடங்கள் சிறந்தன
வென்றும், அவற்றுள் மிகச்சிறந்து விளங்குகின்ற காம
ராஜபீடம் நாயகமணியாய் விளங்கி, பிரகாச ரூபமாயுள்
ளதென்றுங் கூறப்பட்டுள்ளது,

பிரகாசமாகிய அந்த நாதபிந்து சிம்புகம் பரமம்
ஸ்தோமம் என்றும், ஆகாசசரீரம் பிரம்மம் என்றும், சம்
புசரீரம் என்றும், பிரத்தியக்ஷம் மோக்ஷதம்பரம் என்றும்
தேவநின்னம் என்றும். ஜகத்காம சூளாகாரம் என்றும்,
குண்டலிநீபதம் என்றும், ஆதியோனிக மர்மாங்கம் என்
றும், காமேச்வர மென்றும், இயம் என்றும், அகக்னம் எ
ன்றும், சர்வசித்திதம் தபஸ்தானம் என்றும், ருக்ஷ்மமயமெ
ன்றும், காமகோடி என்றும், காம
ம் என்றும், பூயோனி என்றும், காமகோடி என்றும், காம
கோஷ்டம் என்றும், வேதங்களாலும் வேத உபப்ராஹ்மண
ஙகளாலும் அறிக்கப் பட்டிருக்கின்றது.

இந்தக் காமகோடிபீடத்துக்கு வாயு மூலையில் எவ்வுல
கத்தும் எச்சமயத்தாலும் தொழுதெழுங்கின்ற வேதமே

மாவிருக்ஷமாய்த் தளிர் பூங்கனிகளோடு நிழலைச்செய்ய அம்
மூலத்தில் உரு வரு வினு மலை யுள்ளமை யின்மை மற்றிரு
ள் ஒளியன்றி நின்றிலங்கும் அகண்டசோதியாய் விளங்குஞ்
சத்தா மாத்திரமாய், உயிர்ப்பினையொடுக்கி விழிக்குறங்
கும் யோகியர் அயர்ச்சியி லக்கண்ணு ஹோக்கும் சுடரொ
ளியாய் விளங்குஞ் சின்மாத்திரமாய், ஏனையோருள்ளத்துப்
பெருவிரலளவையி னுளத்திற் பேணிநின் றுருவுயிர் முழுவ
தும் ஆட்டும் விளக் கொருளியாய்விளங்கும் ஆனந்தமாத்திரமா
ய்ப் பிரகாசிக்கும் அகண்டசச்சிதானந்தப் பிழம்பாய்த்தோ
ன்றி பிரஹ்ம விஷ்ணு சுரேந்திரர்களால் சேவிக்கப் பட்டு
"பாயுமால்விடைமே லொருபாகனே, காயவின்மதன் பட்ட
கம்பமே" என்றும், "கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானை,
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே" எ
ன்றும், "ஆலந்தானுகந்தமுதுசெய்தானை, காலகாலனைக்கம்
பனெம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே" என்
றும் சைவசமயாசாரியர்களாகிய மூவர்முதலிகளா லோதப்
பட்டனவாகிய பல தேவாரமாலைகளேற்று அவருள் திரு
ஞானசம்பந்தசுவாமிகளுக்கு தீவங்கிடந்த திருமாலுக்குச்
சிவசாரூபங்கொடுக்கு மாற்றலும்,"மைப்படிந்த கண்ணாளுந்
தானுங் கச்சியேகம்பத்தான் வார்சடையா னென்னினல்லா,
னொப்புடையனல்ல னொருவனல்லனோரூரனல்லனோருவமனி
ல்லி, அப்படியுமந்நிறமு மவ்வண்ணமுமவனருளே கண்ணாக
க்காணினல்லால்,இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னி
வனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" என்றதிருநா
வுக்கரசு சுவாமிகளுக்கு எழுதிக்காட்ட வல்ல சிவானுபூதியி
னைவும், "நெய்யும் பாலுந்தயிருங்கொண்டு நித்தம் பூசனை
செய்யலுற்றார், கையிலொன்றுங் காணமில்லைக் கழலடி
தொழுதுய்யினல்லால், ஐவர் கொண்டிங்காட்டவாடி யாழ்
குழிப்பட் டழுந்தவேனுக், குய்யுமாறென் றருளிச்செய்யீ
ரோணகாந்தன் றளியுளீரே" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிக
ளுக்கு சிவபோகநுகர்தற் கேதுவாகிய நெய்முதலிய திரவி
யங்களோடு பொன்னுந் தந்தருளிய ஏகாம்பரநாதராலயம்

பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அக்கினி மூலையில் அவ்
வேகம்பவாணர் சந்நிதியை நோக்கி நிற்கும் அத்திகிரி நாத
ராகியவரதராஜப் பெருமாளாலயம் பிரகாசிக்கின்றது.

இங்ஙனம் மூவராலும் பிரகாசிக்கின்ற அந்தக் காஞ்சி
க்ஷேத்திரபிரபாவம் வடமொழியில் ஸ்காந்தபுராணம் சனற்
குமார சம்ஹிதை காளிகாகண்டத்தில் தீர்த்தமான்மியத்தி
ல் கூறப்பட்டுள்ள ஐம்பத்தைந்து அத்தியாயமாகிய "பஞ்
சாசத்" என்கிற நூலிலும், சிவபுராணம் பிரமாண்டபுராண
ம் முதலிய பல புராணங்களினின்றும் சங்கிரகித்துள்ள
நூறு அத்தியாயமாகிய "சதாத்யாயம்" என்னு நூலிலும்
மார்க்கண்டேய புராணம் ஸ்ரீ வித்யாகண்டத்தில் சிறந்தெ
டுத்துச் சொல்லப்பட்டுள்ள பதினான்கு அத்யாயமாகிய கா
மாக்ஷிவிலாசம் என்கிற நூலிலும் சொல்லப்பட்டுள்ளது. அ
வற்றுள் மூன்றும் மூர்த்தி தலம் தீர்த்த மென்பனவற்றைக் கூறுவ
னவேயாயினும் பஞ்சாசத் என்கிற நூல் காஞ்சியில் வீற்றி
ருக்கும் சிவமூர்த்திகளுடைய ஆதிக்கிய பிரபாவங்களையும்,
சதாத்தியாய மென்கிற நூல் தலம் தீர்த்தமென்கிற இவ்
விரண்டின் ஆதிக்கிய பிரபாவங்களையும், காமாக்ஷி விலாச
மென்கிற நூல் காமாக்ஷிதேவியினுடைய பிரபாவத்தையும்
விதந்து சிறப்பாக வெடுத்துக் கூறுகின்றன. இவ்வுண்மை
அந்நூல்களைக் கண்ணுறுங்கால் விளங்கும்.

வடமொழியிலுள்ள இம்மூன்று நூல்களுள் பஞ்சா
சத் என்னும் நூல் திராவிடமகாபாஷ்ய கர்த்தராகிய ஸ்ரீ சி
வஞான யோகிகளாலும், சதாத்யாயம் என்னும் நூல் சிவ
ஸ்ரீ சிவஞானமுனிவரின் மாணாக்கராகிய கச்சியப்ப முனிவரா
லும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுக் காஞ்சிப்புராணமென
வழங்கிவருகின்றது. தமிழில் வந்த அந்தக்காஞ்சிப்புரா
ணத்தை யச்சிடவந்தவர்கள் நூலாசிரியராகிய இருவரும் வ
டமொழியாகிய முதனூல்களைக் கொண்டியற்றினார்களென்
பதை யறிவதற் கிடனில்லாமற் போனமையாலும், இரு
வரும் ஆசிரியர் மாணாக்கரா யிருந்தமையாலும், இருவரும்
காஞ்சி மான்மியத்தையே சொன்னமையாலும், முதற்காண்

டம் இரண்டாங்காண்டமெனப்பெயரிட்டு வெளியாக்கினர். அதனுண்மையை நோக்குங்கால் இரண்டுந் தனித்தனிப் புராணங்களென்றே வெளியாகின்றன. ஆகவே, ஒரு நூற்சம்பந்தத்தைக் காட்டும் திருவிளையாடற் புராணக் காண்டங்களைப் போல இக்காண்டங்களாகா.

சிதம்பர க்ஷேத்திரத்துக்குக் கோயிற் புராணம், சிதம்பரபுராணம் எனவும், மதுரை க்ஷேத்திரத்துக்குத் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணமெனவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஒன்றற்கே ஒன்று இரண்டு பலவாகப் பலபுராணங்களிருப்பனபோலும் காஞ்சி க்ஷேத்திரத்துக்கும் முதற்காண்டம், இரண்டாங்காண்டமெனக் குறிக்கப்பட்டிருப்பதை யிரண்டு புராணங்களாகக் கொள்வதே முறைமையாமென்றுணரக் கிடக்கின்றன. நிற்க.

காஞ்சிப்பிரபாவத்தை விளக்கிய மூன்று நூல்களுள், காமாக்ஷிதேவியினுடைய பிரபாவத்தை விளக்கவந்த காமாக்ஷிவிலாசமென்கிற நூலிதுவரையில் வெளிப்படாமலிருந்தமையால் அந்நூலை உரையளவையான் விளங்கத்தக்க ஏனைய இரண்டு நூல்களைப் போலல்லாமல் யாவர்க்குமிக வெளிமையாய் விளங்கத்தக்க வசனநடையில் வெளியாக்குவதே மிகவும் நன்மையாமென்று எமக்குத்தோன்றிய பின் அபிப்பிராயப்பட்டமையான் அவ்வண்ணமே வெளியிடலாயிற்று.

வடமொழியினும் தென்மொழியினுமுள்ள காஞ்சிப் புராணங்களில் காஞ்சியிலுள்ள சிவமூர்த்திகள் இவையிவையென்பதும், தீர்த்தங்களிவையிவையென்பதும் இவ்விவ் விடங்களில் இருக்கின்றன வென்பதும் புதியோர் இவையிவையென்பதும் ஒருசேரக் கண்டு தெளிதல் அருமையாகவிருக்கின்றமையானும், க்ஷேத்திர தரிசனத்தை விரும்பி வருவோர் புராணங்களைப் பார்ப்பதும் முன்கூறியமூர்த்தி, தீர்த்தங்களிருக்குமிடங்களைக் காணப்பெறுவதும், அங்கங்குச் செல்லும் மார்க்கங்களை யறிந்துகொள்வதும், அருமையினும் அருமையாய்த்தரிசனஞ் செய்வதை யிழந்து போகின்றமையானும் அந்தக் கஷ்டங்களெல்லாம் அன்பர்கட்கு நிவிர்த்தி செய்வித்தல் பெரிய சிவபுண்ணியமெனக் கருதி காஞ்சி சிவக்ஷேத்திர விளக்கமென்கிற ஒருசுருக்கமும் இந்தக் காமாக்ஷிவிலாசப்பிரபாவத்துடன் வெளியிடலாயிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

அத்தியாய விஷய சூசனை.

முதலத்தியாயம்.

பராசக்தி பலவிதமான பிலரூபமாயும், யந்திரரூபமாயும், பிம்பரூபமாயும், இன்னும் பலரூபமாயுமிருந்து தனது ஆதிக்கியத்தைக் காட்டுகின்ற க்ஷேத்திரங்கள் பலவிருப்பினும் பராசக்தி பிலயந்திர பிம்பரூபமாயிருக்கின்ற மகிமையையும், சிவசொரூபமாயிருக்கின்ற அற்புதக் காட்சியையும், விஷ்ணு சொரூபமாயிருக்கின்ற மோகனக்காட்சியையும், விளக்குவது காஞ்சியாயிருத்தலால் இது மேம்பாடுடையதென்பதையும், சிவகாமேஸ்வராங்கஸ்தா, சிவஸ்வாதீனவல்லபா, என்கிற நாமங்களைப் பராசக்தியுடைத்தாயிருப்பதால் சோதிலிங்க சக்தி சொரூபிணியாயும், விஷ்ணுரூபிணீ, விஷ்ணுமாயாவிலாசினீ என்கிறநாமங்களையுமுடைத்தாயிருப்பதால் வரதராஜமூர்த்தியாயும் இருக்கின்றாரென்பதையும், சோதிலிங்க சக்திசொரூபமாயிருக்கின்ற அவசரம் முத்தான்மாக்கள் சர்வமந்திர சர்வஞ்ஞான சித்தியடையும்பொருட்டென்பதையும், வரதராஜமூர்த்தியாயிருக்கின்ற அவசரம் பெத்தான்மாக்கள் மாயா விலாசமாயிருக்கின்ற இஷ்டகாமிய போகசித்திகளையடையும் பொருட்டென்பதையும் விளக்குவது.

இவைகளன்றி இவ்வத்தியாயத்தில் காஞ்சிக்கு முதலாவரணத்தி லெல்லையாயுள்ளது,— கிழக்கில் சமுத்திரம் எனவும், தெற்கில் தக்ஷிண பினாகினி எனவும், மேற்கில் [illegible]மெனவும், வடக்கில் சுவாமிபுஷ்கரணியெனவும்,— இரண்டாம் ஆவரணத்திலெல்லையாயுள்ளது,— கிழக்கில் மாவலிபுரம் எனவும், தெற்கில் தேவிபுரம் எனவும், மேற்கில் [illegible]புரம் எனவும், வடக்கில் நாகலாபுரம் எனவும்,— மூன்றாம் ஆவரணத்திலெல்லையாயுள்ளது,— கிழக்கில் திருவெ

ஸிசங்கமநகரம் எனவும், தெற்கில் வியாக்கிரபுரம் எனவும், மேற்கில் க்ஷீராப்திநகரம் எனவும், வடக்கில் நந்திகங்காபுரம் எனவும் கூறப்படும் மூன்றுவரணங்களை யுடைத்தெனவும், சத்திய விரதக்ஷேத்திரமுதலாக எண்ணப்பட்ட ஒன்பது நாமங்களை யுடைத்தெனவும்,— இவைகளன்றி பாலாற்றின் வரலாற்றையும், — பராசக்திமூன்றுவித சொரூபமானமையையும், அவ்வவற்றின் வரலாறுகளையும் விளக்குவது.

இரண்டாவது அத்தியாயம்.

வரதராஜருடைய க்ஷேத்திரத்தினெல்லை க்ஷேத்திராங்கினின்னுந் தூர்க்காலய முதல் நரசிம்மராலயம் வரையில் எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான தூர்க்காலயம் நான்கெனவும், சிவாலயம் மூன்றெனவும், விஷ்ணுவாலயம் எட்டெனவும், முத்திரைகளைந்தெனவும், தீர்த்தங்கள் நான்கெனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.

மூன்றாவது அத்தியாயம்.

வரதராஜப் பெருமாள் வீற்றிருக்கின்ற அத்திகிரி, இலக்ஷ்மிதேவி சரஸ்வதிதேவி இவ்விருவரும் தங்கள் தங்களுக்கே பெருமையுடைத்தென்பதை நாட்டிக்கொள்ள இந்திரனை வினவ அப்பொழுது சரஸ்வதியால் அவனுக்கு வந்த சாபவுருவெனவும், அந்த அத்திகிரியில் நரசிம்மர் குஹாநரசிம்மராய் வீற்றிருத்தற்குக் காரணம் இது வெனவும், பெருமாள் சந்நிதிக்குப் பின்பக்கத்தில் இரண்டுபல்லிகள் இருக்குங்காரணம் இதுவெனவும் இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.

நான்காவது அத்தியாயம்.

அத்திகிரியில் திருமால் வரதராஜமூர்த்தியாய் வருவதற்குக் காரணம் பிரமனுக்குச் சிருட்டிதண்டங் கொடுத்தற்கெனவும், வேகவதி என்னும் நதி சிருட்டிதண்டம் பெறுதற்குப் பிரமன் செய்யத் தொடங்கிய யாகத்தை யழித்தற்கு வந்த சரஸ்வதிதேவி எனவும், அந்நதியால் யாகத்தைத்

கு யாதொரு இடையூறும் வராவண்ணம் வரதராஜர் காத்தவகை இது இதுவெனவும், இந்த அத்திகிரியில் வரதராஜப் பெருமாள் வைகுண்ட முதலியவைகளைக் காட்டிலும் மிகப்பிரியமுடையராயிருத்தற்குக் காரணம் இதுவெனவும் விளக்குவது.

ஐந்தாவது அத்தியாயம்.

வேகவதியாய் வந்தகலைமகள் திருமாலால் அவமானத்தையடைந்தனளாதலால் அவ்வவமான நிவிர்த்தி அவராலேயேயானமையும் நிவிர்த்தியான பின்னர் பிரமதேவனோடு முன்போற்கூடி மகிழ்ந்தமையும் விளக்குவது.

ஆறாவது அத்தியாயம்.

ஏகாம்பரநாதருடைய எல்லை காயாரோகணேஸ்வரராலய முதல் சுவேதப்பெருமாளாலயம் வரையில் எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான தூர்க்காலயம் நான்கெனவும், சிவாலயம் எட்டெனவும், விஷ்ணுவாலயம் எட்டெனவும், முத்திரைகள் ஐந்தெனவும், தீர்த்தம் நான்கெனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.

ஏழாவது அத்தியாயம்.

ஏகாம்பரநாதர் இடங்கொண்டிருக்கும் மாவிருக்ஷத்தினுடைய சொரூபம் இதுவெனவும், அது ஓர்பிரளயகாலத்தில் மார்க்கண்டேயருக்காய்வளர்ந்து அவரைக்காத்து அவரைக் காஞ்சியில் வாழச் செய்த விதம் இதுவெனவும், மாங்கனியினுடைய பெருமை இதுவெனவும் விளக்குவது

எட்டாவது அத்தியாயம்.

ஏழாவது அத்தியாயத்தில் சொல்லிய மாவிருக்ஷமூலத்திலிருக்கும் சோதிலிங்கப் பெருமானது சொரூபம் இதுவெனவும், அச்சோதிலிங்கப் பெருமானைத் தழுவுவதற்கு உமாதேவியார் ஸ்ரீகயிலாயத்தை விட்டு வந்த காரணம் இதுவெனவும், கயிலாயத்தை விட்ட அம்மையார் பதரிகாச்சிரமத்தை வந்தடைந்தமையும், அந்த ஆச்சிரமத்திலுள்ள காத்தியாயனமாமுனிவர் அவ்வம்பிகைக்கு யோகதண்டமுதலி

யனை கொடுத்ததையும், அதனைக் கொண்டு காசிக்கு வந்தபின்னர் அங்கு யாவரையும் வருத்தியிருந்த துவாதச வருஷக்ஷாமத்தைப் போக்கினதையும், அதன்பின்னர் காஞ்சிக்கு வந்தபோது யோகதண்டம் முதலியன வெல்லாம் சிவபூஜைக்குரிய சிவலிங்க மூர்த்தி முதலியனவாக மாறினதையும், அதன் பின்னர் அம்மையார் காஞ்சியில் அரிய தவமியற்றிவந்ததினால் சிவபெருமானார் கங்கையைக் கம்பாநதியாகப் பெருகிப்போகச் செய்ததையும், அவ்வெள்ளத்தை உமாதேவியார் பிரளய பந்தனியைக் கொண்டடக்கினதையும், மீளவும் சிவபெருமானார் பிரளய பந்தனியினுடைய கபாலத்திலடங்கியிருந்த வெள்ளத்தைப் பெருகிப்போகச் செய்ததையும் அவ்வெள்ளத்தைக் கண்டு காமாக்ஷிதேவியார் ஏகாம்பரநாதரைத் தழுவினதையும், தழுவினமாத்திரத்தில் காட்சிகொடுத்துத் திருமணஞ் செய்துகொண்டு யாவருக்கும் அனுக்கிரகஞ் செய்ததையும் விளக்குவது.

ஒன்பதாவது அத்தியாயம்.

சர்வதீர்த்தமானது ஏகாம்பரநாதர் தம்முடைய கால் பெருவிரலால் உண்டாக்கப்பட்டதென்பதும், இரண்டுமுறை பெருகிவந்த கம்பைவெள்ளம் அதில் வீழ்ந்துள்ளதென்பதும், அந்தச்சர்வதீர்த்தம் காமாக்ஷிதேவியினால் கட்டப்பட்டதென்பதும், பின்னர் அத்தேவி தாம் செய்துவந்த முப்பத்திரண்டறங்களை நடத்திவரத் தன்மதியை நியமித்தாரென்பதும், சர்வதீர்த்த மகிமையினால் ஓர் பிராமணனுடைய பிதுர்க்கள் நரகத்தினின்றும் கயிலைக்கேகினார்களென்பதும் விளக்குவது.

பத்தாவது அத்தியாயம்.

ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடைய காஞ்சீக்ஷேத்திரமென்னும் துர்க்காலயமுதல் சுவேதப் பெருமாளாலயம் வரையில் என்பதும், அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் ஆறென்பதும், விஷ்ணுவாலயம் நான்கென்பதும், சிவாலயம் ஐந்தென்பதும், தீர்த்தம் நான்கென்பதும் அந்தக்

காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துக்குள் அன்னபூரணியாலயம், சாஸ்தாவாலயம், அஞ்சன காமாக்ஷிசந்நிதி, சந்தான ஸ்தம்பம் என்பன உளவென்பதும் இவற்றின் வரலாறுகள் இத்தன்மையவென்பதும் விளக்குவது.

பதினொன்றாம் அத்தியாயம்.

ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள் பராசக்தி வீற்றிருக்கும் மண்டபம் காயத்திரி மண்டபம் என்பதும், அதற்கு ஆதாரமாயுள்ளது மஹாபிலம் என்பதும், அந்த மஹாபிலத்துக்குரிய மஹிமையினால்வந்த நாமவிவரணம் இவையென்பதும், அவற்றுள் காமகோடி காமகோஷ்டம் என்னும் இரண்டு நாமங்களுக்குள்ள விசேஷணங்கள் இவையென்பதும், பின்னர் பந்தகாசுரனுடைய உபத்திரவம் இத்தன்மைத்தென்பதும், அவ்வசுரனுடைய உபத்திரவத்துக்கு அஞ்சி அங்குவந்த தேவர்களுக்கு அந்த மஹாபிலத்தினுடைய பிரபாவம் இத்தன்மைத்தென்று விளக்கிய விதம் இத்தன்மைத்தென்பதும், அந்தப் பிலபிரதக்ஷிண விதம் இத்தன்மைத்தென்பதும் விளக்குவது.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

காமகோடி பீடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ திரிபுரசுந்தரியினுடைய வர்ணனையையும், தேவர்களுடைய அன்பு மிகுதியின் பொருட்டுப் பிலத்தினின்றும் தேவி வெளிப்பட்டுவந்து உலகினைப் பஸ்மீகரப்படுத்தித் திரிமூர்த்திகளையுண்டாக்கிப் பின் மறைந்துபோனதையும், பின்னர்த்தேவி பந்தகாசுரப் பிரேதத்தோடு வெளிவந்ததையும், வெளிவந்து தேவர்களுக்கு அப்பந்தகனைப் புதைத்து தனக்காலயமுண்டாக்கித் தன்னைப் பிரதிஷ்டைசெய்து தெரிசிக்கும் விதத்தைச் சொன்னதையும், அவர்கள் தன்னைத் தெரிசித்தபின்னர் அவர்களுக்குத் தன்வரலாறெல்லாம் தெரிவிக்கின்றதையும் தேவிசொன்னதுபோல் அத்தேவர்கள் பூஜித்ததையும், நான்குயுகங்களில் பராசக்தியைப் பூஜித்தார் இவரிவரென்பதையும் விளக்குவது.

பதின்மூன்றாம் அத்தியாயம்.

பந்தகாசுரனைப் புதைக்கத் தொடங்கிய பொழுது அந்தப்பள்ளத்தில் தவஞ்செய்திருந்த அசுரனைத் திருமால்

சொல்லத் தொடங்கிய காலத்தில் அசுரக்கூட்டங்களின் பெருவெள்ளமாகத் தோன்ற அவைகளை யொழிப்பதற்கு இரண்டு சிவபூதங்கள் தோன்றி அவைகளை யொழித்துத் திருமாலோடு போர்செய்து தோல்வியடைந்துபோகத் திருமால் நின்றார் இருந்தார் கிடந்தார் என்கிற மூன்றுவித கோலங்கொண்டமையும், மூன்றுவித கோலங்கொண்ட திருமால் சிவபூதங்களை இம்சித்தது சிவாபராத மென்றெண்ணி அது நீங்குதற்குச் சிவபெருமானைத் தியானிக்க அவரனுக்கிரகத்தால் பஞ்சதீர்த்தமுண்டாய் அவ்வபராதத்தைப் போக்கினமையும், பின்னர் அவ்விரண்டு பூதங்களை அத்தீர்த்தத்துக்குக் காவலாக நியமித்து அவைகளுக்கு ஆகாரதிருப்திகளுண்டாக்கித் திருமாலையும் அவ்விடத்திலோர் திருப்பதியாகக் கொண்டிருக்கச் செய்தமையும் விளக்குவது.

பதினான்காம் அத்தியாயம்.

ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கு வல்லபையாயிருந்த காமாக்ஷிதேவி பிரமாவினுடைய வேண்டுகோளால் சுவர்ண விக்கிரகமாக நியமிக்கப்பட்ட காரணத்தையும், அந்த அம்பிகையினுடைய சவுந்தரியங்களையும், இந்தக் காஞ்சிக்ஷேத்திரத்தில் சிவக்ஷேத்திரங்கடோறும் தேவி யில்லாமைக்குக் காரணத்தையும், சிவபெருமானது நெற்றிக்கண்ணால் எரிந்துபோன மன்மதன் காமாக்ஷிதேவியினிடத்தில் வரம்பெற்றுக் கோடி மன்மதர்களாய் வரப்பெற்று ருத்திரகோடிகளை வெற்றிகொண்டமையும், மன்மதகோடியர் உண்டான காலத்தில் பூமண்டலத்திலுள்ள சகல சிவக்ஷேத்திரங்களிலும் சக்திரூபமாகிய அம்பிகை யுருவங்களெல்லா மறைந்து போகப் பின்பிரமனால் பிரதிஷ்டையான காரணத்தையும், பிரமனை நோக்கிச் சுவர்ண காமாக்ஷிக்கும் ஏகாம்பரநாதருக்கும் திருக்கலியாணம் நடத்த வேண்டிய விதிமுறைகளையும், பராசக்தியையும், தபஸ்காமாக்ஷியையும், சுவர்ணகாமாக்ஷியையும் ருத்திரயாமளதந்திரப்படிச் செய்யவேண்டிய பூஜையினுடைய பேதமுறைகளைச் சொன்னமையும், பிரமன் தனக்கு ஸ்ரீ சக்கரஸ்தானத்தை மிதித்ததனாலுண்டாகிய தன் குருட்டைப் போக்கிக்கொண்ட விதத்தையும், பின்னர் பராசக்தியைப் பூசித்தவர் வரலாற்றையும் விளக்குவது.

அத்தியாய விஷய சூசனை முற்றிற்று.

ஸ்ரீ த்ரிபுரசுந்தர்யைநம:

காமாக்ஷிதேவ்யைநம:

காமாக்ஷி லீலா பிரபாவம்.

முதலத்தியாயம்.

துதி.

காரணி கருமமாற்றுங் கடவுளர் முடிமேற் றங்குஞ்
சீரணி ஞானபாதச் செல்வியே கம்பற் போற்றித்
தாரணி தழைப்பநாளுந் தன்னருட் குகையில் வாழும்
பூரணி காமக்கண்ணி பொற்பதஞ் சிரமேற் கொள்வாம்.

பீடத்திரய விவரணம்.

இப்பூமண்டலம் ஐம்பது கோடி யோசனை விசாலமுள்ளது. இதனுள் தேவி சம்பந்தமான பீடங்கள் ஆறாயிரத்தைந்நூறு. அவற்றுள் அறுபத்து நான்கு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் ஐம்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் முப்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் பதினெண் பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் மூன்று பீடங்கள் சிறந்தன.

அவையாவன:—காமராஜ பீடம், ஜாலந்தர பீடம், ஒட்யாண பீடம்.

இம்மூன்று பீடங்களையும் பூசித்தவர்:-ஹயக்கிரீவர். பிருகு முனிவர், வியாச முனிவர்.

இவருள் காமராஜ பீடத்தில் வாக்பவ கூடத்தைப்பூஜித்தவர் ஹயக்கிரீவர். ஜாலந்தர பீடத்தில் மத்யமமென்கிற மத்திய கூடத்தைப் பூஜித்தவர் பிருகு முனிவர். ஒட்டியாண பீடத்தில் பராபீஜ சொரூபமான காமரூபத்தைப்பூஜித்தவர் வியாச முனிவர். காமராஜ பீடங் காஞ்சி நகரத்திலும், * ஜாலந்தர பீடம் ஜ்வாலாமுகியென்கிற க்ஷேத்திரத்திலும், ஒட்டியாண பீடம் ஜகந்நாதமென்கிற க்ஷேத்திரத்திலும் உள்ளன.

காஞ்சிமண்டலத்தி னெல்லை.

(முதலாம் ஆவரணம்.)

கங்காநதிக்குத் தென்பாகத்தில் (200) யோசனை தூரத்திற்கு மேலுள்ள சமுத்திரகட்டத்தில் † அக்கினிதிக்கே கிழக்கெல்லை. அதற்குநிருதியில் (7½) யோசனை தூரத்திலுள்ள தக்ஷிண பிநாகினியே தெற்கெல்லை. அதற்கு வாயுவில் (4) யோசனை தூரத்திலுள்ள ‖ சிலாஹ்ருதமே மேற்கெல்லை. அதற்கு ஈசானத்தில் (8) யோசனை தூரத்திலுள்ள சுவாமி புஷ்கரணியே வடக்கெல்லை.

கிழக்கெல்லையாகிய சமுத்திர கட்டத்தின் மகிமை.

கிழக்கெல்லையாகவுள்ள சமுத்திரகட்டம் காஞ்சிப்பதிக்கெல்லையாக அமைந்தமையாலும், சரஸ்வதி தேவிமுன்னொருகாலத்தில் தனக்கு நேர்ந்த ஓர் † தோஷத்தை மாற்றிக் கொள்ள நதியுருவங் கொண்டு இக்கடலிற் சங்கமமாய்ப் பரிசுத்த மடைந்து தன் கணவனோடு சேர்ந்து சமுத்திரராஜ

* ஜாலந்தரபீடமும், ஒட்டியாணபீடமும் வடதிசையிலுள்ளன. † காஞ்சி நகரம் சக்கிரரூபமாய் சிருஷ்டித்திருப்பதால் கோணமாகிய அக்கினிதிக்கையே கிழக்கெல்லையாக எடுக்கப்பட்டது.

‖ சிலை என்றால் கல். ஹ்ருதமென்றால் மடு. ஆதலால் அது கல்லாறு என வழங்குகின்றது. † தோஷமென்பது - காஞ்சிப்புராணத்தில் [illegible]த்தானப் படலத்திற் காண்க.

லைப்பார்த்து இத்தீர்த்தத்தில் எவரெவர் எவ்வெக் காலங்களில் ஸ்நானஞ் செய்த போதிலும் அவரெல்லாம் பரிசுத்தராய்ச் சிவபத மடைவரென்று வரமளித்தமையாலும் இவ்வெல்லைக்கு ஸ்நானஞ் செய்யலாகாதென விதித்த காலங்களில்லையாயின.

தெற்கெல்லையாகிய தக்ஷிண பிநாகினியின் மகிமை.

முன்னொரு காலத்தில் அசுரகுருவாகிய பிருகுமுனிவர் சிவானுக்கிரகத்தினால் பூமியிற் கிடந்திருந்த பிநாகமென்னும் தனுசை எடுத்துத் தாங்கிய பொழுது கங்கை நதிரூபமாய்ப்பெருக் கெடுத்தோடியது. அதுகண்ட முனிவர் இது பிநாகினியினுண்டானபடியால் * பிநாகினியெனப் பெயர் பெற்று வழங்கக் கடவதென்றும் இதில் ஸ்நானஞ் செய்பவர்கள் புண்ணிய சொரூபிகளாய்ச் சிவலோக மடையக் கடவர்களென்றும் வரமளித்தனர்.

மேற்கெல்லையாகிய சிலாஹ்ருதத்தின் மகிமை.

முன்னொரு காலத்தில் அநுமார் அமிர்தம்போலும் பிழைப்பிக்க வல்ல ஔஷதிகளைப் பறித்தெடுத்து வரும்போது சிலாஹ்ருத தீர்த்தத்தில் அலம்பிப் பின்னர் லக்ஷ்மணரிடத்திற் கொண்டு போய்க் கொடுத்தனர். அலம்பிய காலத்தில் இதில் யாரொருவர் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் சித்தர்களாய் நெடுங்காலஞ் சீவித்திருந்து பின் தெய்வத்தன்மையடைந்து விஷ்ணுபதத்தை யடையக் கடவர்களென்று வரமளித்தனர்.

வடக்கெல்லையாகிய சுவாமி புஷ்கரணியின் மகிமை.

முன்னொரு காலத்தில் விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மி தேவியைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று விரு

* பிநாகினி என்னும் நதியானது பெண்ணையாறு என வழங்குகின்றது.

ம்பிச் சித்த வேட்கைகொண்டு திருப்பதி என வழங்கும் சேஷாசலத்தை வந்தடைந்த காலத்தில் தன்னுடன்வந்த ரிஷிகளுடைய ஸ்நானபான நிமித்தம் ஓர் தடாகத்தை யுண்டு பண்ணி அதில் விரஜாநதியைப் பிரதிஷ்டைசெய்து தாமும் தமது கலியாண முடிந்த பின்னர் ஸ்நானஞ்செய்து *ஸ்வாமி புஷ்கரணி என்று பெயரிட்டு இதில் யாரொருவர் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் இவ்வுலகில் எல்லாப் போகங்களையும் அனுபவித்துப் பின்னர் எனது லோகத்தை யடையக்கடவர்களென்று வரமளித்தனர்.

இந்நான் கெல்லைக் குட்பட்ட பிரதேசம் துண்டீர னென்னும் அரசனால் நீதியோடு ஆளப்பட்டமையால் துண்டீரமண்டலமெனப் பெயர் பெற்றது.

(இரண்டாம் ஆவரணம்.)

காஞ்சிக்குக் கிழக்கெல்லையாகிய சமுத்திரத்திற்கு (1) யோசனை மேற்கில் மாபலிபுரம். அதற்கு (5) யோசனை நிருதியில் தேவகிபுரம். அதற்கு (5) யோசனை வாயுவில் விரிஞ்சிபுரம். அதற்கு (5) யோசனை ஈசானத்தில் நாகலாபுரம் அதற்கு (5) யோசனை ஆக்னேயத்தில் முற்கூறிய மாபலிபுரம்.

வரலாறு.

பூர்வத்தில் மஹாபலிச் சக்கிரவர்த்தி பரமசிவானுக்கிரகம் பெற்றுப் பெருஞ்செல்வமடைந்து அங்கு வாழ்ந்திருந்தனனாதலால் மாபலிபுரமெனவும்,—உக்கிரசேன னென்னும் அரசனும் பரமசிவாராதனை செய்து கன்னியாரத்னமாகிய தேவகி என்னும் பெண்ணைப் பெற்று அங்குவாழ்ந்திருந்தனனாதலால் தேவகிபுரமெனவும்,—அரம்பையும் பரமசிவாராதனைசெய்து இந்திரனுக்கு மனைவியாகலாயினளைத்

---

* ஸ்வாமிபுஷ்கரணி என்பது திருப்பதிக்குக் கிழக்கிலுள்ளது.

காட்டினாள் தான் அதிகப் பிரியை யாவதற்குத் தவஞ்செய்யப் பிரமன் சிருஷ்டிசெய்த புரமாதலால் அது விரிஞ்சிபுரமெனவும்,—உலகங்களுக் கெல்லாம் நாசந் தரும்படியான விஷம் நாகத்தினின்றுந் தோன்றிய பொழுது அதனை மஹாதேவ ரஞ்சாது கையிலேற்ற விடம் அதுவாதலால் நாகலாபுரமெனவும் பெயர் பெற்றன.

இந்நான்கு புரங்களுக்குட்பட்ட பிரதேசம் ஏகாம்பரநாதர் பூஜார்த்தமாய் வந்த பார்வதி தேவியார் வீற்றிருந்தருளிய ஸ்தலத்தினால் பிரகாச மடைந்தமையால் தபோவனமெனப் பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய நான்கெல்லைக்குள் மாபலிபுரத்துக்கு (3) யோசனை மேற்கில் *திரிவேணி சங்கமநகரம். அதற்கு ($1\frac{1}{4}$) யோசனை நிருதியில் ○ வியாக்கிர புரவனம் அதற்கு ($1\frac{1}{4}$) யோசனை வாயுவில் ‖ க்ஷீராப்திநகரம் அதற்கு ($1\frac{1}{4}$) யோசனை ஈசானத்தில் 0 நந்திகங்காபுரம் அதற்கு ($1\frac{1}{4}$) யோசனை ஆக்னேயத்தில் முன்னர்க்கூறிய திரிவேணிசங்கமநகரம்.

வரலாறு.

விஷ்ணுமூர்த்தி தன்னுடைய ஓர் பக்தனுக்குத் திரிவேணி சங்கமத்தில் ஸ்நானஞ்செய்தால் வரும்பலனை அவ்விடத்திலடையும்படிச் செய்தனராதலால் திரிவேணி சங்கம நகரமெனவும்,—வியாக்கிர பாதருக்கு நடராஜமூர்த்தி பூர்வத்தில் இவ்விடத்தில் திருந்த தரிசனங் காட்டினராதலால்

---

* திரிவேணிசங்கம நகரமென்பது திருமுக்கூடலென வழங்குகின்றது. அதுசீயரமென வழங்கும் கிராமத்திலுள்ளது. ○ வியாக்கிரபுரவனமென்பது திருப்புலிவனம் என வழங்குகின்றது. இது உத்திரமேரூருக்குப்போகும் வழியிலுள்ளது. ‖ க்ஷீராப்திநகரமென்பது திருப்பாற்கடலெனவும். 0 நந்திகங்காபுரமென்பது [illegible]தோலம் எனவும் வழங்குகின்றன.

வியாக்கிரபுரவன மெனவும்,—விஷ்ணு மூர்த்தி தன்னுடைய ஓர் பக்தனுக்குத் திருப்பாற் கடலில் சயனம் வீற்றிருக்கும் கோலத்தை இங்குக் காட்டின ராதலால் க்ஷீராப்திநகரமெனவும்,—சிவபெருமானிடத்தில் அன்புள்ள வோர் புலையன் தன் வினை நிலமெல்லாம் மழையின்றிப் பாழ்படக்கண்டு வருந்தியிருப்ப அச்சிவபெருமானார் இரங்கி நந்தி வாயின் வழியாகக் கங்கையை விரச்செய்து பயிரை வளர்ப்பித்துப் பின் அவனை அத்தீர்த்தத்தில் மூழ்கச்செய்து மோக்ஷமடையச் செய்தனராதலால் நந்திநகரபுர மெனவும் பெயர் பெற்றன.

இந்நான்கு நகரங்களுக்குட்பட்ட பிரதேசம் முன் பிரமன் செய்த அஸ்வமேதத்திற்குச் சாலையாக வமைந்து விளங்கினமையான் பிரமசாலை யெனப் பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய விஷ்ணு க்ஷேத்திரத்தில் திரிவேணிசங்கமத்திற்கு (1) யோசனை மேற்கில் பாஞ்சாலிகை என்னுந் துர்க்கை,—அதற்கு (89) அம்சம் மேற்கில் கன்னிகேசர் என்னுஞ் சிவபிரானார்,—அதற்கு (50) அம்சம் உத்தரத்தில் சூரிய புஷ்கரணி தீரத்தில் ஸ்வேதாக்கியர் என்னும் விஷ்ணு மூர்த்தி,—அதற்கு (17) அம்சம் கிழக்கில் சந்திர புஷ்கரணி தீரத்தில் க்ஷேத்திராங்கி என்னுந் துர்க்கை,—அதற்கு (51) அம்சம் ஆக்னேயத்தில் முற்கூறிய பாஞ்சாலிகை என்னுந் துர்க்கை,—என்றெண்ணப்பட்டவர் வீற்றிருக்கின்றனர்.

க்ஷேத்திரநாம விவரணம்.

காஞ்சி க்ஷேத்திரத்தை சத்தியவிரத க்ஷேத்திர மெனவும், பாஸ்கர க்ஷேத்திர மெனவும், தைஜஸ க்ஷேத்திரமெனவும், ஹரிஹர க்ஷேத்திர மெனவும், சக்தி க்ஷேத்திர மெனவும், மஹா புண்ணியப் பிரத க்ஷேத்திர மெனவும், கைலாசம், வைகுண்டம் ஸ்ரீபுரமெனவும் வரும் ஒன்பது நாமங்களால் சான்றோர் புகழ்கின்றனர்.

வரலாறு.

என்றும் சிவசாந்நித்தியத்தை யுண்டென்னுகிறதாயும், மஹாசக்திப் பிரபாவத்துக்கு முதலிடமாயும், அந்த மஹாசக்தியின் பிரதான சத்திகளுடைய வைபவங்கள் விளங்கத்தக்கதாயும் சக்தி சொருபமாகிய விஷ்ணு சக்திக்கு அதிஷ்டானமாயும், நாச மற்றதாயும், சான்றோர்களாற் சூழப்பட்டதாயும் இருப்பதால் சத்திய விரத க்ஷேத்திர மெனவும்,—சிரேஷ்டமான மலைகளாலும் ஆலயங்களாலும் சூழப்பட்டிருப்பதால் பாஸ்கரக்ஷேத்திரமெனவும்,—மஹா பிலம், மஹாவிருக்ஷம், புண்ணியகோடி விமானம், என்னும் நிலைகளையுடைத்தாயிருப்பதால் தைஜஸக்ஷேத்திர மெனவும் சத்திசிவாத்மகமா யிருப்பதால் ஹரிஹரக்ஷேத்திர மெனவும்,—விஷ்ணுவென்றும் சத்தியென்றும் சகுணபாவனையால் இரண்டுருவமாகப் பாவிக்கப் படும் மஹா மாயை என்று நிர்க்குண பாவனையால் ஒருருவமாகப் பாவிக்கப் படும் விளங்குகின்ற ஆத்ம சிற்சக்தியாகிய மஹாதேவியே ஆகாச ரூபமாயுள்ள பிலசக்தி ரூபமாயும், ஸ்திரீ ரூபமாயுள்ள காமாக்ஷி சக்தியாயும், புருஷரூபமாயுள்ள வரதராஜசக்திரூபமாயும் இருப்பதால் சக்திக்ஷேத்திரமெனவும்,—அழிவில்லாததாயும் நிர்மலஸ்தானமாயும் புண்ணியாதிக்கிய முடையவர்கள் வாழ்தற் கிடமாயும் இருப்பதால் கைலாசம், வைகுண்டம், ஸ்ரீபுரமெனவும்,—சர்வவிருக்ஷங்களும் தேவவிருக்ஷங்களாயும், கிணறு தடாகம் நதிமுதலிய வற்றிலுள்ள சலங்களும் கங்கா தீர்த்தமாயும், மானிடரெல்லாந் தேவர்களாயும், சிலைகளெல்லாம் சிவவிஷ்ணு சொருபங் களாயும், நடப்போருடைய பாததூளிகளெல்லாம் பரிசுத்தத்தைச் செய்ய த்தக்கவையாயும், வீசுகின்ற காற்று பாவச் செயலையடக்கும் அங்குசமாயும், இருப்பதன்றித் தேவர்களும் சித்தர்களும் மோக்ஷா பேக்ஷையுள்ள சிரேஷ்டமான ருஷிகளும் அந்த க்ஷேத்திரத்தில் தேஜோரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதாலும் இவ்வண்ணம் யாவரும் தெய்வ ரூபமாக

விருக்கின்ற படியினால் புண்ணியப்பிரத க்ஷேத்திரமெனவும் சொல்லப்படும்.

அன்றியும் பிரமாண்டத்துள் "சத்தியவிரத க்ஷேத்திர" முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பதுநாமங்களை யுடைத்தாயிருக்கிற எல்லை எதுவோ அது காஞ்சித் தலமென்று சொல்லப்படும்.

இந்தஎல்லையின் நடுவில் ஸ்ரீ வித்தியா பரமேஸ்வரியினுடைய ஸ்தன கும்பத்தினின்றும் வெளிப்பட்டதாயும் சாசுவதமாகிய ஞானத்தைக் கொடுக்கிற அமிர்தசொரூபமாயும் தேகத்திற்குவரும் நரைதிரைமூப்பாதி துக்கங்களைப் போக்கடிப்பதாயும் கிருதயுகத்தில் அமிர்தரூபமாயும், திரேதாயுகத்தில் பால் ரூபமாயும், துவாபரயுகத்தில் நெய்ரூபமாயும், கலியுகத்தில் ஜலரூபமாயும், இவ்வண்ணம் யுகங்கடோறும் செல்லுகின்ற மகிமையுடைத்தாயும், ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில் சகல பாவங்களையும் போக்கி முத்தியைக் கொடுப்பதாயும் உள்ள பாலாறு ஒன்று செல்லுகின்றது.

பாலாற்றின்வரலாறு.

பூர்வத்தில் பராசக்தியினுடைய பாலுண்டருளிய மகிமையினால் சர்வக்ஞராயும் பண்டிதோத்தமராயும் விளங்குந் சுப்பிரமணியர் ஓர்கால் பிரமனைநோக்கி ஞானவித்தையான பிரணவார்த்தத்தைக் கேட்டகாலத்தில் அவன் சொல்லமுடியாது சிறையிடைப்பட்டனன். பின்னர் அப்பிரமன் தானும் அந்தப் பராசக்தியினுடைய க்ஷீரபானத்தை விரும்பி நந்திமலையில் தேவிதீர்த்தக்கரையில் தவம்புரிய சிவபெருமானார் தோன்றினர். அவர்பால் ஸ்ரீவித்தையென்னும் மந்திரோபதேசம்பெற்று நூறுவருடம் அதியுக்ரமான தவத்தோடு தேவித்தியானஞ் செய்துவரும்பொழுது மஹாமாயா சொரூபிணியாயும் ஸ்ரீவித்தியா பரமேஸ்வரியாயும் லலிதா ராஜராஜேஸ்வரியாயும் மஹாதிரிபுரசுந்தரியாயும் ஸ்ரீசக்கர ராஜபுர சாம்பிராஜ்ஞையாயும், மஹாகைலாச வாசினியாயும்

விளங்கும் ஸ்ரீமஹாதேவி மகிழ்ந்தவளாய், தனதுஸ்தனமாகியகும்பத்தில் அவரவருக்கேற்ற ஞானங்கள் நிறைந்திருக்கும் அமிர்தநாயகமாயும் ஜரைமரணங்களைப் போக்கடிக்கிறதாயும் இருக்கிற பாலாகிய அமிர்தப்பிரவாகத்தைப் பிரமனுக்குப் பிரணவ ஞானோதயமுண்டாகும் பொருட்டு அவனது சரீரமுற்றும் நனையும்படிச் சிரசிற்பொழிய அவன் ஆனந்தபரவசனாய் அந்த ஞானப்பாலையுண்டு உள்ளும் புறம்பும் நிறையப்பெற்றுத் திருப்தியடைந்தனன். பின்னர் அவனுண்டு மிகுந்த அப் பால்வெள்ளமானது அவனது முகமாகிய தாமரையினின்றும் வழிந்து நந்திமலையில் விழுந்து அம்மலையினின்றும் நதிரூபமாய்ப் பூமியிற் பிரவேசித்துப் பெருக்கெடுத்துவந்து தக்ஷிணத்திலிருக்கின்ற பாகுநதியையும், உத்தரத்திலிருக்கின்ற குண்டலிநதியையும், இவைகளோடு சமாகமன விருத்தமென்கிற நதிகளையும் தனக்கு இருபக்கத்திலும் அங்கமாகக் கொண்டு அவைகளோடு சமமாகக்கலந்து காஞ்சிநகரத்திற் பிரவேசித்து ஒன்றாய் அவ்வழியேசென்று சமுத்திரசங்கமமாயிற்று. அந்தக்ஷீரபானத்தால் சகலகலாவல்லபமடைந்த பிரமன் அந்நதியை நோக்கி இதில் யாரொருவர் ஸ்நானஞ்செய்கின்றார்களோ அவர்கள் பூர்வஜ்ஞானமுடையவர்களாயும் சர்வவித்யாபாரங்கதராயும் மோக்ஷமடையக் கடவரென்று வரமளித்தனன்.

மஹிமை.

முன்னொருகாலத்தில் அந்தணனொருவன் தன்னுடைய குலகர்மங்களைக் கைவிட்டுப் பாவங்களையே செய்து மரணமடைந்து யமதண்டனைக்குள்ளாய் மீளவும் பூவுலகத்தில் குண்டலினி என்னும் நதியில் தவளையாகப் பிறந்திருந்தனன். க்ஷீரநதி அக்குண்டலினியோடு கலந்து வருகின்றபோது அவன் ஒருதண்ணீர்ப் பாம்பின்வாயிலகப்பட்டு இறக்குங்கால் பூர்வஜ்ஞானமுண்டாய் மோக்ஷமடைந்தனன்.

இப்படியே இக்க்ஷீரநதியில் வசிக்கின்ற உயிர்களுடைய பரிசத்தாலும் தீர்த்த பரிச முதலியவற்றாலும் முத்

தியடைந்தவர்கள் இவ்வளவினரென்று கணிக்கக்கூடுமோ? கூடாவென்க.

பராசத்தி மூன்றுவித சொரூப மானது.

முன்னொருகாலத்தில் பிரமன் தனதுவம்சத்திற்பிறந்த அசுரர்களுக்கு மீளவும் பிராணனையும் அவர்கள் வேண்டும் வரங்களையுந் தானே கொடுப்பதற்கு வேண்டிய சக்தியைப் பெறுதற் கெண்ணி ஸ்ரீபுரகரமாகிய காஞ்சிக்ஷேத்திரத்தில் பரமாகாசமூலத்தில் வீற்றிருக்குங் காமாக்ஷிசந்நிதானத்தை யடைந்து தேவியைத் தியானித்துத் தவஞ்செய்யத் தொடங்குங்கால் அத்தவத்துக்கு யாராலும் இடையூறு நேரா வண்ணம் விஷ்ணுமூர்த்தியினுடைய காதினின்றும் வெளிப்பட்ட மது கைடபரென்னும் அசுரர்களைக் காவலாக வைத்துத் தான் தவஞ்செய்துவந்தனன்.

அசுரகாதகியாகிய பராசத்தி பிரமனுக்குப் பின்பக்கத்தில் இடம் வலங்களிற் காவலிருக்கின்ற அவ்வசுரர்களைச் சங்கரிக்க வெண்ணி, அவ்வசுரர்களுடைய நடுவில் தனது ஆச்சரியமாகிய மாயையினால் விஷ்ணுவடிவங் கொண்டு வந்து சக்கிராயுதத்தினால் அவ்வசுரருடைய சிரங்களையறுத்துத் தள்ளிப் பிரமாசனத்துக்கு ஆக்னேய திக்கிற்சென்று அங்கு நின்றதிருக் கோலமாய்த் தன் சொரூபமாகிய பிலத்தின் முகமாக நின்றனள்.

மது கைடபர் சிரம் அறுபட்டு விழுகின்ற காலத்தில் பேரிரைச்சலிட அவ்வோசையைக் கேட்ட பிரமன் திடுக்கிட்டு அவ்வசுரரிடம் வேகமாய் வந்து அவர்கள் தலை அறுபட்டு உதிரவெள்ளஞ்செல்ல இரண்டு முண்டங்களும் துடிப்பதைக் கண்டு ஆ! ஆ! இது என்ன ஆச்சரியம் என்று அதிக கோபங்கொண்டு இவர்களைக் கொன்றவன் யாவன் அவனெங்கே? யென்று கண்களைச் சுழலவிட்டுத் திக்குகளைப் பார்க்கின்றபொழுது ஆக்னேயதிக்கில் சக்கரதாரியாய் வி

ஷ்ணு ரூபங்கொண்டு பயந்தோடுவதைப் போல் ஓடுகின்ற தேவியாகிய விஷ்ணுமூர்த்தியைக் கண்டு இவர்தான் அவர்களைக் கொன்றிருக்க வேண்டுமென் றெண்ணி நிச்சயித்து விரைவாக வோடி அவரைச் சமீபித்துக் கொல்ல வுத்தேசித்துக் கோபங்கொண்டு பிரமாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்யத் தொடங்கினன். அதைக்கண்ட தேவியாகிய விஷ்ணுமூர்த்தி பிரமனே! நானோ உன்னுடைய காவலாளிகளைக் கொல்லுவேன்? அவர்களைக் கொன்றவர் உருத்திரமூர்த்தியே. அவர் இப்பொழுதுதான் போயினர். அவரை நீ பார்க்கவில்லையா? அவர் உன்னுடைய பின்புறத்திற்றான் ஓடுகின்றார். திரும்பிப் பாரும்பாரும் என்று தமது இரண்டுகரங்களையும் நீட்டினர். உடனே பிரமன் திரும்பிப் பார்த்தனன். அவன் திரும்பிப் பார்ப்பதற்குமுன் விஷ்ணுமூர்த்தியாய்க் கூறிய தேவியே அப்பிரமன் கண்ணுக்குத்தோன்ற உருத்திரமூர்த்தியாய் வாயுதிக்கை நோக்கிச் சென்றனர். அதனையறியாத பிரமன் தன்னெதிரில் நின்ற விஷ்ணுமூர்த்தியைப்பார்த்து நீர் அவர்களைக் கொன்றவராக நானே அனுமானித்து வந்தேனேயன்றி நீங் கொன்றவரன்று என்றுசொல்லிவிட்டு வாயுதிக்கைத் திரும்பிப் பார்த்தனன். அந்தத் திக்கில் காலகால ரூபியாயும், அதிபயங்கரராயும், அகோர ரூபியாயும், சூலபாசபாணியாயும் இருக்கிற பைரவரூபியாய் ஓடுவதைக் கண்டு இவர்தான் கொன்றிருக்க வேண்டுமென்றெண்ணிக் கோபத்துடன் அவரைச் சமீபித்தனன். அங்கு உருத்திரமூர்த்தியாய்த் தோன்றிய தேவி அப்பிரமனைப் பார்த்து, பிரமனே! உனக்கு ஏதனால் கண் சிவந்திருக்கின்றது? உனக்கென்ன கோபமென்று கேட்கப் பிரமன் ஒன்றுஞ்சொல்லாது நின்றனன். அப்பொழுது உருத்திர மூர்த்தியாகிய தேவி கோபித்தவள்போல் பாசுபதாஸ்திரத்தைத் தாங்கித் திவ்ய தேஜசோடும் ஆகாயத்திற் பிரகாசித்து மறைந்துபோயினள். அதுகண்ட பிரமன் ஆச்சரிய மடைந்து உருத்திரமூர்த்திதான் கொன்றவரென்று சொன்ன விஷ்ணுமூர்த்தியைத்திரும்பிப் பார்த்தனன். அவரும் ஆகாயத்தில் மறைந்

றுபோயினர். அதுகண்ட பிரமன்றாம் அக்னிமூலையிற் கண்ட திருமாலையுங் காண்கிலோம், வாயுமூலையிற் கண்ட உருத்திர ரையுங் காண்கிலோம், இவ்விரண் டுருவத்தை யுங் காட்டியது எதுவோ வென்று ஒன்றுந் தோன்றாது கடுக்குற்று இனி நம்முடைய பிராணன் தப்பினும் போதுமென்று தன்னுலகம் போய்ச்சேர்ந்தனன்.

அதுமுதல் காஞ்சிநகரத்தில் வாயுமூலையிற் காட்டிய சிவரூபமானது ஆம்பர(மா) விருக்ஷரூபமாய் எக்காலத்தும் அழிவில்லாமற் றோன்றி ஏகாம்பரமெனவும், அதுபோலவே அந்த வாயுதிக்குக்கு நேராகிய அக்கினிதிக்கிற் காட்டிய விஷ்ணு ரூபமானது பிரமன் அஸ்வமேதஞ் செய்யத்தொடங்கிய காலத்தில் அந்த யாகாக்னியில் திவ்ய தேஜசோடு தோன்றி வரத ராஜமூர்த்தி எனவும், அந்த இரண்டுருவமாகக்காட்டியது யாதொருசக்தியோ அது அந்த இரண்டிடத்துக்கும் மத்தியிலுள்ள பிலாகாச ஸ்தானத்திற்றோன்றி காமாக்ஷி தேவி எனவும் பிரகாசித்துக் கொண்டு விளங்குகின்றன.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

இரண்டாவது அத்தியாயம்.

விஷ்ணு க்ஷேத்திர வரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் பராசத்தியானவள் பிரமதேவன்காணும்படி அக்கினிதிக்கில் வரதராஜ மூர்த்தியாய் நின்றனளாதலால் அது விஷ்ணுக்ஷேத்திர மெனவும். விஷ்ணுசாலை எனவும் பெயர்பெற்றது.

இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன:—

1 ஹரி க்ஷேத்திரம் 2 புண்ணிய கோடி க்ஷேத்திரம் 3 வைகுண்ட க்ஷேத்திரம் 4 ஹஸ்திசைல க்ஷேத்திரம் o 5 திரிஸ்ரோத க்ஷேத்திரம் என்ப.

இதன் எல்லை.

* சந்திரபுஷ்கரணிதீரத்தில் வீற்றிருக்கும் க்ஷேத்திராங்கினனுக்குதுர்க்கைக்கு (25) அம்சம் அக்கினிதிக்கிலுள்ள சத்தியநாதராலயமே,— கிழக்கெல்லை

சத்தியநாதராலயத்துக்கு (25) அம்சம் தெற்கிலுள்ள

---

o சிவபெருமானால் தேவலோகத்தினின்றும் பெருகிய கங்கை மூன்றுபிரிவாய் (திரிபதா) என்கிற பெயர்பெற்றுச் செல்வதுபோது ம் காஞ்சியில் தேவியினால் நந்திமலையினின்றும் பெருகிய க்ஷீரநதியானது பாலாறு குண்டலினிநதி என்கிற இரண்டுநதிகளோடு கலந்து மூன்றாய் வருதலால் (திரிஸ்ரோதா) என்கிற பெயர்பெற்றது. பாலாறு என்பது சேயாறு எனவும், குண்டலினிநதி என்பது வேகவதி எனவும் வழங்குகின்றன. * சந்திரபுஷ்கரணி என்பது வெள்ளைக்குள மென வழங்குகின்றது.

O பாஞ்சாலிகை ஆலயமே,— தெற்கெல்லை

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு (32) அம்சம் மேற்கிலுள்ள

நரசிம்ம ராலயமே,— மேற்கெல்லை

நரசிம்ம ராலயத்துக்கு (32) அம்சம் வடக்கிலுள்ள

* க்ஷேத்திராங்கி ஆலயமே,— வடக்கெல்லை.

இக்கான் கெல்லைக்குட்பட்டு பிரதேசமே விஷ்ணுகாஞ்சி எனப்படும். இவ்வெல்லைக்குள்,—

க்ஷேத்திராங்கிக்கு (32) அம்சம் ஆக்கினேயத்திலுள்ளவர்; † வலம்புரிவிநாயகர்.

வலம்புரிவிநாயக ராலயத்துக்கு ஓரம்சம் கிழக்கிலுள்ளவர். சுப்பிரமணியக்கடவுள்.

துர்க்காலயம் 4.

ஷை- சுப்பிரமணிய ராலயத்துக்கு (2) அம்சம் தெற்கிலுள்ளவள். பாஞ்சாலிகை. (1)

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு (15) அம்சம் வாயுதிக்கிலுள்ளவள் க்ஷேத்திராங்கி. (2)

க்ஷேத்திராங்கி ஆலயத்துக்கு (10) அம்சம் தெற்கிலுள்ளவள் கம்புதாரணி. (3)

கம்புதாரணி ஆலயத்துக்கு (48) அம்சம் அக்கினிதிக்கிலுள்ளவள் ‡ பாணும்பிகை. (4)

சிவாலயம் 3.

ஷை- பாணும்பிகைக்கு (4) அம்சம் தெற்கிலுள்ளவர் புண்ணிய கோடீசர். (1)

O இவ்வம்மை துரோபதி எனவும். * இவ்வம்மை குதிரை பலி கொண்ட கோயிலாத்தாள் எனவும். † வலம்புரிவிநாயகரும் சுப்பிரமணிக்கடவுளும் வரதராஜர் கோயிலிலுள்ளவர்கள். ‡ இவ்வம்மை கிராமரக்ஷணி எனவும், வேலாத்தாள் எனவும் வழங்கப் படுகின்றனர்.

புண்ணிய கோடீசருக்கு (15) அம்சம் வாயுதிக்கிலுள்ளவர் மணிகண்டீசர். (2)

மணிகண்டீசருக்கு (10) அம்சம் வடக்கிலுள்ளவர் சத்தியநாதீசர். (3)

வரலாறு.

(வலம்புரி விநாயகரை) பிரமன் தான்செய்யத் தொடங்கிய அஸ்வமேதத்துக்கு வரும் இடையூறுகளைப் போக்குதற்கும்,— (சுப்பிரமணியக்கடவுளை) சாதகாசாரியராகவிருத்தற்கும்,— (பாஞ்சாலிகையை) சுவாசினி (சுமங்கலி) பூஜைக்கும்,— அஸ்வ மேதத்துக்குக் கொண்டுவந்த குதிரையைக் களவிற் கொண்டுபோன அயாசுரனைப் பலிகொண்ட (க்ஷேத்திராங்கியை) பலி கொள்ளுவதற்கும்,— விஷ்ணுமூர்த்தியைப் பூசித்து அவரிடத்தில் சங்கினைப்பெற்ற (கம்புதாரணியையும்) (பாணும்பிகையையும்) யாகத்துக்குக்காவலாக விருத்தற்கும்,— (புண்ணிய கோடீசரை) யாகாரம்பத்தில் பூசிப்பதற்கும்,— (மணிகண்டீசரையும்) இந்திரன் தனக்குவந்த யோனியன் என்னும்பெயர்போய்ச் சஹஸ்ராக்ஷன் என்னும் பெயர்வரப் பூசித்த சத்தியநாதீசரையும் அவுத்காதா (உபதிஷ்டா) க்களாக விருந்து மந்திரங்களை யெடுத்து ஓசைபட உச்சரிப்பதற்கும்,— அவரவரை அந்தந்த ஸ்தானங்களில் அமைத்துக்கொண்டனன்.

விஷ்ணுவாலயம். 8.

சத்தியநாதீசருக்கு (12) அம்சம் தெற்கு திக்கிலுள்ளது. யதோத்காரிசந்நிதி (1)

யதோத்காரி சந்நிதிக்கு (5) அம்சம் அக்கினி திக்கிலுள்ளது. குகாநரசிம்மர்சந்நிதி (2)

குகாநரசிம்மர்சந்நிதிக்கு (5) அம்சம் நிருதி திக்கிலுள்ளது அஷ்டபுஜர்சந்நிதி (3)

அஷ்டபுஜர் சந்நிதிக்கு (5) அம்சம் வாயுதிக்கிலுள்ளது. வித்தியாகுண்டர்சந்நிதி. (4)

வித்தியாகுண்டர் சந்நிதிக்கு (5) அம்சம் தெற்குதிக்கிலுள்ளது — ○ நரசிம்மர்சந்நிதி (5)

நரசிம்மர்சந்நிதிக்கு (7) அம்சம் வடக்குதிக்கிலுள்ளது — தீபபிரகாசர்சந்நிதி (6)

தீப பிரகாசர் சந்நிதிக்கு (21) அம்சம் வடக்கு திக்கிலுள்ளது — வைகுண்டர்சந்நிதி (7)

வைகுண்டர் சந்நிதிக்கு (5) அம்சம் வடக்கிலுள்ளது — பவளவண்ணர்சந்நிதி (8)

வரலாறு.

(யதோத்காரிப்பெருமாள்) பிரமன் செய்யத் தொடங்கியயாகத்தை அழிக்கவெண்ணி (வேகவதி) என்று நதிருபமாய்வந்த சரஸ்வதியின் கர்வத்தையடக்கும்பொருட்டு நிர்வாணியாய்ச் சயனித்திருந்தவர்,— (குகாநரசிம்மப்பெருமாள்) இந்திரன் சாபத்தால் * கஜேந்திரனை காலத்தில் வரதராஜர் சந்நிதியில்வந்து தனது இதயமாகிய குகையில் பூஜிக்கப்பட்டவர்,—(அஷ்டபுஜப்பெருமாள்) மாயை என்னுங்காளியோடு போர்செய்து அவளைக் கிரீடகன்னி சிரசின்மேல் வீற்றிருப்பவர்,— (வித்யாகுண்டப்பெருமாள்) முன்சொன்ன சரஸ்வதியின் மானத்தைப் போக்கவந்த காலத்தில்அவளால் பூஜிக்கப்பட்டவர்,— (நரசிம்மப்பெருமாள்) பூர்வத்தில் கபாலினன்பவனைக் கொன்று அவனால் விடப்பட்ட அஸ்திரங்களை விழுங்கி ஜீர்ணமாக்கிக் கொண்டவர், (தீபப்பிரகாசப் பெருமாள்) பூர்வத்தில் மாயாநலன் என்பவனைத் தீபம்போல் தன் கரத்திற்றாங்கினவர்,— (வைகுண்டப்பெருமாள்) தொண்டைராஜனுக்கு வைகுண்ட தரிசனங்காட்டினவர்,— (பவளவண்ணப் பெருமாள்) பூர்வத்தில் அசுரர்களுடைய ரக்தத்தை பானஞ்செய்தவர்.

† முத்திரை 5.

முன்சொன்ன பவளவண்ணர் சந்நிதிக்கு (46) அம்சம்

○ இது நரசிங்கப் பெருமாள் என வழங்கும் * யானையான காலத்தில். † அடையாளம்.

க்கினிதிக்கில் — வரதராஜப்பெருமாளிடம். (1)

வரதராஜப் பெருமாளுக்குப் பின்பக்கத்தில் (1) அம்சம் கிழக்குதிக்கில் — இரண்டுபல்லிகளிடம் (2)

பல்லிகளுக்கு (2) அம்சம் தெற்குதிக்கில் — இருபத்துநான்குபடிகள் (3)

டிபடிகளுக்கு (1) அம்சம் மேற்குதிக்கில் இலக்ஷ்மிதேவி வீற்றிருக்கும் — அர்த்தாசனம். (4)

அந்த அர்த்தாசனத்துக்குச் சமீபம் (1) அம்சம் ஈசானதிக்கில் — புண்ணியகோடிவிமானம். (5)

வரலாறு.

(வரதராஜப் பெருமாளுக்குப்) பூதேவியார் அளவிறந்த புஷ்பங்கள்கொடுத்து அவரைவிவாகஞ்செய்து கொண்டனர்,— *(இரண்டு பல்லிகள்) பூர்வஜன்மத்தில் பிராமணராகவிருந்து சாபத்தால் பல்லிகளாயின,— (24 படிகள்) வரதராஜர் சந்நிதிக்குப் போக முன் தேவசில்பியினால் நிர்மிக்கப்பட்டவை,— (அர்த்தாசனம்) லக்ஷ்மிதேவியானவள் தன்னைவரதராஜமூர்த்தி விவாகஞ் செய்துகொள்ள வீற்றிருந்தவிடம்,—(புண்ணியகோடிவிமானம்) வரதராஜமூர்த்தி எழுந்தருளியிருப்பதற்கு இந்திரனு லனுப்பப்பட்டது.

தீர்த்தம் 4.

புண்ணிய கோடி விமானத்துக் கு (2) அம்சம் ஈசானதிக்கில் — அனந்தசரசு — (1)

அனந்தசரசுக்கு (2) அம்சம் வாயுதிக்கில் — பக்தோதயசரசு (2)

பக்தோதயசரசுக்கு (3) அம்சம் வடக்குதிக்கில் — இந்திரதீர்த்தம் (3)

இந்திர தீர்த்தத்துக்கு (25) அம்சம் அக்கினிதிக்கில் — பாஞ்சாலிகைதீர்த்தம் (4)

வரலாறு.

(அனந்தசரஸில்) முன் ஆதிசேஷன் ஸ்நானஞ் செய்து பூமியைத் தாங்கும் வல்லபத்தைப் பெற்றனன்,— (பஞ்சசரசு) விஷ்ணுபக்தர்கள் ஸ்நானஞ்செய்தால் அவர்களுடைய சர்வபாவங்களையும் போக்குவது,— (இந்திர தீர்த்தத்தில்) இந்திரன் ஸ்நானஞ்செய்து ஆயிரங்கண் பெற்றனன்,— (பாஞ்சாலிகை தீர்த்தம்) காளிகாதேவியின் பொருட்டு விஷ்ணுமூர்த்தியினது சுதர்சனமென்னும் சக்கரத்தினால் உண்டாக்கப்பட்டது.

ஆக விஷ்ணுக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் விநாயகராலயம் (1) ஸ்கந்தராலயம் (1) அர்க்காலயம் (4) சிவாலயம் (3) விஷ்ணுவாலயம் (8) முத்திரை (5) தீர்த்தம் (4).

இந்த விஷ்ணுசாலையில் இவையெல்லாம் தேவியினுடைய ஆஞ்ஞையினால் எப்பொழுதுங் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்கு வைகுண்டவாசபல னுண்டாமாதலால் இது பூலோகவைகுண்டமெனப் பெயர்பெற்றது.

தீர்த்தபலன்.

அநந்த தீர்த்தத்தில் திருமாலுக்குப்பிரியமான சனிவாரத்தில் ஸ்நானஞ்செய்வோர்க்குக் காவேரியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாகுமென்று ஆதிசேஷனும், பஞ்சசரஸ தீர்த்தத்தில் ஏகாதசி திதியில் ஸ்நானஞ் செய்வோர்க்குத் திருப்பாற்கடலில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று வைகுந்தநாதமூர்த்தியும், இந்திரதீர்த்தத்தில் புதவாரத்தில் ஸ்நானஞ்செய்வோர்க்கு யமுனாநதி ஸ்நானபலமும் இந்திரபதமும் உண்டாமென்று இந்திரனும், பாஞ்சாலிகா தீர்த்தத்தில் திருவோணம் கேட்டை நக்ஷத்திரங்களில் ஸ்நானஞ்செய்தால் விரஜாநதியில் ஸ்நானஞ்செய்த பலனும் சகல ஐஸ்வர்யமு முண்டாமென்று காளிகா தேவியும் வரங்கொடுத்தனர். இந்த விஷ்ணு க்ஷேத்திரமாகிய பூ வைகுண்டத்தில் வசிப்பவர் விஷ்ணு பதத்தை யடைவர். இதிற் சந்தேகமில்லை.

கர்க்கிரி வரலாறு.

சிந்துதீரத்தில் பாணகுண்டமென்கிற கிராமத்தில் வசிஷ்டகோத்ரஜரும் ருக்வேதியருமான கர்க்கிரி என்னும் ஒரந்தணரிருந்தனர். அவர் நித்யகர்மமான சந்தியா வந்தனாதிகளையும், பிதுர்க் கர்மாதிகளையுங் கைவிட்டுப் பிறர்பொருளைக்கவர்வதிலும் பரதாரகமனத்திலும் எப்பொழுதும் பிறர் போசனத்தையே விரும்புவதிலும் ஏனைய பாபச்செய்கைகளைச் செய்வதிலும் மனமுக்க முடையவராயும் சாமர்த்திய முடையவராயு மிருந்தனர் அவர் சித்திரை மாதத்தில் மார்க்கத்திலுள்ள நெல்லிமரங்களி லேறி அக்கனிகளைப் பறித்துக்கொண்டிருக்கும் பொழுது காஞ்சி நகரத்தில் ஹரிக்ஷேத்திர வாசியாராகிய ஓரந்தணர் அம்மார்க்கமாக மிகுந்த தாகத்தோடு செல்லும்பொழுது அவருடைய தாகத்தைப் பார்த்து ஓபிராமணரே! நீர் தாகத்தோடு போவதாய்த் தெரிகின்றது, ஆகையால் நான் நெல்லிக்கனி தருகின்றேன் அதைத் தின்பீரானால் தாகந்தீருமென்று ஒரு பிடியளவு நெல்லிக்கனியைத்தந்து இதோ தடாகமிருக்கின்றது என்று தடாகத்தையுங் காட்டிக்காட்டித் தான் தன்னூருக்குச் சென்றனர். நெல்லிக்கனிபெற்ற அப்பிராமணர் அக்கனியை யுண்டு தடாகத்தில் தண்ணீரையும் பருகித் தாகந்தணியப் பெற்று யாத்திரையாகச் சென்றனர்.

சிலகாலங்கழித்து நெல்லிக்கனிதந்த அந்தப்பிராமணர் மரணமடைய, அவரைக் காலதூதர்கள் சமீபித்துக் கொண்டு போவதற்கு நடுங்கினவர்களாய் இவன் மஹாபாவி என்று பேரொலியிட்டு என்செய்வோமென் றேங்கினவர்களாய்க் காலபாசத்தாற் கட்டித் தண்டத்தால் அடித்தடித்து யமலோகத்துக்குக் கொண்டுபோய்விட்டனர். அப்பொழுது விஷ்ணுதூதர்கள் வந்து யமதூதர்களைத் தண்டித்து இவன் புண்ணியசாலி இவனை நீங்களடிக்கவும் பாசத்தாற் கட்டவும் போமாயிற்றே இது நன்றாயிருந்தது என்று அவரைக் கட்டிய

பாசத்தை யவிழ்த்து புஷ்பவிமானத்திலேற்றி உபசாரமரியாதைகளோடும் பரமபதங் கொண்டுபோய் நாராயணரிடத்தில் விட்டனர்.

இச்செய்தியை இயமனறிந்து வைகுண்டத்துக்குப் போய் நாராயண மூர்த்தியைக்கண்டு இந்தப்பிராமணன் என்ன புண்ணியஞ் செய்தனன். இவன் செய்ததெல்லாம் பாவமே ஆகையால் எனதுலோகத்தில் என்வசமாயிருக்கத்தக்கவன் என்றுகூற, நாராயணர் இயமனைப்பார்த்துக் காஞ்சிக்ஷேத்திரத்தில் ஆக்னேயதிக்கிலுள்ள பூலோகவைகுண்டத்தில் இந்தப்பிராமணன் ஒரு புண்ணியஞ் செய்திருக்கின்றனன். அதுவொன்றனைத்தமாய் அவன்செய்த பாவங்களையெல்லாம் போக்கி இந்த வைகுண்டத்துக்குவரும் புண்ணியசீலர்களுள் ஒருவனாக்கியது. அவன்செய்த புண்ணியம் என்னவெனின், முன்சொல்லிய எனது க்ஷேத்திரத்திலிருந்து யாத்திரையால் ஒருபிராமணன் தாகத்தோடு செல்லும் பொழுது அவன் தாகந் தணிவதற்குத் தான் வைத்திருந்த நெல்லிக்கனியிற் சிலகொடுத்து ஓர் தடாகத்தையுங் காட்டினான். பின் அந்தப்பிராமணன் உண்டகனியும் பானஞ்செய்த நீரும் எனக்கே அர்ப்பணமாயிற்று. ஏனென்றால் அந்தவிடத்தில் இருப்பவரெல்லாம் யானேயன்றி வேறில்லை. இனி நீ வந்தவழிப்பார்த்துக்கொண்டு போகலாம் என்று கூற, இயமன் பயந்து நாராயணரையும் அந்தப்பிராமணரையும் பலமுறையும் வணங்கி என்னால் நேரிட்ட அபராதத்தைப் பொறுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு தன்னுடைய உலகம்போய்ச் சேர்ந்தனன்.

இரண்டாவது அத்தியாயம் விஷ்ணுக்ஷேத்திர வரலாறு.

முற்றிற்று.

௨

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

மூன்றாவது அத்தியாயம்.

—*—

அத்திகிரிவரலாறு.

புண்ணியகோடிகள் வசிப்பதனால் புண்ணியகோடியெனப் பெயர்பெற்ற அத்திகிரியானது பாஞ்சாலிகை என்னுந் தீர்த்தத்திற்கு (2) அம்சதூரம் வாயுதிக்கிலிருப்பது. அவ்விஷ்ணுக்ஷேத்திரத்திற்கு அலங்காரமாகவுள்ள இந்தக்கிரி முன்னொருகாலத்தில் இந்திரன் சாபத்தாலடைந்த யானையுருவமாதலால் அத்திகிரி எனப் பெயர்பெற்றது.

சரஸ்வதிதேவி இவ்வுலகத்துக்கு வேண்டிய (சுஅ) வித்தைகளுக்கும் நாம் மூலகாரணியாயிருப்பதனால் நாமே சிறந்தவள் நமக்குச் சமானமானவர் இவ்வொருவருமில்லை என்று ஒருவரையுமதியாது இறுமாந்து உலாவிவந்தனள். இந்தச்சரஸ்வதிதேவியைப்போலவே, இலக்ஷ்மிதேவியும் உலகத்துக்கு வேண்டிய சகல பாக்கியங்களுக்கும் நாம் மூலகாரணியாயிருப்பதனால் நாமே சிறந்தவள் நமக்குச் சமானமானவர் எவ்வுலகிலுமில்லை என்று ஒருவரையுமதிக்காது இறுமாந்து உலாவிவந்தனள். இவ்விருவரும் ஓர்கால் சந்தித்து அவருள் இலக்ஷ்மிதேவி, சரஸ்வதிதேவியைப் பார்த்து நீ இறுமாந்து வருகின்றனையே உனக்கு என்ன பெருமையிருக்கின்றது நீ என்முன் இப்படியும் வரலாமோ வென்று கூறினள். அது போலவே சரஸ்வதி தேவியும் இலக்ஷ்மிதேவியைப் பார்த்துக் கூறினள். பின் இருவருக்கும் பெருங்கலகம் விளைந்து சுவர்க்கலோகமடைந்து இந்திரனைப்பார்த்து, இந்திரனே! எங்களிருவருள் யார் சிறந்தவள்? நீ நியாய விரோதமின்றி நடுவுநிலைமையாய் நின்று கூறுவாயென்றனர். இந்திரன் சரஸ்வதி தேவியைப் பார்த்து

சகல கலாவல்லி? இலக்ஷ்மிதேவி மூன்றுலகத்திருக்கும் மூன்றுலகத்தாருக்கும் சகல சம்பத்தையுங் கொடுக்குந் தெய்வமாயிருக்கின்றாள். அன்றியும் விஷ்ணுமூர்த்திக்குப் பத்தினி, உனக்குத் தாயி, உலகத்தாருக்குந் தாய், ஆகையால் இச்செந்தாமரையாளே சிறந்தவள் என்றனன். அதைக் கேட்ட வெண்டாமரையாள் மிகவுங் கோபங்கொண்டு நீ நியாய விரோதமாய்க் கூறினமையால் நானிடுஞ் சாபத்துக் குள்ளாவாய், உனது சம்பத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கல்லவா இப்பொழுது இலக்ஷ்மியைச் சிறப்பாகக்கூறினை. நியாயமறியாதவனிடம் யான் வந்தது என்னறியாமையே யெனக்கூறித் தன்மனத்தில் இவ்விந்திரன் மிக அகங்காரியாயும் துஷ்ட சித்தமுடையவனும் மூடனுமாயிருக்கின்றான். இவனை இப்படியாக்கியது இவன் படைத்திருக்கும் தனகர்வமல்லவா வென்றெண்ணி இவனை எவ்விதத்திலாவது சாபத்துக் குள்ளாக்க வேண்டியதென் றாலோசித்து இந்திரனை நோக்கி ஓ இந்திரா? நீ பெற்றிருக்கும் ஐசுவரிய மதத்தினால் என்னைச் சிறந்தவளென்று கூறுவதற்கு உனக்கு நாவெழாமற் போயிற்றல்லவா! ஆனபடியால் நீ மதமுடைய யானையாகக் கடவாயென்று சபித்துப் போயினள்.

அதுகேட்டிருந்த இலக்ஷ்மிதேவி இந்திரனைப்பார்த்து ஓ இந்திரா! உனக்கு இச்சாபந்தீரும் உபாயமொன்றைக்கூறுகின்றேன். என்னையெனின், வரதராஜர் வீற்றிருக்கும் ஹஸ்திக்ஷேத்திரத்தை யடையப் பெறுவையானால் இந்த யானைவடிவம் நீங்கும். நீ அந்த ஹஸ்திக்ஷேத்திரத்தை யடைவதற்கோருபாயங் கூறுகின்றேன். பூலோகத்தில் சிம்ஹாசலமென்று ஒரு பர்வதமிருக்கின்றது. அப்பர்வதத்திற்குச் சமீபத்தில் தண்டகாரண்ய மென்றொரு ஆரண்யமுள்ளது, அவ்வாரண்யத்தில் விஷ்ணுபக்தனை பிரகலாதனென்பவனொருவனிருக்கின்றான். அவனிடத்தில் நீ சென்று (௧௨) எழுத்தோடுகூடிய நரசிம்ஹமந்திரத்தை உபதேசமுறையாகக்

கேட்டு ஏகாக்ரசித்தனாய்த் தியானஞ் செய்வையாயின் பூர்வஜ்ஞானமும் வரதராஜக்ஷேத்திரத்தை யடையும் புண்ணியமும் வன்மையும் பெற்று அந்த ஹஸ்திக்ஷேத்திரத்தை யடைந்து நரசிம்ஹ மூர்த்தியினால் கஜவடிவம் நீங்கப்பெறுவாயென்று அனுக்ரஹஞ் செய்து சென்றனள். அவ்வாறே யானைவடிவ மடைந்த இந்திரன் காஞ்சியில் ஹஸ்திக்ஷேத்திரத்தையடைந்து நரசிம்மமூர்த்தியைத் தனது இருதயத்தில் தியானஞ்செய்ய அவர் அவனது இருதயத்தினின்றும் வெளிப்பட்டு அந்தக் கஜரூபத்தைத் தனது கைகளால் இரண்டாகப்பிளந்தனர். உடனே இந்திரன் சாபத்தினின்று நீங்கித் தன் ஸ்ரீரூபத்தைப் பெற்றுச் சென்றனன். நரசிம்ஹமூர்த்தி இந்திரனுடைய அந்தக் கஜரூபத்தைப் பர்வதமாக அனுக்கிரகஞ் செய்து கிழித்த இருதயமாகிய விடத்தைக் குகையாகக்கொண்டு அதில் யோகிகளைப்போல் யோகாசனருடராய் வீற்றிருந்ததனால் குஹாநரசிம்ஹரெனப் பெயர் பெற்று விளங்குகின்றனர். வரதராஜ மூர்த்தியும் அந்த யானைவடிவாகிய மலையின்மேல் வீற்றிருந்ததனால் அத்திகிரிநாதரென்று பெயர்பெற்றனர். அம்மலையும் அத்திகிரி எனப் பெயர்பெற்றது.

இந்திரன் குஹாநரசிங்கமூர்த்தியினால் சாபவிமோசனமுண்டாய்ச் செல்லும்பொழுது அத்திகிரியினின்றும் இரண்டு சிறுபிள்ளைகள் வரக் கண்டனன், அவ்விருவரும் அதிசுந்தரமுடையவர்களாயும் வேதசாரமே பிழம்பாய்த் திரண்டிருப்பதுபோல் பொலிவு பெற்றிருக்குந் திருமுகமண்டலமுடையவர்களாயும் இருப்பதைப் பார்த்து அதிசயித்து அவர்களை நோக்கி ஓ சிறுவர்களே? நீங்கள் யாவர்? உங்களாசிரமமெது? இவ்வழியாய் வருங் காரணமென்னை? இம்மலையில் எப்பொழுது ஏறினீர்கள்? இவை எனக்குத் தெரிவியுங்களென்றனன். ஐயா! நாங்கள் கிருங்கிபோருடைய பிள்ளைகள். எங்கள் குலம் பிராமணகுலம். எங்களுக்குப் பெயர்

ஹேமன். சுக்லன். எங்கள் சூத்திரம் வைகானச சூத்திரம். எங்கள் ஆச்சிரமம் பிரமசரி யாச்சிரமம். எங்கள் ஆசாரியர் கௌதமமுனிவர். யாங்கள் வியாகரண சூத்திரங்களிலும் மீமாம்ஸா சாஸ்திரங்களிலும் வல்லவர்கள். இதுவரையில் எங்கள் மரபு முதலியவற்றைக் கூறினோம்.

இனி வந்ததற்குக் காரணங் கூறுகின்றோம். கொங்கண தேசத்தில் எங்களாசிரியருடைய ஆச்சிரமம். அவர் விஷ்ணுமூர்த்தியின் பூஜைநிமித்தம் எங்களைப் பார்த்துத் தீர்த்தமும் சமித்துங் கொண்டுவரும்படிக் கட்டளையிட்டனர். யாங்கள் அவர் கட்டளைப்படி ஓர் சுத்தமான பாத்திரத்தில் தீர்த்தத்தை நிரப்பிப் பரிசுத்தமான விடத்தில் மூடாமல் வைத்துவிட்டுச் சமித்துக்களுக்காக ஓர் மரத்தின்மேலேறிச் சமித்துக்களை யொடித்துக்கொண்டு கீழிறங்கி தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு ஆச்சிரமத்தை யடைந்து ஆசிரியர் முன் தீர்த்தத்தை வைத்தோம். அப்பொழுது அத்தீர்த்தத்தினின்றும் ஒரு சிறியபல்லி துள்ளி வெளியே விழுந்தது. நாங்கள் தீர்த்தத்தை மூடாமற் கொண்டு வந்து வைத்ததையும் அதினின்றும் பல்லி வெளியே குதித்ததையும் ஆசிரியர் கண்டு அறிவிலிகளே என்ன காரியஞ் செய்தீர்கள். நீங்கள் தீர்த்தத்தை மூடாமல் வைத்தபடியினாலல்லவா அதிற்பல்லி விழுந்தது. இனி இத்தீர்த்தம் பூஜைக்காகா. நீங்களும் பூஜைக்கு விக்கினஞ் செய்தவர்களானீர்கள் என்று கோபித்துப் பல்லிகளாகப் போகக்கடவீர்கள் என்று சபித்தனர்.

இந்திரனே! நாங்கள் அச்சாபத்தைப் பெற்றவர்களாய வரதராஜர் வீற்றிருக்கின்ற இந்த மலையருகிலுள்ள விருக்ஷத்தில் பல்லிகளாய் வாழ்ந்திருந்தோம். உன்னுடைய கஜரூபத்தை நரசிம்மமூர்த்தி பிளக்கின்றகாலத்தில் உனதுதிக்கையினால் நாங்கள் வாழ்ந்திருந்த மரத்தை முறித்தனை யப்பொழுது இந்த அத்திகிரியினுடைய பின்பக்கத்திற்றுள்ளிப் பாய்ந்தோம்.

உடனே சாபம் நீங்கப் பெற்றோம். இனிப் போய்வருகின்றோமென்று சொல்ல, இந்திரன் மகிழ்ந்து அச்சிறுவர்களைக் கையினாற் றடவி விடைகொடுப்ப அவர்கள் தங்களிடம் போய்ச் சேர்ந்தனர். பின் சாபம் நீங்கிய மகிமை விளங்கப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரண்டு பல்லியுருவங்களமைத்து மேலே பிரதிஷ்டை செய்து இவ்விடத்தில் இவ்விரண்டு பல்லிகளையுங் கையினாற் பரிசித்து இவ்விடத்திற்றானே நின்று யாரொருவர் இந்த அத்திகிரியைத் தெரிசனஞ் செய்கின்றார்களோ அவர்கள் ஏகாதசியில் அகோராத்திரம் ஹரிநாமசங்கீர்த்தனஞ் செய்ததையும் விரதபலனை யடையக்கடவர் என்று வரமளித்துச் சென்றனன். ஆதலால் ஹேம சுக்கிரர்களுடைய சாபம் நீங்குமாறு செய்த அத்திகிரியைத் தெரிசிக்கப் பெற்றவர்களும் பரமபதத்தை யடைவார்கள்.

மகிமை.

பூர்வத்தில் சரயுநதிக்கரையில் வசிக்கும் பரத்துவாச குலத்திற் பிறந்த சகலவேதியனான சுனு என்னும் பிரமணனொருவன் சகல சாஸ்திரசம்பன்னனாயும் தனுர்வித்தையிற் சிறந்தவனாயும் பிராம்மண வேடத்திற் சிறிதுங் குறைவில்லாதவனாயுமிருந்தனன். அவன் பூர்வ கன்மத்தால் பாவகன்மத்திலாசையுடையவனாய் எப்பொழுதும் யாத்திரைசெய்வதிலேயே மிக விருப்புடையவன்போல் யாவருக்கும் புலப்படுத்தி யாத்திரார்த்தமாய்ச் செல்பவரோடு தானுஞ்சென்று மலைவனம் துர்க்கம் முதலிய மறைவானவிடங்களிற் போகுங்கால் தான் கற்றிருக்கும் வில்வித்தையினுடைய சாமர்த்தியத்தினால் ஒருவரையும் விடாதுகொன்று அவர்கள்பொருள்களைக் கொள்ளைகொண்டு தன்னிடஞ்சென்று மனைவிமக்களுடன் வாழ்ந்திருந்தனன். ஓர்நாள் இவன் முன்போல் யாத்திராவாசிகளைக் கொலைசெய்கின்ற பொழுது அவர்களில் நைமிசாரண்யவாசியான ஒரு வீரனிருந்தனன். அவ்வீரன்

இவ்வேதியன் செய்கையைக்கண்டு மனம்புழுங்கி அவனைப் பிடித்திறுகக்கட்டி நீ என்செய்கின்றாய்? இந்தக்கொலைத் தொழிற்கா இந்தப் பிராமணவேடமென்று அவனை யிகழ்ந்து கூறி நீ கொலைத்தொழில் பூண்டவனாயினும் பிராமணகுலத்திற் பிறந்தவனாதலால் உன்னைக் கொலைசெய்தல் பழுதென்றுகூறி ஓர்கத்தியை எடுத்து அவனது யக்ஞோபவீதத்தையும் சிகையையும் அறுத்துப் பின்னர் அவனைக் கட்டிய கட்டவிழ்த்து இவ்வழியே யோடிப்போவாய் இனி இவ்வழி ஒருபொழுதுந் திரும்பாதே என்றச்சுறுத்தி ஓட்டிவிட்டனன். அந்தப்பிராமணன் அவனிறுக்கிய இறுக்கினால் சரீரம் புண்பட்டு ஓடிப்போவதற்கு முடியாமல் களைப்பையடைந்து தக்கோலம் என்கிற ஊரையடையும்பொழுது பூர்வபுண்ணிய வசத்தால் இந்த அத்திகிரியைக்கண்டு மரண மடைந்தனன். அந்த அத்திகிரியினுடைய தரிசனவிசேடத்தால் விஷ்ணு தூதர்கள் வந்து அவனைத் திவ்ய விமானத்தில் ஏற்றிக்கொண்டு விஷ்ணுலோகம் போய்ச் சேர்ந்தனர்.

மூன்றாவது அத்தியாயம் அத்திகிரி வரலாறு.

முற்றிற்று.

ஸ்ரீகாமாக்ஷிதேவ்யை நம:

நான்காவது அத்தியாயம்

—*—

வரதராஜ மூர்த்தி வரலாறு.

சங்குசக்ர கதா தாரியாய் ஸ்யாமளவர்ணராய் சர்வாபரண பூஷிதராய் நீலமணிபோற் சுந்தரராய் செந்தாமரைக் கண்ணராய் ஸ்ரீவத்ஸராய் ஸ்ரீதரராய் ஸ்ரீமானாய்ப் பத்மா

க்ஷராய் பத்மநாபராய் இரத்னகர்ப்பராய் கிரீடகுண்டலதாரியாய்ச் சவ்யவாம பாகங்களில் ரமா பூமியாகிய மங்கையரிருவர் சாமரைக ளசைக்கப் புண்ணியகோடி விமானத்தில் வீற்றிருந்து பிரமனுக்கும் தனது பக்த ஜனங்களுக்கும் சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும் வரதராஜமூர்த்தி பிரமனுக்குச் சிருட்டி தண்டங்கொடுத்த வரலாற்றைக் கூறுகின்றேன்.

நான்றான் சிறந்தவளாமென்று வாதாடி முன்சென்ற சரஸ்வதி இலட்சுமியாகிய அவ்விருதேவியரும் அவ்வளவிலொழியாது மீளவுங் குரோதத்தையே மேற்கொண்டு பிரமனிடஞ்சென்று எங்களிற் சிறந்தவள் யாவள் என்று கேட்டனர். பிரமனும் இந்திரனைப்போலவே இலக்ஷ்மியே சிறந்தவளென்றுகூறினன். அதுகேட்ட சரஸ்வதி கோபமடைந்து இந்திரனைச் சபித்தோம் இவர் கணவராயிருப்பதால் சபிக்கலாகாதென்றெண்ணிப் பிரமதேவன் கையிலிருக்கும் விஷ்ணுமூர்த்தியினால் கொடுக்கப்பட்ட சின்னமாகிய சிருட்டி தண்டத்தைப் பிடுங்கித் தன் சரீரத்தி லொடுக்கிக்கொண்டு அவ்விடத்தில் இல்லாமற் சென்றனள்.

பிரமனுக்குப் பின் சிருட்டிசெய்யும் வன்மையற்றுப் போகவே சர்வ சராசரங்களுந் தோன்றுதலில்லாயின. அதுகண்ட பிரமன் சிந்தாகுல மடைந்து நம்முடைய பத்தினி என்னசெய்தாள்! நாம் வைத்திருந்த தண்டம் அவளுடைய அம்சமாயிருந்தபடியினாலல்லவா அதனைப் பிடுங்கிக்கொண்டாள். ஆயினும் அத்தண்டத்தைக் கொடுத்தவள் இவளல்லவே. விஷ்ணுமூர்த்தியல்லவா நமக்குக் கொடுத்தவர், அதனையவர்பாற் பெறுவோம் என்றெண்ணி இனி இந்தச் சரஸ்வதியால் நமக்காவதென்னை? அவளுடைய முகத்தையும் பார்க்கலாகாதென்று குரோதங்கொண்டு இமயமலையையடைந்து விஷ்ணுமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து வந்தனன்.

விஷ்ணுமூர்த்தி இவனது தவத்துக் கிரங்கிப் பிரசன்னராய்ப் பிரமனே! யாது வேண்டித் தவஞ்செய்கின்றனை?

என்று வினவ, பிரமன் என்றந்தையே! சிருட்டி நிமித்தம் உம்மால் கொடுக்கப்பட்ட தண்டத்தை வாணி தன்வன்மையால் அபகரித்துக் கொண்டனள். அதுமுதல் சிருட்டித் தொழில் நின்றுவிட்டது. இனி அத்தண்டமின்றி எவ்வாறு சிருட்டிசெய்வே னென்றனன். திருமால் நீ நூறு அஸ்வமேதம் இளாவிருதகண்டத்திற் செய்வையாயின் அத்தண்டங்கிடைக்கும். அங்கு நூறு செய்ய முடியாதாயின், நூறு அஸ்வமேதப்பலனை ஒரு அஸ்வமேதஞ் செய்வதினாலேயே யடையக் கூடுமான ஒருக்ஷேத்திர மிருக்கின்றது, அது காஞ்சியாம். அவ்விடத்திற் சென்று உத்தமோத்தமமாகிய அத்திகிரியின் முன்பிரதேசத்திலிருந்து ஒரு அஸ்வமேதஞ்செய்தால் இளாவிருத கண்டத்தில் நூறு அஸ்வமேதஞ்செய்த பலனுண்டாகும் இதிற் சந்தேகமில்லை. ஆகையால் அஸ்வமேதம் நூறாவது ஒன்றாவது முன்குறித்த விடங்களிற் செய்வாயாகில் அந்த ஓமகுண்டத்தில் நான்வெளிப்பட்டுவந்து சிருட்டிதண்டந் தருகின்றேன் இதிலையமில்லை. இனி நீ இளாவிருத கண்டத்திலாவது, காஞ்சியில் விஷ்ணு க்ஷேத்திரத்திலாவது செய்வாயாக. என்னுடைய இஷ்டம் என்று அநுக்கிரகஞ் செய்து மறைந்துபோயினர்.

பிரமன் மகிழ்ந்து ஒரு அஸ்வமேதமேசெய்ய வுத்தேசித்து அதிகளிப்பராய் அத்திகிரியையடைந்து அத்திகிரிக்கு மேற்பக்கத்தில் நரசிம்ஹருடைய சந்நிதியில் வேதவியாசரைக்கொண்டு விதிப்படி யாககுண்டமமைத்து ஒரு வருடஞ் செய்யத்தக்க இந்தயாகம் நிர்விக்கினமாய் நிறைவேற வேண்டுமென்று விக்னேஸ்வரப் பிரார்த்தனைசெய்து விதிமுறைப்படி அந்தயாகத்துக் குரிய லக்ஷண மமைந்துள்ள அஸ்வத்தைக்கொண்டு வந்து அபிஷேக அலங்காரங்கள் செய்து நிலமாயும் சுவர்ணமயமாயு முள்ள வஸ்திரங்களால் அலங்கரித்து அதன்மத்தகத்தில் பொன்பட்டங்கட்டி நேத்திரபடந்தரித்து யதேச்சையாகப் போகும்படிச் செய்து யக்ஷ கந்தர்வ ராக்ஷசர்களால் யாதொரு தீங்கும் வராவண்

ணங்காத்து அதனைமீட்டுக்கொண்டுவரச்செய்து யாகசாலையிலுள்ள யூபஸ்தம்பத்திற் கட்டி அதன்காதில் "தத்சக்ஷுர்" என்னும் மந்திரத்தினால் நேத்திர படத்தை யவிழ்த்து தன்னுடையபீடத்தில் தர்மபத்தினியை ஆவாகித்துக்கொண்டு பின்னர் சுப்பிரமணியக்கடவுளைச் சாதகராயவும், மணிகண்டீசரை உத்காதாவாகவும், வருணனைச் சோமமாகவும், எமதர்மராஜனைச் சஸ்தரமாகவும், சாதான்ஹிதரைப் பௌரோகிதராகவும், இருடிகள் முதலான தேவகந்தர்வ யக்ஷ கின்னர அப்சர சித்த சாத்யர்களை ஏனைய தொழில் செய்வோர்க்களாகவும், கஜேந்திரவரதர் க்ஷேத்திர பாலகர் யோகசிம்ஹர் முதலியோரை யாக ரக்ஷார்த்த மாகவும் அந்தந்த ஸ்தானங்களில் அவரவரை யேற் படுத்திக் கொண்டு யாகஞ்செய்ய எத்தனித்து "ஷட்பர்யவாம்சகை:" என்பதாதிமந்திரங்களால் சுவாஸ்தானங்களாகிய ஷடங்கங்களில் அவ்வவ் வங்க தேவதைகளைப் பூசித்து அந்த வபைகளையெடுத்து யாகாங்க தேவதைகளை யுத்தேசித்து ஓமஞ் செய்யத் தொடங்கினன்.

இச்செய்தியைச் சரஸ்வதிதேவியறிந்து பத்நியுக்தமாகச் செய்யவேண்டிய யாகத்தைப் பத்னியில்லாமலே செய்யத்துணிந்தது மிகநன்று, இவ்விதியை எங்குக்கண்டனர்! இதுதானோ இவர்விதியென்று பெயர்படைத்ததற்கு லக்ஷணம்! இதுயாருடைய கற்பனையோ! என்று பலவாறுகவெண்ணி அடங்காத குரோதங்கொண்டு ஆ! ஆ! இவரை விட்டேனா! யாகத்தை முடிக்கச்செய்வேனா!! அப்படிமுடிக்கச் செய்ய விடுவேனாயின் நானுங் கலைமங்கையாவேனா! என்று பல வீரமொழிகள்பேசி மஹாகோபங்கொண்டு தனது மாயையினால் அளவிடப்படாத அக்னி ரூபமாயிருக்கின்ற மாயா அநலனை யுண்டாக்கி பிரமன் யாகசாலைக் கேவினள். அதுகண்ட விஷ்ணுமூர்த்தி அவ்வநலனை ஓர்கையில் தீபம்போலேந்திக்கொண்டு தீபபிரகாசராயினர். பின் சுபால

ஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்ய அதனை சிம்மரூபமாய்ப் பலித்து நரசிம்மராயினர். அதன்பின் அநேக அசுரர்களை யெல்லா அவர்களைக்கொன்று உதிரபானஞ்செய்து செந்நிற மடைந்து பவளவண்ணராயினர். அதன்பின்னேவிய சூலியைத் தனது எட்டுத் திருக்கரங்களாலும் பிடித்திறுக்கிப் பூமியிற்றள்ளி அவன் சிரசின்மேல் அட்டகாசமாய் வீற்றிருந்து அஷ்டபுஜராயினர். பின்னர் சரஸ்வதி தன்னால் விடப்பட்டதும், விடப்பட்டவரும் விஷ்ணு மூர்த்தியினால் பாழ்படக்கண்டு இனிநாமே செல்வோம் இந்தவிஷ்ணு என் செய்வார் பார்ப்போமென்றெண்ணி, முன் மஹாதேவியை வெருட்ட அதிகவேகமாய்ப் பெரும் வெள்ளங் கொண்டு வந்த கம்பாநதியும், நந்திமலையினின்றும் பெருவெள்ளமாய்ப் பெருக்கெடுத்துச் சமுத்திர சங்கமமாவதற்குச் சென்ற க்ஷீரநதியும் இப்பொழுது ஒன்றாகத்திரண்டு வருவதென் றெண்ணுமாறு மஹாப் பிரளயத்தோடும் அதிகவேகமாய் யாகசாலையை நோக்கிவந்தனள். அதுகண்ட விஷ்ணுமூர்த்தி இவ்வெள்ளம் சாக்ஷாத் சரஸ்வதியென்றே அறிந்து இவளைச் சுலபமாய் வென்றுவிட வேண்டுமென் றெண்ணி னவராய் அவ்வெள்ளம்வரும் வழியிடையில் நிர்வாணியாய்க் குறுக்கே நன்றாய்க் கைகால்களை விரித்துப் படுத்துக்கொண்டனர்.

அவ் வலங்கோலத்தை வெள்ளரூபமாய் வருகின்ற சரஸ்வதி கண்டு இப்படியுஞ் செய்வாருண்டோ! இதுவா ஆண்பிள்ளைத்தனம்! இவர்தான் ஆண்பிள்ளைத் தன்மையைவிட்டாலும் நாம் பெண்தன்மையை விடலாமாவென்று நாணங்கொண்டு அவ்வழிச் செல்லாது பிலத்தை யடைந்தனள்.

இச்செய்தியை யறிந்த பிரமன் மனமகிழ்ந்து விஷ்ணு மூர்த்தியினுடைய கருணையைப் பாராட்டித் தான் செய்துகொண்ட சங்கற்பப்படி ஒருவருஷமும் நிறைவேறினமையால் பூர்ணாகுதி செய்து யாகத்தைப்பூர்த்தி செய்ய வேண்

ணி யாகத்தில்ஓமஞ்செய்துவந்த யாதொரு திரவியங்களோ அந்தத் திரவியங்களுடைய சேஷங்களை ○ யவாம்சங்களோடும் * கவாம்சங்களோடுஞ் சேர்த்து நெய்யோடுகூட்டிச் சிருக்கில்வைத்துச் சுருவத்தை மேலேமூடிக் கிழக்குமுகமாக நின்று விஷ்ணுமூர்த்தியைத் தியானித்து மந்திரங்களை மனசாகவுச்சரித்துப் பூர்ணாகுதி செய்தனர். உடனே அவ் வோமகுண்டத்தினின்றும் விஷ்ணுமூர்த்தி சிருஷ்டி தண்டத்தோடும் வெளிப்பட்டுச் சிருட்டி தண்டத்தைப் பிரமனுக்கு அனுக்கிரகஞ்செய்ய நின்றருளினர்.

அவர் நின்றருளியகாலம் சுவேதவராக கல்பம் ஐந்தாவது வைவஸ்வதமநு கிருதயுகம் நரசிம்மாவதார காலம் சுக்லவருஷ வைசாகம் மேஷத்தில் சூரியனிருக்கிறகாலம் சுக்லபக்ஷ சதுர்த்தசி அஸ்த நக்ஷத்திரம் சூரியோதய காலமாகிய சுபதினமாகும். அக்காலத்தில் அவரது தெரிசனங்கண்ட பிரமன் பூமியில் தண்டாகாரமாக விழுந்து அஞ்சலியஸ்தனாய் நின்று சிருட்டி தண்டத்தை அவரால் கொடுத்தருளப் பெற்றுக்கொண்டு தேகபரவசனாய் ஒருமுகூர்த்தகாலம் நின்றனன். அதற்குள் இந்திரன் விஸ்வகர்மாவினால் அந்த அத்திகிரியில் இருபத்து நாலுபடிகளையும் அதன்மேல் ஓர் புண்ணிய விமானத்தையு மமைத்து அதில்பல்லிகளுடைய முத்திரையுந்தெரிய ஆலய முண்டாக்கினன். தேகபரவசனாய் நின்ற பிரமன் கண்களைவிழித்துப் பார்க்க அந்த காஞ்சி வரதராஜமூர்த்தி புண்ணியகோடி விமானரூடராய்க் காட்சி கொடுக்கக்கண்டு முன்போல் பரவசமுற்று வரதராஜருடைய ஸ்ரீபாதத்தில் தன்முடியைப் பொருந்தவைத்து ஆனந்தக் கடலில் மூழ்கிக் களித்தனன். தேவர்களும் முனிவர்களும் யாகாக்னியிற் றோன்றிய உஷ்ண சாந்தியின்பொருட்டு நெய்யினால் ஒருமுகூர்த்தகாலம் திருமஞ்சனஞ் செய்து அறுசுவையோடு கூடிய மஹாநிவேதனத்தை நைவேத்தியஞ்செய்

○ யவாம்சமாவது யாகநிவேதனத்துக்காக வைக்கும் அன்னம்.

* கவாம்சமாவது குதிரையினிடத்திருந்து எடுக்கும் வபை.

வித்துப் பின் பிராமணர்களைப் போஜனஞ் செய்வித்து அவர்களுக்கு வேண்டியவாறு ஆடையாபரண கந்தபுஷ்ப தாம்பூலாதிக ளெல்லாங் கொடுத்து மகிழ்வித்தனர். உற்சவத்தின்பொருட்டு விஸ்வகர்மா வரதராஜருடைய அனுக்கிரகத்தைப்பெற்று கஜேந்திரனைப்போல ஓர்யானையைத் தந்தனன். இந்திரன் முத்துக்குடை தந்தனன். பிரமன் ஸ்வர்ணமயமாகிய மகுடந்தந்தனன். இவ்வாறு யாவரும் யானை முதலியன வெல்லாந் தந்தபின்னர் அன்று மாலைக்காலத்தில் வரதராஜமூர்த்தி திவ்யாலங்காரத் தோடுங் கஜாரூடராய் வீதியில் திருவோலக்கமா யெழுந்தருளிவர உற்சவத்தை நடத்தி முன்போல் விமானத்தில் வீற்றிருக்கச் செய்து பின் அபீஷ்டவரதா வரதாவென்று தோத்திரஞ்செய்து இந்தக் காஞ்சியில் பிரசன்னராயிருந்து பக்தர்களுக்கு அனுக்கிரகஞ் செய்து வரவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு விடைபெற்றுத் தங்கள் தங்கள்பதங்களுக்குச்சென்றனர். பிரமதேவன் வரதராஜருடைய நாபிஸ்தானத்தில் மாணிக்கரூபமாய்ப் பதிந்து பிரகாசித்தனன்.

பின்னர் வரதராஜமூர்த்தி தனது பக்தனான பிரமனைப் பார்த்துத் தேவர்களுடைய வேண்டுகோளின்படி இக்காஞ்சிக்ஷேத்திரம் வைகுண்டத்தைப் பார்க்கினும் பிரீதியானதாயிருப்பதால் எனக்கு அதிரம்யமாயிருக்கிறது. ஆகையால் இவ்விடத்தில் எனக்கு வருடந்தோறும் சித்திரைமாசம் எனது ஜன்ம நக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரத்தில் செய்யினும் சஹஸ்ரதாரையில் அபிஷேகமும் பூஜையும் உற்சவமும் பிராமண போஜனமும் செய்விக்கின்றவர்கள் யாரோ அவர்கள் என்னால் பெறக்கடவனவாகிய அபீஷ்டங்களைப் பெறக்கடவர் என்று வரமளித்தனர்.

மஹிமை,

யமுனாதீரத்தில் கோகுலக்ஷேத்திரத்தில் வாதராயண கோத்திரத்தில் யஜுர்வேதியான பானுவர்ண னென்னும்

பிராமணன் யாத்திரைக்ரமமாய் இந்த அத்திகிரியையடைந்தனன். அன்று வரதராஜருக்கு திருநாபிஷேகமாக விருந்தமையால் அவ் வபிஷேக மகோற்சவத்தைக் கண்டு களித்துப்புகழ்ந்து தன் னூரை யடைந்து சிலகாலம் வாழ்ந்திருந்து மரணமடைந்தனன். அவனைத் தேவகணங்கள் கொண்டுபோய்ச் சுவர்க்க பட்டாபிஷேகஞ் செய்ய, அங்குசில காலம் வாழப் பெற்றுப் பின்னர் அவ்விடத்தி னின்றும் விஷ்ணு கணங்களால் சூழப் பெற்று வைகுண்ட பதத்தை யடைந்து வாழ்ந்திருந்தனன்.

நான்காவது அத்தியாயம் வரதராஜ மூர்த்தி வரலாறு.

முற்றிற்று.

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

ஐந்தாவது அத்தியாயம்.

வேகவதி வரலாறு.

முன் சரஸ்வதி வரதராஜரால் அவமதிக்கப்பட்டு நாணங்கொண்டு கீழ்நோக்கிப் பிலத்தையடைந்தபின்னர் விஷ்ணு சூலையில் ஸ்ரீ வரதராஜ க்ஷேத்திரத்துக்கு மூன்று அம்சம் தெற்கில் வேகவதியென்கிற நதிரூபமாய்ச் செல்லத்தொடங்கினள். அந்தக் கலைமகளுருவாகிய நதியானது உற்பத்தியான காலத்தில் பிரம லோகத்தினின்று நந்திசைலத்தை யடைந்து அதினின்றும் பாலாற்றில் அந்தர்க்கதமாய்க் கலந்து இருபது யோசனைதூரம் வந்து ஹரிக்ஷேத்திரத்துக்கு மேற்கில் ஒன்றரையோசனை தூரத்தில் அந்தப்பாலாற்றுக்கு

வேறாகப் பிரிந்து மறுபடியும் அந்தவிஷ்ணுசாலைக்குக் கிழக்கில் மூன்றரையோசனை தூரத்தில் முன்போல் பாலாற்றிற் போய்க்கலந்து சமுத்திரசங்கமமாயிற்று. அது இந்தப்புண்ணியகோடி க்ஷேத்திரத்தில் பிரவேசித்துச் சென்றபடியால் புண்ணியகோடியெனவும் பெயர் பெற்றது.

வேகவதி புண்ணியகோடியெனப் பெயர் பெற்ற கலைமகளானவள் விஷ்ணு மூர்த்தியினால் தனக்கு வந்த பரிபவம் நீங்கப்பெற்றுப் பேறுபெற்ற வரலாறு இனிவருமாறு.

நதிரூபமாய்ச் சென்ற சரஸ்வதி தேவியானவள் பின்னர் விஷ்ணுமூர்த்தியைத் தியானிக்க அவர் பிரசன்னராயினர். அவரை நோக்கி ஓ நாராயணரே! நான் நதிரூபமாய் வரும்பொழுது நீர் நிர்வாணியாய் என்முன் எதிர்ப்பட்டீரல்லவா? அதனால் எனக்குமானபங்கமும் பதிவிரதாபங்கமும் வந்துவிட்[illegible]தேகமில்லை. ஸ்திரீகளுக்கு இவ்விரண்டுந்தானே அங்கமும் லக்ஷணமும்? இவைபங்கப்படுமானால் இருந்தாலென்! இறந்தாலென்! ஆகையால் எனக்கு அவ்விரண்டையும் நீர்தரவேண்டும், தராவிடில் நான்பிராணனைவிடுவேன் என்றனள். அதுகேட்ட விஷ்ணுமூர்த்தி மனமிரங்கி, ஓ சரஸ்வதீ! நீ எனது அம்சம். பிரமன்கையிலுள்ள சிருஷ்டி* தண்டம் உன்னுடைய அம்சமாக என்னாலுண்டாக்கப்பட்டது. இங்ஙனமிருக்க இவற்றை மறந்து அத்தண்டத்தை உன்னுடைய சுதந்தரமாகப்பிடுங்கி உன்னிடத்தில் ஒடுக்கிக்கொண்டு அகங்காரத்தோடு வந்தனையன்றோ? அதனால் உன்னைமானபங்கஞ்செய்து இப்பிலத்திலொடுக்கிப்பிரமனுடைய யாகத்தையுமுடித்து அவனுக்கு வேறு சிருஷ்டிதண்டமுங் கொடுத்தேன். இப்பொழுது நீ அகங்காரத்தைவிட்டு என்னைத் தியானித்து எனக்குக் கற்பு வரவேண்டுமென்று பிரார்த்திக்கின்றபடியால் யான்சொல்லுமுபாயத்தை மறக்காது செய்வையானால் கற்புடையவளாவையென்றனர். அதுகேட்ட சரஸ்வதி கற்பினையே பெண்ணல

மாக வெண்ணினளாகலான் அவர்மொழிக் கிணங்கி அவ்வுபாயத்தைக் கூறுகவென்றனள்.

விஷ்ணுமூர்த்தி ஓ சரஸ்வதி! நீ முன்போல் நதியுருவாகவே வெளிப்பட்டு முன்வந்தவழியே சென்று க்ஷீரநதியோடுகலப்பையாயின் கற்புநிலையழிந்த பாவம்போய்விடும். பின் அந்நதியோடு சமுத்திரசங்கமமாவாய். சங்கமமாகிச் செல்லுகின்ற உன்னழகைப் பிரமன்கண்டு உன்னிடத்திற் கொண்டிருந்த குரோதநீங்கி மகிழ்ச்சிகொண்டுன்னைக்காஞ்சிச் சமுத்திரசங்கமஸ்தானத்தில் பிரசன்னமாவான். காஞ்சிக்ஷேத்திரத்துக்குக் கிழக்கெல்லையாயுள்ள சமுத்திர கட்டசங்கமத்தினாலும், பர்த்தாவினுடைய தெரிசன விசேஷத்தினாலும் உனக்குச் சர்வதோஷமும் நிவர்த்தியாய்ப் பரிசுத்தத்தையடைவாய். பின்னர் பிரமன் உனக்கு அர்த்தாசனம் (தன்னாசனத்திற்) பாதிகொடுத்துத் தழுவிக்கொள்ளுவனென்று அனுக்கிரகஞ்செய்து சென்[illegible]

சரஸ்வதிதேவி அவராணையின்படியே க்ஷீரநதியோடு கலந்து அதிவேகமாய்ச் சென்று சமுத்திரசங்கமமானபொழுது பிரமன் மகிழ்ந்து தேவியையழைத்து அர்த்தாசனங் கொடுத்துக் கலைமகள் மகிழக் கலியாணஞ் செய்துகொண்டு ஓ, சரஸ்வதி! நீ அதிவேகமாய் நதிவடிவங்கொண்டுவந்தபடியினால் இந்நதி வேகவதியென்று வழங்கக்கடவது. இதில் ஸ்நானஞ் செய்கின்றவர்களுடைய பாவம் அதிவேகமாய்ச் செல்லக்கடவது. அவர்களுக்குப் புண்ணியம் அதுபோலும்வளரக்கடவது என்று வரமளித்து கலைமகளோடுசத்தியலோகமடைந்து சிருஷ்டித்தொழிலைச் செய்துவந்தனன்.

மஹிமை.

கிருந்தகந்தா ரிரவாசியும் காசிபகோத்ரஜனும் சாமவேதியுமான தௌமியநாதனென்னும் வேதப்பிராமணன்பாக்யவந்தனும் வித்வானுமிருந்தும் பரதாரகமனனா யிருந்தனன். அப்பாவத்தினால் கிழத்தனம்வந்த காலத்தில் குஷ்டமுதலிய பலவியாதிகளினாற் பீடிக்கப் பட்டு மனநொந்து

இதற்கு விமோசனமு முண்டாகுமோ வென்று பெரியோர்களைப் பணிந்துகேட்டனன். அவர்கள் மனமிரங்கி, ஓ அந்தணனே! நீ வேகவதியில் ஸ்நானஞ் செய்தால் தீரு மென்றனர். அப்படியே அவ்வந்தணன் வேகவதியை யடைந்து மூன்றுகாலம் ஸ்நானஞ் செய்ய அவனைப் பற்றி யிருந்த வியாதி யெல்லாந் தீரப்பெற்று பரிசுத்தனாய்த் திடசரீரத்தோடுந் தனது தேசம்போய்ச் சேர்ந்து தனதான்யாதி சகல சம்பத்துடன் வாழ்ந் திருந்து அந்தியத்தில் விஷ்ணு பதமடைந்தனன்.

ஐந்தாவது அத்தியாயம் வேகவதி வரலாறு.

முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யை நம:

ஆறாவது அத்தியாயம்.

சிவ க்ஷேத்திர வரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் வாயுதிக்கில் பராசக்தியானவள் மஹா ருத்திரமூர்த்தியாய்ப் பிரமன்காணும் வண்ணங் காட்சி கொடுத்தருளினாராதலால் அது சிவக்ஷேத்திரமெனவும், உருத்திரசாலை எனவும் பெயர்பெற்றது.

இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன:—

1 உருத்திரசாலை 2 † உருத்திர கோடி 3 கயிலாயம் 4 ஏகாம்பரம் 5 மஹாஸ்மசானம் என்ப.

† ருத்திரமென்னும் பதத்துக்கு இலிங்கமெனப் பொருளாகலானும், இலிங்க மூர்த்தங்கோடி அவ்விடத்தி லுளவாகலானும் அப்பெயரெய்தியது.

இதன் எல்லை.

சுவேதப்பெருமானுக்கு (50) அம்சம் தெற்கிலுள்ள காயா ரோகணேஸ்வரராலயமே,—தெற்கெல்லை.

காயாரோக ணேஸ்வரராலயத்துக்கு (32) அம்சம் மேற்கிலுள்ள கன்னிகேஸ்வர ராலயமே,—மேற்கெல்லை.

கன்னிகேஸ்வர ராலயத்துக்கு (25) அம்சம் வடக்கிலுள்ள கயிலாசநாத ராலயமே,— வடக்கெல்லை.

கயிலாய நாதருக்கு (25) அம்சம் கிழக்கிலுள்ள சுவேதப்பெருமா ளாலயமே,—கிழக்கெல்லை.

இந்நான்கெல்லைக் குட்பட்ட பிரதேசமே உருத்திரசாலை எனப்படும். இவ்வெல்லையில் ஒரு சிவலிங்கார்ச்சனை செய்தால் கோடி லிங்கார்ச்சனை செய்த பலனுண்டாகும். அதுவுமன்றி அவ்வெல்லையில் ஒரு க்ஷணகாலமாவது அதில் அரையாவது வசிக்கப்பெற்றால் எல்லாப் பாவங்களும் ஒழிந்து போம்.

இவ்வெல்லைக்குள்,—

முன்சொன்ன காயாரோகணருக்கு (44) அம்சம் வடக்கிலுள்ளவர். விகட சக்கர விநாயகர். (1)

விகட சக்கர விநாயகருக்கு (1) அம்சம் வடக்கிலுள்ளவர். மாவடி வைகுஞ் செவ்வேள். (1)

துர்க்கை ஆலயம்.—4.

மாவடி கந்தப்பருக்கு (1) அம்சம் கிழக்கு திக்கில் பிரளயபந்தினிஆலயம். (1)

பிரளய பந்தினிக்கு (10) அம்சம் தெற்கு திக்கில் சம்பத்கரீஸ்வரி ஆலயம். (2)

சம்பத்கரீஸ்வரிக்கு (10) அம்சம் மேற்கு திக்கில் ரேணுகாம்புஜ வல்லி ஆலயம். (3)

ரேணுகாம்புஜ வல்லிக்கு (25) அம்சம் தெற்கு திக்கில் வீரவரேஸ்வரி ஆலயம். (4)

வரலாறு.

(பிரளயபந்தினி) என்னுந் துர்க்கை கம்பாநதிப் பெருக்கைத் தேவியினது ஆஞ்ஞையினால் தடுத்துத் தனது கபாலத்திலடக்கினவள்,-(* சம்பத்கரீஸ்வரி) என்னுந் துர்க்கை, கஜாசுரனென்பவனைக் கொன்று ருஷிகளைக் காத்தவள்,— (ரேணுகாம்புஜ வல்லி) என்னுந் துர்க்கை சம்புகனென்னும் அந்தகப் பிராமணனுக்குக் கண்கொடுத்தவள்,— († வீரவரேஸ்வரி) என்னுந் துர்க்கை வீரபத்திர மூர்த்தியினுடைய கோபத்தைத் தணிவித்தவள்.

சிவாலயம். 8.

முன்சொன்ன வீரவரேஸ்வரிக்கு (10) அம்சம் கிழக்கிலுள்ளவர். காயாரோகணேஸ்வரர். (1)

காயாரோகணேஸ்வரருக்கு (36) அம்சம் வடக்கிலுள்ளவர். சுரஹரீஸ்வரர். (2)

சுரகரீஸ்வரருக்கு (10) அம்சம் நிருதியிலுள்ளவர். அநேக பதேஸ்வரர். (3)

அநேக பதேஸ்வரருக்கு (1) அம்சம் வாயுவிலுள்ளவர். கைலாச நாதர். (4)

கைலாச நாதருக்கு (6) அம்சம் தெற்கிலுள்ளவர். ‡ பச்சிமேஸ்வரர். (5)

பச்சிமேஸ்வரருக்கு (24) அம்சம் ஈசானத்திலுள்ளவர் § காசிவிஸ்வேஸ்வரர். (6)

விசுவேஸ்வரருக்கு (3) அம்சம் வடக்கிலுள்ளவர். ஓணகாந் தீஸ்வரர். (7)

ஓணகாந்தீஸ்வரருக்கு (10) அம்சம் கிழக்கிலுள்ளவர். § கச்சிமயானேஸ்வரர். (8)

---

* அரசாத்தம்மை கோயிலென வழங்கும். † வீரகாளியம்மை கோயிலென வழங்கும். இது பிள்ளைபாளயத்திலுளது. ‡ திருமேற்றளியென வழங்கும் இதுவும் பிள்ளைபாளயத்திலுளது. § இவ்விடம் சர்வதீர்த்தக் கரையின் மேற்பக்கம். § இவ்விடம் ஏகாம்பரர் கோயிலில்.

வரலாறு.

(காயா ரோகணேஸ்வரர்) யயாதி ராஜனுக்குச் சரீரத்தோடு முத்தி கொடுத்தவர்,— (சுரஹரீஸ்வரர்) தேவர்களுக்குவந்த மகேஸ்வர சுரத்தைப் போக்கியவர்,— (அநேக பதேஸ்வரர்) விருத்திராசுரனைக் கொல்ல இந்திரனுக்கு வச்சிராயுதங் கொடுத்தவர். முதற் கடவுளாகிய விநாயகமூர்த்தியினால் பூசிக்கப்பட்டவர்,—(கைலாசநாதர்) தண்டிராஜனுக்குக் கைலாச பதவியைக் கொடுத்தவர்,—(திருமேற்றளி நாதர்) வாலகில்யர்களுக்கு அபயங் கொடுத்து ரக்ஷித்தவர்,— (விஸ்வேஸ்வரர்) கங்காநதியின் பாவத்தைச் சர்வதீர்த்தத்தினாற் போக்கியவர்,— (ஓணகாந்தீஸ்வரர்) ஓணனென்பவனும் காந்தனென்பவனும் வழிபட, ஓணனென்பவனுக்கு வாளாயுதமும், காந்தனென்பவனுக்குச் சூலாயுதமும் கொடுத்தவர்,—(கச்சிமயானேஸ்வரர்) பண்டாசுரனைச் சங்கரிக்கு நிமித்தம் தமது சக்தியினால் உலகங்களையெல்லாஞ் சாம்பலாக்கினவர்.

விஷ்ணு ஆலயம். 3.

முன்சொன்ன கச்சி மயானேஸ்வரருக்கு நிருதி திக்கிலுள்ளது பாண்டவப்பெருமாள்சந்நதி. (1)

பாண்டவப் பெருமாள் சந்திக்கு ஈசான திக்கிலுள்ளது * சந்திரகீரீவப்பெருமாள்சந்நதி (2)

சந்திர கிரீவப் பெருமாளுக்கு ஈசான திக்கிலுள்ளது. சுவேதப் பெருமாள் சந்நதி. (3)

வரலாறு.

(பாண்டவப் பெருமாள்) பாண்டவர்களுக்கு வெற்றியுண்டாகத் தூதுசென்றவர்,— (சந்திர கிரீவப் பெருமாள்) ஏகாம்பரநாதருடைய சடையிலுள்ள சந்திர காந்தியைத் தமது கண்டத்தில் தாங்கப் பெற்றவர்,— (சுவேதப் பெருமாள்) அந்தகாரனென்னும் அசுரன் எங்கும் இருளை விளைவிக்க

---

* ஏகாம்பரநாதர் சந்நதி முதற் பிரகாரம் ஈசானத்தில்

அவ்விருளைச் சந்திர வர்ணமாய்ப் பிரகாசிக்கின்ற தம்மொளியாற் போக்கினவர்.

முத்திரை. 5.

முன்சொன்னசுவேதப்பெருமானுக்கு (1) அம்சம் நிருதியில்
கள்ளக் கம்பரிடம் (1)

கள்ளக் கம்பருக்கு (2) அம்சம் மேற்கில்
மார்க்கண்டேய ரிருக்குமிடம். (2)

மார்க்கண்டேய ரிருக்கு மிடத்துக்கு (2) அம்சம் வடக்கில்
ஏலவார்குழலியா ரிருக்குமிடம். (3)

ஏலவார்குழலியா ரிருக்கு மிடத்துக்கு (2) அம்சம் ஆக்னேயத்தில்
வெள்ளைக்கம்ப ரிருக்குமிடம். (4)

வெள்ளைக்கம்ப ரிருக்கு மிடத்துக்கு (2) அம்சம் கிழக்கில்
வீரபைரவ ரிருக்குமிடம். (5)

வரலாறு.

(கள்ளக்கம்பர்) ஏகாம்பரனார் கள்ளவடிவங் கொண்டு அன்பர்க் கருளியபின் இலிங்க ரூபமானவர்,—(மார்க்கண்டேயர்) சிவாஞ்ஞையினால் மார்க்கண்டேயரால் பூஜிக்கப்பட்டவர்,—(ஏலவார்குழலியார்) தேவசில்பியினால் நிர்மிக்கப்பட்டு ஏகாம்பர நாதரோடு சமாசனத்தில் சமமாய் வீற்றிருப்பவர். இவ்வம்பிகை கங்கா தேவியினுடைய அம்சம்,—(வெள்ளக்கம்பர்) காமாக்ஷி தேவியார் பொருட்டுச் சிவனுருடைய நெற்றிக் கண்ணிற் றோன்றிய கங்கை பின்னர் லிங்க ரூபமாய்த் திரண்டமூர்த்தம்,—(வீரபைரவர்) ஏகாம்பரநாதருடைய கட்டளையினால் கச்சிமயானத்தைக் காப்பவர்;

தீர்த்தம் 4.

முன் சொன்ன வீரபைரவருக்கு (1) அம்சம் வாயுவில்
சிவகங்கைதீர்த்தம்.(1).

சிவகங்கை தீர்த்தத்துக்கு (5) அம்சம் ஆக்னேயத்தில்
மங்களதீர்த்தம்.(2).

மங்கள தீர்த்தத்துக்கு (8) அம்சம் நிருதியில்
சுரஹரதீர்த்தம்.(3).

சுரஹர தீர்த்தத்துக்கு (9) அம்சம் வாயுவில்
பாண்டவதீர்த்தம்.(4).

வரலாறு.

(சிவகங்கை தீர்த்தம்) பிரமாண்டத்தினின்றும் வெளிப்பட்டு வந்தது. சகலபாவங்களையும்போக்கடிப்பது,—(மங்கள தீர்த்தம்) அங்காரகனது அக்கினி ரூபத்தைப் போக்கியது,—(சுரஹர தீர்த்தம்) தேவர்கட்கு வந்த மஹேசுவர சுரத்தைப் போக்கியது,—(பாண்டவதீர்த்தம்) பாண்டவர்களைத் தப் பெருமானால் உண்டாக்கப் பட்டது.

தீர்த்தபலன்.

(சிவகங்கையில்) சோமவாரத்தில் ஸ்நானஞ்செய்வோருக்குக் கங்கா நதியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று உமாதேவியாராலும்,—(மங்கள தீர்த்தத்தில்) மங்களவாரத்தில் ஸ்நானஞ்செய்தால் சரஸ்வதிநதியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று அங்காரகனாலும் (சுரஹர தீர்த்தத்தில்) எந்தவாரத்திலாயினும் ஸ்நானஞ்செய்தால் கபிலா நதியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று தேவர்களாலும் (பாண்டவதீர்த்தத்தில்) திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்தால் கிருஷ்ணாநதியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று பாண்டவர்களாலும் வரங் கொடுக்கப்பட்டன.

ஆக சிவக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் விநாயகராலயம் (1) ஸ்கந்தராலயம் (1) துர்க்கைஆலயம் (4) சிவாலயம் (8) விஷ்ணுவாலயம் (3) முத்திரை (5) தீர்த்தம் (4)

இந்த ருத்திரசோலையில் இவையெல்லாம் ஏகாம்பரநாதருடைய ஆஞ்ஞையினால் எப்பொழுதுங் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்குக் கைலாசவாசபலனுண்டாகுமாதலால் இது பூலோககைலாசமெனப் பெயர்பெற்றது.

மஹிமை.

கிருஷ்ணாதீரத்தில் ஏலாபுரத்தில் ருக்வேதியும் கௌதமகோத்திரத்தானுமான கௌசிகனென்னும்பிராமணன்சத

கர்மஹீனனாய்த் தாராசாரசம்பன்னனாய்ப் பூமியில் க்ஷேத்ரங்களைக் காண்பதற்கு எங்கும் உலாவி மார்க்கங்களில் யாத்திரையாய்ச் செல்லுகின்ற லட்சணமுள்ள பரலர்களைத் தன்னிடத்திற் கழைத்துப்போய் அவர்களுக்கு வேண்டிய அன்னோதகங்களையும் திரவியங்களையுங்கொடுத்துப்பாதுகாத்து வந்து ஆறேழுமாதமாவது ஒருவருடமாவது கடந்தபின் க்ஷேத்ரபங் காணுமிடங்களிற் பலிகொடுத்து அத்திரவியங்களையும் தாக்கொள்வன். இவ்வாறு செய்துவருநாளிற் காஞ்சிக்ஷேத்திரத்தி லிருந்து ஓரந்தணன் யாத்திரையாக மார்க்கத்தில் வரும்பொழுது அவனது தாகவேட்கையைக் கண்டுமனமிரக்கமுடையவனாய் நீர்மோர்கொடுத்தனன். சில நாள் கழிந்தபின்னர் அவன்மரணமடைய அவனை இயமன் பாசத்தாற்கட்டித் தனதுலகத்திற் கொண்டுபோயினன். சிவகணங்கள் அவனை மீட்டுக்கயிலாயத்திற்சேர்த்தனர். இதன் காரணமறியாது இயமன்கைலாயஞ்சென்று சிவபெருமானாரை வணங்கி இக்கொடுமையாளனிங்குவருவதற்குக் காரணமென்னையோவென்று வினவ, சிவபெருமானார் ஓ இயமனே! இவன் மகாபாதகனாயினும் ஒரு சிறுபுண்ணியத்தால் பல பெரிய பாவங்களைப்போக்கவல்ல ருத்திர சாலையி னின்றும் வந்த ஓர்பிராமணனுக்குந் தாகந்தணிவித்ததனா லிங்குவரப் பெற்றனன் நீ செல்லக்கடவாயென்று விடைகொடுத்தனர்.

ஆறுவது அத்தியாயம் சிவக்ஷேத்திர வரலாறு.

முற்றிற்று.

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

ஏழாவது அத்தியாயம்.

ஆம்பிர விருக்ஷ பிரபாவம்.

சைவமுனிவர்களாற் சூழப்பட்ட புண்ணியகரமான அநேக விருக்ஷங்கள் நெருங்கிய ஆரண்யத்தில்உருத்திரகோடிச்

சாலையில் பாண்டவதீர்த்தத்திற்கு(௪௪)அம்சம் உத்தரத்தில் வேதம் மா விருக்ஷரூபமாய் வளர்ந்தோங்கி நிற்கின்றது. அது சிவபீஜத்தினின்றுந் தோன்றியதாயும், ஸ்ரீகாமாக்ஷிதேவியினால் ஏகாம்பரதருவென்கிற திவ்வியநாமத்தால் துதிக்கப்பட்டதாயும், வேதசாகைகளே கிளைகளாகவுள்ள புண்ணிய சொரூபமாயும், பதினான்கு வித்தைகளே மல்லிகைக்கொடிகளாகப் படர்ந்திருப்பதாயும், சலப்பிரளயத்தில் மிதந்து வந்த மார்க்கண்டேயமுனிவரைக் காத்ததாயும், பிராணிகளால் புகழ்ந்துரைக்கப்பட்ட சிறப்புடையதாயும் விளங்குவது.

மார்க்கண்டேயமுனிவரைக்காத்தவரலாறு.

ஓர்கால் கைலாசத்தில் அதிவிசித்திரமா யலங்கரித்திருந்த அந்தப்புரத்தில் போகமூர்த்தியாய் உமாதேவியாரோடு அர்த்தாசனத்தில் வீற்றிருக்கும்பொழுது சிவபெருமானுக்குமிக்வும் பிரியரூபிணிகளாய் (௬௪)கலைகளினின்றுந் தோன்றிய சத்திகோடிகள் அகங்காரங் கொண்டவர்களாய்ச் சிவபெருமானாரைச் சமீபித்து, எங்கள் நாயகரே! நீர் பார்வதிக்கு அர்த்தாசனங் கொடுத்திருப்பது போல எங்கட்குங் கொடுக்கவேண்டு மென்று பிரார்த்தித்தனர்.

சிவபெருமான் அவர்களைப்பார்த்து இவ்விடத்திலுள்ள புருஷரெல்லாம் என்னுடைய அம்சத்திற்றோன்றினவர். ஸ்திரீகளெல்லாம் கவுரியம்சத்திற்றோன்றினவர். ஆகையால் புருஷர்களுக்கு யான் தலைவன், பெண்களுக்குக் கவுரிதலைவி. இம்முறையால் கவுரியை நோக்க நீங்களெல்லாந் தாழ்ந்தவர்கள், தாழ்ந்தவர்களாகிய உங்களுக்கு யான் சமாசனம் கொடுக்கத்தக்கதன்று, என்னோடு சமமாக சமாசனத்திலிருக்கத்தக்கவள் பார்வதி யொருத்தியே யென்றனர். அவ்வார்த்தையைக்கேட்ட சத்திகோடிகள் சிவபெருமானைப் பார்த்து என்னகூறினீர்? இது பக்ஷபாதமல்லவா! உம்மைப்போலும் இவ்வளவு முழுமோசமாகப் பேசினவரை யாங்கள் எங்குங்கண்டதில்லை. ஆ? ஆ? யாங்களா கவுரியம்சத்திற் றோன்

றின்வர்கள் இந்தக் கவுரியல்லவா எங்க ளம்சத்திற் றோன்றினவள்? இதனையறியார்போன்று எங்களுக்குச் சமமான ஆசனங் கொடுக்கமாட்டேனென்று அடாது, எங்கட்கே கொடுக்கவேண்டும். அன்றியும் இப்பார்வதிக்குப் பெண்களுக்கிருக்க வேண்டிய சாதகசகுணமுதலியன விருக்கின்றனவா? தன்மதனுடைய லீலையிற் சிறந்தவளா? நாயகன் குறிப்புமுதலியவற்றை யறியுந் நுண்ணறிவுடையவளா? கல்வியறிவில்மிகுந்தவளா? உருவமுதலாக எண்ணப்பட்ட ஆறுகுணங்களால் நிறைந்தவளா? அந்தோ! ஒன்றுமிலவே, இருக்குமாயின் எங்கட்கு அந்தமான்மியத்தைத் தெரிவியுமென்று சத்திகோடிகள் கூறிய வாய்மொழிகளைக்கேட்டு அவர்களகங்கார மடங்குமாறு ஓர்விளையாட்டாக அவர்களணிந்திருந்த வஸ்திரங்கள் நழுவிப்போகும்படிச்செய்தனர். உடனே அச்சத்திகளெல்லாம் நிர்வாணிக ளாய்ப்போக நாணமுற்றுப் பூமியில்தண்டாகாரமாகப் பணிந்தார்கள். அதனைப் பார்வதியார்கண்டு அச்சத்திகோடிகள்எழுந்திருந்து கழன்றுபோன ஆடைகளை எடுத்து உடுக்குமளவும் தமது நாயகருக்கு அந்நிருவாணகோலந் தோன்றாதிருக்க அவருடையநேத்திரங்களை ஒருமுகூர்த்த காலம் மூடியிருந்தனர். அப்பொழுது சூரிய சந்திராக்கினிகளுடைய பிரகாசம்போய் எங்கும் இருண்மயமாய் எல்லாவுயிர்களுஞ் செயலற்று இருளுருவாகவேயிருந்தன. அக்காலத்தில் சலப்பிரளயமும் உண்டாயிற்று. அந்தக் கோரமாகிய வெள்ளத்தில் அழிவில்லாதவ ராகிய மார்க்கண்டேயமுனிவர் எல்லாவுயிர்களும் முழுகுவதைப் பார்த்து திசயித்து இனி யாம் என்செய்யக்கடவோமென்று அந்தப் பிரளயத்தில் நீந்திவருகின்றபொழுது, ஒருபற்றுமில்லாது இவ்வெள்ளத்தில் நீந்திவருகின்ற நமக்கு ஓராதாரம் வேண்டுமென்று இச்சைகொண்டு சதாசிவ ஈசான ருத்திர ஹரிப் பிரஹ்மாதி காரணரும், தேவியினுடைய திவ்யதிருமேனியில் ஆசையுள்ளவரும், நாசரகிதரும், மஹாத் திரிபுரசுந்தரிக்கு நாயகரும், நிர்க்குணருமான காமேஸ்வரரைத்

தியானஞ்செய்து, ஏகாமேசனே! எனக்கு ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்துச் சிரமத்துடன் வரும்பொழுது, உருத்திரசாலையில்சித்ரூபராயும் யாவராலுங் காணக்கூடாத தேஜோரூபராயும் இருக்கின்ற ஏகாம்பரநாதரானவர் கருணையுடையவராய் அவரைரக்ஷிக்கும்பொருட்டுத் தம்முடைய சொரூபமாகவும் நான்கு வேதங்களே நான்கு கிளைகளாகவுமுடைய மாவிருக்ஷத்தை ஓர் க்ஷ[illegible] தளிர் பூங்கனிகளோடு பிரளய சலத்துக்குமேல் விளங்கச் செய்தனர்.

அது கண்டமுனிவர் இது நம்பெருமான் கருணையேயாமென்று அம் மா மரத்தின்மேலேறிப் பிரளய சலத்தைப் பார்த்தாச்சரியமடைந்து தனக் காதரவாய் நின்ற அவ்விருக்ஷத்தைச் சிவசொரூப மாகப் பாவித்து இது நம்மைப் பாதுகாக்க வந்த கருணைவடிவென்று நிச்சயித்து அங்கிருந்த விண்ணமே அதன் மூலமளவும் சோதி சொரூபமாகக் காணப்படுந் துவாரத்தைக் கண்டு அவ்வழியே நுழைந்து அங்கு ஒளிப்பிழம்பாய் விளங்கும் பெரிய நகரத்தைக் கண்டு இதுவென்ன ஆச்சரியம்! இந்த லயகாலத்திலும் யாதொரு நாசமில்லாமல் சலமத்தியில் சோதி சொரூபமாய் விளங்குகின்றதே என்று அதனடியி லிறங்கவும், அவ்விடத்தில் சிவகுமாரரான ஷண்முகக் கடவுள் அம்மரத்திற் பழுத்திருக்கும் கனிகளைப் புசித்துக்கொண் டிருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியங்கொண்டு வணங்கி, ஓ ஷண்முகக்கடவுளே! இந்த க்ஷேத்திரத்தின் பெயரென்னை? இந்த விருக்ஷம் எத்தன்மைத்து? தேவரீர் இப்பழங்களைப் புசித்துக்கொண்டு இங்குவசிக்குங் காரணமென்னை? யாருடைய மகிமையினால் இந்தஜலப்பிரளயத்திலும் இந்நகரம்அழியாதிருக்கின்றது? இவையாவும் என்பால்கருணைகூர்ந்து அருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, ஆறுமுகக்கடவுள் ஓ மார்க்கண்டேயனே! இது காஞ்சிக்ஷேத்திரமென்று சொல்லப்படும். இந்த க்ஷேத்திரத்தைப் பிரளயங்க ளுண்டாகுந்தோறும் மஹாதேவி தனது தேஜோன் மயமாகியபிரகாசத்

தினால் அழிவுறுவண்ணம் காப்பாற்றி வருகின்றுளாதலால் இது பிரளயஜித்தெனப் பெயர்பெற்றது. இந்த விருக்ஷம் சாக்ஷாத்சங்கரருடைய சொரூபமாயுள்ளது, மஹாதிரிபுரசுந்தரிக்கு நாயகராகியகாமேஸ்வரரே இந்த விருக்ஷபீஜமாயுள்ளவர். அதனாற்றான் இங்கிருக்கும் என்னுகடவுளுக்குஏகாம்பரரெனத் திருநாமம். அவருடைய கருணை உன்னிடத்திலிருந்தபடியினாற்றான் இந்த வெள்ளத்தில் அந்த ...பரம் உனக்கு ஆதரவாயிற்று. இந்த விருக்ஷத்தின் கனியை யாரொருவர் பக்தியாகப் புசிக்கின்றார்களோ அவர்கள் வேதவித்யா குருவாகின்றனர். ஆகையால், நான் இப்பழத்தை நாடோறும் புசித்து வருகின்றேனென்றருள்செய்ய, மார்கண்டேயர் நமஸ்காரஞ்செய்து அம்மரத்தினடியில் தாமுமிருந்து அதன் கனியையுண்டு இந்தக் கனியை எவனொருவன் புசிக்கின்றானோ அவன் கோடி லிங்கார்ச்சனைப்பலனை யடைவானென்று வரங்கொடுத்து வாழ்ந்திருந்தனர்.

மஹிமை.

துங்கபத்திரா தீரத்தில் சிருங்கசைலத்தில் வசிக்கின்றகிரௌஞ்சனென்னும் பிராமணன் நாடோறும் சிவபக்தசிரோண்மணிகளாகிய பிராமணோத்தமர் பூசிக்கும் சுவர்ணலிங்கங்களை யபகரித்து அதனை விற்றுச் சீவனஞ் செய்துவந்தனன். அப்பாவத்தால் அவனுக்குப் பதினாறுபிள்ளைகள் அவிகளாய்ப்பிறந்தன. அவனப்பிள்ளைகளைப்பார்த்துமிகவுந்துக்கித்து அவ்வவிரூபத்தை நிவர்த்திக்கப் புண்ய க்ஷேத்திரங்கடோறுஞ் சென்று தெரிசித்துக்கொண்டு வருங்கால், இந்த ருத்திர சாலையை யடைந்து மா விருக்ஷத்தைப் பார்த்து அதனடியில் ஒரு க்ஷணகாலமிருந்து தன்னிளைப்பை மாற்றிக்கொண்டு தன்னகரமடைந்தனன். மாவடியில் வாசஞ் செய்த புண்ணியவிசேஷத்தால் அப்பிள்ளைகள் புருஷரூபமடைந்தனர். அதனைப்பார்த்து இனி நம்முடைய குலம்விருத்தியடையும் இவ்வாறு விருத்தியடையச் செய்தது ருத்ரசாலையென நிச்சயித்து ஆனந்தபரவசனாய் இளைப்பாறுவதற்குத் தங்கியிருந்த புண்ணியமே இவ்வளவு பெரும்பேற்

றைத் தருமாயின் அந்தக்ஷேத்திரத்தில் எப்பொழுதும் வசிப்போமாயின் நமக்குவரும்பலனை என்னவென்று மதிப்போமென்று புளகாங்கிதங்கொண்டு அக்கணமே புறப்பட்டு காஞ்சிநகரத்திலுள்ள ருத்திரசாலையையடைந்து அவ்விடத்தில் நாடோறும் செய்யும்படி விதித்திருக்கும் ஒழுக்கங்களிற் றவறாது நடந்து சிவ பூஜையிற் சிறந்தவனாய் வாழ்ந்திருந்து தேகாந்தத்தில் சிவலோகமடைந்தனன்.

ஏழாவது அத்தியாயம் ஆம்பிரவிருக்ஷ பிரபாவம்.

முற்றிற்று.

உ

காமாக்ஷிதேவ்யைநம:

எட்டாவது அத்தியாயம்.

ரசாலேச பிரபாவம்.

வேதசொரூபமாகிய ஆம்பிரவிருக்ஷத்திற்குக் கீழ்பால் அவ்விருக்ஷ மூலத்தில் சாக்ஷாத் சங்கரர் கதலி குசுமம்(வாழைப்பூப்)போல் ஒரு அஸ்தப்பிரமாணஞ்சோதிசொரூபராய் உமாலிங்கனத்தினால் குசகஞ்சண சோபிதராய்ப் பிரஹ்மவிஷ்ணு ருத்திர மஹேஸ்வரராகியசதுர்மூர்த்திகளுக்கு மத்யராயுள்ள சதா சிவானுக்கிரக மூர்த்தியாய் அகண்ட சச்சிதானந்த தேஜோமயராய் மான்மழு வரதாபய அஸ்தங்களாற் பிரகாசிக்கின்றவராய் தவள மேனியராய் நித்ய கல்யாணசுந்தரராய் வியாக்ர சர்மாம்பரராய் கஜசர்மோத்தரீயராய்ப் பஸ்மோத்தூளித விக்ரஹராய் திரிநேத்திரராய்சந்திரசேகரராய் சர்ப்பங்களாலும் கங்கையாலும் பிரகாசிக்கின்ற சடாமகுடதரராய்ச் சவ்யதக்ஷிணங்களில் உமா தேவியுங் கங்காதேவியும் நின்று வீசப்பட்ட சாமரைகளை யுடையவராய் ருத்திர கோடீஸ்வரராய் ஏகாம்பரமூலத்தில் உள்ளவராய் ஸ்ரீகாமாக்ஷி தேவியார்துதிக்க மகாப் பிரளயத்தைப் போக்கி

அவர் வேண்டியாங்கு பாணிக்கிரகணஞ் செய்து கொண்டவராய் நித்தியகலியாண சுந்தரராய் விளங்குகின்றார்.

உமாதேவியார் முன்சத்திரிகோடிகளுடையுமானந்தைப் பாதுகாத்தற்பொருட்டு சிவபெருமானுடைய நேத்திரங்களைப் புதைத்த ஒருமுகூர்த்த காலத்துக்குள் பிரளயகோரமாய்க் காணப்படும் சர்வசங்கார காலத்தில் உலகமெல்லாம் அழிவுறுதல்போல அழிந்து சிருட்டியாதிகள் மாறி உயிர்களியற்ற வேண்டிய கருமங்களெல்லா மொழிந்துபோன அக்காரணத்தால் பாவம் மேலிட்டு அப்பாவங்களெல்லாங் கருமைநிறங்கொண்டு தேவியாரது நித்தியசுந்தரமாகிய தேஜோரூபத்தைக் கருநிறமாக்கியது. அச்சமயத்தில் தேவியார் இறைவன் கண்ணைப் பொத்தியிருந்த கைகளை நீக்கித்தமது திருமேனி மாறுபட்டிருத்தலைப் பார்த்து நடுக்குற்று திகைப்பித்து மனவருத்தமுற்று இதன் காரணம்யாதோவென்று சிவபெருமானைப் பலமுறை பணிந்து ஹே! தேவதேவா!! மஹாதேவா! சுந்தரேசா! சங்கரா! சொர்ணம்போற்பிரகாசிக்கும் என்மேனி பாவரூபமான கருநிறமடைந்து பார்ப்பதற்குச் சகியாத கோரமாகக் காணப்படுங்காரணம் என்னையோவென்று வினவினர். சங்கரர் ஓ தேவியே! இது கருமைநிறமன்று நீ என்னுடைய கண்களை மூடியதனால் வந்த உயிர்களின் பாவத் திரட்சியாமென்றுகூறத் தேவிகேட்டு உளம் நடுங்கி, ஹே! தேவதேவனே!! ஜகந்நாதனே! சரணாகதவத்ஸலனே! கருணாநிதியே! யான்செய்தசர்வாபராதங்களையும் கிருபையினால் க்ஷமித்தல் வேண்டும் என்று துதித்து, இதற்கு யான் செய்துகொள்ளத்தக்க பரிகாரமென்னையென்று கண்ணீரரும்பிநின்று கேட்ப, சங்கரர் நீ விரைவாய்ப் பதரிகாசிரமத்துக்குச் சென்று அங்கு ஒரு குழந்தை வடிவங்கொண்டிருப்பாயாக, அவ்விடத்தில் புத்திரப்பேறு வேண்டிய காத்தியாயன முனிவன் வருவான், அவன் உன்னைப் பார்த்தவுடன் புத்திர காமந்தீர்ந்து மகிழ்ச்சியடைந்து ஞானதிருஷ்டியினால் உன்சொரூபத்தையுமறிந்து தன்னாச்சிரமத்துக்

குக் கொண்டுபோய் (8) வருடம் உன்னைச் சீராட்டியும் பூசித்தும் வருவான். பின்னர் என் ஆஞ்ஞையினால் * யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், இரண்டுகுடம், விசிறி, இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்தபயறு, கங்கைமணல், கங்காதீர்த்தம், குடை இவைகளைத் தருவான். அவைகளைப் பெற்றுக்கொண்டு உடனே மழையின்றி வறுமையடைந்திருக்கும் காசிக்குச்சென்று அன்னதானத்தால் வறுமையைப்போக்கி அன்னபூரணி யென்று பெயர்பெற்று யாவரும் புகழப் பன்னிரண்டுவருடம் அவ்விடத்திலிருந்து எத்திசையினுமிக்க தென்றிசையை நோக்கிச் செல்லக்கடவாய். அப்படிச் செல்லும்பொழுது புலித்தோல் சோமவிருத்தமாயும், குடம் ஆதாரபீடமாகிய அதன் சூத்திரமாயும், மணல் இலிங்கரூபமாயும், ருத்திராக்ஷமாலை வில்வமாலையாயும், குடை நாகாபரணமாயும், யோகதண்டம் திரிசூலமாயும், சாமரைகள் இரண்டுபெண்களாயும், விசிறி ஒளியாயும், குடம் குடதீபமாயும், புத்தகம் காமதேனுவாயும், வித்யாதாரம் ஊசியாயும், வறுத்தபயறு முளையோடுகூடினதாயும், கங்கை பாலாயும் † எந்தவிடத்தில் மாறுகின்றனவோ ‡ அந்தவிடத்தைக் காஞ்சிக்ஷேத்திரமென்றறிவாயாக.

---

* யோகதண்டம்சாக்ஷமாலாம் தீபாதாரம் கடத்வயம், வ்யஜனம் சாமரத்வந்த்வம் வித்யாதாரஞ்ச புஸ்தகம்,— வியாக்ராசனம் தப்தமுத்கம் கங்கா ஸைகதமேவச, கங்காதீர்த்தஞ்ச சத்ரஞ்ச க்ருஹீத்வாச மஹேசானி.— இவற்றால் யோகதண்ட முதலியன தந்தமை காண்க.

† யத்ர வியாக்ராசனம் சோமவ்ருத்தம் தத்ருத்ரகம் கடம், ஸைகதம் லிங்கரூபஞ்ச ஜபாக்ஷா பில்வமாலிகா,— நாகரூபஞ்ச சத்ரம் த்ரிசூலம் யோகதண்டகம், சாமரம் யுவதீயுக்மம் வ்யஜனம் கநகரூபகம்,— கடதீபத்வயம் வஹ்னி ரூபக்தேனுஸ்ச புஸ்தகம், வித்யாதாரம் சூசிகாஞ்ச தப்தமுத்கஞ்ச சாங்குரம், கங்காதீர்த்தம் பயோரூபம் பவேத் யத்ர மஹேசானி, இவற்றால் வியாக்ராசன முதலியன மாறினமைகாண்க.

‡ தத்காஞ்சீநகரம்வித்தி தத்ர சோம சமுத்பவே,— [illegible]

அவிடத்தில் சோமரூத்திரத்துடன்கூடிய அவ்விலிங்கத்தை நாடோறும் க்ஷீரத்தாலபிஷேகித்து நாகாபரணத்தில் எழுந்தருளச்செய்து பில்வமாலையைச் சாத்தி முளைத்த பயறை நிவேதனஞ்செய்து தியானித்து, *பக்கங்களில் இரண்டுஸ்திரீகளைக் காவலாகவைத்து கோக்ஷீரத்தைப் பானஞ்செய்து கிளியைக் கையிற் பிடித்துக்கொண்டு பஞ்சாக்னியை வளர்த்தி அதன்மத்தியில் ஊசியை நாட்டி அதன் முனையில் நின்று என்னைத் தியானித்துத் தவஞ்செய்து வருவாயாக. அப்பொழுது நான் உனக்குப் பிரத்யக்ஷமாகிக் கலியாணஞ்செய்து கொள்ளுகிறேன். அக்கணமே நீ கருமை நிறம் நீங்கப்பெற்று சொர்ணரூபத்தை யடைவாயென்று கூறிய வாய்மொழிகளைக்கேட்டு பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து விடைபெற்று அவ்வாணையின்படியே பதரிகாச்சிரமத்திற்சென்று காத்தியாயன முனிவரை மகிழச்செய்து அவரால் யோகதண்ட முதலியவை பெற்றுக் காசியை யடைந்து அன்னதானஞ் செய்து காசிராஜனுக்கு மோக்ஷமளித்து ஸ்ரீ காஞ்சியை யடை[illegible]மென்றெண்ணி வரும்பொழுது, யோகதண்ட முதலியவை மாறினமைகண்டு இதுதான் ஸ்ரீ காஞ்சிக்ஷேத்திரமென்று தெளிந்து ஒவ்வொரு மாவிருக்ஷத்தினடியிலும் பெருமானைத் தேடித்தேடிக் காணாமல், முடிவில் ஒரு மாவிருக்ஷத்தினடியில் கைலாசத்தில் தமது நாயகரால் சொல்லப்பட்ட வண்ணம் இருக்கக்கண்டு ஆனந்த பரவசத்தோடு ஆச்சரியமடைந்து பூசித்துத் தவஞ்செய்து வந்தனர். அநேக நாட்சென்றும் அவர் அருள் புரியாமையால் உக்கிரமான தவத்தைச் செய்துவரும் நாளில் ஒருநாள் தீர்த்த

தத் ஸைகதம் லிங்கம் பில்வமாலா சமன்விதம், நாகபூஷண சம்யுக்தம் நித்யம் க்ஷீராபி ஷேசிதம்.— முத்காங் குராஞ்ச நைவேத்தியம் கிருத்வா தியாத்வா து சாம்பவி,— இதனால் பூஜிக்கவேண்டிய முறைமை கூறினமைகாண்க.

*பார்ஸ்வயோர் வனிதே ஸ்தாப்ய கோக்ஷீரஸ் ஸமயாசனா:— கரே க்ருத்வா சுகஸ்ரேஷ்டம் பஞ்சாக்நௌ சூசிகோபரி, ஸ்தித்வா மாம்த்யாயதீ பக்த்யா, தபஶ்சரது ஸ்சரம்,— இவற்றால் தவஞ்செய்யு முறைமை கூறினமைகாண்க.

யாத்திரையாய் வருகின்ற நாரதமுனிவர் அவ்விடம் வந்தபொழுது நைஷ்டிக தவத்தோடுங் கூடியிருக்கின்ற கௌரியைப்பார்த்து, அவரைத் தவஞ்செய்யும் காரணங்கேட்டு மிகவும் அன்புடையவராய், ஹே அம்பிகே! உனக்குக் காமேஸ்வராகிய பெருமானார் சீக்கிரத்தில்பிரத்தியக்ஷமாகும் வண்ணம் ஓர்மந்திரத்தை யுபதேசிக்கின்றேனென்று பஞ்சபாணமந்திரத்தை யுபதேசித்து விடைபெற்றுத் தென்திசையைநோக்கிச் சென்றனர்.

அதன்பின்னர், அம்பிகை அம்மந்திரத்தைத் தம்முடைய ஜன்மநக்ஷத்திரமாகிய பூரநக்ஷத்திரந்தொடங்கி ஆறுமாத காலம்வரையில் விடாது ஜபித்துத் தவஞ்செய்துவர, அப்பஞ்சபாணமந்திரோச்சாரணையினாலுண்டாகிய அக்கினி கையிலாயத்திற் பரவி வீசிற்று. அப்பொழுது சிவபெருமானார் இவ்வக்கினிச்சுவாலை தேவியினாற் செய்யப்பட்ட காமமந்திரத்தினாலுண்டாகிய அக்கினியென்றும், இதுவொருவராலுந் தடுக்கமுடியாதென்றும், ஆலோசித்து அடியவர்வேண்டியாங் கருள் புரியுங் காமாரியாகிய வப்பெருமானார் அம்மையார் வேண்டியவாறே பஞ்சபாண மந்திரங்கட்குட்பட்டுக் காம மேலிட்டவர் போன்று யோகினி கணங்களோடுகூடி லீலா விநோதம் புரிந்தும் அடங்கப் பெறாதவராய்ச் சற்றே திருவுளத்துட் பரிபவமுற்றுத் தமது திருமுடியில் வசிக்குங் கங்கையைப் பெருக்கி அவ்வெள்ளத்தில் மூழ்கிச் சிறிது சுகமுற்று மீளவும் அக்கங்கையைப்பார்த்து, உன்னுடைய உருவமாகிய ஜலத்தில் மூழ்கியும் எனக்குண்டாகிய காமாக்கினி சிறிதேனுந் தணியவில்லையாகலான் நீ பார்வதிதவமம்புரியுமிடத்திற்கு மஹா பிரளயரூபிணியாய்ச் சென்று அவளது மந்திரஜபத்தைத் தடுப்பாயென்ன, உடனே கங்கையானவள் அப்பெருமானுடைய ரோமங்களிலிருக்கும் மூன்றரைக்கோடி தீர்த்தங்களையும் ஆகர்ஷித்துக்கொண்டு அத்தீர்த்தங்களுடன் கலந்து வியாபகராய்வரும் சிவபெருமானை இருதய கமலத்திருத்தித் தியானஞ்செய்து மிகவும் சீசள

சொரூபிணியாய் அதிவேகமாய்ப் பேரலைகளோடு நந்திசைலமென்கிற மலையையடைந்து அங்கிருந்து ஏகமுகமாய் மஹாதேவி தவம்புரியுமிடத்தை நோக்கிவந்தனள். அதனை உமாதேவியார் பார்த்துக் *கம்பம் கம்பமென நடுக்கமுற்று அப்பிரளயத்தைத் தடுக்க வெளிலித் தமது தோழியருள் ஒரு சத்தியைப்பார்த்து, ஹே தோழி! இவ்வெள்ளத்தைப் பார்த்தனையா? இதனைப் பார்க்கும் பொழுதே எனக்கதிக பயங்கரமாக விருக்கின்றது. இதனை நீ பந்தனைசெய்வா யென்றேவ, அந்தக்காளி அவ்வெள்ளத்துக் கெதிரேநின்று தன்கையிலிருந்த விஸ்வபக்ஷணமென்னுங்கபாலத்தில் அப்பெருவெள்ளத்தைவெளியேபோகவிடாமல் அந்தக்ஷணமே உள்ளடக்கினள்.

பின்னர், அம்பிகை தனக்குவந்த விக்கினத்தைப் போக்கிய அத் தோழியினிடத்தில் அதிகப் பிரீதியுடையவராய் நீ (மஹாபிரளய பந்தனி) என்று யாவராலும் புகழப்படுவா யென்று [illegible]னார். பின்னர் காமேசர் கபாலத்திலடங்கியிருந்த வெள்ளத்தை ஆயிரமுகந்தோடு மஹாபிரளயமாய் வெளியே வரச்செய்தனர். உமாதேவியார் கபாலத்திலடங்கியிருந்த வெள்ளம் பெருகிவருவதைக்கண்டு இது பிரளயபந்தனியினால் தடுக்கமுடியாதென்று பயந்து தனது சகோதரராகிய விஷ்ணுமூர்த்தியை நினைக்க, அவர் உமாதேவியார்க் குண்டாகிய பயத்தைப் போக்கும் பொருட்டு பூமியிற்பாதங்களும் ஆகாயத்தில்முடியுமாகவிருக்கும்படி நேருக்கொண்டு தனதுகண்டத்தில் சந்திரகிரணம் விளங்க, அவ்வெள்ளத்தைத் தடுப்பார்போன்றுநின்றனர். அவரைக் கண்ட உமாதேவியார் தமது நாயகராகிய சந்திரசேகரரென நிச்சயித்து நடுக்கமுற்றபொழுது, சந்திரகண்ட விஷ்ணுமூர்த்தி கௌரியைப்பார்த்து, யான் சந்திரசேகரனன்று, அவரருளாற் சந்திரகலை கண்டத்தில் வீசப்பெற்று சந்திரகண்டனென்று இங்குவாழ்கின்ற உனது தமயன்என்றுதன்

* பயம் பயம் என்று.

னைத் தெரிவித்து, ஓ சங்கரி! இந்தவெள்ளம் வெள்ளமன்று இதுசாக்ஷாத் சங்கரருடையசொரூபம். அவர் உன்னைச் சோதிக்கும்பொருட்டு இவ்வாறுவந்தனர். ஆகையால் நீ பத்தியுடன் அவரையே துணையெனநம்பி உன்னால் பூஜிக்கப்பட்டுவரும் இந்தச் ஸைகதலிங்கமூர்த்தியைச் சரணமடைந்து ஆலிங்கனஞ்செய்து கொள்வையேயாயின் அக்கணமே கங்காதரராகிய சங்கரர் பிரசன்னராய்க் கருணைகூர்ந்து மகிழ்ந்து, பிரளயத்தைமாற்றிக் கலியாணசுந்தரராய்உன்னை விவாகஞ் செய்து கொள்ளுவர். இது நிச்சயமென்று கூறி ஏகாம்பரநாதருடைய எதிரில் முன்போல் தானிருக்குமிடத்தில் சந்திரகண்டராய் நின்றனர்.

அந்தவிஷ்ணுமூர்த்தி சென்றவுடன் வெள்ளம் பெருக்கெடுத்துவரத் தலைப்பட்டது. அதைக்கண்டதேவியார் இவ்வெள்ளம் எமது பெருமான்மேல் வருதற் கையமென்னையும் இனியான் என்செய்வேனென்று இலிங்கமூர்த்தியைப் பார்த்து எம்பெருமானே! அன்பர்க்கெளியானே! அடியாரிடர்களையும் அண்ணலே! சிவனே! [illegible] எனக்கு நீயேகதியென்று கிண்ணிய அன்புடன் தேகபரவசராய்த் தமது இருகரங்களாலும் மார்பிறுக ஆலிங்கனஞ்செய்து தழுவினர். எம்பெருமானும் பிராட்டியாரது முலைத்தழும்பும் வளைத்தழும்பும் தமது திருமேனியிலழுந்தப்பெறவே அந்தகாரம் அடங்கப்பெறாத பேராவா அடங்கப்பெற்று காமேசராய் அப்பிராட்டியார் தமது அர்த்தாசனத்திலிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது உமாதேவியாரும்தாமடைந்திருந்த காளிமவடிவநீங்கிக் கௌரிநிறம்பெற்றமையால் புதிய கலியாணத்தை விரும்பினர். தேவகணங்களும் ஏனையவிருடிகளும் அம்மையப்பருடைய பேரழகைக்கண்டு கலியாணகோலத்தைக் காணப் பேராசைகொண்டனர். இவர்கள்குறிப்பறிந்த பெருமான் விஷ்ணுமூர்த்தியை நோக்கி நீ எங்களிருவருக்குங் கலியாணமகோற்சவம்நடத்தக்கடவாயாக. நமது கௌரியும் கலியாணகோலத்தில் விருப்புடையவளாயிருக்கின்றாள், முன்னர் அகஸ்திய முனிவருக்கும் இவ்விடத்தில் வரு

டந்தோறுங் கலியாண மஹோத்சவதெரிசனந் தருகின்றோ
மென்று வரங்கொடுத் திருக்கின்றோம். ஆகையால் கலியா
ணம் நடத்துவதற்கு வேண்டிய பிரயத்தினங்களைச் செய்
வீராகவென்று கட்டளையிட்டனர்.

விஷ்ணுமூர்த்தி அக்கட்டளையை ஏற்றுப் [illegible]
தேவர்களைப் பார்த்து ஓதேவர்களே! இந்தக் கலியாணத்தை
முடிக்கவேண்டிய கடமைப் பாடுடையவர் நீங்களேயன்றி
யான் என் செய்வேனென்றுயாவர்க்கும் பிரியமானபலவார்
த்தைகள்சொல்லி நீங்கள்யாவரும் நம்முடைய உலகங்களிற்
சென்று ஆடையாபரண கந்த மாலை முதலியன யாவும் அ
திசீக்கிரமாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று சொ
ல்ல யாவருங் கைகொட்டிக் கூத்தாடி. அவரவருந் தங்கள்
தங்கள் பதங்களுக்குச்சென்று எல்லாத் திரவியங்களையுங்
கொண்டுவந்துநகரமுதலியனவெல்லாம் அலங்கரித்துப்
பெருமானுக்கும் பெருமாட்டிக்குங் கலியாண மஹோற்சவ
மென்றுநாங்களும்பேரிகைமுழக்கி துவஜாரோகணமுதலிய
ன வெல்லாம் [illegible] விதிப்படி செய்வித்து ஒன்பது நா
ளுஞ் செய்யவேண்டிய விழாவையும் முறையாக நடத்திப்
பத்தாநாளாகிய உத்திர தினத்தில் ஏகாம்பரநாதரையும் கா
மாக்ஷிதேவியையும், விஷ்ணுமூர்த்திலக்ஷ்மிதேவியோடுமநீ
னென்ன புண்ணியஞ்செய்தேன் நானென்ன பாக்கியஞ்செ
ய்தேனென்று தோத்திரஞ்செய்து புகழ்ந்துகொண்டே அ
லங்காரஞ்செய்து கலியாணமண்டபத்தில் சகல வாத்தியங்
களுமுழங்கவீற்றிருக்கச்செய்து இலக்ஷ்மிதேவியானவஞ்
ஙீரஞ்சொரியவிஷ்ணுமூர்த்தி ஏகாம்பரநாதருடைய திருவ
டிவிளக்கிப் பட்டாடையாலொற்றிப் பாததீர்த்தமுண்டு மனங்
களித்து மதுபர்க்கத்தைமந்திரத்தையுச்சரித்துக் கொடுத்
தப் பெருமான்திருக்கரத்தின்மேல் கவுரிதிருக்கரத்தைவை
த்து மந்திர நீர்வார்த்துத்தத்தஞ்செய்யப்பெருமானுர் காம
க்ஷியைப் பாணிக்கிரஹணஞ்செய்தனர். பின்னர் பிரமதேவ
ன் சங்க துந்துபி முதலிய பலவாத்தியங்கள் சத்திக்கவும்

வேதமுதலியன கோஷிக்கவும், கற்பகமலர் முதலியன மா
ரியாகப்பொழியவும், அவ்வேகம்பவாணரைக்காமாக்ஷிதேவி
யாருடைய கண்டத்தில் மாங்கலிய சூத்திரத்தைச் சாத்திய
ருளச்செய்தனன். அக்காலத்தில்தேவ யக்ஷ கின்னர கிம்புரு
ட சித்த [illegible]ரியர்முதலிய யாவரும் ஜயஜயவென்றுமுழக்
கமிட்டுப் பலபலவாகத் தோத்திரஞ்செய்து ஆனந்தபரவச
முற்றிருக்குஞ் சமயத்தில் திருமால் அந்தணர் முதலிய யா
வருக்கும் பாயசான்ன வகைகளோடும் பக்ஷியவகைகளோ
டும் சமாராதனை நடத்தி அதன் பின்னர்க் கந்தம் புஷ்பமா
லை தாம்பூலம் தக்ஷிணை முதலியன அவரவர்க்குக்கொடுத்து
மகிழ்ந்திருப்பத் தேவதச்சனாகிய விசுவகர்மா திரிபுரதகன
காலத்தில்பெருமான் ஆரோகணித்த பூரதம் போலும்சுவர்
ணமயமான ரதமும், இந்திரன் படிகத்தினுற்செய்த வெள்
ளிக்குடையும், பிரமன் சடாமகுடம் போன்றஇரத்னமயமா
கியமகுடமும் ஏகாம்பரநாதருக்குமுன்னே கொண்டுவந்து
வைத்து எங்கள் செல்வமே! மனோன்மணியாகிய காமா
க்ஷியுடன் இந்தக் கலியாண சுந்தரகோலத்துடனே இவ்வந்
திப்பொழுதில் இந்த ரதத்தில் ஆரோகணித்து எங்களாற்
கொடுக்கப் படும் முடியையுந் திருமுடியிற் சூடி இந்திரன்
குடைபிடிக்க பாசுபதர்களாய் விளங்கும் தேவசமூகங்களா
கிய அடியார்களெல்லாம் பரமானந்தவெள்ளத்தில் மூழ்கப்
பவனிவரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வண்ணமே
வீதியில் பவனிவந்து ஆஸ்தானமண்டபத்தி லெழுந்தருளி
யிருந்து யாவரையும் பார்த்து அன்பர்களே! ஆகாசகங்கை
யாகிய மந்தாகினி தீரத்திலுள்ள கைலாசபர்வதத்தில் சதா
சிவமூர்த்தியாய் எவ்வண்ணம் பிரசித்தியாய்ப் பிரகாசித்து
க்கொண்டிருக்கின்றோமோ அவ்வண்ணம் இந்தக் காஞ்சி
க்ஷேத்திரத்தில் கம்பாநதிதீரத்தி லிராநின்ற மாவிருக்ஷத்தி
னடியில் காமாக்ஷிசமேதனாய் ஏகாம்பரநாதனென்கிற நாம
த்தோடு வீற்றிருந்து என்னைச் சரண்புகும்யாவருக்கும் த
ரிசனமாத்திரத்தில் சகலகாரியங்களுந் தருவேன். நீங்களு

ம் ஸ்ரீகயிலாயத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் அதிக பிரீதியுடையவர்களாய் என்னுடைய சந்நிதானத்தில் வசித்துக் கொண்டு வருடந்தோறும் வரும் பங்குனியுத்திரத்தில் இந்தக் கலியாணத்தை யுத்தேசித்து மஹாபிஷேக சமேதமான மஹாபூஜையும் அலங்கார சகிதபூர்ண மஹோற்சவமும் அறுசுவையோடு கூடிய சிறந்தவுணவுகளால் பிராம்மணபூஜையும் செய்துவரவேண்டுமென்று ஆஞ்ஞாபித்து அவ்விடத்தில் கலியாண கோலத்துடன் வீற்றிருந்தனர்.

ஏகாம்பரநாதர் இவ்வண்ணம் அநுக்கிரகஞ் செய்த பின்னர் கலியாணகோலத்தோடிருக்கின்ற எட்டுவயதுள்ள கன்னிகையாகிய காமாக்ஷிதேவியானவள் தன்னுடைய நாயகராகிய ரூதநாதரைத் துதித்துப் பின்னர் பக்தானுக்கிரக இச்சையோடு அங்கிருந்த யாவரையும் பார்த்து மிகுந்த பிரீதியுடையவளாய்ப் பங்குனியுத்திரதினத்தில் இவ்வாலயத்தில் எங்களிருவருக்கும் கலியாணத்தைப் பக்தியோடு யார் செய்விக்கின்றார்களோ அவர்கள் சகல பீஷ்டங்களையும் கோடி கன்னிகாதானபலனையும் அடைவார்கள் என்று தனது கருணைநிறைந்திருக்கின்றகையால் அநுக்கிரகஞ்செய்து அந்தச் ரூதநாதருடைய வாமபாகத்தில் வீற்றிருந்தனள்.

அதன் பின்னர் பாசுபதர்களாயிருந்தவரெல்லாம் ஆனந்தக் கடலில் முழ்கினவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து சர்வசக்தியாய் விளங்குகின்ற மஹாசக்தியே இந்தக் காமாக்ஷிதேவியாரும், அந்த மஹாசக்தி நாதராகிய மஹாதேவரே இந்தச்ரூதலிங்கநாதராயும் பிரகாசித்துக் கொண்டு கலியாணவரதரென்றும், முத்திப்பிரதரென்றும், ஏகாம்பரநாதரென்றும் யாவராலும்புகழப்பெற்று விளங்குகின்றாரென்று போற்றிப் பரசிவபதத்தை யடைந்தனர்.

மஹிமை.

காவேரிநதிக்கரையிலுள்ள திருப்பனங்காடென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் யஜுர்வேதியாகிய சம்புவென்னும்

ஓர் வேதியனிருந்தனன். அவன் காஞ்சிநகரத்தின் பெருமையையும் பங்குனி உத்திர மஹோற்சவ மகிமையையுங் கேட்டுத் தான் தரிசிக்கவேண்டுமென் றெண்ணிக் காஞ்சிநகரத்தை யடைந்து கலியாண மஹோற்சவத்தைக் கண்டு களித்து எம்பெருமானே இவ்வைபவத்தை வருடந்தோறும் யான் கண்டு களித் துய்யுமாறு அருள் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு தன் தேசத்திற்குப்போய் பதினாயிரம் வருடம் ஜீவித்திருந்து பின்னர்சிவகணங்கள் விமானங்கொண்டுவர ஸ்ரீ கைலையங்கிரிக்குச் சென்று அங்குசிவகணங்களுடனே வாழ்ந்திருந்தனன்; பின்னர் ஆயிரந் தலைமுறை அவ்வேதியன் வம்சத்தில்வந்தவர்களெல்லாம் ஏகாம்பரநாதருடைய கலியாண வைபவத்தைக் குடும்பசமேதராய் வந்து தரிசித்துத் தங்கள் தேசம் செல்லும் நியதியிற்றவறாதிருந்து முடிவில் ஒவ்வொருவரும் சிவகணங்களா லழைக்கப்பட்டுச் சிவலோகஞ் சென்றனர்.

எட்டாவது அத்தியாயம் ரசாலேசப்பிரபாவம்.

முற்றிற்று.

———

உ

ஸ்ரீகாமாக்ஷிதேவ்யைநம:

ஒன்பதாவது அத்யாயம்.

——[*]——

சர்வதீர்த்த வரலாறு.

மகா புண்ணியகரமாயும், சகல பாவங்களையும் போக்கடிக்கிறதாயும் சகலதீர்த்தங்களும் தன்னிடத்தில் அடங்கியிருக்கப் பெற்றதாயுமுள்ள சர்வதீர்த்தமானது பூர்வத்தில் சிவபெருமான் தேவியை நீங்கி யிருந்தகாலத்தில் தமக்குண்டாயிருந்த காமாக்கினி யானது பின்னர் அத்தேவி தழுவத்தணிந்து, வளைச்சுவடோடு முலைச்சுவடும் பிரகாசித்தவராய்ப் பிரீதியடைந்து, முன் தமது சடைமுடியி னின்றும்

பெருகச்செய்த வெள்ளத்தைக் கண்டு உமாதேவியார் பய முற்ற படியினால் அந்தவெள்ளத்தை யடக்கி அவருடைய த்தைப்போக்குதற்குத் தமது பாதத்தைப் பூமியிலூன்றினதா லுண்டாகியது யாதொரு தடாகமோ அது தடாகமாகும்.

அதில் ஆயிரமுகமாகப் பெருக்கெடுத்து வந்த வெள்ளமானது நந்திமலை, பூமிநாடு, திருப்பாற் கடல் என்கிற இம்மூன்று சம்பந்தங்களை யுடையதாயும், வராகபுரம், பக்ஷி புரம், அம்பிகாபுரம் என்கிற இம்மூன்று புரங்களுடைய மார்க்கத்தையுடையதாயும் ருத (மர்) மூலம், சிவமூலம் என்கிற க்ஷேத்திரவிஸ்த சம்பந்தங்களை யுடையதாயும் செல்லுகின்றபோது சமுத்திர காமினியாகச் சென்று க்ஷீரநதியோடு கூடிக்கலந்து நல்ல பெருவெள்ளமாய்ப் பெருகி யாவர் கண்ணுக்குந் தோன்றுகிறதும் வண்ணம் பூமியில் அந்தர்வாஹினி (கீழ்வழி)யாய் வந்து பாதாளத்தில் விழுந்து விழுந் சலம்போல அதில் விழப்பெற்றதாயுமுள்ளது அச் சர்வதீர்த்தம்.

காமாக்ஷிதேவியுடன் திருமணம் புணர்ந்தபின்னர் முன் தமது ரோமகூபத்தினின்றும் பெருகியமூன்றரைக் கோடி தீர்த்த சமூகமாகிய வெள்ளமானது (பிரளயபத்தனி) என்னுங் கார்க்கையினுடைய கபாலத்தில் அடங்கியிருந்த படி யினால் அந்தக் கபாலவெள்ளத்தையும் அதில் வீழ்த்திருக் கச் செய்தனர்.

இவ்வண்ணம் சிவபெருமான் சர்வதீர்த்தமுண்டாக்கிய பின்னர் காமாக்ஷிதேவியைப்பார்த்து அத்தீர்த்தத்தைக் காட்டி ஹே தேவி! நீ என்னைப்பூஜித்து வந்த காலத்தில் உன்னைப்பயமுறுத்தி உன்னால் கம்பையென்று பெயர்பெற்றநதி யானது இத்தடாகத்தில் வந்துகலந்திருக்கின்றது *பிரளய

* உமாதேவியார் சிவபெருமானார் தம்மைத்தழுவுவதற்கு முன் கங்கைபெருகி மூன்றரைக் கோடி தீர்த்தங்களோடும் கலந்துவந்து பிரயபத்தனியினுடைய கபாலத்திலடங்கி அதினின்றும் ஆயிரமுக மாய்ப் பெருகிய பெருவெள்ளமும், திருமணம் புணர்ந்த பின்னர்

பத்தனியினுடைய கர்வம் வற்றிப் போயிற்றென்று சொல்லியபோது அதனைத் தேவியார்கேட்டு புன்னகையரும்பி அத்தீர்த்தத்தின் மகிமை இத்தன்மைத்தென்றறிந்து அதில் ஸ்நானஞ் செய்ய விருப்பமுடையவராய் அத்தீர்த்தத்தைப் படி முறைகளாலும், மண்டப வரிசைகளாலும், அழகுபெறச்செய்து சங்கற்பங்கூறி ஸ்நானஞ்செய்து அத்தீர்த்தத்தினின்றும் எழுந்திருக்கும்பொழுது யவ்வன முடையவராயும் சௌந்தரிய முடையவராயும் பிரகாசிக்கின்ற மங்களசொரூபமுடையவராயும் விளங்கினர்.

பின்னர் தமது உருவத்தைக்கண்டு மகிழ்ந்து அத்தீர்த்தக்கரையினின்று இருக் யஜுர் சாமவேதியர்களாம் அந்தணர்களுக்குக் கோதான இரணிய தானங்களும் சூரியசந்திர ரிருக்கும் வரையில் சாஸ்வதமான ஜீவனஞ்செய்யப் பூதான இருதானங்களுஞ்செய்து அவ்விடத்தினின்றும் புறப்பட்டுக்காமகோட்டத்தை யடைந்து தருமசாலைகள் ஏற்படுத்தி மகாத்திரிபுரசுந்தரியாயும் மஹாசக்தியாயும் ஆதிசக்தியாயும் இருக்கின்றதேவியை ஆராதித்து மீண்டுந் தருமசாலைக்குத் திரும்பிச் சிரேஷ்டமான (௩௨) தருமங்களையுஞ் செய்து அத்தருமம் எக்காலமு நடந்துவர வேண்டுமென் னும் எண்ணமுடையவராய் அக்ஷயபாத்திரம் காமதேனு கற்பகவிருக்ஷம்சிந்தாமணி என்னும் இவைகளைப்பிரதிஷ்டை செய்து அவைகளைக்கொண்டு அம்முப்பத்திரண்டு தருமங்களையும் யுகங்கடோறும் அழிவின்றிச் சரிவர நடத்த அரசனை யின்றி யமைவாவாகாவென் றென்றும் அழிவில்லாதவராகிய கணபதியை அரசராகவியமித்து முடிசூட்டி அவரிடம் ஒப்புவித்து, பின்னர் காமகோடிபீடத்தில் வசிக்கும் திரிபு

பிரளய பத்தனியினுடைய கபாலத்தி லடங்கியிருந்தவெள்ளமும் சர்வதீர்த்தத்திற் கலந்திருக்கின்றதெனக் கொள்க. இரண்டு முறை யாய்வந்த வெள்ளத்திற்கும் கம்பை என்றே பெயர். இந்தக்கம்பையின் வரலாற்றை முன்சொன்ன எட்டாவது அத்தியாயத்திலும் இந்த ஒன்பதாவது அத்தியாயத்திலுங் காண்க.

நகர்த்தேவியைப் பிரதக்ஷிணமாகவந்து வணங்கிப் போற்றி விடைபெற்று காஞ்சிநகரத்துத் ததிபதியாயிராநின்ற கச்சபேஸ்வரரோடு இவிடஞ் சென்று அவரையும் [illegible] வந்தாய்ப் பூசித்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து [illegible] விடைபெற்று சர்வதீர்த்தத்துக்குப்போய் அந்தத்தீர்த்தத்தைமூன்று பிரதக்ஷிணஞ்செய்து அத்தீர்த்தகரையினின்று தீர்த்தஸ்நானத்தைப் பக்தியுடன் [illegible] சென்று சகலதீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு என்ன பலனுண்டாகுமோ அந்தப்பலன் இந்தத்தீர்த்தத்தைத் தரிசித்தமாத்திரத்தி லுண்டாகுமென்றும், [illegible] பலபுண்ணிய காலங்களில் பலபுண்ணிய தீர்த்தங்களேற்றும் ஸ்நானஞ்செய்தால் யாதொரு பலன்களுண்டாகுமோ அந்தப்பலன்களை இதில் ஸ்நானஞ்செய்பவர் அடையப் பெறுவார்களென்றும் வரங்கொடுத்துத் தனது ஸ்தானத்தையடைந்து வணங்கி அவைகளா வாமபாகத்தையடைந்து நித்யகல்யாணியாய் விளங்கினர். அதுமுதற்கொண்டு காஞ்சியில் யாத்திராவாசிகள் சர்வதீர்த்தத்தைத் தெரிசித்தும்ஸ்நானஞ் செய்தும் அவ்வப் பலன்களைப்பெற்று வருகின்றனர்.

மகிமை.

—காம்பிரபாவிதிரத்தில் அகஸ்தியகோத்ரத்தனும் சாமவேதியனுமாகிய சோமசென்னும் ஓர் வேதியன் மதங்க (சண்டாள) குலத்தவளான அழகிற் சிறந்த வோர் பெண்ணை மோகத்தால் சங்கமஞ்செய்து ஓர் பிள்ளையைப்பெற்றனன். பின்னர் இவ்வேதியனால் பிதுர்த்தேவதைகளை யுத்தேசித்துச் செய்யப்பட்டஸ்ரார்த்தாதிகளனைத்தும் இருமிருபமாகப் போயின. சுவர்க்கத்திலுள்ள பிதுர்த்தேவதைகள் நரகமடைந்தனர். இவைகளையெல்லாம் அந்தப்பிராமணனறிந்து மிக்க வருத்தமுற்று தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டு அங்கங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துகொண்டு முடிவில் ருத்திரசாலையையடைந்துசர்வதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தமாத்திரத்தில் அந்தப் பிராமணனுடைய பிதுர்க்களனைவ

ரும் இப்புண்ணிய விசேடத்தால் கோரமான நரகத்தினின்றும் நீங்கிச் சுவர்க்கமடைந்தனர். பின்னர் இவன் செய்யப்பட்ட ஸ்ரார்த்தாதிகளைப் பிதுர்க்கள் திருப்தியுடையவர்களாய் ஆகாரமாகக் கொண்டார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம் சர்வதீர்த்தபிரபாவம் முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யை நம:

பத்தாவது அத்தியாயம்.

காமகோட்டபிரபாவம்.

காஞ்சி க்ஷேத்திரத்தில் (காமகோட்டமென்பது) வாயு ஆக்கினேயதிக்குகளில் திருவுருவங் கொண்டு விளங்கும் சிவ விஷ்ணு சொரூபங்கள் தானேயாகியபராசக்திக்கு இருப்பிடமாயும், சர்வான்மாக்களுக்கும் சர்வகாமங்களைக் கோடிகோடியாகக் கொடுத்தருளும் ஆற்றலுடையதாயும் விளங்குதலால் அந்தக்ஷேத்திரம் காமகோட்டமெனப் பெயர்பெற்றது.

இதற்குப்பெயர் ஐந்து:

அவையாவன:—

1. ஸ்ரீபுரம், 2. பத்மகாபகம், 3. ஜீவன்முக்திபுரம், 4. காமகோட்டம், 5. காமகோடி.

இதன் எல்லை.

ஏகாம்பரநாதருக்கு க்ஷேத்திராங்கி ஆலயமே	(17) அம்சம் கிழக்கிலுள்ள கிழக்கெல்லை.
க்ஷேத்திராங்கிஆலயத்துக்கு அஸ்திசிவமாலயமே	(15) அம்சம் தெற்கிலுள்ள தெற்கெல்லை.
அஸ்திசிவமாலயத்துக்கு காயாரோகணஆலயமே	(15) அம்சம் மேற்கிலுள்ள மேற்கெல்லை

காயாரோகணத்துக்கு (13) அம்சம் வடக்கிலுள்ள
சுவேதப்பெருமாளாலயமே வடக்கெல்லை.

இந்நான்கெல்லைக் குட்பட்ட பிரதேசம் பஞ்சபாணநிகேதனமெனவும், காமகோட்டமெனவும் பெயர்பெறும். இது ருத்திரசாலைக்கும், விஷ்ணுசாலைக்கும் மத்தியிலுள்ளது.

இவ்விடத்தில் எவர்கள் இஷ்டதேவதா மந்திரங்களை ஜபிக்கின்றார்களோ அவர்கள் அந்தமந்திரங்களில்வரும் அக்ஷரம் ஒன்றாக்குக் கோடிபலனையும், முத்தியையும், யாவர் யாதொருகாமங்களை விரும்புகின்றார்களோ அவர்கள் அக்காமங்களையும் கோடிமடங்கு அடைவார்கள்.

இவ்வெல்லைக்குள்,—

முன்சொன்ன கோஷ்த்திராங்கிக்கு (30) அம்சம் தெற்கில்
* சங்குபாணிவிநாயகர். (1)
சங்குபாணிவிநாயகருக்கு (6) அம்சம் மேற்கில்
குமரகோட்டப்பெருமான். (2)

வரலாறு.

தேவசிற்பியினால் காஞ்சிநகரத்தைப் பிரதிஷ்டைசெய்ய ஆரம்பிக்குங்காலத்தில் வாஸ்துசாந்திசெய்து, சங்குபிரதிஷ்டைசெய்யு நிமித்தம் பூஜிக்கப்பட்டவர் (சங்குபாணிவிநாயகர்) பிரமதேவனைத் தாரகமந்திரம்வினவிச்சிறையிலடைத்துவிட்டுத் தாமே சிருஷ்டிசெய்யுங் கர்த்தராய் அக்கோலங்கொண்டவர் (குமரகோட்டப்பெருமானர்.)

துர்க்கை ஆலயம்.—6.

குமரகோட்டத்துக்கு (24) அம்சம் தெற்குதிக்கிலுள்ளவள்
† உக்கிரவாசினி. (1)
கருக்கினிலமர்ந்தவளுக்கு (10) அம்சம் வடக்குதிக்கிலுள்ளவள்
நாந்தோனி. (2)

* இவர் உலகளந்தப் பெருமாள்கோயிலுக்குத்தெற்கிலுள்ளசங்குபாணிப்பிள்ளையாரென வழங்கப்படுவர். † கருக்கினிலமர்ந்தாளென்றும், மதேவதை யென்றும் வழங்கப்படுவள்.

நாந்தோனிக்கு (5) அம்சம் வடக்குதிக்கிலுள்ளவள்
* பஞ்சசந்திகை. (3)
பஞ்சசந்திகைக்கு (5) அம்சம் வாயுதிக்கிலுள்ளவள்
தீர்த்தமாலினி. (4)
தீர்த்தமாலினிக்கு (20) அம்சம் வடக்குதிக்கிலுள்ளவள்
‡ ஹேமாசனை. (5)
பொன்னேரியம்மைக்கு (21) அம்சம் தெற்குதிக்கிலுள்ளவள்
பீடவர்த்தினி. (6)

வரலாறு.

(உக்கிரவாசினி) பிரமனாற் பூஜிக்கப்பட்டவள்;—(நாந்தோனி) சிவபெருமானைப் பூசித்துத் தனுர்வித்தையில் மிகவும் பண்டிதையானவள்;—(பஞ்சசந்திகை) தேவர்கள் தங்கட்கு நேர்ந்தவிக்கினங்களைப் போக்கிக்கொள்ளுவதற்குவேண்டியபலிகளைக் கொடுக்கும்பொழுது அவைகளையேற்று, அவர்கட்கு வேண்டிய இதங்களைச்செய்து (ஹிதகாரணி) எனப் பெயர்பெற்றவள்; (தீர்த்தமாலினி) நீலையென்னும் ஸ்திரீ தனக்குண்டாகிய கர்ப்பத்தைக் காக்கப் பூசிக்கப்பட்டவள்;—(ஹேமாசனை) கோரக்ஷசித்த ரென்பவருக்கு விசேடமான செல்வத்தைக் கொடுத்தவள்; (பீடவர்த்தினி) திரிசிரனைச் சங்கரித்துக் காமகோட்டி பீடத்தைக்காத்தவள்.

விஷ்ணு ஆலயம். 4

முன்சொன்ன பீடவர்த்தினிக்கு (6) அம்சம் வடக்கில்
§ தூர்வாவர்னப்பெருமாள். (1)
தூர்வாவர்னப்பெருமாளுக்கு (12) அம்சம் அக்கினியில்
§ திரிவிக்கிரமப்பெருமாள். (2)
உலகளந்தப் பெருமாளுக்கு (4) அம்சம் வாயுவில்
மதுப்பெருமாள். (3)
மதுப்பெருமாளுக்கு (2) அம்சம் ஈசானத்தில்
காளாங்கப்பெருமாள். (4)

* கச்சபேசராலயத்திலுள்ளவள். † பொன்னேரியம்மையென வழங்குவள். ‡ சாரியம்மை யென வழங்குவள். § பச்சைவண்ண பெருமாள். § உலகளந்தப்பெருமாள் என வழங்குவர்.

வரலாறு.

(ஆம்ரவர்ணப்பெருமாள்) மன்மதனாகிய புத்திரனைப் பெறுதற்குக் காமாக்ஷிதேவியினாற் பூசிக்கப்பட்டவர்,—(திரிவிக்கிரமப்பெருமாள்) பூவுலகைத்தாங்கும்வல்லமையைப்பெறுதற்கு ஆதிசேஷனாற் பூசிக்கப்பட்டவர்,— (மதுப்பெருமாள்) ஓர்காலத்தில் காஞ்சிமண்டலத்தில் தேன்மாரி பெய்வித்தவர்;—(காளாங்கப்பெருமாள்) சந்தானவிர்த்தியுண்டாக மஹாகாளர் என்னும் சிவபெருமானைப் பூசித்தவர்.

சிவாலயம். 5.

முன்சொன்ன காளாங்கப்பெருமாளுக்கு	(4) அம்சம்
சமீபத்தில்	மஹாகாளராலயம். (1)
மஹாகாளராலயத்துக்கு	(35) அம்சம்
ஈசானத்தில்	பட்டாரகேஸ்வரராலயம். (2)
பட்டாரகருக்கு	(39) அம்சம்
தெற்கில்	பணாதரேஸ்வராலயம். (3)
பணாதரேஸருக்கு	(5) அம்சம்
வடக்கில்	பணீஸராலயம். (4)
பணீஸருக்கு	(24) அம்சம்
தெற்கில்	* கச்சபேஸராலயம். (5)

வரலாறு.

(மஹாகாளேஸர்) முருகக்கடவுள் தனக்குப் பிள்ளையாகவரவேண்டுமென்று ஆதிசேஷனாற்பூசிக்கப்பட்டவர்,—(பட்டாரகேஸ்வரர்) ஜகந்நாதா என்பவருக்குக் கவித்துவத்தைத் தந்தவர்; (பணாதரேஸர்) பூர்வத்தில் ஓர்பிரளயகாலத்தில் பனிரண்டு சூரியர்களால் நீலவர்ணத்தையடைந்த படங்களையுடைய சர்ப்பங்களுக்கு முத்தியைக் கொடுத்தவர்,—(பணீஸர்) கத்ரு புத்திரர்களான சர்ப்பராசாக்களைக் கருடபயத்தினின்றுங் காத்தவர் (கச்சபேஸர்) பிரமன், கச்சபமா (ஆமையா)ய்வந்த திருமால், சரஸ்வதி, சூரியன், சாஸ்

* சுவாயம்புவாயுள்ள இலிங்கமூர்த்தி.

தா, [illegible], சுப்பிரமண்ணியர், சனற்குமாரர் என்பவர்களால் பூசிக்கப்பட்டவர்.

தீர்த்தம். 4,—

காமாக்ஷிதேவிஆலயத்துக்குள் ஸ்ரீதேவிக்கு	(1) அம்சம்
மேற்குதிக்கில்	பஞ்சதீர்த்தம். (1)
பஞ்சதீர்த்தத்துக்கு	(24) அம்சம்
தெற்குதிக்கில்	காயாரோகணதீர்த்தம். (2)
காயாரோகணதீர்த்தத்துக்கு	(21) அம்சம்
வடக்குதிக்கில்	* இஷ்டசித்திதீர்த்தம். (3)
இஷ்டசித்திதீர்த்தத்துக்கு	(15) அம்சம்
வடக்குதிக்கில்	† சக்கரதீர்த்தம். (4)

வரலாறு.

(பஞ்சதீர்த்தம்) சதாசிவமூர்த்தியினது பஞ்சமுகத்தினின்றுந் தோன்றியது;—சிவபூதங்களிரண்டுக்கு முத்தியையும், பிருதிவிமுதலிய பஞ்சபூதங்களுக்குவேண்டிய சித்திகளையுங் கொடுத்தது;—(காயாரோகண தீர்த்தம்) யயாதிமகாராஜனைச் சரீரத்தோடு சுவர்க்கலோகம்போகச்செய்தது (இஷ்டசித்திதீர்த்தம்) சனற்குமாரமுனிவருக்குச் சாபத்தால்வந்தஒட்டகசரீரத்தைப் போக்கியது,— (சக்கரதீர்த்தம்) கார்த்தவீரியனுக்குச் சாபசரீரத்தைப் போக்கி நிசரூபங் கொடுத்தது.

தீர்த்தபலன்;—

பஞ்சதீர்த்தத்தில் சுக்கிரவாரத்தில் ஸ்நானஞ்செய்வோருக்குக்கோதாவரியில் ஸ்நானஞ்செய்தபலனுண்டாகுமென்று சதாசிவமூர்த்தியும், காயாரோகணதீர்த்தத்தில் குருவாரத்தில் ஸ்நானஞ்செய்வோருக்குசிந்துநதியில்ஸ்நானஞ்செய்தபலனுண்டாகுமென்று தௌம்ய முனிவரும், இஷ்டசித்தி தீர்த்தத்தில் ஆதிவாரத்தில் ஸ்நானஞ் செய்வோருக்கு ந

* இது கச்சபேஸராலயத்திலுள்ளது. † பொன்னேரியம்மை கோயிலுக்கு எதிரிலுள்ளது,

மதையில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாகுமென்று சனற்குமாரமுனிவரும், சக்கரதீர்த்தத்தில் ஜேஷ்ட நக்ஷத்திரத்திலும், பூர்வ பல்குனியிலும், ஸ்நானஞ் செய்வோருக்குக் கண்டகியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாகுமென்று கார்த்தவீரியனும் வரங்கொடுத்தனர்.

ஆக காமகோட்டமாகிய இவ்வெல்லையில் கூங்குபாணி விநாயகராலயம்—1; குமரகோட்டப் பெருமானாகிய முருகக்கடவுளாலயம் 1; துர்க்காலயம்—6; விஷ்ணுவாலயம்—4; சிவாலயம்—5; தீர்த்தம்—4.

கச்சபேஸ்வராலயத்துக்கு (5) அம்சம் ஈசானத்திலுள்ள ஸ்ரீகாமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள் அன்னபூரணி முதல் சந்தானஸ்தம்பம் வரையில் சொல்லப்பட்டவையெல்லாம் இருக்கும் இடங்கள் இனிவருமாறு.

காமாக்ஷிதேவிவீற்றிருக்கும் இடத்துக்கு நிருதியில்
அன்னபூரணிஆலயம்.
அன்னபூரணி ஆலயத்துக்கு வாயுவில்
சாஸ்தாஆலயம்.
சாஸ்தாவாலயத்துக்கு ஈசானத்தில்
அஞ்சனகாமாக்ஷி.
அஞ்சனகாமாக்ஷிக்கு சமீபம் கிழக்கில்
சந்தானஸ்தம்பம்.

வரலாறு.

(அன்னபூரணி) பூர்வத்தில் காசிக்ஷேத்திரத்திலுண்டாகிய துவாதசவருடக்ஷாமத்தை அன்னதானத்தாற் போக்கினவள். இவ்வம்பிகையை அன்னவிர்த்தியை வேண்டினோர் அவரது ஆலயத்தில் (தர்மத்துவாரம்) என்று பெயர் பெற்றுள்ள முன்னேகாணப்படும் சிறிய துவாரத்தை விட்டு அவரது வலப்புறக்கத்திலுள்ள சிறிய துவாரத்தையடைந்து அந்தவிடத்தில் தமது கைகளைவிரித்து மூன்று ஜான் அளந்து மூன்றுதடவையும் (பவதிபிக்ஷாந்தேஹி) என்று பிரார்த்தித்

துவேண்டுவராயின், அவர்பசித்திருந்துவாழும் தாழ்வற்று புசித்துண்டுவாழும் பெருவாழ்வை வேண்டியவாறு பெறுவர். (சாஸ்தா) சுப்பிரமண்ணியக்கடவுளைப்போல் தேவியினுடைய திருமுலைப் பாலை அவ்விடத்திலுண்ணப்பெற்றனர். (அஞ்சனகாமாக்ஷி) விஷ்ணுமூர்த்தியினுடையசாபத்தால் வந்தவிருத்தரூபத்தைக்காமாக்ஷிதேவியினுடைய கடாக்ஷத்தால்நீங்கப்பெற்று அம்மையைப் போல் சர்வானுக்ரஹமூர்த்தியாய் சார்ந்துகாமாக்ஷி என்று வாழ்கின்றனள். (சந்தானஸ்தம்பம்) ஸ்ரீகாமாக்ஷிதேவி அனுக்கிரகத்தால் வைவஸ்வதமநு மூன்று பிரதக்ஷணஞ்செய்து புத்திரனைப் பெறும்வரம்பெற்று அயோத்தியையடைந்தனன்.

காமகோட்டமாகிய சக்திசாலையில் இவையெல்லாம் காமாக்ஷிதேவியினுடைய ஆஞ்ஞையினால் எப்பொழுதுங் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்குக் கைவல்லியமாகிய முக்திகர வாசபலனுண்டாகுமாதலால் இது பூலோக ஸ்ரீபுரமெனப் பெயர்பெற்றது.

மஹிமை.

ஐங்காதிரத்தில் குண்டிலினி நகரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்திரஜனும் ருக்வேதியுமான ஜகந்நாதனென்னும் ஓர் பிராமணன் வேதகிருத்தியங்களையொழித்து துஷ்கிருத்தியங்களைக் கைக்கொண்டு பசு அஜம் மச்சம் இவைகளைக் கொன்று வியாபாரம் நடத்தி அவைகளைத் தானுந்தின்று வாழ்ந்துவருங்காலத்தில், யாத்திரார்த்தமாய்க் காஞ்சியிலிருந்து வந்த பிராமணனுக்குச் சிறிதுபொருள் தந்தனன்.

அந்தக் காஞ்சிப் பிராமணன் அச்சிறிது பொருள்கொண்டு தனக்குவேண்டிய ஆகாராதிகளைச் செய்துகொண்டு காசியையடைந்தனன். பின்னர் ஜகந்நாதன் விஷக்கடியால் இறக்க அவனை யமதூதர்கள் மிக்ககோபத்தோடு பாசத்தாற் கட்டி அக்கினிமயமாகிய தண்டங்களால் மோதி மண்டையைப்பிளந்து அக்கினிச்சுவாலை வீசும் மார்க்கமாய் இயமனிடம் அதிவேகமாய்க் கொண்டு செல்லும்பொழுது தேவியா

ஞ்ஞையால் அவருடைய கணங்கள் அந்தூதர்களைக்கொண்டு விமானத்திலேற்றி தேவிசமீபத்திற் சேர்த்தனர். இம்மனிதைகளைக்கேட்டு அம்பிகையினிடத்திற்சென்று வணங்கி நரகவேதனையை யனுபவிக்கவேண்டிய இம்மஹாபாவியை அடியேன்வசமொப்புவித்தல் முறைமையென்று பிரார்த்தித்தனன். அதுகேட்ட தேவி என் க்ஷேத்திரத்திலிருந்தாயாத்திரையாகப்போன வோர்பிராமணனுக்குச் சிறுபொருளுதவினன் அது எனக்குப் பிரீதியாயிற்று. அதனால் சகல பாபங்களினின்றும் நீங்கினன். இனி இவ்வந்தணனை உன்வசமொப்புவிக்க லடாதென்றுகூற இயமன் யான்கேட்ட பிழையைப்பொறுக்கவேண்டுமென்றுபலமுறையும் வணங்கித் தன துலகம்போய்ச்சேர்ந்தனன்.

பத்தாவது அத்தியாயம்காமகோட்டப்பிரபாவம் முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

பதினொன்றாம் அத்தியாயம்.

பிலாகாசபிரபாவம்.

பிலாகாசமானது இஷ்டசித்தி தீர்த்தத்திற்கு மேன்பும் சமீபஸ்தானத்தில் ஸ்ரீகாமாக்ஷிதேவி வீற்றிருக்கும் ஆலயத்தி லுள்ளது.

இந்தமஹாபிலம் எவ்வளவு விசாலமுள்ளதோ அவ்வளவுவிசாலமாகக் காயத்திரிசொரூபமான மண்டபம் அதனைமறைத்து அதற்கு மறைவிடமாக விருக்கின்றது.

அந்தமண்டபத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறஅந்தப்பிலமானது நாத பிந்து யுக்தமான பரமாகாசவடிவமாயிருப்பதால் (நாதபிந்து சம்ஞ்ஜிதம்பரமம்வியோமம்) என்றும், அந்தப்பரமாகாசம் பிரமத்துக்குச் சரீரமாயிருப்பதால் (ஆகாசசரீரம்பிரஹ்மா) என்றும், அந்தப் பிரஹ்மசொரூபமாகிய பரமசிவனுக்கும் அதுவேசரீரமாயிருப்பதால் (சம்பு

சரீரம்) என்றும், நிஷ்கள சகள சொரூபமாயிருக்கிற பரசிவத்தியானத்தால் அடையத்தக்க மோக்ஷத்தைப் பிரத்யக்ஷமாகக் கொடுப்பதால் (பிரத்யக்ஷம்மோக்ஷதம்பரம்) என்றும், ஞானவான்கட்கு சித்சொரூபத்தை விளக்குவதால் (தேவசிந்நு:)என்றும், உலகத்துக்குக் காமவிலாசமாயிருப்பதால் (ஜகத்காமகளாகரம்)என்றும், பூமிக்கு காமஸ்தானமாயிருப்பதால் (குண்டலினீபதம்) என்றும், பூமிக்குமர்மஸ்தானமாயிருப்பதால்(ஆதிபௌதிகமர்மாங்கம்) என்றும், சர்வகாமங்களு மிருப்பதற்கு ஓர் நகரமாயிருப்பதால்(காமநகரம்)என்றும், எவ்வுலகத்தாராலுங்கொண்டாடப்படும் பிரகாசமுடைத்தாயிருப்பதால் (திவ்யம்) என்றும், பாவங்களைப் போக்கடிப்பதாயிருப்பதால்(அகக்னம்)என்றும், சர்வசித்தியையுங்கொடுப்பதாயிருப்பதால்(சர்வசித்திதம்) என்றும், இந்திரியகருமங்களை யடக்குவதால் (தபஸ்தானம்) என்றும், ஒருவராலுமறியக்கூடாத பரமரகஸ்யமாயிருப்பதால் (சூக்ஷ்மம்பிலம்) என்றும், ஸ்ரீபுரம், திரிமூர்த்திகள், சசசம்பந்தமான சொரூபங்கள், திக்குகள், உலகங்கள், மேரு, கோ ரூபமாகியபூமி ஆகிய இவைகட்கு ஒன்பதுதுளையோடுகூடிய மார்க்கமாயிருப்பதால் (நவத்துவாரஸ்யமார்க்கம்) என்றும் பூமிக்குக் காரணமாகியயோனிஸ்தானமாயிருப்பதால்(பூயோனி) என்றும்,

இஷ்டகாமத்தையுத்தேசித்து யார் யார் எந்தெந்த விதமாகக் கருமங்களை யொருதரஞ்செய்தபோதிலும் அந்தக் கருமங்களை நல்லகருமங்களாக்கிவாக்கி அவர்களுக்குஅந்தக் கருமம் ஒன்றுக்கு ஒரு பலனுகவல்லாமற் கோடிபலனைக் கொடுப்பதா யிருப்பதாலும், குபேரன்போல் சம்பத்தாண்டாகவேண்டுமென்று திரவியத்தைவிரும்புவோருக்குஅத்திரவியத்தைக்கோடியாகக் கொடுப்பதா யிருப்பதாலும், மோக்ஷமானது காமத்தின் கோடியி(முடிவி)லிருப்பதால் அந்த மோக்ஷவின்பத்தைக்கைவிட்டுக் காமத்தையே விரும்புவோருக்கு அந்தக் காமத்தைக்கோடியாகக் கொடுப்பதாயிருப்ப

தாலும், மோக்ஷமானது புருஷார்த்தத்தின் கோடியா (முடிவா)கவிருப்பதால் அந்தக்காமவின்பத்தைக் கைவிட்டு மோக்ஷத்தையே விரும்புவோருக்கு அந்தமோக்ஷவின்பத்தைக் கோடியாகக் கொடுப்பதா யிருப்பதாலும், இங்ஙனம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் தனித்தனியே விரும்புவோருக்கு அவ்வண்ணமே தனித்தனியாயும், அறம் பொருளின்பங்களை விரும்பாது மோக்ஷத்தை மாத்திரம் விரும்பும் மோக்ஷகாமிகளுக்கு அந்தமோட்சத்தோடு ஏனைய மூன்றையும், தருமம் அருத்தம், காமம் என்கிற மூன்றை மாத்திரம் விரும்புவோர்க்கு அவற்றையும், அவற்றோடு மோக்ஷ விருப்பத்தையும் கொடுப்பனவாக விருப்பதாலும், பரசிவமூர்த்தி நெற்றிக்கண்ணினால் தகிக்கப்பட்ட காமனைப்போலக் காமாக்ஷிதேவி தன்னுடைய நேத்திரத்தினின்றும் லீலா மாத்திரமாய்க்கோடிகாமர்களை யுண்டாக்கியதாலும் (காமகோடி) என்றும்,

வீட்டை விரும்புவோர்க்கு அறம், பொருள், இன்பங்களோடு அவர்கள் விரும்பியவீட்டையும், அறம், பொருள் இன்பங்களை விரும்புவோர்க்கு, அவற்றோடு அவர்விரும்பாதவீட்டையும் கொடுத்தற்கு அந்நான்கும் அப்பிலத்தையே யிடமாகக் கொண்டிருத்தலால் (காமகோஷ்டம்) என்றுஞ் சொல்லப்படும்.

சிவபெருமான் முன்னொருகாலத்தில் தாருகாவனத்திற் சென்று ருஷிபத்தினிகளுடைய கற்பையழித்தகாலத்தில் அவர்கள் கணவர்களாகிய ருஷிகள் சிவத்துவேஷிகளாய் அவ்வுருவந் தன்னுருவமாகவே யுடைய சிவபரஞ்சுடரைப் பலவாறன நிந்தைமொழிகளா லிகழ்ந்து, பின்னர் அநாதிசித்தியமாகிய அச்சிவபரஞ்சுடரை அழிக்கவெண்ணிப்புலிபாம்பு மான் கொக்கு முயலகன் உடுக்கை அக்கினி முதலியவைகளை யேவியும் அவையெல்லாம் அவருக்கு அணிகலமாகவும் ஆடைமுதலியன வாகவும் ஆனமைகண்டு மனம்புழுங்கி இவனை இனிக்கண்டோரெல்லாம் நகைக்கும்வண்ணஞ்செய்ய

வேண்டுமென்றுதுணிந்துமிகவும்அகங்காரங்கொண்டு அவியப் போகவேண்டுமென்றுசபித்துப்புலம்பிக்கொண்டிருந்தனர். சிவபெருமானார் (பெண்ணாகியாணாயலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகி) அநாதியே நின்றருளும் தமதியல்புணராது கர்மபிரஹ்மவாதிகளாய்க்கருமத்தையே கடவுளாகமேற்கொண்டிருக்கின்றனர் என்று அவர்களது அறிவின் சிறுமையைத் திருவுளத்தெண்ணித் தாம் அவர்கள் கண்டு நாணமடையும் வண்ணம் சிறிதுபொழுது ஆனந்தக் கூத்தாடிக் கைலாயத்துக் கெழுந்தருளிப் பார்வதியாரோடு வீற்றிருந்தனர்.

இச்செய்தி இங்ஙனமிருக்க. பந்தகனென்னுமிராக்கதன் பிரமனனுக்கிரகத்தாற்சூரியசந்திரர்களிருக்குமளவும்சிரஞ்சீவியா யிருக்கும் வரத்தைப்பெற்று இந்திராதி தேவர்களுக்கு வைரியாயும், சித்தர் முனிவர் முதலியோர்க்குப் பிராணகண்டகனாயும் உலவி எல்லா வுலகங்களையும் வென்று, பின்னர் கைலாயத்திற்குச் சென்றனன். ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானும், கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானுமாகிய இறைவன் அவன்கண்ணுக்குத்தோன்றாமல் தமதுகணங்களோடு மிருப்ப பந்தகாசுரன் தன்பரிவாரங்களோடு கயிலையிலிருந்து எல்லா வுயிர்களையும் பிடித்துக்கொண்டு வாழ்நாளைக் கழித்து வந்தனன்.

இவனது உபத்திரவத்தைச்சகிக்கமுடியாததேவர்கள் கைலாயத்திற்கு வடக்கிலுள்ள கோமுகமென்னுந் திவ்ய க்ஷேத்திரத்திலிருக்கும் பிலத்துட்சென்று காஞ்சிக்ஷேத்திரத்தில் காம கோடியாம் பிலத்தின்வழியாய் வெளியேவந்தனர். அப்பிலமூலத்தில்காமகோடீஸ்வரியாயும், மஹாதேவியாயும், திரிபுரசுந்தரியாயும் எழுந்தருளி விளங்கும் தேவியைத் தரிசித்து நமஸ்கரித்து தங்கள் தங்களுக்கு வேண்டியவைகளைப் பிராத்தித்துக்கொண்டிருக்கும்பொழுது சிவபெருமானார் அப்பிலத்தின் மகிமையைத் தேவர்களுக்குத்தெரிவிக்க அப்பிலத்தினின்றும் வெளிவந்து [illegible] சூரியப் பிரகா

சமாய் திவ்யரூபத்தோடும் நின்று ஓ தேவர்காள்! கோரூபமாய் விளங்கும் பூமிக்குக் கோமுகக்ஷேத்திரம் முகமென்றும், ஸ்ரீபுரம் சிரமென்றும், இமாலயம் கண்டமென்றும், கேதாரம் உதரமென்றும், காசி பிருஷ்டமென்றும், கமலாலயம் அதற்குமூலமென்றும், காஞ்சீகடியென்றும், இக்காமகோட்டிபீடம் அதற்கு நடுவென்றும், அதிலுள்ள பிலம் துவாரமென்றும் சொல்லிவரும்பொழுது தேவர்கள் இறைவரைவணங்கித் தேவரீருடைய திருமேனி எக்காலத்துங் கண்டறியாத திவ்யதேஜசோடும் இப்பொழுது ஒளிவிட்டெரிகின்றதே இதன்காரண மென்னையோவென்று வினவினர்.

பெருமானார் ஓ தேவர்காள்! யான் பூமிதேவிக்கு முகமாகிய கோமுகமென்னும் க்ஷேத்திரத்தின் வழியாய்ப் பிரவேசித்துக் குண்டலினி மார்க்கமாய் இக்காமகோடி பிலத்துவாரத்தின்வழியாய் வெளிவந்தேனாகலான் இவ்வரியவுருவத்தோடும் விளங்குகின்றேனென்றறிவீர். சாதாரணமாய் உலகிலுள்ளவர்கள் பொன்னினால் ஒரு பசுவைப் போலும் உருவமமைத்து அதன் கர்ப்பத்தில் வசித்துப் பின் வெளிப்படுவாராயின் அவர்கள் பிரமதேஜஸைப்பெற்று விளங்குவாரென்றால் சிற்சக்திசொரூபமாகிய இக்காமகோடி பிலத்தின் வழியாய் வெளிப்பட்ட யான் இப்பேரொளியோடும் விளங்குவதுஓர் ஆச்சரியமா? இப்பிலத்தின் பெருமையை யான் என்னென்று கூறுவேன்! ஓ தேவர்காள்! எவனொருவன் இக் காமகோடிபீடத்தை நாடோறுமாவது ஒருவாரமாவது ஒருபக்ஷமாவது, ஒருமாதமாவது பிரதக்ஷணஞ்செய்கின்றனோ அவன் மஹாபாதகனாயினும் முக்தனாவான். பிரதக்ஷிணஞ்செய்து ஒவ்வொரு அடிக்கு ஒவ்வொரு கோசர்ப்பத்தினின்றும் பிறந்தபலனை யடைவான். நாடோறும் பிரதக்ஷிணஞ் செய்பவனடையும் பலன்கள் சொல்லமுடியா, பிரதக்ஷணஞ் செய்யாதவன் தேவனாயினும் அவன் கழுதைக்குச் சமமாவனென்று காமகோடி பிலத்தின் பெருமைகளை யெடுத்துக் கூறி நீங்கள் இப்பீடத்தை வலம்வருவீராயின் பன்

அசுரனால் நீங்களடைந்திருக்குந் துன்பத்தை நீங்கப்பெறுவீர்கள். அவனால் துன்பம் நிவிர்த்தியாகுமளவும் இப்பிலத்தருகிலுள்ள சண்பகவிருக்ஷத்தில் நீங்களனைவரும் கிளிவடிவங்கொண்டு வாழக்கடவீர்களென்று வரந்தந்து போயினர். பின்னர் தேவர்களெல்லாம் சிவபெருமானார் அருளியவாறே அப்பிலத்தை நடோறுந் தவறாமல் பிரதக்ஷணஞ்செய்து கிளியுருவங்கொண்டு சண்பகவிருக்ஷத்தில்பதினாயிரம் வருடம் வசித்திருந்தனர்.

மஹிமை.

நர்மதாதீரவாசியாகிய பலபத்திரனென்னும் ஓர் அந்தணன் (வஜ்ரேஸ்வரி) என்னும் தனது பத்தினியை வெறுத்துத் திரஸ்கரித்துப் பரதாரவிருப்பங்கொண்டு அவர்கள்பால் தன்னிஷ்டப்படித் திரவியங்களை விரயப்படுத்திச்சுகித்துக்கொண்டிருந்தனன். விருத்ததிசை வந்தகாலத்தில் சரீரத்தில் குஷ்டமும், ஆண்குறியிலும் பீஜத்திலும் இரணமும், உண்டாகி நாட்செல்லச் செல்ல ஆண்குறி கழிபட்டு இரணம் மேலிட்டு மிகவும் வருந்தமுறச்செய்ய, அவனைக் கண்ணுற்ற பெரியோர்கள் அநேக ஔஷதப்பிரயோகங்கள் செய்தும் நிவிர்த்திக்கமுடியாமற் போயிற்று. அப்பெரியோர்கள் இது பாபத்தால் வந்த இரணமாதலால் ஔஷதங்களாற் போகாது. பாபபரிகாரத்தாற் போக்குவதே முறைமையாமென்றெண்ணிப் பொன்னாற் பசுவொன்றுசெய்து அதன் கர்ப்பத்தில் அவனை வசித்துவரச்செய்து அப்பொற்பசுவைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்தனர். செய்தும் வியாதிநீங்குதலைக் காணாமல் வருந்திக்கொண்டிருக்குஞ் சமயத்தில் காஞ்சி காமகோடிபீடத்தின் பிரதக்ஷிண மஹிமையைச் சிலமுனிவோரால் கேட்டுஅக்கணமேதன் மனைவியுடன் காஞ்சிப்பதியை யடைந்து ஒருமாதம் வரையில் நாடோறுந் தவறாமற் பிலத்தை நாற்பத்தெட்டுப் பிரதக்ஷிணஞ்செய்துவந்தனன். நாளுக்குநாட் பிணிநீங்கப்பெற்றுச் சரீரகாந்தியையும் புத்திர பௌத்திராதி சம்பத்துக்களையு

மடைந்துப் புண்ணியசீலனாய் வாழ்ந்திருந்து, பின் தேவியி னலனுப்பப்பட்ட விமானத்திலேறி அம்பிகையின் சீரணாரவிந்தத்திற் கலந்தனன்.

பதினொன்றாமத்தியாயம் பிலாகாச பிரபாவம்.

முற்றிற்று.

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

பன்னிரண்டாமத்தியாயம்.

மஹா த்ரிபுரசுந்தரி வர்ணனை.

காமகோட்டமென்கிற விடத்தில் காயத்திரிமண்டபத்தில் பிலாகாசமாகிய பீடத்தில் காயத்திரியாகிய ஓங்காரகோணத்தில் பராசக்திசொரூபிணியாகிய காமாக்ஷிதேவி எல்லாவுலகங்களையும் படைப்பதற்குக் காரணமாயுள்ளசகளவடிவங்கொண்டு பத்மாசனியாய், சதுர்ப்புஜையாய், முக்கண்ணுடையளாய், மூலசக்தி, ஆதிசக்தி, அகிலாண்டேசுவரி, ஆத்மசக்தி பிரஹ்மவித்தை, என்கிறநாமங்களாற்றுதிக்கப்பட்டவளாய், தாமரைமலர்போன்றகாந்தியுடையவளாய், சந்திரசூடாமணியாகிய கிரீடந்தரித்துப்பாசம், அங்குசம், கோதண்டம், (கரும்புவில்) பஞ்சபாணமென்கிற இவைகளைத்தரித்திருக்கின்ற திருக்கரங்களை யுடையவளாய், இருசெவியிலும் சூரிய சந்திரர்கள் காதோலையாய் ஒளிவீச, சிவந்தபட்டாடை புனைந்து திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, சகலசௌபாக்கியங்களையுந் தரவல்ல மாங்கலியம் கண்டத்தில் விளங்கத் தாமரைமுதலிய மலர்மாலை யணைந்தடாராஜராஜேஸ்வரியாய், ஸ்ரீவித்யாபரமேஸ்வரியாய், திரிமூர்த்திகளால் துதிக்கப்பட்டவளாய், காமேசரால் விரும்பப்பட்டதேவியாய் சிவசங்கரருக்கு ஆத்மசொரூபிணியாய், அச்சங்கரரால் விரும்பப்பட்டவளாய்சகலகலாரூபிணியாய், சர்வதத்வ சொரூபிணியாய், சகலபிரபஞ்சரூபிணியாய், சர்வப்பிராணிசொரூபிணியாய், காலசக்ர ரூபிணியாய், ஸ்ரீகாஞ்சி நகரத்திற்கு ஈசையாய், அவ்விடத்தில் சரண்புகுவோர்க்கு சகலாபீஷ்

டங்களுந் தரும் பிரதானியாய், இலக்குமி சரஸ்வதி என்னும் இருவரும் இடம் வலம் என்னும் இரண்டுபக்கங்களினின்று வீசப்பட்ட சாமரங்களை யுடையவளாய், சதாசிவாதி மூர்த்திகளுக்கும் கௌரியாதி சக்திகளுக்குங் காரணியாய், காமகோடி என்றும், திவ்யமங்களரூபிணியாகிய காமாக்ஷி என்றும், சூக்ஷ்மலிங்க காரணி என்றும், சூதபீஜ அர்த்தரூபிணி என்றும், சிவனுருக்கதிகை என்றும், சிவாங்கத்தி லிருப்பவளென்றும், சிவமூர்த்தி என்றும், சிவத்தைக் கொடுப்பவளென்றும், மஹா காமேசருக்கு மஹிஷி என்றும், மஹாத்ரிபுரசுந்தரிஎன்றும் சொல்லப்படுந் திருநாமங்களாற் பிரசித்திபெற்ற ஸ்ரீசங்கரநாயகியாய் வீற்றிருக்கின்றனள்.

அங்ஙனம் வீற்றிருக்கின்ற தேவியை சிவாஞ்ஞையால் கிளிரூபமாய்ச் சண்பகவிருக்ஷத்தில் வசிக்கின்ற தேவர்கள் ஹிருதயகமலத்தில் தியானஞ்செய்து, பந்தகாசுரனை நாசப்படுத்தவேண்டித் தவம்புரிந்து வந்தனர். அம்பிகை அவர்களது தவத்துக்கிரங்கித் தயையுடையவராய்ப் பிரளயகாலாக்கினி சொரூபிணியாய் மிக்ககோபத்தோடும் பிலத்தினின்றும் வெளிப்பட்டு எல்லாவுலகங்களையும் பஸ்மீகரப்படுத்தி, பஸ்மீகரப்படுத்திய அவ்வெளியில் நிர்க்குணையாகிய தேவியானவள் சகுணமாகிய திருவுருவங்கொண்டு காயத்திரிமண்டபமத்தியில் தானொருத்தியாகவே யிருந்து தனது வாமநேத்திரத்தில் விஷ்ணுவையும், தக்ஷிணநேத்திரத்தில் பிரமனையும், பாலநேத்திரத்தில் உருத்திரமூர்த்தியையும் சிசுரூபமாக உண்டாக்கிப் பிரமனுக்குச் சிருஷ்டி வித்யாத்மகமாகிய பாலையும், விஷ்ணுவுக்கு ஸ்திதி வித்யாத்மகமாகிய பாலையும், உருத்திரமூர்த்திக்குலய வித்யாத்மகமாகிய பாலையும் ஊட்டிமறைந்தனள்.

திரிமூர்த்திகளும் பாலுண்டவளவில் யவ்வனரூபமடைந்து, உலகம் சூன்யமாயிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்து சொப்பனத்திற்காணும் பொருள் மறைதல் போல போயிற்றே என்று ஒருவர்க்கொருவர் பேசிப்பயமடைந்தவ,

ர்களாய்ப் பின்னர் ஆலோசித்துத் தாம் செய்யத்தக்க தொ
ழில்களை யெண்ணிப் பிரமன் முன்னிருந்த ஸ்தாவரஜ
ங்கமமாகிய வுலகத்தைப் படைக்கவும், விஷ்ணுருத்திரர்கள்
காத்தல் அழித்தலாகிய தொழில்களைச்செய்யவும், ஆரம்பி
த்தகாலத்தில் பந்தகாசுரனுல் உலகம் விருத்தியடைந்தது.

சண்பகவிருக்ஷத்தில் கிளிரூபமா யிருந்த தேவர்கள் ஒ
ரு ஜாமத்துக்குள் தேவி திரிமூர்த்திகளைப்படைத்து உலகத்
தைச் சிருஷ்டிப்பித்த வதிசயத்தை யொருவர்க்கொருவர்
பேசி இன்னும் என்ன அதிசயம் விளையுமோவென் றெதிர்
பார்த்திருந்தனர். அவர்களங்ஙனமிருக்க, திரிபுரசுந்தரியா
கிய அம்பிகை திரிமூர்த்திகளைப் படைத்த பின்னராகிய ம
றுநாளிரவில் ஸ்ரீகைலாயத்தில் பந்தகாசுரன் நித்திரைசெய்
வதைப் பார்த்துக் கோபங்கொண்டவளாய் ஒருபாதத்தைய
வனது கண்டத்திலும், மற்றொருபாதத்தை யவன்மார்பிலு
ம்வைத்துப் பதினெட்டாயுதங்களோடுகூடிய பதினெண்புஜ
ங்களையுடைய பைரவரூபிணியாய் அவனது சிகையைப்பல
மாய்ப்பிடித்துக்கொண்டுசக்கராதி ஆயுதங்களால் அவனது
புத்திர பௌத்திர பந்து மித்திர பரிவாரங்க ளிருக்குமிடங்
களில் க்ஷணத்துக்குட் சென்று அவரவர்களை அந்தந்த க்ஷ
ணமே கொன்று சூரியோதய காலத்தில் ஐந்து வயதுடைய
கன்னிகையாய்க் காமகோடி பீடமாகிய பிலத்துவாரத்தை
வந்தடைந்தனள்.

அப்பொழுது அங்கிருந்த தேவர்கள் கன்னிகை உரு
வமர்கிவந்த அம்பிகையினது திருக்கரத்தில் பர்வதாகிருதி
யாயிருக்கின்ற பந்தகாசுரனுடைய சிகை சிக்குண்டிருக்குங்
கோரத்தைக்கண்டுபயந்து பின்மரணமடைந்தானெனத்தெ
ளிந்து, சகலலக்ஷணந்தோடுங்கூடிய அதிசுந்தரமாகிய திருமே
னியுடையவளாயும், சர்வாபரணங்களால் அலங்கரிக்கப்பட்
டவளாயும், நெருப்பிலிட்ட பொன்போல் ஒளிவிடுந்திவ்யமா
கிய பீதாம்பரந் தரித்தவளாயுங் காணப்படும் கன்னிகையை
க்கண்டு துந்துபி, சங்கம், பேரிகை, படகம், காகளம், புல்

...ல், தாளம், வீணை, மத்தளம், முதலிய பலதேவவா
த்தியங்களை முழக்கி, தாமரை, மல்லிகை, முல்லை, பாரிஜாத
ம், சண்பகம்முதலிய தேவமலர்களையும், கஸ்தூரிமுதலியசு
கந்தங்கள் கலந்த சந்தனக் குழம்பையும் மழைபோல் வாரி
யிறைத்து, உனக்குஜயமுண்டாகுக, மங்களமுண்டாகுக
வென்று போற்றிப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் பலசெய்து,
ஹே கல்யாணி! ஹே! தேவி! நீயார்? எங்கிருந்து வருகின்று
ய்? இந்தப் பந்தகனவன் உன்னுல் ஏன் கொல்லப்பட்டா
ன்? எவ்விதமாகக் கொல்லப்பட்டான்? இவனிறந்தது மிக
ஆச்சரியம்! பிரமனுதியாகச் சொல்லப்பட்ட நாங்களனை
வரும் இவனுல் பிடிக்கப்பட்டிருந்தோம். இது நிற்க, எந்த
க்காரணத்தினுல் பிலத்தினின்றுந் தோன்றிய அக்கினியினு
ல் எல்லாவுலகங்களும் கொளுத்தப்பட்டன? இவையாவும்
சொல்லவேண்டுமென்று கேட்க, தேவி இக்காரணங்களைப்
பின்னர் கூறுகின்றேன் என்று பிலத்தைவிட்டு வெளியே வ
ந்து நின்று, நீங்க ளிப்பொழுது இவ்விடத்தில் ஓர் பள்ளந்
தோண்டி அதில் பிரேதரூபமாயிருக்கின்ற இப்பந்தகனைப்
புதைத்து ஜயஸ்தம்பம் நாட்டி அவ்விடத்தினின்றும் பிலா
காசத்துக்குப் போக ஓர் துவாரமமைத்து, அதற்கருகான
தெற்கில் பிலத்தின்வெளி எவ்வளவு இருக்கின்றதோ அவ்வ
ளவும் வேதங்களையே நாற்சதுரங்களாக வமைத்து, அதில்
காயத்திரியினுடைய வர்ணங்களையே இருபத்துநான்கு கால்
களாக நாட்டி, வியாக்ருதியாகிற மூன்றக்ஷரங்களை மூன்று
கண்டங்களாகச் செய்து, காயத்திரிமண்டபமென்று பெய
ரிட்டு, அம்மண்டபத்துள் பிரணவத்தை மாணிக்கமயமான
சிங்காசனமாக வமைத்து, அப்பீடத்தின்மேல் கன்னியாரூ
பமாக விருக்கின்ற என்னைப்போல் ஒரு பிம்பப்பிரதிஷ்டை
செய்து, ஷடாதாரங்களிற் காணப்படும் ஷட்தரிசனசொரூபி
ணியாயும், நவாவரணமத்தியி லிருப்பவளாயும், பிலத்துக் க
திபதியாயிருக்கிற பராசத்தியை ஷடாம்நாய மென்கிற மந்
திரமுறையால் அந்தரியாகமுறையின்படி யருச்சித்துப் பின்

ஆவாகித்துப் பால் தயிர் தேன் இளநீர் முதலிய அபிஷேகத் த்திரவியங்களால் அபிஷேகித்துச் செந்நிறமுள்ள புஷ்பங்களாலும், அக்ஷதைகளாலும், தூபதீபநைவேத்திய ஆர்த்தி ஜபமென்கிற பஞ்சோபசாரங்களால் விதிப்படி ஆராதித்து, சுகந்த சம்பந்தமாயுள்ள சகல திரவியங்களாலும் லேபனஞ் செய்து, பிலத்துவாரத்தில் கொடுக்கவேண்டிய பலிகளுங் கொடுத்து, கதவைமூடிவிட்டு வெளியேயிருந்து சூரியோதய மாகுமளவும் மௌனமாயிருந்து என்னைத் தியானித்து ஸ்ரீவித்யா மந்திரத்தை ஜபித்து, ஜபசமர்ப்பணை செய்து, உதயமானவுடன் கதவைத்திறந்து என்னைத் தெரிசனஞ்செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு விடைகூறுகின்றேன். அதுவரையில் என்னை யொன்றுங் கேட்கவேண்டாம் என்றனள்.

அதுகேட்ட தேவர்கள் வணங்கித் தேவி கட்டளையிட்டவண்ணம் பந்தகனைப் புதைத்து, வெற்றிக் கொடியாகத் துவஜஸ்தம்பத்தை நாட்டி, காயத்திரி மண்டபபிரதிஷ்டையும், அதன்பின் செய்யவேண்டிய பூஜையையும், அர்த்தராத்திரியிற் செய்து, கதவைமூடி, அருணோதயம் வரையில் மந்திரத்தை ஜபித்திருந்து, பின் அருணோதய காலத்தில் ஆசாரத்தோடு கூடினவர்களாய்க் கதவைத்திறந்து பார்க்கும்பொழுது தாங்கள் பிரதிஷ்டைசெய்திருந்த விக்கிரகத்தைக் காணாமல் ராஜராஜேஸ்வரியாகிய திரிபுரசுந்தரி ரூபத்தோடும் ஆவிர்ப்பவித்திருப்பதைக் கண்டனர்.

அந்த ஆவிர்ப்பவகாலமாவது சாவித்திரி கல்பம். சுவாயம்புமனுவினுடைய தாமசகாலம். கிருதயுக ஆரம்பம். விஷ்ணு மோகினிரூபங்கொண்ட சமயம். ஸ்ரீமுகவருடம். சூரியன் கும்பத்திலிருக்கின்றபால்குனமென்கிற பங்குனிமாசம். கிருஷ்ணபக்ஷம். பிரதமை திதி. பூராஷாடநக்ஷத்திரத்தின் மத்திய காலம், ஐந்தாம் ஜாமம். சுக்கிரவாரம் உதயகாலம்.

அந்தச் சுபதினத்தில் காணப்பட்ட ராஜராஜேஸ்வரியைத் தரிசித்து, இது வென்ன வாச்சரியமென்றும், தேவி

யினுடைய சரித்திரம் மிகவற்புதமென்றும், ஹே ஜெயதேவி! ஜகன்மாதா! திரிபுரசுந்தரீ! என்றுந் தோத்திரஞ் செய்து நமஸ்கரித்து, நாங்கள் பிரதிஷ்டைசெய்து பூசித்த அம்பிகை எங்கே? பந்தகாசுரனைக் கொன்று அவனைக்கொண்டுவந்து பிலத்தருகே நின்ற கன்னியாரூப மெங்கே? அந்த இரண்டுசொரூபங்களையுங் காண்கிலேம். இப்பொழுது உன்னைத்தான் காண்கின்றேம். நீ யாரோ அறியோம்? எங்களுக்கு அந்தக் காரணங்களைக் கிருபையோடு சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, திரிபுரசுந்தரி ஓ தேவர்களே! நான் அந்தக் காரணங்களைச் சொல்லுகிறேன். சாவதானமாய்க் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினள்.

ஓ தேவர்காள்! உங்களுடைய இதத்தின் பொருட்டுப் பிரளயகாலாக்கினி சொரூபமாய் அர்த்தராத்திரியில் இந்தப்பிலத்தினின்றும் வெளிப்பட்டுச் சர்வசகத்தையும் பஸ்மீகரஞ்செய்து ககார, அகார, மகார சொரூபிகளென்று சொல்லப்பட்ட பிரம்ஹா, விஷ்ணு, உருத்திரர்களைச் சிருஷ்டியாதி தொழில்களை யுத்தேசித்து என்னுடைய மூன்று கண்களினின்றும் உண்டாக்கி, திரிபுரசுந்தரியாகிய நான் காமாக்ஷி என்கிற பெயர்பெற்றேன்.

அந்தத் திரிமூர்த்திகளும் தங்கட்குரிய தொழில்களைச் செய்ய வுத்தேசித்துப் பிரமன் சிருஷ்டிசெய்த பொழுது, உங்கள் பகைவனாகிய பந்தகாசுரன் முன்போல் தோன்றினன். அதைக்கண்ட நான் பைரவ ரூபங்கொண்டு, அந்தப் பந்தகனைக்கொன்று, அவனது பந்து மித்திரர்களையும் நாசஞ்செய்து பிரேதமாய்ப்போன பந்தகனைச் சிகைபிடித் திழுத்துக்கொண்டு கண்டார் பயப்படத்தக்க என்னுடைய பைரவ ரூபத்தைமாற்றிக் கன்னியாரூபங்கொண்டு, மஹாபிலத்தினின்றும்வெளிப்பட்டு நீங்கள் காணுமாறுவந்தேன். வந்த என்கையில் பந்தகன் பிரேதமாயிருந்தும் நீங்கள்கண்டுபயந்தபடியால் அந்தப் பயநிவர்த்தியின் பொருட்டும், பயநிவர்த்திசெய்வதில்வெற்றியுடையவள்யான் என்பதும் யாவரும்

அறியும்பொருட்டும் அவளைப்புதைத்துஜயஸ்தம்பநாட்டும்படி உங்கட்குக் கட்டளையிட்டேன். நீங்களென்னைப் புகழ்ந்து ஸ்தோத்திரஞ்செய்து அன்பு பாராட்டியபடியால் இந்தப் பிலத்தைக் காயத்திரிமண்டபத்தால் மறைத்து, ஓங்கார சிம்மாசனமமைத்து, அதில் என்னைப் பிரதிஷ்டை செய்யுங்களென்று விதித்தேன். அதுபோலவேநீங்களுஞ்செய்தபடியால் நீங்களனைவரும் ஆச்சரியானந்த சாகரத்தில்மூழ்குமித்தமும், உங்களிஷ்டார்த்த சித்தியின் பொருட்டும், சித்சொரூபமாகிய பிலாகாசத்துள்ளே வசிக்கின்ற திரிபுரசுந்தரியாகிய நான் அவ்விடத்து நீங்கள் பிரதிஷ்டைசெய்த பிம்பத்தில் இப்பொழுது பிரகாசிக்கின்றேன்.

இனி நான் இந்தத் திவ்யமாகிய மண்டபத்தில் நீங்காது எப்பொழுது மிருப்பேன். இந்த இடந்தான்மேலானது. இதுதான் எனக்கிடம். இதுதான் அழிவில்லாதது. எக்காலத்தும் அழிவில்லாத காரணத்தால் இதுபிரளயஜித்தெனப் பெயர்பெற்றிருக்கின்றது என்று திரிபுரசுந்தரியாகிய தேவிசொன்னதைத் தேவர்கள் கேட்டு, நமஸ்காரஞ் செய்து ஆராதித்து அத்தேவிக்குப் பிலம் உள்ளிடமா யிருப்பதால் அந்தப் பிலத்துவாரத்திற்கும் நீராஞ்சனமுதலிய உபசாரங்கள் செய்துப் பின்னர் அத்தேவியை அந்தணர்களுடைய ஹிருதயத்தி லிருப்பவளாகத் தியானித்து, அநேகவிதமான பக்ஷிய வகைகளோடு கூடிய அறுசுவையுணவுகளையுண்ணும்படிச் செய்தலாகிய சமாராதனை செய்து, அவர்களுக் கெல்லாம் நல்ல சுகந்தமாகிய சந்தனம், புஷ்பமாலை, வஸ்திரங்கள், ஆபரணங்கள் முதலான இவைகளெல்லாம் இரண்டு பங்காகக் கொடுத்து, அவர்களைச் சந்தோஷிப்பித்து, யாவுந்தேவிக்கே அர்ப்பணமென்றுசொல்லி, ஸ்தோத்திர வகைகளால் அம்பிகையைத் திருப்தி செய்வித்தனர்.

அதன்பின்னர் சிங்காசனத்தில் வீற்றிருக்கின்ற பரமேஸ்வரிக்குப் பட்டாபிஷேக வுற்சவஞ் செய்யவேண்டுமென்றெண்ணித் தேவசில்பி பல்லக்கையும், பிரமன் முத்

துக்கொடையும், விஷ்ணு விருத்தாகாரமாயுள்ள நவரத்னமகுடமும், ருத்திரமூர்த்தி ஸ்ரீசக்கரமென்னும் பதக்கமுங் கொடுக்க, தேவர்கள் அலங்காரஞ் செய்து, அன்று மாலைக்காலம் மஹோற்சவமா யெழுந்தருளிவரச் செய்து, முன் போல் பீடத்தில் அம்பிகையை ஸ்தாபனஞ்செய்து, ஹே தேவி! இக்காஞ்சியில் சாந்நித்யமாயிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அம்பிகை நான் க்ஷீரசமுத்திரத்தி லிருக்கும் ஸ்ரீபுரத்தில் எவ்வாறு சாமர்த்திய ரூபிணியாய், சக்தியென்கிற பெயருடையவளா யிருக்கின்றேனோ அவ்வாறே இவ்விடத்தில் காமாக்ஷி என்னும் பெயருடன் சநதாஞதி வரங்களைத் தருபவளாய் வசித்திருக்கின்றேன். ஆகையால் நீங்கள் என்னை நாடோறும் தரிசித்துவாருங்கள். ஸ்ரீபுரத்தைக் காட்டிலும் இது அதிகம் என்று யாவருக்கும் ஆஞ்ஞைசெய்ய, உருத்திரர்முதலிய யாவரும் மிகவும் சந்தோஷித்தவர்களாய் ஸ்தோத்திர நமஸ்காராதிகள் செய்து, எவர் அம்பிகையை யுற்பத்தியான தினத்தில் பூஜிக்கின்றார்களோ அவர்கள் கோடி யஜ்ஞபலத்தை யடைவார்களென்று அநுக்கிரகித்து மறைந்து போயினர்.

பின்னர் உருத்திரமூர்த்தி தூர்வாசராய் அநேக சீடர்களுடன் கூடி, உள்ளே பிரவேசித்து விசுவாமித்திரர், கௌதமர், காசிபர், அத்திரி, பரத்துவாசர், அகஸ்தியர் முதலானவர்களையும், அவர்களுடைய புத்திரர்களையும், பஸ்மமும், பவளத்தினற்செய்த மேருவோடுகூடிய சொர்ணருத்திராக்ஷமும், சௌபாக்கியமான குங்குமமும், தேவி ஆஞ்ஞையினால் தரித்துக்கொள்ளும்படிச் செய்துப் பிரஹ்மகல்ப பரிமித்தம் சிந்தாமணி என்கிற தந்திரப்படி அம்பிகையைப் பூசித்து வரும்படி ஆஞ்ஞைசெய்து நான் இக்கிருதயுகத்தில் தூர்வாசமகருஷியையும், திரேதாயுகத்தில் பரசுராமரையும், துவாபரயுகத்தில் தௌம்மியாசாரியரையும், கலியுகத்தில் மூகாசாரியரையும் அதிஷ்டித்து, முறையே கிருதயுகத்தில் இரண்டாயிரமும், திரேதாயுகத்தில் ஆயிரத்

தைஞ்நூறும், துவாபரயுகத்தில் ஆயிரமும், கலியுகத்தில் ஐந்நூறுமாகத்தோத்திரஞ்செய்து, காமாக்ஷிஸ்தவம் என்கிறதாக உலகில் வழங்கச்செய்வோ மென்றுகூறி, பின் தம்மை அந்த மகருஷிகளெல்லாந் தூர்வாசரென் றறியும்படிச் செய்து, என்னை நீங்கள் ஆசாரியராகப் பூசித்து, நீங்களனைவரும் எனக்குச் சீடர்களாக இருத்தல் வேண்டுமென்று கட்டளையிட்டு, தேவியை ஆன்மார்த்தமாகப் பூசிக்கும் நிமித்தம் பிம்பரூபமாகவே அங்கிருந்தனர். தேவியும் அவருடைய பூஜையை ஏற்றுக்கொண்டிருக்கு நிமித்தம் அவரெதிரில் வீற்றிருக்கின்றனள்,

மஹிமை.

கோதாவரி தீரத்தில் ஜமதக்னிகுலத்துதித்த கிருஷ்ண வேதியான ஜயதேவரென்னும் பிராஹ்மணன் பஞ்சவடிதீரத்தில் அநேகநாள்வாசஞ்செய்துவருநாளில் ஊழ்வகையால் வந்த வறுமையால் மிகவும் பீடிக்கப்பட்டுப்பூர்வபுண்ணியப் பிரேரேபணையால் யாத்திரை செய்துவரத் தொடங்கி அநேகக்ஷேத்திர யாத்திரைகள்செய்து கடைசியில் காமகோடிக்ஷேத்திரத்தை யடைந்து அம்பிகையினுடைய தரிசன மகிமையினால் வறுமை நீங்கப் பெற்று மீண்டுந் தன் தேயத்தைப்போய்ச் சேர்ந்து சகலசம்பத்துடன் வாழ்ந்திருந்தனன்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.
பந்தகாசுரவதை
முற்றிற்று.

உ

திரிபுரசுந்தர்யைநம:

பதின்மூன்றும் அத்தியாயம்.

பூதபந்த வரலாறு.

காமகோட்டமாகிய மஹாபிலத்தில் வீற்றிருக்கும் திரிபுரசுந்தரியாகிய தேவிக்கு மிகவும் சமீபஸ்தானமாகிய மேற்கில் திருமால் மூன்றுவிதமான திருக்கோலமாய் வீற்றிருக்கின்றனர்.

பூர்வத்தில் திரிபுரசுந்தரியாகிய தேவி தேவர்களுடைய ஹிதத்தை யுத்தேசித்துக் கொன்ற பந்தகனைப் புதைப்பதற்கு ஓர் பள்ளந் தோண்டவேண்டுமென்று தன்னுடைய காற்பெருவிரலால் தன்னைக்கண்டு தோத்திரஞ்செய்த தேவர்களுக் கிடங்காட்டிய காலத்தில் அத்தேவர்கள் அவ்விடத்தில் பள்ளந்தோண்டுங்கால் மல்லகனென்னும் அசுரன் எங்குந் தவாக்கினி வீச அதியுக்ரமாகத் தவஞ் செய்வதைப் பார்த்தோடினர். அப்பொழுது அத்தேவர்களுக்குள் தீரராகிய விஷ்ணுமூர்த்தியானவர் அவன் தவஞ்செய்கின்றானென்பதை யெண்ணாமல் அவனைக் கொல்லும் பொழுது அவ்வசுரனுடைய சரீரத்தினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு ரக்தபிந்துவினின்றும் அநேக அசுரர்கள் ஒருக்ஷணத்துக்குட் டோன்றிப் பெருங்கூட்டமாய்ப் போர்க்கெழுந்தனர்.

அதுகண்ட விஷ்ணுமூர்த்தியானவர் சிறிதும் இளைக்காதவராய் அந்தக் கூட்டங்களோடு போர்செய்து வரும்பொழுது அவைகள் மாளாது சிதறுகின்ற ரக்தத்துளிகளினின்றும் விருத்தியாய் வருதலைப் பார்த்து உருத்திரமூர்த்தியைத் தியானிக்க அக்கணமே அவ ரங்கெழுந்தருளித் தம்முடைய சடையை விரித்துப் பூமியிற்றட்டி ஆண் பெண்ணாகிய இரண்டு பூதங்களையுண்டாக்கி மேன்மேல் அசுரவிருத்தி

களாகாவண்ணம் சிதறுகின்ற ரக்த பிந்துக்களை யெல்லாம் உண்டுவரக் கட்டளையிட்டுப் போயினர்.

அதுபோலவே அப்பூதங்கள் அந்தரக்தபிந்துக்களை விடாமலுண்டுவரவே அவ் வசுரக்கூட்டங்கள் தோன்றுதொழிந்தன. அவைக ளொழியவே அவர்களுடைய உதிரபானஞ் செய்துவந்த பூதங்களிரண்டும் வெறிகொண்டு மதிமயங்கி அசுரத்தன்மை யடைந்து விஷ்ணுமூர்த்தியோடு போர் செய்யத் தொடங்கின. அதுகண்டஅவர் இதுவும் ஆச்சரியந்தானென்றெண்ணி அப்பூதங்களைப்பிடித்துக் கீழேதள்ளித் தாம் மிகவும் கிட்டமுள்ளவராய் அவைகளின்மீது காலைவைத் தழுத்திநின்றனர். அப்பூதங்களிரண்டும் அவ்விஷ்ணுவைக்கீழேதள்ளிமேலேநின்றன. விஷ்ணுமூர்த்தி அதுகண்டு உக்கிரங்கொண்டு அவைகளை மீண்டும் கீழேதள்ளி அவைகளெழுந்திராவண்ணம் மிகவும் பலங்கொண்டு தொடைகளின்மீ தமர்ந்தனர். பின்ன ரப்பூதங்கள் விஷ்ணுவைக் கீழேதள்ளிவிட்டு மேலுலகம்போகத் தலைப்பட்டன. விஷ்ணுமூர்த்தி அவ்வகைகளைக் கீழேதள்ளிக் கால்களால் மிதித்துமேலே படுத்துக் கொண்டனர்.

அதன்பின்ன ரவை மதமொழியப் பெற்றுச் சுபாவகுணமடைந்து விஷ்ணுவைப் பார்த்து ஓ திருமாலே! நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டு மென்றுப் பிரார்த்திக்க அவைகளை விஷ்ணுமூர்த்தி பார்த்து நீங்கள் ராக்ஷசர்களுடைய உதிரபானஞ் செய்தபடியால் மதமேலிட்டு வெறிகொண்டு சுபாவ அறிவுங்கெட்டு என்னோடு போர்செய்யத் தலைப்பட்டீர்கள். யானும் உங்களுக் குண்டாகிய மதத்தைப் போக்க உங்களைக் கீழேதள்ளி நின்றும் இருந்தும் கிடப்பவனாயினேன். நீங்கள் என்னோடுபோர்செய்ய வந்ததுங் குற்றமே, சிவபெருமானார் சடையில் வந்தவுங்களை நான் பங்கப் படுத்தியதுங் குற்றமே என்று தயையோடுசொல்லி விட்டுத் திரியம்பகராயும், உமாநாதராயும், சங்கரராயும், பஞ்சானனராயு மிருக்கின்ற சதாசிவமூர்த்தியைத் தியானிக்க

அவர் பிரத்தியக்ஷமாய்த் தனது சடைமுடியிலுள்ள லோகபாவனியாகிய ஜாஹ்னவியை ஐந்து சடைமுடியினின்றும் ஒழுகிவரக் கட்டளையிட்டனர்.

அக்கங்காதேவியும் சடைமுடியினின்றும் மகாப்பிரவாகமாகப் பெருக்கெடுத்து நதிரூபமாய்வந்து காமகோட்டத்தில் ஐந்துமுகமாய் விழுந்தனள். விழவே சிவபெருமானார் விஷ்ணுவை நோக்கி இப்பூதங்கள் இதில் ஸ்நானஞ்செய்யுமாயின் என்னாணையைக்கடந்து உன்னோடுபோர்செய்தபாவத்தினின்றும் விடுபடுமென்று கட்டளையிட, விஷ்ணுமூர்த்தி என்பொருட்டுத் தேவரீருண்டாக்கிய இப்பூதங்களை யான் துவைத்தும் அடித்தும் பலவாறான அபராதங்களிழைத்தேனாதலால் அச் சிவாபராதம் நீங்குமாறு எனக்கும் அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்திப்ப அவரையும் அதில் மூழ்கிவரச்செய்து அத்தீர்த்தத்தின் மகிமையைக் கூறத் தொடங்கினர். ஹேவிஷ்ணுவே! இத் தீர்த்தம் எனது பஞ்சமுகத்தினின்றுந் தோன்றினமையான் இது பஞ்சதீர்த்தமெனப் பெயர்பெறுக. இத்தீர்த்தத்தில் எவனொருவன் ஸ்நானஞ் செய்கின்றானோ அவன் எல்லாப் பாவங்களினின்று நீங்கி முத்தியடையக்கடவன். பொன் திருடினவன் ஆக்னேயதிக்கிலும், சுராபானன் தக்ஷிணத்திலும், பரதாரகமனன் மேற்கிலும், பிரமஹத்தி புரிந்தவன் உத்தரத்திலும், இவர்கள் கிரமத்தின் பூதங்கள்மத்தியிலும் ஸ்நானஞ்செய்வார்களாயின் அவர்கள் அவ்வப்பாதகங்களினின்றும் விடுபட்டவர்களாய்ச் சர்வகாமங்களையும் குறைவின்றி யடையப்பெறுவர். இதிற் சந்தேகமில்லை.

நீ ஆண்பெண்ணாகிய இந்த இரண்டு பூதங்களையும் இத்தீர்த்தத்தைக் காப்பவைகளாக ஈசானதிக்குக்கும் அக்னிதிக்குக்கும் மத்தியில் பிரதிஷ்டை செய்து அவைகட்கு ஸ்ரீகாமாக்ஷிதேவியினுடைய அபிஷேகதீர்த்தங் கிரஹணத்தால் திருப்தியுண்டாகும் வண்ணம் நியமித்து இப்பூதங்களின் மத்தியபாகத்தின் மேலிடத்தில் முன்பூதங்களுக்காக நின்றும் இருந்

ளாய் இடந்தும் இருந்ததுபோல் மூன்றுபேத ரூபங்களாகவேயிருந்து உனக்கெதிரில் என்னை இலிங்க ரூபமாகப் பிரதிஷ்டைசெய்தருச்சித்து யாவர்களுக்கும் தர்மார்த்த காம மோக்ஷங்களைக் கொடுக்கின்றவனாக விருக்கக்கடவாய். நான் உன்னிடத்தில் பிரீதியுடையவனாகிறேன் என்றுகட்டளையிட அவ்வாறே அம்பிகையும் கட்டளையிட்டனள். விஷ்ணுமூர்த்தி இருவருடைய கட்டளைப்படியே பூதங்களைப் பிரதிஷ்டைசெய்து அவைகளின் மத்தியிலுள்ளவிடத்தைத் தன்னிடமாகக்கொண்டு மூன்று லிங்கங்களைப் பிரதிஷ்டைசெய்து அன்போடுவழிபட்டுப் பின் தேவர்களையும் ருஷிகளையும் பார்த்து இந்தஇரண்டு பூதங்கட்கும்பிரீதியாக வருடந்தோறும் பூதங்களின் மத்தியிலுள்ள என்னுடைய சமீபத்தானத்திலிருக்கும் சிகரத்தின்மேலின்று கர்ப்பிணியாகியஒருதாசியானவள் பஞ்ச தீர்த்தத்தில் விழுந்து வருவாளாயின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது பிழைத்துக் கரையேறும், அவள் விண்ணுலகம்போய் மறுஜன்மத்தில் பிராம்மண ஜென்மத்தை யடைவாள். இதைக்காணப்பெற்றவர்களுக்குப் பிரதிபந்தகயாதகமும் பூதப்ரேத பிசாச முதலான கிரகதோஷங்களும் நசித்து விடுமென்றனுக்கிரகஞ்செய்தனர். இப்பூதங்களினுடைய மத்தியஸ்தானத்தின்மகிமையைக் கேட்டயாவரும்நமஸ்கரித்து அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விஷ்ணுவினால் கொடுக்கப்பட்ட வரங்களைப் பெற்றுத் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர். ஆகையால் யாரொருவர் இதில் ஸ்நானஞ்செய்து விஷ்ணுமூர்த்தங்களையும் பூதங்களையும் தரிசனஞ்செய்கின்றார்களோ அவர்கள் ஸ்வேத த்வீபத்திலும் திருப்பாற்கடலிலும் வைகுண்டத்திலும் விஷ்ணுசேவைசெய்தவர்கள் அடையும்பலனை அடையப்பெறுவர்.

மஹிமை.

கிருஷ்ணாதிதீரத்தில் ராமாபுரியில் கிரீந்திரன் என்பவர் ஐந்து பெண்களைக் கலியாணஞ்செய்துகொண்டும் புத்திரப்பேறின்றி காமகோடியை யடைந்து பஞ்சதீர்த்தத்தில் ஸ்நா

னஞ்செய்து திரிபுரசுந்தரியையும் பூதபந்த ஜனார்த்தனராகிய விஷ்ணுவையுந்தெரிசித்து அந்த விஷ்ணு சந்நிதானத்திலிருந்து அவரைத்தியானஞ்செய்திருக்கின்றபொழுது மதுவை(தேனை)க்கொடுத்தனர். அதனாலவர்பாவம்நீங்கினவராய் ஆறுபிள்ளைகளைப் பெற்றுச் சுகமாய் வாழ்ந்திருந்தனர். இவ்வண்ணம் பேறுபெற்றவர்கள் பலர்.

பதின்மூன்றுமத்தியாயம் பூதபந்த வரலாறு
முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

பதினான்காம் அத்தியாயம்.

சுவர்ன காமாக்ஷி வர்ணனை.

காமகோட்டமென்கிற காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள்ளிருக்கும் பஞ்சதீர்த்தமென்னும் தீர்த்தத்துக்குக்கிழக்கில் திருக்கோயில் கொண்டிருக்கும் பராசத்தியினுடைய நெற்றிக்கண்ணினின்றும், சுவர்னச்சாயையாக ஒருஜோதிசொரூபமானது தோன்றியது. அத்திருவுருவம் இரண்டுநேத்திரமும், இரண்டுபுஜமும், சாமளநிறமும், கிளிதாங்கியிருக்கும் வலக்கரமும், தொங்கவிட்டிருக்கும் இடக்கரமும், திரிபங்கியும், குஞ்சிதமாய் நிற்கும் வலப்பாதமும், தனுராகாரமாய்(வில்போலும் சிறிதுவளைந்து)தோன்றும் திருமேனியும் அன்றலர்ந்த தாமரைபோன்ற திருக்கண்களும், பொன்போலும் நிறமுள்ள மஞ்சளாடையும், இரத்னகுண்டலமுதலிய ஆபரணவகைகளால் அலங்கரிக்கப்பட்ட அழகியகோலமும் உடையது.

இவ்வண்ணம் விளங்கும் ஜோதிசொரூபத்தைக் கண்ட [illegible]மா அக் கோலத்தைப் போலும் சுவர்னத்தால் ஓர்விக்ரகஞ்செய்தனர். அந்தப் பிம்பத்தில் மனோன்மனியாயும் குதலிங்கநாயகியாயுமிருக்கின்ற பராசத்தியானவள் சாந்நித்தியங்கொண்டு பிரசன்னையாயினள்.

வரலாறு.

பூர்வத்தில் சிவபெருமானுடைய நெற்றித்தீப் பொறியால் அனங்கனாய்ப்போன மன்மதன் முன்போல் அங்கம் பெறவேண்டுமென்கிற விருப்பத்தினால் காமகோட்டத்தை யடைந்து திரிபுரசுந்தரியாகிய அம்பிகையை வணங்கி இருதயகமலத்தில் தியானித்துப் பூசனைசெய்து மிகவும் உக்கிரமான தவத்தையுஞ் செய்து வந்தனன். திரிபுரசுந்தரியாகிய அம்பிகை பிரத்தியக்ஷமாய் வர, அவரது கடாக்ஷவீக்ஷண்ணிய மாத்திரத்தில் மன்மதன் மனோகரமாகிய திவ்வியதேகத்தைப் பெற்றுப் பக்தியோடு பிரதக்ஷிண நமஸ்காரத்தோத்திரத்தியானாதிகள் செய்து தேவியைப்பார்த்து யான் உமது கடாக்ஷ வீக்ஷண்ணியத்தினால் சரீரமுடையவனாயினேன். இனிச் சரீரம் பெற்றதற்குரிய பிரயோசனத்தை யானடையும் வண்ணம் தேவரீர் அனுக்கிரகஞ் செய்ய வேண்டும். அது என்னையெனின்? சிவபெருமானார் மேல் முன் பார்வதியாருடைய கலியாணத்தை யுத்தேசித்து நான் விட்டபாணங்கள் அவலமாய்ப் போனபடியால் இப்பொழுது அந்தப் பாணங்களை நான் அவர்மேல் பிரயோகஞ்செய்யவும், செய்யுங்காலத்தில் எனது சரீரத்துக்கு நாசம்வருமாயின் இப்பொழுது கொடுத்ததுபோல் மீண்டுஞ் சரீரங்கொடுக்கவும், அந்தச்சரீரம் நரை திரை மூப்பின்றி அழிவில்லாமல் வாழவும், நான் விடும்பாணங்களாலேயே சிவனார்மோகிதராய்த் தேவி எங்கே எங்கே என்று தேடவும், அப்பொழுது தேவரீர் இடங்கொடாமல் என்னை அவர்வேண்டும்படியாகவும், பின்னர் என்னுடைய வேண்டுகோளால் அவருக்குக் காமசாந்தி உண்டாகும் வகையைத் தேவரீர் சொல்லவும் வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

அம்பிகை மன்மதனைப்பார்த்து ஓ மன்மதா! நீ வேண்டியபடியே வரந்தந்தேன், யான் சிவனாருடைய பக்ஷமாயிராமல் மவுனியாய் உன்பக்ஷமாகவேயிருந்து உனக்குவேண்டியவற்றைச் செய்கிறேன், இனி நீ சிவனாரிடத்துச் சென்று

செய்யவேண்டியவற்றைச் செய்வாயென்று கட்டளையிட, அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நமஸ்கரித்து விடைபெற்று ஸ்ரீகயிலாயத்தை விரைவிலடைந்து சிவசந்நிதானத்தை நோக்கி நெருப்பைச்சிந்தும் பாணங்களையெடுத்துக் கருப்புவில்லிற்பூட்டி விடுத்தனன். அப்பாணங்களைக்கண்ட மஹாதேவர் அநங்கனென்றுணர்ந்து இவன் பராசத்தியினுடைய அனுக்கிரகம்பெற்று அவளுடைய பிரேரேபணையால் வந்தானென்று மகிழ்ந்து தேவியார் தேகஹீனனுக்குக்கூறிய லீலானுக்கிரகத்துக்குத் தானும் உடன்பட்டவராய் அந்தலீலையைச் செய்யவெண்ணி நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்தனர். அந்தநேத்திராக்கினி முன்போல் அவனை எரிக்காமல் அவனது முடியில் இரத்னம்போற் பிரகாசித்தது. அதனைக் கண்டு சூலாயுதத்தை எறிந்தனர்; அது அவனது வெற்றிக் கொடிபோல் நின்றது. பின்னர் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்தனர்; அது அவனது கண்டத்தில் வெற்றிமலர்மாலையாய் விழுந்தது. அதுகண்ட சிவபெருமானார் நமது சத்தியானவள் இந்த மன்மதனை ரக்ஷிக்கவேண்டுமென்றெண்ணி யிருக்கின்றாளாதலால் நாம் விட்டநேத்திராக்னி முதலியவற்றிற் கலந்து சுடாமலும், உபத்திரவிக்காமலும், கொல்லாமலும் போயினள். இப்பொழுது நம்மை அவளெண்ணியபடி யாட்டுவிக்க அவனிடத்தில் கலந்திருக்கின்றாளாதலால் அவன் சுந்தரமான உருவமுடையவனாயும், நாசமடையாதவனாயும், சுகமுடையவனாயுங் காணப்படுகிறான். சத்தியின்வழி நாம் யாவும் செய்வதேயன்றி அவள் வேறாய வழி நாம்யாது செய்யவரும். ஆகலான் இனி அவளெண்ணத்துக்கு மாறாக நாம் யாது செய்தபோதிலும் அது வீணாகுமென்றெண்ணி மன்மதன் வழியாய் நின்றியற்றும் காமசத்திக்குள்ளானவராய்க் காமமுடையார்போன்று அந்தக்ஷணத்திற்றானே சிங்காதனத்தை விட்டிழிந்து அந்தப்புரஞ் சென்று கதவையடைத்துவிட்டு உள்ளேசென்று தேவியைப்பார்க்க அவளங்கில்லாமையைக் கண்டனர்.

தேவியங்கில்லாமைக்குங் காரணமென்னையெனின்? காஞ்சிபுராதீசையான திரிபுராம்பிகை கைலாயமுதலிய தலங்கள்தோறும் இருக்கின்ற தனது அம்சமான கவுரி அம்சமாயிராநின்ற சத்திகளை யெல்லாம் ஆகர்ஷித்துக் கொண்டு காமாக்ஷி என்கிற ஏகசத்தி சொரூபமாக வீற்றிருந்தனளாதலால் ஸ்ரீகயிலாயத்தில் சிவபெருமானுருக்குத் தேவி காணாமற் போயினர்.

பின்னர் பெருமானார் கைலாயத்தை விட்டுத் தமதாலயமாகிய க்ஷேத்திரங்கடோறுஞ் சென்றுதேவியைப் பார்க்க எங்கும் இல்லாமையைக் கண்டதும் தேவிக்கு ராஜஸ்தானமாகிய காஞ்சி காமகோடிபீடத்திலு மில்லாதிருப்பளோவென்று காஞ்சிக்கு வந்து காமாக்ஷிதேவி அங்கு கவுரியாயிருத்தலைக்கண்டு அதிசயமுற்று இவள் சாக்ஷாத் கவுரியென்று நினைத்துத் தமக்குண்டாயிருக்குஞ் சத்திப்ரமந்தணியுமாறு சமீபித்தனர். மகா சிருங்கார மோகினி வடிவுடையவளாயும், தவரூபியாயும் அரியதவத்தைச் செய்பவளாயுமிருக்கின்றகவுரி பெருமான் சமீபித்துவருதலைக் கண்டு பிணக்குடையாள்போன்று அவரைப்பார்த்து, நீ யார் காமாதுரனாயிருக்கின்றாய்? இங்கு நீ யாது காரணமாய் வந்தனை? நீசங்கரனா? என்றுகேட்க, காமசத்திக்கு ஐக்கியராய்க் காமலீலையைவிரும்பியிருக்கின்ற பெருமானார் ஹேகவுரீ! நீயெனக்கு மனோன்மணியாகிய பத்தினியல்லவா? நீயெனக்கு இஷ்டமான க்ஷேத்திரங்களையெல்லாம் விட்டு இவ்விடத்தில் பிரம விஷ்ணுருத்திரர்கட்குக் காரணமான ஆதிசத்திபீடத்தில் மாத்திரம் வந்திருக்கிற காரணமென்னை? எனது குடும்பினியாயும், பிரியையாயும், எனது இதமானகாமங்களுக்கெல்லாம் சமனையாயும் இருக்கின்ற நீ இப்பொழுது என்னிடத்தில் கோபங்கொண்டிருப்பவள்போல வருந்துகின்ற காரணமென்னை"? இவைகட்குக் காரணங்கூறி உன்னாலுண்டாகிய என்னாசையைத் தணிவிப்பாயென்று கூற, திரிபுராம்பிகை சிவபெருமானைப் பார்த்து உமக்கிப்போதுண்டாகிய

காமத்தைத் தணிவிக்குங் கவுரி நானன்று, காமசாந்திக்கு என்னை வேண்டுவதைவிட்டு மன்மதனை வேண்டுவீராயின் அந்தக்காமசாந்தி அவன்செய்துவைப்பானென்றபொழுது பெருமானார் தேவி மன்மதனுக் குபகாரார்த்தமா யிருக்கும் மாருக்கருணையை நினைந்து அவள் கருணையை மறுப்பவர்போன்று மன்மதன்பால் யான் செல்லேன் என்று அம்பிகையினுடைய திருக்கரத்தைப் பற்றச் செல்லும் பொழுது அவ்வம்பிகை கோடிமன்மதர்களைத் தனது கடாக்ஷவீக்ஷண்யத்தாலுண்டாக்கிப் பெருமான்மேல் ஏவினள், அவர்கள் அச்சிவபெருமானைச் சூழ்ந்து போர்செய்யத் தொடங்கும் பொழுது அவர் ஒருக்ஷணத்துக்குள் கோடி உருத்திரர்களை யுண்டாக்கி அவர்கள்மேற் றூண்டினர். அவர்கள் அந்தக் கோடிமன்மதர்களையும் பஸ்மீகரப்படுத்தினர்கள். அதுகண்ட தேவி முன் மன்மதன் "இந்தப் போரில் நான்மடிய நேருமாயின் என்னைமீட்டும் படைக்கவேண்டும்" என்று வேண்டிய வரத்தை எண்ணி மறுபடியும் கோடிமன்மதர்களைப் படைத்தனள். பெருமானும் மீண்டும் கோடி உருத்திரர்களைப் படைத்தனர். இவ்வண்ணம் பெருமானும் பெருமாட்டியும் உருத்திரகோடிகளையும், மன்மதகோடிகளையும் படைத்து இருவருக்கும் போர்மூட்டித் தாமிருவரும் சாக்ஷியாகவிருந்தனர். பின்னர் அவ்விருகோடியரும் அளவிடற்கரிய போர்புரியும்போது தேவியினுடைய லீலாசங்கற்பத்தால் மன்மதகோடிகள் உருத்திரகோடிகளை வென்றனர். அதிகண்ட மன்மதன் சந்தோஷித்தவனாய்த் தனது பஞ்சபாணங்களையும் உருத்திராதிபர்மேல் பிரயோகஞ்செய்யவெண்ணினன், அவனது எண்ணத்தையும் அவனெண்ணத்தை முடிக்கவெண்ணியிருக்கும் தேவியினுடைய திருவுள்ளத்தையும் பெருமான் அறிந்தவராய் இருவரெண்ணம்போல் இசைவாராயினர்.

ஆகவே, மன்மதன் தானெண்ணியபடியே தாமரை அசோகு மா மல்லிகை நீலோற்பலம் என்னும் ஐவகைமலர்க

ளையும் முறையாக ஏவினன். அம்மலர்களைப் பெருமான் அழிக்கவெண்ணாமல் அங்கிகரிக்க வெண்ணித் தாமரையைத் தமக் காசனமாகவும், அசோகைத் தமது மேனிக்கழகு செய்வதாகவும், மாந்தளிரைப் பீதாம்பரமாகவும், மல்லிகையை மாலையாகவும், நீலோற்பலத்தை நெற்றிக்கண்ணுக்குக் குளிர்ச்சிசெய்வதாகவுங்கொண்டு வீற்றிருக்க, மன்மதன் அன்று தாருகாவனத்தில் உம்மைவணங்காத முனிவர்களின் பத்தினிகளிடத்துப் பலிபாத்திர மேந்திச்சென்றபொழுது நீர் பெற்றது என்னை! இன்று அப்பலியேற்று அம்பிகைபாற் செல்வீராயின் நீர்வேண்டியவற்றைப் பெறலாமன்றோ என்று சொல்லவும் பெருமான்மகிழ்ந்து அது யான் இப்பொழுது செய்யத்தக்கதே நன்றாகூறினையென்று அந்தக்ஷணமே மன்மதனுடன் அம்பிகைபால் பலியேற்கச்சென்றனர். அவரது கோலத்தைத் திரிபுராம்பிகைபார்த்து மன்மதனபீஷ்டம் நிறைவேறிற்றென்று திருவுளமகிழ்ந்து பெருமானே மன்மதனை யுத்தேசித்துச் செய்த நம்மிருவர் லீலைகளுமுடிந்தன. இனித் தேவரீர் கவுரியோடுகூடிக் காமசாந்தியுடையவராயிருக்கலாம் என்று சொல்லித் தம்மாலுண்டாக்கப்பட்ட மன்மதர்களையும் அங்கம்பெற்ற மன்மதனையுந்தம்முடைய காமகோடிபீடத்துக்கு நேராக ஆகாயத்தில் நக்ஷத்திரரூபமாக வசிக்கச் செய்து பராசத்திசொரூபத்தில் மறைந்தனள். பெருமானும் ஒட்டாணபீடத்தில் காமரூபத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

மன்மதர்கள் நக்ஷத்திரரூபமாய் ஆகாயத்தில் அவ்விடத்தில் வசிக்கின்றார்களாதலால் சூரியன்முதலிய நவக்கிரகங்களும் அந்தமன்மத மண்டலத்துக்கு நேராகவரும்பொழுது அவ்வழியாய்ப் போகாமல் பிரதக்ஷணமாய்ப் போகின்றனர். அக்காரணத்தால் காஞ்சிமண்டலம் திசைமயக்குடையதென்றும் அம்பிகையினாலுண்டாக்கப்பட்டமன்மதர்களால் உருத்திர கோடிகள் ஜயிக்கப்பட்டார்களாதலால் ருத்திரஜித்க்ஷேத்திரமென்றுஞ் சொல்லப்பட்டது.

இந்தச்செய்திக ளிங்ஙனமிருக்க, ஓர்காலத்தில் பிரமதேவன் பூலோகத்திலுள்ள ஸ்ரீகைலாயமுதலியசிவக்ஷேத்திரங்களைத் தெரிசிக்கவெண்ணித் தன்னுலகைவிட்டு பூவுலகை வந்தடைந்து கயிலாயமுதலிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கும்பொழுது அம்பிகை ஓரிடத்தும் இல்லாமையைக் கண்டு இது வென்னகாரணமென்று தனது ஞானதிருஷ்டியால் எண்ணிப்பார்க்க இது காமாக்ஷிதேவிசெய்த லீலையென்று ஒருவாறுணர்ந்து அந்தக்ஷணமே காஞ்சி மண்டலத்துக்கு வந்து சிவக்ஷேத்திரங்கடோறும் சிவபெருமான் சாந்நித்தியமாயிருப்பது போல் அம்பிகையும் சாந்நித்தியமாயிருந்து காக்ஷிகொடுக்க வேண்டுமென்று திரிபுராம்பிகையைப் பிரார்த்தித்து வந்தித்துப் பலவாறாகத் துதித்து வழிபட்டு இருதயகமலத்தில் அம்பிகையைத் தியானித்துப் பன்னிரண்டு வருடம் அரிய தவஞ்செய்துவந்தனன். இராஜராஜேஸ்வரி பிரமன்பால் கருணையுடையவராய்ப் பிரசன்னையாய் ஓ பிரமனே! நாம் மன்மதன் வேண்டியவாறே அனுக்கிரகஞ்செய்த அனுக்கிரகத்தைப் பரிபாலிக்கும் பொருட்டுச் சிவபெருமானுக்குப் போகசத்தி உருவங் காணாதிருக்கச் சிவாலயங்கடோறும் கவுரியை இல்லாமற் செய்தோம். நீ தெரிசிக்க வேண்டுமாயின் எல்லா க்ஷேத்திரங்கடோறும் நீயேசென்று கவுரிப்பிரதிஷ்டைசெய்து சிவதெரிசனத்தோடம்பிகை தெரிசனமுஞ்செய்து மகிழக்கடவா யென்றனுக்கிரகஞ் செய்தனர்.

பிரமன் தேவியின் திருவாக்கைக்கேட்டுத் திருவடியில் வீழ்ந்து வணங்கி ஓ ஜகன்மாதாவே! இப்பொழுது இந்த க்ஷேத்திரத்தில் சிவாலயங்கடோறும் கவுரியாகிய அம்பிகையைத் தெரிசித்தல்லவோ ஏனையக்ஷேத்திரங்களுக்குப்போய் அம்பிகையைப்பிரதிஷ்டைசெய்து நான்தெரிசித்தல்வேண்டும். இங்குதெரிசிக்கும்வகை எப்படியென்றுவிண்ணப்பஞ்செய்த் தேவி, இந்த க்ஷேத்திரத்தில் முன்னர் உருத்திர கோடிகட்கும் மன்மத கோடிகட்கும் நேர்ந்த யுத்தத்தில்

அவர் இங்குள்ள சூத விருக்ஷத்தடியில் கவுரி சகிதமாய்ச்
சிவபெருமானர் ஒட்டியாண பீடத்தில் சென்றனராதலால்
சோதிலிங்க சொரூபராய்வெளிப்படுவர் அப்பொழுது உன
க்குக் கவுரியானவள் சூதலிங்கசகிதமாகக் காணப்படுவாள்
என்றனர். அதுகேட்ட பிரமன் ஹே அம்பிகே! வருடந்
தோறும் இந்த க்ஷேத்திரத்தில் சூதநாதருக்குத் திருக்கலி
யாண மஹோற்சவம் நடத்தவேண்டுமே அதனை எந்த உபா
யத்தினல் நடத்துவது என்று விண்ணப்பஞ்செய்ய மஹா
தேவி ஒருமுகூர்த்தகாலம் ஒன்றுஞ்சொல்லாது மவுனமா
யிருந்து பின் சொல்லத் தொடங்கினர்.

ஓ வாக்பதியே! இந்தக்ஷேத்திரத்திலுள்ள சிவாலயங்க
டோறும் இருக்கத்தக்கசத்திகளெல்லாம்என்னிடத்திற் கல
ந்திருக்கிற படியால் அச்சத்திகளெல்லாம் ஒரு சத்தியாய்
ஒருருவாகி ஏகாம்பிகை என்னும் நாமத்துடன் எனது
நெற்றிக்கண்ணி னின்றும் ஒரு க்ஷணத்துக்குள் சித்சோதி
சொரூபமாய்த் தோன்றப் போகின்றாள். அந்த அம்பிகை
பூர்வத்தில் ஏகாம்பரநாதரை ஏகாக்ர சித்தத்தோடும் தியா
னிக்கவேண்டிய பாவனையால் அதிலாவண்ய சவுந்தரியத்து
டன் தபோரூபியாய்த் தவஞ்செய்து பின்னர் நாயகனைக்
கலந்து நித்திய கலியாணியாய் விளங்கினவள். ஆகலான்
நீ என்னிடத்திற்றோன்றும் அந்தச் சோதிசொரூபமாகிய
அம்பிகைபோலும் சுவர்னத்தினற் செய்து என்னுடைய
இந்த ஆலயத்தில் ஸ்திரமானவிடத்தில் ஸ்திரமாகத்தாபி
த்து விவாக காலங்கடோறும் அந்த ஏகாம்பர நாதருக்கு
அந்த அம்பிகையை விவாகஞ்செய்து வருவாய். அந்த
அம்பிகையைப்போலவே விக்ரகங்கள் நிர்மாணஞ்செய்து
அவைகளில் அந்த ஏகாம்பிகையை ஆவாகித்து இங்குள்ள
சிவாலயங்க டோறும் மூலலிங்க சத்திகளாக அமைத்துச்
சிவதெரிசனத்தோடு அம்பிகையையும்தெரிசித்துமகிழ்வாய்
அந்தவிக்கிரக ரூபமா யிருக்கின்ற அந்த அம்பிகைகளன்றி
வேறு மூலசத்திகள் இந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டைசெ

ய்தல் கூடாது.

ஓ கமலாசனனே! சுவர்னகாமாக்ஷியை ஏகாம்பரநாத
ருக்குக் கலியாணஞ்செய்தல் வேண்டுமென்று சொன்னேன
ல்லவா! அந்த முறைமையைக் கேட்பாய். ஏகாம்பரநாதரு
டைய கலியாணதினத்தில் இந்த ஆலயத்திலிருக்கும் சுவர்
ணம்பிகையை ஏகாம்பரநாதருடைய ஆலயத்தில் எழுந்தரு
ளச்செய்து விதிமுறையாக இருவருக்குங் கலியாணம் நட
த்தி மறுநாள் சாயங்காலம் உற்சவகோலமாய் வீதியில் வல
மாகவரச்செய்யும்போது கலியாணகோலத்துடன்விளங்கும்
சுவர்ணம்பிகையை என்னுடைய ஆலயத்தில் எழுந்தருளச்
செய்துவிட்டு அதன்பின்னர் கலியாணமூர்த்தியாகிய ஏகா
ம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்
தல்வேண்டும். பின்னர்சுவர்னகாமாக்ஷிதேவிக்குஅவளுடை
ய ஸ்தானமாகிய த்ருவஸ்தானத்தில் இரண்டுநாள் பூஜை
முதலியவைகள் நடவாமற் போனபடியால் அதனுடைய
பரிகார நிமித்தமாயுள்ள சாந்தியை யுத்தேசித்து வைதிக
தந்திராநுசாரமாய்ச் சீடர்களோடு கூடியிருக்கும் தூர்வாச
மகருஷிமுகமாகச் சஹஸ்ரகலசாபிஷேகமுதலிய பூஜோ
பசாரங்களை விசேடமாகச்செய்து அதன்பின்னர் நித்திய
பூஜையை நடத்தி உனக்குவேண்டிய மனோரதங்களைப் பெ
றுவாயாக. அதுபோலவே வருடந்தோறும் உற்சவம்நடந்து
வரும்படியான மார்க்கத்தையும் தேடிவைத்துப் பின்னர்
உனது உலகத்தையடைவாய் என்றனுக்கிரகஞ்செய்து பரா
சத்தி சொரூபத்தில் ஐக்கியமாய்த் தம்மிடத்தில் ஐக்கியமா
யிருந்த சகல க்ஷேத்திர வாசினிகளாகிய சர்வசத்திகளையும்
அந்தந்த க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளியிருந்து யாவருக்
குங் காக்ஷிகொடுக்கும் வண்ணம் செய்தனர். அதுபோல
வே அந்தச் சத்திகளெல்லாம் அந்தந்த மூலலிங்கங்களிற்
கலந்து பிரகாசித்தன.

சுவர்ன காமாக்ஷி ஆவிர்ப்பவம்.

கவுரியாகிய அம்பிகைக்குச் செய்யவேண்டிய கலியா

ணச்சடங்கு முதலியவற்றைப் பிரமதேவனுக்குத்திரிபுராம்பிகைகூறியபின்னர் அருடையநெற்றியினின்றும்சிக்ஸ்வரூபிணியாய்க் கவுரி என்னும் அம்பிகை சோதிசொரூபமாய்ப் பிரசன்னையாயினள். அவ்வம்பிகையைப் பிரமதேவன்கண்டு அதிசயித்துப் போற்றி வணங்கி அந்தக்ஷணத்திற்றானே திரிபுராம்பிகை ஆஞ்ஞைசெய்த வண்ணம் சுவர்ணத்தினால் அந்த அம்பிகையைப் போலவே விக்ரஹ நிர்மாணஞ் செய்தனன்.

திருவுருவம்.

அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற இரண்டுகண்களையுடைத்தாயும், இரண்டுபுஜங்களையுடைத்தாயும், அவற்றுள் வலது திருக்கரம் கிளியைத்தாங்கி யிருப்பதாயும், இடது திருக்கரம் தொங்கவிட் டிருப்பதாயும், உதரம் திரிபங்கி (மூன்றுமடி) யோடு கூடினதாயும், தென்பாரிசம் வில்போலும் சாயலுடைத்தாயும், இடை நுண்ணியதாயும், ஏனைய உருப்புக்களெல்லாம் தத்தமக்குரிய ஆபரண வகைகளால் பிரகாசிப்பனவாயும், பீதாம்பரதரையாயும் விளங்கச்செய்தனன். இந்தக்கோலமாகத்தான் திரிபுராம்பிகையினுடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய கவுரி என்னும் அம்பிகையினுடைய கோலமும் விளங்கிற்றென்று அறிதல் வேண்டும்.

ஆவிர்ப்பவித்த காலம்.

சுவேதவராககல்பம், ஏழாவதாகிய வுச்சியம்மன்வந்திற மன்வந்தரம்; தாமசகாலம், கிருதயுகம், ஹயக்கிரீவர் அவதாரகாலம், ஸ்ரீமுகவருஷம், சூரியன்துலாத்தி லிருக்குஞ் சமயம், கார்த்திகை மாதம், கிருஷ்ணபக்ஷம், சஷ்டிதிதி சுக்கிரவாரவுதயம், பூர்வபல்குனிநக்ஷத்திரம், மத்தியபாதம், சூரியோதயகாலம் இந்தச்சுபதினத்தில் பராசக்தியினுடைய நெற்றிக்கண்ணினின்றுங் கவுரிதோன்றினள்.

பிரதிஷ்டைசெய்தவரலாறு.

பிரமன் தனக்குக் காக்ஷி கொடுத்த அம்பிகையைப் போலவே சுவர்ணத்தினால் விக்ரஹஞ்செய்தமைத்த பின்னர்

அந்த விக்ரஹ மூர்த்தியைப் பிலத்துக்குத் தென்பக்கத்தில் த்ருஸ்தானம் (நிலையாயுள்ளவிடம்) என்று ஒருபெயரிட்டு அந்த விடத்தில் பிரதிஷ்டை செய்து, பிரதிஷ்டை செய்த அந்த மாதமாகிய ஐப்பசி மாதந் தொடங்கி அந்த மாதத்துக்கு ஆறுவது மாதமாகிய பங்குனி மாதம் வரையில் விசேஷ நியாசபூர்வகமாய் மஹாபிஷேக நைவேத்திய பூஜோபசாரங்களை விசேடமாகச் செய்து வந்து ஏகாம்பர நாதருடைய கலியாண தினத்தில் சூதநாதருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்து இந்த அம்பிகைக்கும் அந்த ஏகாம்பர நாதருக்கும் வேதாகமோக்த விதிமுறையாக விவாக நடத்தி மறுநாள் கலியாண கோலத்துடன் உற்சவ நடத்தி ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளும்படியாக அவருடைய பரிவாரங்களுடன் அவரை அனுப்புவித்து சுவர்ண காமாக்ஷியை அவருடைய ஆலயமாகிய த்ருவாலயத்தில் எழுந்தருளச் செய்து முன்சொல்லியவாறு சாந்தி அபிஷேகாதி உபசாராதிகளை நடத்திப் பின்னர் ஓர்தாமரை மலரை எடுத்து அம்பிகையைத் தியானித்து ஆகாயத்தில் விட்டெறிந்தனன். அந்த மலர் ஆகாயத்திற் பட்டவுடன் சந்திரனுடைய் அம்சமாக ஒரு சக்கரவர்த்தி வெளிப்பட்டு வந்தனன். அவனிடத்தில் அந்தப் பிரமதேவன் தான்செய்த கலியாணமஹோற்சவம் வருடந்தோறும் நடத்திவரும் வண்ணம் நாசமில்லாத தாகிய (தனபாத்திரம்) ஒன்றைக் கொடுத்து இந்த உற்சவத்தை நடத்தி வர வேண்டுமென்று ஆஞ்ஞை செய்து ஆகாசபூபாலன் என்கிற நாமத்துடன் இந்த நகரத்தில் வாழக்கடவா யென்று ஆசிர்வதித்து அவ்வரசனை அங்கிருக்கச் செய்து ஸ்ரீ காஞ்சி மண்டலத்திலும் பூமண்டலத்திலுமுள்ள சிவாலயங்க டோறும் சென்று அங்கங்கும் அம்பிகைகளைப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானோடு அம்பிகைகளையுந்தெரிசனஞ் செய்து மகிழ்ந்து தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன்.

இனிப் பிரமனுக்கு அந்தகத்வம் வா. அதற்குக் கலைமகள் கூறிய பரிகார மியல்வருமாறு:—

பிரமதேவன் சத்தியலோகம் போய்ச் சேர்ந்தவுடன் இரு கண்களும் ஒளிமழுங்கிப்போய் அந்தகனாயினன். அதனால் அவன் மனவருத்த முற்றிருக்கும் பொழுது கலைமகள் எனது நாயகனே! உமக்கு நேத்திர பங்கம் வந்ததற்குக் காரணம் கூறுகின்றேன் கேளும். என்னையெனின் காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில், காயத்திரி மண்டபத்துக் கடியில் எதுவரையில் பிலாகாசமோ, அதுவரையில் குண்டலினிக்கிரகமென்கிற நாமத்தால் பூர்வத்தில் சிவபெருமானால் நிர்மிக்கப் பட்டுள்ளது. அந்தவிடத்தை நீர் காலால் மிதித்து வந்தமையால் அந்தகத்துவம் வந்தது. இனி நீர் முன்போலவே அவ்விடத்துக்குப் போய் ஸ்ரீசக்கரபூஜையைச் செய்வீராயின் நிவிர்த்தியாய்விடும். இல்லாவிடின் இந்தக்கண் குருடு ஒருநாளும் நீங்காது. இதிற் சந்தேகமில்லையென்று கலைமகள் சொல்லியபொழுது பிரமன் இந்தவிதி உனக்கு எப்படி தெரியவந்ததென்று கேட்டனன். கலைமகள் ஓ சிருட்டிகர்த்தரே! சிவபெருமான் ஸ்ரீசக்கரபிரதிஷ்டை செய்யும் பொழுது இந்தஸ்ரீசக்கரபூஜையைருத்திரயாமளமென்னும் தேவி தந்திரத்திற் சொல்லியிருக்கும் முறையாகப் பூஜிக்கவேண்டுமென்றும், இந்தவிடத்தை மிதிப்பவர் கண்குருடாய்ப் போவார்களென்றும், அதற்குப் பரிகாரம் மீளவும் வந்து பூஜித்தால்தானென்றும் கூறியிருக்கின்றனர். ஆகலான் நீரும் போய்ச் செய்யுமென்று சொல்லப் பிரமதேவன் மகிழ்ந்தவனாய் அந்தக் கலைமகளுடன் காமகோட்டத்தை யடைந்து ஸ்ரீ சக்கரபூஜைசெய்து அந்தகத்துவம் நீங்கப் பெற்றுச் சுவர்னகாமாக்ஷியைக் கண்ணாரக்கண்டுக் களிப்படைந்து எவனொருவன்காமகோடிபீடஸ்தானத்தில்காலை யதனாலுண்டாகும் பாவத்தை யடைகின்றானோ அவன் இந்தச் சுவர்னகாமாக்ஷி தேவியைத் தெரிசனஞ் செய்தமாத்திரத்தில் அந்தப் பாவத்தினின்றும் நீங்குவான். அந்தத் தெரிசனம் கிட்டாமற் போமாயின் ஸ்ரீசக்கரபூஜையை ருத்ர யாமள தந்திரத்திற் கூறியுள்ளபடிச் செய்வானாயின் அந்த

ப் பாவத்தினின்றும் நீங்குவான். என்று வரங்கொடுத்துத் தன்னிலகம் போய்ச் சேர்ந்தனன்.

இனிப் பிரமதேவன் தன்னாத்ம தேவியாகப் பூசித்த சர்வானுக்கிரகமூர்த்தியாய் விளங்கும் சுவர்ணம்பிகைக்கும், தருமதேவியாகிய தபஸ்காமாக்ஷிக்கும், பராசத்தியாகிய திரிபுராம்பிகைக்கும் காரணப் பெயர்களாயுள்ள பஞ்சநாம விவரணம் வருமாறு.

தேவிபேத பஞ்சநாம விவரணம்.

சுவர்ணாங்கி, சுகஹஸ்தை, சூதலிங்கவல்லபை, காமாக்ஷிதேவி, தர்மதேவி, இவ்வைந்து நாமங்களும் சுவர்ன காமாக்ஷி தேவியினுடைய நாமங்களாகும்.

தபஸ்வினி, கனஸ்யாமா (நல்லபச்சை நிறமுள்ளவள்) சர்வ சைவாலயேஸ்வரி, காமாக்ஷி, காளி, இவ்வைந்து நாமங்களும் தபஸ் காமாக்ஷி தேவியினுடைய நாமங்களாகும்.

திரிபுரை, ராஜராஜேஸ்வரி, மஹா காமேச வல்லபை, நாமாக்ஷி, காமகோடி, இவ்வைந்து நாமங்களும் திரிபுராம்பிகையாகிய பராசக்தியினுடைய நாமங்களாகும்.

இதனால் பராசக்தியானவள் மூன்று விதமான கோலத்துடன் ஸ்ரீகாமகோடி பீடமாகிய ஆலயத்தில் வீற்றிருக்கின்றாள் என்றறிதல்வேண்டும்.

இனி அந்தப் பராசக்தியாகிய திரிபுராம்பிகையினுடைய ஆத்ம நாதராகிய சோதிசொருபரான சூதலிங்க நாதருக்கும் அவர் அம்சமாகிய தழுவக்குழைந்த பெருமானுருக்கும் காரணப் பெயர்களாகவுள்ள நாம விவரணம் வருமாறு.

சிவபேத பஞ்சநாம விவரணம்.

சூத ஜ்யோதி, நிர்க்குணாத்மா, சிவனார், காமேஸ்வரர் ஏகாம்பரநாதர். இவ்வைந்து நாமங்களும் சூதலிங்கப் பெருமானுருடைய நாமங்களாகும்.

இரசால லிங்கம், உருத்திரகோடி, சதாசிவனீ, சருணர், ஏகாம்பர நாதர். இவ்வைந்து நாமங்களும் தழுவக்குழைந்த பெருமானுடைய காரணப் பெயர்களாகும்.

இனித் தேவியினுடைய அர்த்தாம்சமாகிய வரதராஜருடைய காரணப் பெயர்கள் வருமாறு.

விஷ்ணு பஞ்சநாம விவரணம்.

யஜ்ஞோத்பவர், புண்ணியகோடி, கஜேந்திரவரதர், தேவராஜர் அபீஷ்டவரதர். என்பனவாம்.

காஞ்சி க்ஷேத்திரத்தில் பராசத்தியானவள் சூக்திசம்பந்தத்தால் மூன்று விதமான சத்தியாகவும், சிவசம்பந்தத்தால் இரண்டுவிதமான சிவலிங்க சொரூபமாகவும், விஷ்ணு சம்பந்தத்தால் * ஒருவிதமான விஷ்ணு சொரூபமாகவும் ஆக ஆறு விதமாகத் தன்னுடைய லீலாவிநோதத்தால் வீற்றிருக்கின்றனள்.

இனிச் சிவசத்தி ஐக்யபூஜாவிதியின் வரலாறு.

லலிதாதேவி யானவள் சிவசத்தி ஐக்யரூபிணியாதலால் அந்தத் தேவியை நிர்க்குண பரமான சிவபாவனையாகவும் சகுணபரமான சத்தி பாவனையாகவும் தியானித்துச் சிவசத்தியாத்மகமாக அருச்சித்தல் வேண்டும். இவ்வண்ணம் பூஜிப்பதே மேலான சாஸ்திரங்களுடைய சம்மதமும், அந்த லலிதாம்பிகைக்கு எப்பொழுதும் பிரியமாயுள்ளது மாகும். இவ்வுண்மை யறிந்து பூசிப்பவர் மங்கலத்தைப் பெறுவர். இவ்வுண்மையறியாது சிவசத்திகளைப் பேதபாவனை பண்ணி அந்த லலிதாம்பிகையி னிடத்தில் சிவ ஐக்கியபாவனையை யொழித்து சத்திபாவனை மாத்திரங் கொண்டு பூசிப்பவர் அமங்கலத்தைப் பெறுவர்.

தவ கோலமுடைய ஸ்ரீ காமாக்ஷி தேவியும் சிவசத்தி ஐக்ய பாவமாயிருக்கின்ற லலிதா தேவியுமாகிய திரிபுராம்பிகை யினுடைய சகுண சொரூபமாகலான் அத்தேவியைச்

* வரதராஜர் சத்திசொரூபமென்பது முதலத்தியாயத்திற்காண்க.

சிவசத்தி ஐக்கிய சொரூபமாகவே பூஜித்தல் வேண்டும். அவ்வண்ணம் பூஜிப்பதே அந்தத் தேவிக்கும் பிரியம். அதனையறிந்து அவ்வம்பிகையை அவ்வண்ணமாகத் தியானித்துப் பூஜிப்பவர் தாங்கள்வேண்டும் இஷ்டசித்திகளைப் பெறுவர்.

இதனால் லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையையும், அவளிடத்தினின்றுந் தோன்றிய தபஸ் காமாக்ஷியையும் சிவசத்தி ஐக்கிய பாவனையாகவே தியானித்துப் பூஜித்தல்வேண்டுமென்றும், அங்ஙனம் பூஜிப்போர் சர்வ மங்களத்தையும் சகலமான இஷ்ட சித்திகளையும் பெறுவரென்றுந் தெரிவித்தவாறாயிற்று.

பிரமதேவனால் நிர்மிக்கப்பட்ட மூன்றாவது திருவுருவமான கவுரியாகிய சுவர்ன காமாக்ஷி தேவி ஏகாம்பரநாதருடைய பத்தினியாய்த் தனித்து அவரது வாமபாகத்தில் உடனிருக்கப் பெற்றவீராதலால் இவ்வம்பிகையைச் சிவத்தோடு ஐக்கிய மாகவும், அந்தச் சிவரூபத்தை இந்தச் சத்தியோடு ஐக்கியமாகவும் பாவித்து இருவரையும் ஒன்றாகப் பூஜனை செய்தல்கூடாது. முன்னர் ஏகாம்பரநாதரையும் அதன்பின்னர் அம்பிகையையும் அருச்சித்தல்வேண்டும். இவ்வுண்மையுணராது கவுரியினிடத்தில் சங்கரருடையபாவனையும், சங்கரரிடத்தில் கவுரிபாவனையும் செய்து பூசிப்பவர் ஜன்மங்கடோறும் நரகத்தை யனுபவிப்பவராவர் இருவரையுந் தனித்தனி அந்தந்தப் பாவனையாகவே செய்பவர் மங்களப் பிரதத்தை யடைவர்.

இதனால் சுவர்ன காமாக்ஷியாகிய கவுரியை சிவ ஐக்கியமாகப் பாவித்துப் பூஜனை செய்யாது தனியாகச் சத்திபாவனை மாத்திரஞ்செய்து பூஜித்தல் வேண்டுமென்றும், அங்ஙனம் பூஜிப்பவர் மங்களத்தை யடைவரென்றும், ஐக்கிய பாவனையாற் பூஜிப்பவர் நரகமடைவரென்றும் தெரிவித்தவாறாயிற்று.

இனி இரண்டு சத்திகளை ஒருவிதமாகவும், ஒருசத்தியை மற்றொருவிதமாகவும் பூஜித்தற்குக் காரணம் வருமாறு.

பூஜையாகிய ஆராதனை - நிர்க்குணபரமான ஆராதனை, சகுணபரமான ஆராதனை என இருவகை. நிர்க்குணாராதனை சிரேஷ்டமெனவும் சகுணாராதனை கவுணமெனவுஞ் சொல்லப்படும். நிர்க்குணமாயுள்ளது சிவமாதலால் அந்தச் சிவபரமாயுள்ள சத்தியைச் சிவசத்தி ஐக்கியமாயாராதித்தல் நிர்க்குண ஆராதனை எனவும், சகுணமாயுள்ளது சத்தியாதலால் அச்சத்தி பரமாயுள்ள சத்தியை யாராதித்தல் சகுண ஆராதனை எனவுஞ்சொல்லப்படும். எங்ஙனமெனின், லலிதாதேவியாகிய திரிபுராம்பிகை நிர்க்குண சொரூபமாயுள்ள சோதிலிங்கத்தோடு ஐக்கியமா யிருப்பவளாதலானும், தபஸ்காமாக்ஷியானவர் நிர்க்குண சோதிலிங்க ஐக்கியமாயுள்ள அந்தத் திரிபுராம்பிகையி னுடைய நெற்றியிற் றோன்றினவளாதலானும் அவ்விருசத்திகளும் நிர்க்குண சோதிலிங்க பரமாயுள்ளவர்கள். அவ்விரண்டு சத்திகளையும் சிவசத்தி ஐக்கியபாவனை யாகிய நிர்குண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும். சுவர்னகாமாக்ஷி, விவாக வுற்சவத்திற்கு அருகமாக லலிதாதேவியாகிய நிர்க்குணசத்தியினின்றுந் தோன்றிய சகுண ரூபியாகிய தபஸ்காமாக்ஷியே சுவர்ணகாமாக்ஷியாக வந்தனளாதலால் அந்தக் காமாக்ஷியைச் சகுண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும்.

இதனால் காஞ்சிகாமகோடி பீடத்துக்கிறையாய் வீற்றிருக்குந் தேவியார் இருவினைப் பட்டுழலும் ஆன்ம கோடிகள் வேண்டும் போகங்களைக்கொடுத்து அவர்கட்கு அவ்விருவினை யொப்புவருவித்தற்குப் போகமூர்த்தியாகிய சுவர்ன காமாக்ஷியாகியும், இருவினை யொப்புவாய்ந்த ஆன்மாக்கள் வேண்டும் சித்திகளைக் கொடுத்து அவர்கட்கு மலபரிபாகம் வருவித்தற்கு யோகமூர்த்தியாகிய தபஸ்காமாக்ஷியாகியும், மலபரிபாகம் வந்தஆன்மாக்கள் வேண்டும் மெய்ஞ்ஞான முறைகளைக்கொடுத்து அவர்கட்குச்சத்திநிபாதம் வருவித்தற்குஞானமூர்த்தியாகியலலிதாதேவியாகியதிரிபுராம்பிகையாகியும் இவ்வண்ணம் ஆன்மாக்கட்கு உண்டாகவேண்டிய

இருவினையொப்புமலபரிபாகம் சத்திநிபாதம் என்னுமூன்றும்சிருட்டிப்பட்டுள்ள எல்லாவான்மாக்கட்குமேககாலத்தில் உண்டாவதன்றாகலான்; இருவினையொப்புவருவதற் கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும், மலபரிபாகம்வருவதற் கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும், சத்திநிபாதம் வருவதற்கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும் இருப்பன. ஆகவே எவ்வவ்வான்மாக்கள் எவ்வக் காலங்களின் எவ்வவற்றை வேண்டுகின்றார்களோ அவ்வவற்றை அவ்வவர்களுக்கு அருளிக்கொண்டேவரப் போகமூர்த்தியாயும், யோகமூர்த்தியாயும், ஞான மூர்த்தியாயும் விளங்கு கின்றா ளென்றும், இந்த மூன்றனுள் யோகமும் ஞானமும் ஒன்றிக்கொன்று சம்பந்தமாய் நிற்பவாகலானும், போகம் இவற்றின் வேறாய் நிற்பதாகலானும், இம்மூன்றும் நிற்குமுறை போலவே யோகப்பிரதமாகிய தபஸ்காமாக்ஷியும், ஞானப்பிரதமாகிய திரிபுராம்பிகையும் ஒரு சம்பந்தமா யுள்ளாரென்றும், போகப் பிரதமாகிய சுவர்னகாமாக்ஷி வேறாய்த் தனித்து நிற்பவளென்றும், இதுபோலவே சிவமும்யோகஞானபரமான சத்திகளிடத்தில் வேறாகாமற் கலந்தும், போக பரமான சத்தியினிடத்தில் கலவாது வேறாயும் இருப்பதென்றும் உணர்த்தி அக்காரணத்தால் யோகஞான சத்திகளைச் சிவசத்தி ஐக்கியபரமான நிர்க்குணவாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும், போகசத்தியைச் சிவசத்தி பேதபரமான சகுண வாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும் விதித்ததெனக் கொள்க.

அதனால் வேதவித்துக்களா யுள்ளவர் போக யோக ஞானப் பிரதமான மூவிதசத்தி பிம்பங்களையும் இதுகாறுங் கூறிவந்த முறைப்படி அந்தந்தப் பேதமாகவே பூசிப்பார்களேயல்லாமல் எல்லாம் ஒரு சத்திதானென்று எல்லாப் பிம்பங்களையும் நிர்க்குண பரமான ஆராதனையினாலாவது, சகுண பரமான ஆராதனையாலாவது செய்யார்.

இதுவுமன்றி பிம்பபேதம் போலவே யந்திரபேதங்களுமுண்டு. ஆகலான் இவைகளை அந்தந்தப் பிம்பங்களுக்கும்

யந்திரங்களுக்கும் உரிமையாய் விதித்திருக்கும் மந்திரபேதங்களையும் தந்திரபேதங்களையும் நன்றாயுணர்ந்து பூசைகளையாவது உற்சவங்களையாவது செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்வாராயின் அவை அவர்களுக்கு மங்களத்தையே செய்யும்.

மந்திரபேதங்களையும், தந்திரபேதங்களையும் அறிந்து செய்ய வேண்டுமென்பது என்னையெனின்? பராசத்தியானவள் காஞ்சிக்ஷேத்திரத்தில் மூன்றுவிதமான சத்திபேதமாகவும், இரண்டுவிதமான சிவபேதமாகவும், ஒருவிதமான விஷ்ணு பேதமாகவும், காணப்படும் ஆறுவிதமான பிம்பபேதங்களில் ஆறுவிதமான பேதங்களாகவே கலந்திருக்கின்றாளாதலால் அருச்சனை செய்யுங்கால் அந்தப்பேதங்களையறிந்து மந்திரதந்திரங்களைச் செய்யவேண்டுமென்று விதித்ததென்க.

ஆறுவிதமாவன திரிபுராம்பிகையில் சோதிசொரூபமாயிருக்கின்ற பூரணசத்திஸ்வரூபமாகவும், தபோரூபிணியாகிய காமாக்ஷியினிடத்தில் கலாரூபமாகவும், கலியாண கவுரியினிடத்தில் கலியாணகோலத்துக்குரிய அங்கஸ்வரூபிணியாகவும், நிர்க்குண சூதசோதிலிங்கத்தில் நிர்க்குணையாய் நிர்க்குண சிவசொரூபிணியாகவும், தழுவக்குழைந்த பெருமானாய் வந்த சகுணலிங்கத்தில் சகுணையாய்ச் சகுண சொரூபிணியாகவும், பிம்பசத்தி வடிவத்தினுடைய அர்த்தாம்ச சொரூபமாயிருக்கின்ற வரதராஜ மூர்த்தியினிடத்தில் புருஷரூபமாகவும் பராசத்தியானவள் விளங்குகின்றாள்.

இந்த ஆறுவிதமான மூர்த்திபேதங்களிடத்தில் ஆறுவிதமான அம்சங்களோடுமிருக்கும் பூரணாம்சமான பராசத்தி வீற்றிருக்கும் காமராஜ பீடமாகிய காமகோடி பீடத்தை எவன் தெரிசிக்காமற் போகின்றானோ அவன் வியர்த்தனாய் நரகாஸ்ரயனாகின்றான். எவன் தெரிசிக்கின்றானோ அவன் தன்யனாய்ச் சீவன் முக்தனாகின்றான். இதிற் சந்தேகமில்லை.

மந்திர தந்திர பேதங்களையறிந்து மூர்த்தி பேதங்களை ஆராதனை செய்ய அசக்தனாகிற பக்ஷத்தில் கவுளாகமத்திற்சொல்லியபடி திரிகோணாகாரமாயிருக்கிற ஸ்ரீசக்ரத்தில் பூர்வ கோணத்தினுடைய அக்ரத்தில் குரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு, பராத்பரகுரு, என்கிற மானவௌகாளாகிய, ஆசாரியர்களைப் பாவித்துப்பூஜனை செய்தும், மஹா காமேஸ்வரி கூடத்தில்ஸ்ரீவித்தையைநினைத்து அஷ்டோத்தரசஹஸ்ரநாம முதலிய அர்ச்சனைப் பேதங்களால் அர்ச்சனைகளைச் செய்தும், வாக்பவகூடத்தில் ஸ்ரீவித்தியா மந்திரத்தைஜபித்தலையுஞ் செய்வானாயின் அவன் அந்தத் தரும நெறிகளால் அன்னபானாதிகளுக்கு யாதொரு குறைவின்றிச் சந்தோஷசித்தனாய் வாழ்வான். இந்த விதமாய் ஸ்ரீசக்கர பூஜையுஞ் செய்யக் கூடாதவன் அந்தரங்க பக்தியுடன் ஸ்ரீகாமாக்ஷிதேவியினுடைய சரணகமலங்களைத் தியானஞ் செய்யக்கடவன்.

இங்ஙனம் சொல்லிவந்த முறைமையில் ஒருவன் சன்மமெடுத்து மரணமடைவதற்குள் யாதானும் ஒருமுறையில் ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடத்தில் தேவியை வழிபடல் வேண்டும். வழிபடுவானாயின் அவனுக்குப் புனர் ஜன்மமும் மரணாவஸ்தையும் உண்டாகா. அவ் வழிபாடில்லாதவன் ஒரு பிரம கற்பபரியந்தம் கிரிமியாகவே பிறப்பான். ஆகலான் தனத்திற்சிறந்த அரசன் முதலாயினோர் ஸ்ரீ வித்தையினுடைய அருச்சனையை அவசியஞ் செய்தல்வேண்டும். அங்ஙனஞ் செய்வோர்க்கு வேண்டியவை கொடுக்கவே ஸ்ரீகாமாக்ஷி தேவியானவள் காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் பிரசன்னையாயிருக்கின்றாள்.

பூர்வத்தில் மஹாலக்ஷ்மி, ஹயக்ரீவ முனிவர், மநுச்சக்ரவர்த்தி, தசரதச்சக்ரவர்த்தி, துண்டீரமஹாராசன், காந்தாரமஹாராசன், சோழமஹாராசன், உருத்திரர் அனந்தன் முதலாயினோர் தேவியினுடைய பூஜை அருச்சனை ஜபங்களைக் கர்த்தவ்யமாகக் கொண்டு செய்திருக்கின்றனர்.

இலக்ஷ்மி.

பூர்வம் அமிர்தங் கடைந்தகாலத்தில் வெண்ணிற மாயிருந்த விஷ்ணுமூர்த்தி விஷமுண்டான பின்னர் நீலநிற முடையராயினர். அப்பொழுது அவர்மார்பிலிருந்த இலக்ஷ்மிதேவி அவருடைய கருமைநிறத்தைப்பார்த்தும்பொன்னிறமா யிருக்கின்ற எனக்குக் கருமை நிறமடைந்திருக்கும் நீர் இனிப்பிரியமாக மாட்டீர். என்று பரிகாசமாகச் சொல்ல அவர்கோபங்கொண்டவராய் ஹே லக்ஷ்மி! நீ மிக அழகியோ! சிகப்பியோ! இனி நான் வெறுக்கதக்க கரப்பியாயும், கிழவியாயும் போகக்கடவாய் என்று சபிக்க, லக்ஷ்மி அந்தச்சாப மேற்றவளாய்க் காஞ்சியில் காமகோடி பீடத்தையடைந்து மகாலக்ஷ்மியாகிய மஹாதேவிக் கெதிராக வந்து பணிந்து நின்றனள். அந்த லக்ஷ்மியைத் தேவிபார்த்து உனக்கு இந்தநிறமும் கிழத்தனமும் எங்கிருந்து வந்ததோ? நீ விஷ்ணுவினுடைய இருதயத்திலிருந்து பூஜிக்கப்பட்டது போல் இனி எனக்கு அங்கமாயிருக்கிற இந்தக்காயத்திரிமண்டபத்தில் வடது பக்கத்தில் சாந்நித்யமாயிருந்து பக்தாபீஷ்டப் பிரதாயினியாக விருப்பாய். அன்றியும் என்னக்குப் பிரியையாயிருக்கிற உன்னை யாரொருவர் பாதமுதல் உச்சிவரையில் தொட்டுத் தியானித்துத் தெரிசித்துஞ் செல்கின்றார்களோ அவர்களுக்கு நீ அஷ்டைஸ்வரியமுங் கொடுத்துவருவாய் என்று ஆஞ்ஞைசெய்ய அந்த ஆஞ்ஞையைப்பெற்று எப்பொழுதும் அவ்விடத்திலேயே இருப்பவளாக அந்த லக்ஷ்மிதேவியாயினள்.

ஹயக்கிரீவர்.

பூர்வத்தில் ஹயக்கிரீவமுனிவர் விஷ்ணுரூபத்தை யடையவேண்டிக்காமகோட்டத்தை யடைந்து காமாக்ஷிதேவியைப்பூஜித்து இருதயத்தில் தியானித்துத்தவம்புரிந்துவந்தனர்

அந்தச்சமயத்தில் பதுமநாப னென்னும் ராக்ஷசன் அங்குவர அவன் அவரைக் குதிரை என்று நினைத்துத் தனக்கு வாகனமாகக் கொள்ளவெண்ணிப் பாதலத்துக்குக்கொண்டு போயினன். அவனை அம்பிகைகொன்று அவர்வேண்டியவண்ணம் விஷ்ணுமுகத்தைக் கொடுத்தனள். பின்னர் ஹயக்கிரீவர் பாதாளத்திலிருந்த ராக்ஷசர்களையெல்லாங்கொன்று சுக்கிராசாரியரால் நிர்மிக்கப்பட்டிருந்தகுறைவுபடாத அமிர்தகலசத்தைக்கிரகித்துக்கொண்டு, உடனே காமகோட்டத்துக்குவந்து திரிபுராம்பிகைக்கு அபிஷேகஞ்செய்து ஆராதித்து அம்பிகைக்குத் தக்ஷணபாகத்தில் இருந்துவிட்டனர்.

மநுவின்.

பூர்வத்தில் எட்டாவதாகிய மநு, சூரியபகவானால் கொடுக்கப்பட்ட பூவுலகைப்பெற்று அரசுபுரிவதற்கு அறியவேண்டுவனவாகியபுண்ணிய பாவங்களைமுன்னர் நன்குணரவேண்டுமென் றெண்ணி இராஜ்யத்தைச் சுமந்திர னென்கிற மந்திரியினிடத்தில் ஒப்புவித்து வசிட்டமுனிவரிடத்தில் விடைபெற்று, காமகோட்டத்தை யடைந்து அங்கிருந்த துர்வாச முனிவரிடத்தில் தேவிமந்திரோபதேசம் பெற்று அந்த மந்திரமுறைப்படியே தேவியினுடைய ஆராதனமும் தியானமுஞ்செய்தலாகிய அரியதவத்தைஇயற்றி வந்தனன். ஒருநாள் காமாக்ஷிதேவி கலைமகளுருவங் கொண்டு ஓர் கும்பத்தில் உலகாணித்தீர்த்தமாகிய பஞ்சதீர்த்தத்தை நிறைத்து அந்த மநுவுக்கெதிரில் பிரசன்னையாய் அந்தத்தீர்த்தத்தை அவன் சிரசின்மேல் அபிஷேகஞ்செய்து சகலகலைகளும் உணரும் வண்ணம் அநுக்கிரகஞ்செய்து அந்தர்த்தானமாயினர். பின்னர் மநுச்சக்ரவர்த்தி கலைமகளுக்குச் சமானமாகச் சர்வசாஸ்திர பாரங்கதனாய்த் தன்னகரம்போய்ச் சேர்ந்து நீதிவழியே செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தனன்.

தசரதச் சக்ரவர்த்தி.

தசரதச்சக்ரவர்த்தி யானவர் புத்திரப் பேறு வேண்டி வசிட்டருடைய ஆஞ்ஞையின் பிரகாரம் தீர்த்தயாத்திரை

யை விதி முறையாக நடத்திக் காமகோடி பீடத்துக்கு வந்து திரிபுராம்பிகையைத் தரிசித்துப் போற்றி வணங்கிப் பூசித்து வந்தனன். ஓர்நாள் ஆகாசவாணியானவள் ஓ அரசனே; உனக்கு இன்னும் ஒரு வருஷத்தில் சன்மக்கட் பேறுண்டாகும் என்று கூற அதனை அரசன் கேட்டு மகிழ்ந்து தந்நகரம்போய்ச் சேர்ந்து மக்கட்பேறு பெற்றனன்.

துண்டீர மகாராஜன்.

பூர்வத்தில் பிரமதேவனால் ஆகாயத்தினின்றும் சந்திராம்சமாக வருவிக்க (ஆகாசபூபதி) யானவன் தருமத்துக்காக நியமித்திருந்த திரவியங்களை யபகரித்துக் கொண்டு புத்தமதத்திற் புகுந்து தெய்வ பக்தியிழந்து போயினன். அந்தப் பாவத்தால் புத்திரப் பேறற்றவனாயினான்.

பின்னர் பூர்வ புண்ணிய விசேடத்தால் கோரக்ஷ சித்தரை யடையப் பெற்று வேதபாஹ்ய மாகிய புத்ததருமங்களைக் கைவிட்டு வேதத்துக்கு அந்தரங்க மாகிய தருமங்களை யுபதேசஞ்செய்யப் பெற்றுப் பின்னர் புத்தக்கூட்டங்களையும் அவர்களுக்குக் குருக்கண்மாரா யுள்ளவர்களையுந் தனது நாட்டிலிராவண்ணம் ஓட்டி நீதிவழியே செங்கோல் செலுத்தி அம்பிகையின் மந்திரோபதேசமும்பெற்றுக் காஞ்சிமண்டலத்திலுள்ள சகல க்ஷேத்திரங்களையும் ஜீர்ணோத்தாரணஞ் செய்து தேவியினிடத்தில் மிகுந்த அன்பும் ஆராதனையு முடையவனாய் அந்தத் தேவிபரமாகவே தனது வாழ்நாளைச் செலுத்தி அந்தத் தேவியினுடைய சகலதருமங்களையும் மிகச்சிறப்பாகநடத்தி வந்தனன். மஹாதேவியாகிய காமாக்ஷி தேவியானவள் அந்த அரசனுடைய தருமப்ரிபாலனத்துக்கு மகிழ்ந்தவளாய்த் தனது மூத்தபிள்ளையாகிய கணேச மூர்த்தியைப் பார்த்து எனது அன்பனாகிய ஆகாசபூபதி அபுத்திரவான் என்கிற வசையைப் பெற்றுள்ளானாகையால் அவ்வசை நீங்குமாறு நீ அவனுக்குப் புத்திரனாய்ப்

போவாயென்று கட்டளையிட, கணேசமூர்த்தியான் உலகில் யாவராலும் பிள்ளையார் - பிள்ளையார் என்றே துதிக்கப்பட்டவனா யுள்ளேன். அப்பேரையுடையவனா யிருக்கின்ற யான் உனக்கன்பனா யிருக்கின்ற அவனிடத்துப் பிள்ளையாய்ப் போயிருத்தலடாதா? யான்போகின்றேனென்று விடைபெற்று அவன்பால் வந்து ஓ அரசனே! ஸ்ரீகாமாக்ஷிதேவியினுடைய திருவருளினால் நான் உனக்குப் புத்திரனாகவிருக்க வந்துள்ளேனென்று சொல்ல, அரசன் அம் மதுரமொழியைக்கேட்டு அடங்காப் பேரின்பமுற்றுத் தன்மனையாள்பால் நடந்தசெய்தியைக் கூற அவள் சன்றவளினும் பெரிதுவந்து அணைந்து மார்போடணைக்கும் போது கணேசப்பெருமான் அன்றுபிறந்தபிள்ளைபோலாயினர். அரசன் அக்குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைத் துஞ்செய்ய வெண்ணி அன்றுமுதலாக நடத்திவந்து பன்னிரண்டாநாள் சாத கன்மாதிகளை நடத்தவேண்டித் தம்பதிசமேதனாய் சுநானாதிகருமங்களை முடித்துக்கொண்டு தேவிசந்நிதானத்துக்குச் சென்று அவ்விடத்தில் நடத்தவேண்டிய பூஜை அர்ச்சனை ஓமம் முதலிய யாவும் விதிமுறையாகவும் அதிக சிறப்பாகவும் நடத்திப் பின்னர் பிராஹ்மணர் உண்டு மகிழும் வண்ணம் உச்சிப்பொழுதில் சமாராதனை நடத்திவரும் பொழுது அகல்மாத்தாய்ப் பொன்மாரி ஒரு முகூர்த்தகாலம் பொழிந்தது. அந்த அதிசயத்தைக் கண்ட அரசன் அதன் காரணம் இன்னதென அறிய வேண்டி அங்குவந்திருந்த ஸ்ரீவத்ஸர் என்கிற முனிவர் முதலாயினரைப் பணிந்து இது என்ன அதிசயம் என்று கேட்க, அம்முனிவர்கள் அதன் காரணத்தைச் சொல்லமுடியாமல் மயங்கிக் கொண்டிருக்கும்பொழுது மஞ்சத்தில் பன்னிரண்டுநாள் குழந்தையாகவிருந்த கணேசமூர்த்தி மஞ்சத்தைவிட்டுக் கீழேதவழ்ந்து போஜனஞ்செய்து கொண்டிருக்கும் பிராஹ்மண ஸ்திரீகளுடைய மத்தியிற்போய்த் தன்பிதாவாகிய அரசனுடைய முகத்தைப்பார்த்து ஓ தந்தையே! இதன்காரணத்தை யான் சொல்லுகிறேன். பிராஹ்மண போஜனத்துக்காக உ

ன்னால் (படி) அளவாக வைக்கப்பட்டிருந்த பயரில் உனது சொத்தாயுள்ள பொன்னில் ஒரு பயரளவுபொன் கலந்துவிட்டது. சமையல்காரர் அதனையறியாமல் பயருடன் அந்தப்பொன்னையுஞ் சமைத்து மோதகமாகச்செய்து பிராஹ்மணபந்தியிற் படைத்தார்கள். உன்னுடைய இஷ்டதெய்வமாகிய ராஜராஜேஸ்வரி என்னும் காமாக்ஷிதேவியானவள் ஸ்திரீகளுடைய பந்தியில் தானும் ஒருஸ்திரீயைப்போல் உருவங்கொண்டு புசித்துவரும்பொழுது அவளுடையஉதரத்தில் பொன்கலந்திருந்த மோதகமொன்று போயிற்று. அந்த மகிமையினால் உன்னுடைய ராஜ்யமாகிய இந்தக் காஞ்சிக்ஷேத்திரத்தில் பொன்மாரி பொழிந்தது. அந்ததேவியும் பந்தியில் போஜனஞ் செய்து கொண்டிருக்கிறாள். நீயும்பார்க்கலாம் என்றனர். அரசன் அகமகிழ்ந்து ஆனந்தபரவசனாய்க் குழந்தை யுருவாயிருக்குங் கணேச மூர்த்தியை அழைத்துக் கொண்டு ஸ்திரீகளுடைய பந்தியிற் போய்த் தேவியினுடைய சமீபத்தின்றபொழுது அம்பிகை அரசனைப் பார்த்தவுடன் மறைந்துவிட்டனள். கணேசமூர்த்தி அம்பிகையுண்டருளிய பரிகலத்திலிருந்த சேடங்களை யுண்டு சர்வசாஸ்திர பாரங்கதராய்ப் பிரகாசிக்க, ஏனைய அந்தணரும் அரசரும் அம்பிகையினுடைய சேடமேயல்லாமல் கணேசருடைய சேடமுங் கலந்திருந்த அந்தச்சேடத்தனையுண்டு சகலகலா வல்லியினுடைய கிருபைக்குப் பாத்திரராய்ச் சகலகலா வல்லபராயினர்.

அதன் பின்னர் யாவருந் தேவியினுடைய கடாக்ஷமும் பெற்றிருக்கிற ஆகாச பூபதியினுடைய குமாரராகிய கணேசரிடத்திற் குருபாவனை யுடையவராய் அவருக்குத் "துண்டீரப்பிரபு" என்கிற திவ்ய நாமகரணஞ் செய்து, அதன் பின்னர் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்துமுடித்து அந்தப்பொழுதே இனி இந்தத் துண்டீரமகாராஜாவுக்கு ராஜ்யபட்டாபிஷேகமுஞ் செய்ய வேண்டுமென் றெண்ணி காமாக்ஷி வீற்றிருக்குஞ்சந்நிதானத்தில் பஸ்சிமாபி(மேற்கு)

முகமாகக் கணேசமூர்த்தியாகிய துண்டீரரை எழுந்தருளிவித்து இராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து காஞ்சிமண்டலத்தை அவர் வசமாக்கினர்.

இனித் துண்டீரருடைய சந்நிதானத்துக் கெதிரில் போகும்போது மவுனமாய்ப் போகவேண்டிய வரலாறு,—

காஞ்சி மண்டலாதிபதியாய் அரசாள வந்த கணேசமூர்த்தி துண்டீரனென்னும் ராஜகோலத்துடன் தேவியினுடைய ஆலயத்தில் இரண்டாவது ஆவரணத்தில் தேவியினுடைய தரிசனவிசேஷமாகச்சந்நிதானத்தில்வீற்றிருந்துகிருதயுகத்தில்சாக்ஷாத்கணேசமூர்த்தியாகவே இருந்தும், திரேதாயுகத்தில் தேவயோனி சம்பந்தமான அம்சத்திற் கலந்தும், துவாபரயுகத்தில் மநுக்களுடைய அம்சத்திற் கலந்தும், ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்து கலியுகத்தில் விக்கிரகரூபமாய்ப் பிரதிஷ்டை செய்திருக்குந் தனது பிம்பத்தில்யாவர் கண்ணுக்குந் தோன்றாத தேஜோரூபமாகக் கலந்து தேவியைத் தியானித்துக் கொண்டிருக்கின்றாராதலால் அந்த இரண்டாவது ஆவரணத்தில் அவருக்கெதிரிற் போகும்போது அவரது தவத்துக்குவிரோதமில்லாவல் ராஜசமுகத்திற் போகும்போது மவுனமாய்ப் பயந்து போவதுபோல் மவுனமாய்ப்போதல் வேண்டும். மவுனமாய்ப் போகாமல் வசனித்துக் கொண்டு போவாராயின் காமாக்ஷி தேவியைத் தெரிசனஞ் செய்த பலனை யிழந்தவராவர். மவுனமாய்ப் போவாராயின் அந்தத் தெரிசன பலத்தையும் அரசாங்கத்தாற் சுகமும் பெறுவர்.

சோழராஜன்.

பூர்வம் காவேரி தீரத்தில் சோழ நாட்டில் அரசாண்டிருந்த விருஷ வம்சத்தில் உற்பவித்த வீரசோழ மகா ராஜகுமாரனாகிய விக்கிரம சோழன் சல்லியாபிதன் என்கிற சகோதரன் தன்னுடைய ராஜ்யத்தை யபகரித்துக் கொள்ளத் துக்கமடைந்தவனாய் ராஜ்யம் ஆளுவதில் துன்பமுற்று அரசாக்ஷியை வெறுத்துத் தன்பத்தினியை யழைத்துக்

கொண்டு தேசசஞ்சாரியாய் வரும்பொழுது தெய்வகதியாய்க் காமகோட்டம் வந்துசேர்ந்து நந்தனவனங்களை வைத்து விர்த்திசெய்து நாடோறுந் தவறாமல் மலர்களைக் கொய்து யானைத் துதிக்கைபோலும் மாலைகளைக்கட்டிக் காமாக்ஷிதேவிக்குச் சமர்ப்பித்துத் தியானித்து வழிபட்டு வந்தனன். தேவியினுடைய கிருபையால் பெண்குழந்தையொன்று பிறந்து நாளொருமேனியாய் வளர்ந்து அங்கங்களெல்லாம் அழகு நிறையப் பெற்றிருக்கு நாளில் பாண்டிநாடாளும் குலசேகர பாண்டியன் தன் மகனுக்குரிய பெண் வேண்டுமென்று எல்லாவரசர்கட்குந் தெரிவித்தனன். ஒருநாள் அவனுடைய கனவில் காமாக்ஷி தேவியானவள் சென்று, ஓ அரசனே! என்னுடைய காஞ்சி நகரத்தில் விக்கிரமசோழனென்கிற அரசன் தன்ராஜ்யத்தைவிட்டுத் தன்பத்தினியுடன் தேசசஞ்சாரியாயிருந்து பின்னர் காமகோட்டத்தை யடைந்து என்னிடத்தில் பக்தியுடன் வந்தனை வழிபாடுகள் செய்து வருகின்றனன். அவனுக்கு என்னுடைய கிருபையினால் ஒரு புத்திரியுண்டாயிருக்கின்றாள். அவளுடைய ரூபலாவண்ய சுந்தரங்களை நானிப்பொழுது சொல்லவேண்டியதில்லை. நீயே காணப்போகிறாய் ஆகையால் நீ அந்தப்பெண்ணை உன்மகனுக்குக் கலியாணஞ் செய்துவைப்பாய். அதுவுமன்றி அந்தவிக்ரமசோழனை அவனுடைய ராஜ்யத்துக்கழைத்துக்கொண்டுபோய்ப் பட்டாபிஷேகஞ் செய்துவைப்பாயென்று கட்டளையிட்டுப் போயினள். இந்தக் கனவைக்கண்ட அரசன் மகிழ்ந்தவனாய்த் தனது பரிவாரங்களுடன் காஞ்சிநகரத்துக்கு வந்து விக்கிரமசோழமகாராசனைக் கண்டு இவன் சாக்ஷாத் தேவியினுடைய அருள் பெற்றிருப்பவனாதலால் இவன் நம்மால் பணியத் தக்கவனென்று சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து தேவியினுடைய கட்டளையைத் தெரிவித்து, அதன்பின் தேவிக்குச் செய்யவேண்டிய பூஜோபசாரங்களை விசேடமாகச் செய்து வணங்கிப் போற்றி விடைபெற்று அந்தச் சோழனை யழைத்துக்கொண்டு அவனுடைய ராஜ்யத்துக்குப் போய், அவனுக்குப் பட்டா

பிஷேகஞ்செய்து, அதன்பின் அவன்மகளைத் தன்மகனுக்கு விவாகஞ்செய்து முடித்துத் தன் நகரம் போய்ச் சேர்ந்தனன். விக்கிரமசோழமகாராசன் குலசேகரபாண்டியன் சென்றபின்னர் தனது ராஜ்யத்தைத் தன்மகனிடத்து ஒப்புவித்து முன்போல் காஞ்சிநகரத்துக்கு வந்தனன். அப்பொழுது அந்தக் காஞ்சிநகரம் காடாக விருத்தலைக் கண்டு அக்காட்டையழித்து முன்போல் எங்கும் புஷ்பவனங்களுண்டாக்கித் தேவி ஆலய ஜீர்ணோத்தாரணஞ்செய்து பசுக்கள், பூமிகள், வேண்டிய தனங்கள், ஆபரணவகைகள், பொன்குடைகள் முதலிய எல்லாச்செல்வங்களையும் தேவிக்கு அர்ப்பணஞ்செய்து வைராக்ய சீலனாய் அரியதவங்களைச்செய்து வந்து யாவராலும் * காந்தாரச்சோழனென்று அழைக்கப்பட்டவனாய் ஏகாந்தத்தில் தேவியினுடைய பதத்தையடைந்தனன்.

† குணருத்திரரும், ஆதிசேஷனும், கலியுகத்தில் தேவியை விதிமுறையாகப் பூஜித்து முடிவில் முடிவில்லாத முத்திபதத்தை யடைந்தனர்.

இவ்வண்ணம் யுகங்கடோறும் தேவர்களேயன்றிச் சோம சூரியாக்கினிக ளென்கிற மூன்று வம்சத்தரசர்களும் ஸ்ரீ காமாக்ஷிதேவியை வழிபட்டுப் போகமோக்ஷங்களை யடைந்துள்ளார்.

இங்ஙனம் எக்காலத்துங் காஞ்சியில் காமகோடிபீடவாசினியாய் வீற்றிருக்கின்ற சுவர்ணகாமாக்ஷியை ஒருதரந் தெரிசிக்கப் பெற்றவர்கள் யாரோ அவர்கள் கோடிகோதானபலனை யடைவார்கள்.

நூற்பயன்.

இந்தக் காமாக்ஷி லீலா பிரபாவத்தைப் படிப்போருங் கேட்போருஞ்சுவர்ணகாமாக்ஷியைத்தெரிசனஞ்செய்யும்பலனை யடைவார்கள். அன்றியும் இதனைப்பாங்குனிமாதம் திருக்

* காடுவெட்டிய சோழன், † பிரமவிஷ்ணுக்களாகிய இருவரோடிருக்கிறவராயுள்ள உருத்திர மூர்த்தி.

கல்யாண மகோற்சவதினமாகிய உத்திரநக்ஷத்திர தினத்திலும், காமாக்ஷிதேவியினுடைய ஆவிர்ப்பவ தினமாகிய ஐப்பசிமாதம் பூரநக்ஷத்திரத்திலும், காமாக்ஷி ஸ்வரூபராய் விளங்கும் வரதராஜமூர்த்தியினுடைய அவதாரதினமாகிய சித்திரைமாதம் அஸ்தநக்ஷத்திரத்திலும் ஆசார்ய முகமாய்க் கேட்டுவந்து முடிவுசெய்வார்களாயின் அவர்களடையும்பலனைச்சொல்லமுடியாது. அன்றையதினங் காமாக்ஷிபிரபாவத்தைச் சொல்லிவந்தவராகிய அய்யரைச் சாக்ஷாத் வியாசராக நினைத்து அவருக்கு வஸ்திராபரண சந்தன புஷ்பாக்ஷதை பூமாலை முதலியவை சாத்தி தூபதீபங்காட்டி திவ்யமான ஆகாராதிகளால் திருப்தி செய்வித்துப் பின்னர் தாம்பூலம் மங்களார்த்தி முதலியன நடத்தி வேதபாராயணாதி கோஷங்களுடன் சகல வாத்தியங்களுங் கோஷிக்க அவருடைய கிருகத்தை யடைவித்து அவரைச் சிறந்த ஆசனத்திலிருத்தி நமஸ்காரஞ் செய்து அவரிடத்தில் ஆசீர்வாத அக்ஷதைபெற்று சிரசிற்றரித்துத் தங்களிடம் போய்ச் சேரக்கடவர் என்று சுரதமகாராஜனுக்கு மார்க்கண்டேயமுனிவர் சொல்ல அவன் அவரை பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து துதித்து நிற்ப,மார்க்கண்டேயமுனிவர் அரசனை ஆலிங்கனஞ்செய்துக் கொண்டு, ஸ்ரீ காமாக்ஷிதேவியானவர் தமது இளந்தளிர்போன்ற மாணிக்கக் கங்கணமணிந்த சுவர்ணத்திருக் கரமாகிய அகப்பையால் சகல சௌபாக்கியங்களையு முகந்து முகந்து கொடுத்தருளல் வேண்டும், நீ சத்ருஹீனனும், அகண்ட சாம்ராஜ்ய முடையவனும் தீர்க்கமான ஆயுளைப் படைத்தவனும், புத்திர பௌத்திர விருத்தியையுடையவனும், சர்வ காம சமர்த்தியுடையவனும், இம்மையில் வாழ்ந்து, அம்மையில் அனந்த குணகணமணியாய், தேஜோமணியாய் விளங்கும் ஸ்ரீ தேவியினுடைய சரணாரவிந்தநிழலில் வாழக்கடவாயென்று ஆசிபுகன்றனர்.

ஸ்ரீ காமாக்ஷி லீலா பிரபாவம்.

முற்றிற்று.

11891

உ

அத்தியாய அகராதி.

அத்தியாயம்.	பக்கம்.
முதலாமத்தியாயம்.	
க்ஷேத்திரவிவரணம்	௧
காஞ்சீமண்டலத்தினெல்லை	௨
எல்லைகளின் மகிமை	௩
இரண்டாம் ஆவரண வரலாறு	
க்ஷேத்திரநாமவிவரணம்	௮
பாலாற்றின் வரலாறு	௯
பராசக்தி மூன்றுவித சொரூபமானது	௧௦
இரண்டாமத்தியாயம்.	
விஷ்ணுக்ஷேத்திர எல்லை	௧௩
ஷை க்ஷேத்திரவரலாறு	௧௫
ஷை - எல்லையிலுள்ள தீர்த்தங்களின் வரலாறு	[illegible]
விஷ்ணுக்ஷேத்திரமகிமை	௧௬
மூன்றாமத்தியாயம்.	
அத்திகிரிவரலாறு	௨௧
அத்திகிரிமகிமை	௨௫
நான்காமத்தியாயம்.	
வரதராஜமூர்த்தி வரலாறு	௨௬
ஐந்தாமத்தியாயம்.	
வேகவதிவரலாறு	௩௩
வேகவதிமகிமை	௩௫
ஆறாமத்தியாயம்.	
சிவக்ஷேத்திரவெல்லை	௩௬
ஷை - எல்லையிலுள்ள சிவாலயம்	௩௮
ஷை - எல்லையிலுள்ள விஷ்ணுவாலயம்	௩௯
முத்திரை - தீர்த்தம்	௪௦
தீர்த்தங்கள் - மகிமை	௪௧

அத்தியாயம்.	பக்கம்.
ஏழாமத்தியாயம்.	
ஆம்பரவிருக்ஷபிரபாவம்	௪௨
எட்டாமத்தியாயம்.	
ரசாலேசபிரபாவம் தபஸ்காமாக்ஷி வரலா(று)	௪௭
ஒன்பதாமத்தியாயம்.	
...வரலாறு	௫௭
பத்தாமத்தியாயம்.	
காமகோட்டத்தினெல்லை	௬௧
துர்க்காலயம்	௬௨
விஷ்ணுவாலயம்	௬௩
சிவாலயவரலாறு	௬௪
தீர்த்தம்	௬௫
காமகோட்டமகிமை	௬௭
பதினொன்றாமத்தியாயம்.	
பிலாகாசப்பிரபாவம்	௬௮
பன்னிரண்டாமத்தியாயம்.	
மஹாத்ரிபுரசுந்தரிவர்ண(னை)	௭௪
பதின்மூன்றாமத்தியாயம்.	
பூதபந்தவரலாறு	௮௩
பதினான்காமத்தியாயம்.	
சுவர்ணகாமாக்ஷிவர்ண(னை)	௮௭
சுவர்ணகாமாக்ஷிவரலா(று)	௮௮
ஷை காமாக்ஷி ஆவிர்ப்பவ	௯௫
சுவர்ணகாமாக்ஷிபிரதிஷ்டைவரலாறு	௯௬
பிரமனுக்கு அந்தகத்துவம் வந்தவரலாறு	௯௮
பஞ்சநாமவிவரணம்	௯௯
சிவசக்தி ஐக்கியநாம பூஜாவிதி	௧௦௦
ஸ்ரீசக்கரபூஜாவிதி	௧௦௫
ஆராதனைகள் செய்தவர்கள் வரலாறு	௧௦௬

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

புத்தக விளம்பரம்.

இப்பொழுது அச்சிட்டு முடிந்திருக்கும் நூல்கள்.

தேவிபாகவதம் முதலாவதுஸ்கந்தமுதல் சஷ்டஸ்கந்தம்வரையில்முடிந்துள்ள வசனபுத்தகம் (க) க்கு	2	8	0
காஞ்சிப்புராணம்மூலமும் உரையும்வாலியம் ௨க்கு ரூ.	10	0	0
ஷை புராணம் சரிகைகரம்தனி மூலமும் உரையும்	1	0	0
திருப்போரூர்ச் சந்நிதிமுறை மூலமும் உரையும்.	2	0	0
காமாக்ஷிலீலா பிரபாவ வசனம். காஞ்சி க்ஷேத்திர மஞ்சரி வசனம்.	0	12	0
காஞ்சிப்புராணம் வடமொழி சதாத்பிராயம் வசனம். திருவுருப்படத்தோடும் கச்சியப்பமுனிவருடைய செய்யுள்களோடும்.	2	8	0
திருக்குறள் முதலதிகாரம் பரிமேலழகர் உரைத்தெளிபொருள் விளக்கம்	0	4	
காஞ்சி க்ஷேத்திர தேவாரத்திரட்டு இரட்டையருலா, பட்டினத்தடிகள் பாடல்	0	4	
திருப்போரூர்ச் சந்நிதிமுறையில் வேதாந்தப் பதிகத் தெளிபொருள் விளக்கம்	0	3	
சிவஞான போத அதிகரண விளக்கம்	0	4	

இங்ஙனங் குறித்த நூல்களின் விஷயசூசனைகள் வெளியிட்டிருக்கும் சூசனாபத்திரத்திற் காண்க.

இன்னுஞ் சிலநூல்கள் அச்சிட்டுவருகின்றோம். அவை முற்றுப் பெற்றவுடன் தெரிவிக்கின்றோம்.

தேவிபாகவதம் இரண்டு மாதத்துக்கொருமுறை ஒவ்வொரு ஸ்கந்தமாக முடித்து வெளியிடப்படும். இன்னும் உள்ளஸ்கந்தங்களொட்டே. எட்டுஸ்கந்தங்களும் மொழிபெயர்த்திருக்கின்றன.

வேண்டியவர்கள் சென்னை வேப்பேரி ரெண்டால்ஸ் ரோட் 19-வது நெம்பர் வீட்டிலுள்ள எமக்கெழுதி வி-பி மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இங்ஙனம்.

கா - ஏ - ஆலாலசுந்தரம் பிள்ளை.